

தமிழ் இமயம் வ.சுப.மாணிக்கம்
செம்மல்
வ.சுப. மாணிக்கம்
நினைவு நாளில் அவர்
கொள்கைகளை
நெஞ்சில் ஏந்துவோம்!
17.4.1917 - 25.4.1989
பல்லாயிரம் மாணவர்களின் நெஞ்சக்
கோவிலில் நிலைபெற்ற தெய்வம்!

வ. சுப. மாணிக்கனாரும் வள்ளுவச் செயல் நெறியும்

Posted by முனைவர் மு. பழனியப்பன் On January 08, 2009 0 Comment

This entry is part of 46 in the series 20090108_Issue

முனைவர் மு. பழனியப்பன்



பேருரையாளர். மா. மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை

வள்ளுவ வழி வளம் பெருக்கும் வழியாகும். படிப்பது, பொருளோடு படிப்பது என்பதைத் தாண்டி வள்ளுவ வழியில் செயல்படுவது என்பதை நோக்கமாகக் கொள்ள வேண்டும். இந்நோக்கம் அனைவரையும் வளப்படுத்தும். திருக்குறள் வெறும் மேற்கோள் நூலல்ல; அது செயல்வழி நூல் என மொழிந்தவர் செம்மல் வ. சுப. மாணிக்கனார் ஆவார்.

இவர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மேலைச்சிவபுரி என்ற ஊரைச் சார்ந்தவர். அவ்வூரிலேயே தொடக்கக் கல்வி கற்றுப் பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சார்ந்து தன் கல்வியறிவை மேம்படுத்திக் கொண்டவர். இப்பல்கலைக்கழக வழியாக பி.ஓ.எல், எம்.ஏ, முனைவர் போன்ற பட்டங்கள் பெற்றவர். இளம் வயதில் பர்மாவிற்குச் சென்ற இவர் அங்குப் பொய் கூறச் சொல்லி வற்புறுத்தல் ஏற்பட்டபோது அதனை மறுத்து மெய்யன்றி வேறு கூறேன் என்ற கொள்கைவழி நின்றவர். இதனால் இவர் பொய் சொல்லா மாணிக்கம் என்றும் பொய் சொல்லா மெய்யர் என்றும் போற்றப் பெற்றவர். தொடர்ந்து அந்நெறிப்படியே வாழ்ந்தவர். இவர் தன் ஆசானாக பண்டிதமணி கதிரேசன் செட்டியாரை வரித்துக் கொண்டவர். மதுரைப்பல்கலைக்கழகத் துணைவேந்தராகவும், தமிழ், பாண்டிச்சேரி பல்கலைக்கழகங்களின் உருவாக்கத்தின்போது துணைசெய்தவராகவும் இவர் விளங்கினார். காரைக்குடி அழகப்பா கல்லூரியின் முதல்வராகவும் இவர் விளங்கினார். சங்க இலக்கியப் புலமையும், திருக்குறள் புலமையும் ஒருங்கே கொண்ட இவர் தமிழ்வழிக்கல்வி, தமிழ்வழிபாடு முதலானவற்றை தமிழகம் முழுவதும் கொண்டுவரப் பாடுபட்டார்.

இவர் பல நூல்களை வரைந்துள்ளார். இவரின் தமிழ்க்காதல் மிகச் சிறந்த சங்க இலக்கிய ஆய்வு நூலாகும். இது ஆங்கில மொழியிலும் தமிழ் மொழியிலும் வெளிவந்துள்ளது. இந்நூல் காட்டும் திறனாய்வுப் பாதை வழிப் பல திறனாய்வு நூல்கள் தோன்ற இயலும்.

இவர் படைத்த நூல்களில் திருக்குறள் கருத்துக்களுக்கு முக்கிய இடம் இருக்கும். இவரின் திருக்குறட்சுடர், உரைநடைத்திருக்குறள், வள்ளுவம், திருக்குறள் தெளிவுரை முதலியன இவரின் திருக்குறள் புலமையைக் காட்டும் நூல்கள் ஆகும்.

குறிப்பாக இவரின் வள்ளுவம் என்ற நூல் திருக்குறளை ஆழ்ந்து படித்தோரை இன்னும் ஆழமாகச் சிந்திக்கத் தூண்டும் நூல் ஆகும். இந்நூல் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்து மூன்றும் ஆண்டில் எழுதப் பெற்றுள்ளது. இது ஒரு சொற்பொழிவு நூல். இவர் ஒரு சொற்பொழிவாளராக இருக்க பன்னிரண்டு நாட்கள் வாய்மைக் கழகம் என்னும் பெயர்

கொண்ட கழகத்தாரால் நடத்தப் பெற்ற கற்பனைக் கூட்டத் தொடர் இதுவாகும். இக்கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கினர் வந்து கலந்து கொண்டதாகவும்- அவர்களில் பலர் பல்வேறு நாட்டவராக இருந்ததாகவும் இப்பொழிவாளர் கொண்டு இந்நூலைப் படைத்துள்ளார். இந்நூலின் இத்தன்மை மிகப் புதுமை வாய்ந்ததாகும்.

இந்நூலுள் இவரின் வள்ளுவ ஈர்ப்பு நெஞ்சம் தெரியவருகிறது. திருக்குறளை இவர் தெளிவு சான்ற வாழ்க்கைச் செயல் நூல்(வள்ளுவம் ப. 81) என்பதாகக் காண்கிறார்.

திருக்குறள் ஒரு மருந்துக்கடை. அவரவர் நோய்க்கேற்ப உரிய மருந்துகள் கடையில் உளவாதல் போல திருக்குறளகத்தும் நம் வாழ்நிலைக்கு ஏற்ப உரிய அறங்கள் உண்டு. ஆயின் ஒரு பெருவேறுபாடு. நம் உடல் நிலையை மருத்துவனல் அறிந்து மருந்தினை அவன் பாலோ பிறர் பாலோ வாணு;குகிறோம். திருக்குறளோ வள்ளுவர் தாமே செய்துவைத்துச் சென்ற உயிர் மருந்துக் கடையாதலின் நம் வாழ்நிலையை நாமே நாடி நிலைக்கேற்ற அறத்தினையும் நாமே கண்டு கொள்ளல் வேண்டும். ஈண்டு பொறுப்பும் எடுப்பும் நம் மேலன(வள்ளுவம். ப. 45)

திருக்குறள் என் கருத்தில் ஒரு பெருஞ்சந்தை. நடப்புச் சந்தையில் பல இனச் சரக்குகளும், ஓரினத்துள்ளே பலவகைப் பொருள்களும் உள. திருக்குறட் சந்தைக் கண் அதிகாரங்கள் பல வினச் சரக்குகளாகும்.(வள்ளுவம்.ப. 61)

என்று காணும் பொருள்களெல்லாம் நடக்கும் நடப்பெல்லாம் திருக்குறள் மயமாகவே வ. சுப. மாணிக்கனர் கண்டுள்ளார்.

இவரது பேச்சுரை பன்னிரண்டு தலைப்புகளை உடையதாக உள்ளது. இவ்வுரை கேட்க வந்தோர் சிற்சில வேண்டுகோள்களை அவ்வப்போது வைத்துள்ளனர். அவற்றுள் சில பின்வருமாறு.

சில நாட்கள் பேசி முடித்தபின் அன்பர் ஒருவர் உரை கேட்க வந்திருக்கும் அனைவருக்கும் தன் செலவில் திருக்குறள் நூல் ஒன்றைப் பரிசாக அளிப்பதாகக் கூறுகின்றார். இச்செயலை வேண்டாம் என மறுத்துரைக்கிறார் இவர்.திருக்குறள் என் வாழ்க்கைச் சுவடி என்று உணர்ந்து அவரவரும் தாமே வாங்கிக் கற்கும் நாள் வரும். உழைத்து ஈட்டிய தன் பொருளால் திருக்குறள் யாரும் பெறுக(வள்ளுவம். ப. 57) என்று இவர் திருக்குறள் நூல் அன்பளிப்பைத் தவிர்த்து மாற்றாக அவரவர் உழைப்பில் திருக்குறளைப் பெற வழிவகை செய்கிறார்.

இதுபோன்றே மற்றொரு நாள் இவர் உரை கேட்ட செல்வர்கள் பலர் ஒன்று கூடி பல பத்தாயிரம் ரூபாய்களைச் சேர்த்து இவரிடம் திருக்குறள் பரப்ப ஆவன செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். திருக்குறளை யாண்டும் யார்க்கும் பரப்பவேண்டும். தமிழகமும், இந்தியாவும், உலகமும் ஏசு பெருமான் விவிலிய நூல் போல் அறியச் செய்ய வேண்டும்…. வள்ளுவர்க்குக் கோயிலொடு மண்டபம் கட்டலும் இன்ன பிறவும் எங்கள் நோக்கம் என்று கூறிய அவர்களைப் பார்த்து வள்ளுவ வழிபரவத் தக்க வழியை இவர் எடுத்துரைக்கிறார்.

மக்கட்கெல்லாம் கல்வி வேண்டும்; கேள்வி வேண்டும்; முயற்சி வேண்டும் என்பது வள்ளுவம். இக்கோட்பாடு செயற்படுத்தற்கு உரிய வழித்துறைகளை அன்பராகிய நாம் பற்றல் வேண்டும். கல்வி வேண்டும் வள்ளுவர் பெயரால், தெருத்தோறும் பள்ளி அமைக்க. ஊர் தோறும் பெரும்பள்ளிகள் நிறுவுக. நூல் நிலையம் படிப்பகங்கள் பெருக்குக. கேள்வி வேண்டும் வள்ளுவர் பெயரால் கூடங்கள் கட்டுக. முயற்சி வேண்டும் வள்ளுவர் பெயரால் தொழிற்களகள் உழைப்புச்சாலைகள், உழவுப் பண்ணைகள் தொடங்குக. ஈகை வேண்டும் வள்ளுவர் பெயரால் ஏழை இல்லங்கள், குழந்தை விடுதிகள் பேணுக. மடிமனும், பசிமகனும், மடமகனும் இலை எனும்படி பள்ளியில் தெருவும், தொழிலில் ஊரும் இலை எனும்படி வள்ளவர்க்குத் தொண்டு செய்க. .. இவ்வெல்லாம் முதற்கண் தத்தம் ஊரிலேயே ஆற்றுவார் ஆற்றுக. செல்வ மிகுதியிருப்பின் பிற ஊர்களுக்குத் தொண்டினைப் பரப்புக. கோடிச் செல்வம் குவியின் வள்ளுவர் பல்கலைக் கல்லூரிகளும், வள்ளுவர் பல்கலைக்கழகமும் நிறுவ முயல்க. (வள்ளுவம். ப.102) என்ற இவரின் கூற்று ஊர்தோறும் நடைபெறவேண்டியனவாகும்.

ஐம்பதாண்டுகளுக்கு முந்தைய இவரின் பல்கலைக்கழக கனவு இன்று மெய்யாகிவிட்டது. அப்பல்கலைக்கழகம் மற்ற பல்லகலைக்கழகங்கள் ஆற்றும் பணிகளைச் செய்து வருகிறது. இருப்பினும் அது வள்ளுவ நெறி பரவத் தனித்திட்டம் கொள்ள வேண்டும்.

இவ்வகையில் வள்ளுவத்தை வாழ்விலக்கியமாகக் கொண்டு வ. சுப. மாணிக்கனர் வாழ்ந்துள்ளார். இவர் இவ்வள்ளுவ நூலில் கூற வரும் மையக் கருத்து தனிமனிதர் ஒவ்வொருவரின் நெஞ்சமும் தூய்மைப்பட வேண்டும் என்பதே ஆகும். இது நிறைவேறினல் உலகம் நல்வழிப்படும், இதுவே வள்ளுவரின் நெஞ்சம் என்கிறார்,

மனமாசுடையவர் யாவர் கண்ணும் இகலுவர். முரணுவர். பகைப்பர். மனமாசற்றவர் எவ்வகை வேற்றுமைக் கண்ணும் உறவு கொள்வர்; உதவுவர்; கலப்பர். இதுவே முடிந்த பேரடிப்படை உண்மை. ஆதலின் திருக்குறளுக்குச் சாதி, சமய முதலாய பொதுமை நிலைக்களமன்று. மக்கள் மனம் நிலைக்களம். ஆளுக்கொரு மனம் உடையராதலின் அப்பண்மை நிலைக்களம் மனத்து

விரிந்து பரந்த நல்ல தீய எண்ணங்கள் நிலைக்களம். சாதி சமய நாடுகளிடைப் பொதுமைநாட்டல் திருக்குறள் நோக்கமன்று. மேற்கூறியாங்குப் பொதுமைக்குள் பகையும் வேற்றுமைக்குள் நட்பும் கண்ட மனவறிஞர் வள்ளுவராதலின் தனித்தனியோரின் வஞ்சனை போக்கி நெஞ்சத்தூய்மை செய்வதே வள்ளுவம்.(வள்ளுவம் ப.44)

வள்ளுவத்தை செயல்நூலாக்கி, வள்ளுவரைச் செயலாக்க ஆற்றல் உடையவராக உயர்த்தி உலக சிக்கல்களுக்குத் தீர்வு காண விழையும் திருக்குறள் அன்பராக வ. சுப. மாணிக்கம் அமைந்துள்ளார் என்பது தெளிவு.
—

M.Palaniappan

manidal.blogspot.com

puduvayalpalaniappan.blogspot.com

Series Navigation



முனைவர் மு. பழனியப்பன்

முனைவர் மு. பழனியப்பன்

20090108_Issue

மாணிக்கனாரின் சொல் நேர்த்தி! – முனைவர் அ. அறிவுநம்பி

இலக்குவனார் திருவள்ளுவன்   17 April 2016   No Comment



மாணிக்கனாரின் சொல் நேர்த்தி!

எழுத்து பேச்சு எதுவாக இருந்தாலும் ஒருவருடைய வெற்றிக்கு அவர் செதுக்குகின்ற சொற்களே அடிப்படைக் காரணமாக அமையும். சிலப்பதிகார இலக்கிய மேடை ஒன்றில் உதிர்க்கப்பெற்ற சில சொற்களை இங்கே அடுக்கிப் பார்க்கலாம். “கோவலன் இறந்தவுடனேயே கண்ணகியும் இறந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? கள்வன் ஒருவன் இறந்தான் என்பதற்கு நாணி கள்வி ஒருத்தியும் மறைந்தாள் எனப் பேசப்பெறுமே தவிர அவளைக் கற்பி என உலகு போற்றியிருக்குமா?” இப்பகுதியில் ‘கள்வன்’ என்ற ஆண்பாலுக்குரிய பெண்பாலாகக் ‘கள்வி’ என வருதலும் கற்புடை மங்கை என்ற பொருளை

உணர்த்தக் 'கற்பி' என வருதலும் தமிழுக்கான புதுச்சொல் வரவுகள். கள்வி எனச் சில செய்யுள்களில் வருவதாகக் கூறப்பெறினும் தமிழ் உரைநடையில் செறிவும் செழுமையும் நிறைந்து அமைந்தவை இச்சொல்லாடல்கள். இவற்றை மொழிந்தவர் மூதறிஞர் முனைவர் வ.சுப.மாணிக்கனார்.

பண்டிதமணி கதிரேசனிடம் தமிழ் கற்றவரும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பங்காற்றியவருமான செம்மல் வ.சுப.மாணிக்கம் **சின்னஞ்சிறு சொற்களுக்குள்ளே கூடச் செந்தமிழை நிறைத்தவர்**; தான் கற்ற நூல்களில் தமிழ்ச் சொற்களின் நிமிர்ச்சியைக் கண்டவர்; தான் கண்டெடுத்த அருமைச் சொற்களை மொழிந்தவர்.

ஒரு பதச்சோறு வருமாறு: கம்பன் பாடல்களில் புகழ்பெற்ற ஒரு பாடலின் நிறைவு வரியாக "ஏழிரண்டாண்டின் வாவென்று இயம்பினன் அரசன் என்றாள்" என்ற வரி ஒளிரும். ஆணையிடுபவன் தந்தையும் அரசனுமான தயரதன்; இங்கே கதை மாந்தரின் நிலைப்படி ஏவினன் என்று வருவதுதான் முறையே தவிர இயம்பினன் என்ற சொல் பொருத்தமுடையதாக அமையவில்லை எனக் கருதுகிறார் மாணிக்கம். அவ்வாறு ஒரு சொல் மாற்றம் (பாடபேதம்) உள்ளதெனவும் கண்டறிந்த அவர், காப்பியப் பக்கங்களை மீண்டும் மீண்டும் அலசுகின்றார். மரபு, நடைமுறை, உளவியல் போன்ற கூறுகளின் அடிப்படையில் தந்தை ஒருவன் தன்மகனுக்குக் கட்டளையிடுவதே முறைமையாகும். ஒரே நிலையில் வாழும் இருவரிடம் இடம்பெறுவதே இயம்புதல் என்ற சொல். அச்சொல் இங்கே ஏற்புடையதில்லை என்ற தன் கருத்தை நிறுவ அவர் பட்ட தொல்லைகள் பற்பல. காப்பியத்தின் வேறிடங்களில் வரும் நிகழ்வுகளில் காப்பியப் புலவன் இழைத்தளித்த சொற்களைத் தரங்காண்கிறார் அவர்.

"என்று பின்னரும் மன்னன் ஏவியது"

"ஏவிய குரிசல் யாவர் ஏகிலார்"

"தெருளுடை மனத்து மன்னன் ஏவலிற்றிறம்ப"

போன்ற மணிவரிகளைத் தெளிவுற நிரல்படுத்துகிறார் வ.சுப.மா.

"தாதை ஏவலின் மாதொடு போந்து" கானகம் கண்ட காகுத்தன் கதையில் தயரதன் மொழிந்தது இயம்புதல் அன்று; ஏவல் மட்டுமே எனத் தெளிவுறுத்த அவர் மேற்கொண்ட கடுமையான உழைப்பே அடித்தளமானது. பொருத்தமான சொல்லும் நமக்குப் பரிமாறப்பெற்றது.

மதுரையில் துணைவேந்தராகப் பணிபுரிந்தபோது உணவுச்சாலைக்கு (Canteen) 'உண்டியகம்' எனவும், ஆசிரியர் குடியிருப்புப் பகுதிக்கு (Quarters) 'குடிமனை' எனவும், விருந்தினருக்கான ஓய்விடத்திற்கு (Main Guest House) 'முதன்மை

விருந்தில்லம்' எனவும் பெயர்சூட்டி, **சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் தங்கத்தமிழை வளர்த்தெடுத்ததையும் கணக்கில் கொள்ள வேண்டும்.**

"சொல்லுக சொல்லிற் பயனுடைய" என்ற வள்ளுவம் மாணிக்கனாரின் வாழ்க்கைப் பாடமானது. அமைதியாக உட்கார்ந்து எழுதும்போது மட்டுமல்லாமல் சட்டென்று மேடைக்கு வரும்போதும் **அவர் நெய்துதரும் சொல்லாட்சிகள் கவனத்துக்குரியன** ஆகும்.

காரைக்குடி அழகப்பர் கல்லூரியில் நடந்த ஒரு நிகழ்வினை இங்கு பதிவு செய்வது தக்கது. மாணவர்கட்கான மேடைப் பொழிவுக் கலையை வளர்க்கக் 'கலைக்கழகம்' என்ற அமைப்பை உருவாக்கினார் அவர்.

ஒருநாள் அரங்கில் மாணிக்கனாரும் ஏனைய பேராசிரியர்களும் அமர்ந்திருந்தனர். பேசிப் பழக மேடையேறிய மாணவருக்குப் பேச நா எழவில்லை. ஓரிரு மணித்துளிகள் கடந்தபின் தன் சட்டைப் பையில் வைத்திருந்த ஒருபக்கக் காகிதத்தை எடுத்து கிடுகிடு என அதில் எழுதியிருந்த கருத்துகளை உரத்து வாசித்துவிட்டு அமர்ந்துகொண்டார். பார்வையாளர்கள் பக்கம் அந்த மாணவர் திரும்பவேயில்லை.

நிறைவாக வ.சுப.மா. மேடையேறினார். செந்தமிழ், நாப்பழக்கம் ஆகவேண்டுமென உரைத்து, "முயற்சியும் பயிற்சியும் இருந்தால் உயர்ச்சி தானே இடம்பெறும்" என்றார். அவ்வுரையின் நிறைவில் அவர்கூறிய தொடர் குறிக்கத்தக்கது. மாணவர்கட்கு வழிகாட்டிய பிறகு நிறைவில் அவர் மொழிந்த சொல்வரிசை:

"ஆள்முகம் பார்த்துப் பேச வேண்டுமே தவிரத்
தாள்முகம் பார்த்துப் பேசக்கூடாது!"

– முனைவர் அ. அறிவுநம்பி

[17.4.2016 வ.சுப.மாணிக்கனாரின் நூற்றாண்டுத் தொடக்கம்.]

தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

வாழ்வு நெறி – முனைவர் வ.சு.ப.மாணிக்கம்.

இலக்குவனார் திருவள்ளுவன் 16 March 2014 No Comment




1. பலருக்குக் ஆராய நூல் வேண்டும், சொற்பொழிவாற்றக் கருத்து வேண்டும் என்பதற்காகத் திருவள்ளுவர் திருக்குறளை இயற்றவில்லை. எல்லாரும் வாழ வேண்டும்; எப்படி வாழ்விப்பது என்ற தலையாய நோக்கமே திருக்குறட் பிறப்பிற்குக் காரணம். இந்நோக்கம் எல்லாக் குறள்களிலும் வெளிப்படக் காணலாம். மிகக் கீழானோர்க்கும் உயர்வுண்டு; இயல்பாகவுள்ளவர்க்கும் மேலுயர்வு

உண்டு; மிகவுயர்ந்தார்க்கும் மேன்மேலுயுர்ச்சியுண்டு என்ற நம்பிக்கையைத் திருக்குறள் நமக்கு ஊட்டுகின்றது.

தாழ்ந்தாரைப் பார்த்துச் சோர்வடைய வேண்டா எனவும், உயர்ந்தாரைப் பார்த்து அமைதியடைய வேண்டா எனவும் ஊக்கமும் ஆக்கமும் தருவது திருக்குறள். எல்லார்க்கும் பொதுவான அறங்களைக் கூறுவது குறள் என்று சொல்லி வருகின்றோம். இது எவ்வளவு தவறான கருத்து? எவ்வளவு வீழ்வான கருத்து? பொதுவறம் கூறாது அவரவர்க்குப் பொருத்தமான அறங்கூறுவதே குறள். இதுவே குறளின் தனிச்சிறப்பு. பொதுவறம் செயற்படுமா? பொதுமடம் துப்புரவப்படுமா? “நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர், நீதி குறைந்தவர் காசுகள் தாரீர், அதுவுமற்றவர் வாய்ச் சொல் அருளீர்” என்று பொருள் நிலைக்கு ஏற்ற அறம் பாரதியார் கூறியிருப்பதை அறிவோம். அதுபோல் உலகுபுகழ் வள்ளுவர் ஒவ்வொருவரையும் தனித் தனியாக முன்னேற்ற வேண்டி அவரவர் செய்வதற்கு ஏற்ற அறங் கூறியுள்ளார். அறத்திற்காக அறம் எழுதவில்லை அவர். இவ்வுண்மையை இப்போது நாம் தெளிந்து வருகின்றோம். யாரையும் முன்னேற்றிவிடவல்லது முப்பால் என்பதனை ஊரறிய உலகறியத் தெளிவிக்க வேண்டும். “என்நிலைக்கு ஏற்ற அறம் இந்நூலில் உண்டு; ஆதலால் எனக்கும் முன்னேற்றம் உண்டு” என்னும் மெய்ந்நம்பிக்கையோடு திருக்குறளைப் படியுங்கள்.

2. அறம் எல்லா மக்களும் செய்ய வேண்டிய கடமை. எனினும் இப்படிச் செய்வதுதான் அறம். இவ்வளவு செய்தாற்றான் அறம் என வரம்பு காட்டலாமா? வள்ளுவர் அறம் வலியுறுத்தினாரேயன்றி, அதற்கு ஓர் அரண் கட்டவில்லை.




(தொடரும்)

குறள்நெறி தை 2, 1995 / சனவரி 15, 1964

வாழ்வுநெறி – முனைவர் வ.சுப.மாணிக்கம்.

இலக்குவனார் திருவள்ளுவன் 11 May 2014 No Comment

(அகரமுதல இதழ் நாள்பங்குனி 2,தி.பி. 2045 / மார்ச்சு 16, கி.பி. 2014 தொடர்ச்சி)



ஒல்லும் வகையான் அறவினை ஓயாதே
செல்லும் வாயெல்லாம் செயல்.

இக்குறளில் அவர் நெகிழ்ச்சியைப் பாருங்கள். ஒல்லும் வகையான் எனவும், செல்லும் வாய் எனவும் அறஞ்செய்வான் நோக்கத்திற்கு எவ்வளவு தாராளமாக விட்டுக் கொடுக்கின்றார்? தலைமேல் புல்லுக்கட்டை இறக்க உதவுவதும், ஆட்டின் கால் முள்ளை அணைத்து எடுப்பதும், முதியோர்க்கு இடங்கொடுத்து செல்வதும் இவ்வண்டி என வினவினார்க்குச் சலிப்பின்றி அறிவுறுத்தலும் எல்லாமே சிறு வினையா யினும் அறிவினையல்லவா? வள்ளலிடம் சென்றான் வறியனாய்த் திரும்பான்; வள்ளுவரைக் கற்றான் வாழாதிரான். வள்ளல் எப்படியும் கொடுப்பான்; வள்ளுவர் எப்படியும் வாழ்விப்பார்.

வாழ்வின் உயுர்வுக்கு இன்னவளவு பொருளாதார அடிப்படை வேண்டும் எனப் பலர் மயங்கி எண்ணம் தடுமாறிச் சோர்வடைகின்றனர். உள்ள நிலையை மேலும் குள்ள நிலையாக்கிக் கொள்கின்றனர். உயர்வுக்குப் புறவடிப்படை வேண்டாம் என்பது வள்ளுவம். உயர்வாக வேண்டும் என்றால், வேண்டும் என்ற எண்ணம் வேண்டும்; அவ்வெண்ணத்தைத் திரும்பத் திரும்ப எண்ண வேண்டும்; எண்ணப்பித்து வேண்டும்; இதுவே உயர்வுக்கு வள்ளுவர் காட்டும் நெறி.

உள்ளம் உடைமை உடைமை; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

எந்தப் பொருளடிப்படை வேண்டும் என நாம் நினைக்கிறோமோ அதனை வள்ளுவப் பேராசிரியன் உடன்படவில்லை.பொருளே தகரக் கூடிய அடிப்படை என இகழ்வதைக் காணுங்கள். உலகில் பொருளுடையா ரெல்லாம் உயர்ந்து விடவில்லையே; பொருளிலாரெல்லாம் தாழ்ந்துவிடவில்லையே. பொருளாளர் தாழவும் பொருளிலார் உயரவும் காண்கின்றோம். ஆதலால் உயர வேண்டும் என்ற

ஊக்கமே நல்வாழ்வுக்கு அடிப்படை என்பர் ஆசிரியர். இதனைவிட உயர்வுக்கு எளியநெறி காட்ட முடியுமா? திருக்குறள் காட்டும் வழி ஏற்ற நெறி மட்டுமன்று; செய்தற்கு எளிய நெறியுமாம்.

3. திருக்குறளில் பொருட்பாலே பெரும்பால். இப்பாலில் கூறப்படும் அரசியல் நெறிகள் நடைமுறைக்கு உகந்தவை. முடியரசு குடியரசு படையரசு என்ற வகைக்கு உட்பட்டு வள்ளுவர் அரசியல் வகுக்கவில்லை. நாடென்றால் அதற்கோர் நல்லரசு வேண்டும். அது வல்லரசாகவும் இருத்தல் வேண்டும் என்பதுவே வள்ளுவ அரசியல்.

படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

இது பொருட்பாலின் முதற்குறள். அரசியல் நெறி பேசும் முதற்குறளிலேயே ‘படை’ என்ற சொல்லை முதலாவதாக வைத்துப் பாடுகின்றார் வள்ளுவர். படையற்றது அரசாகாது என்ற பேருண்மையை இதனைக் காட்டினும் வேறு வகையான் அறிவுறுத்த முடியுமா? தமிழறிஞர் எவ்வளவோ நூற்றாண்டுக்கு முன்னர் வலியுறுத்தியிருந்துங்கூட, சீனப்படையெடுப்புக்குப் பின்னரேதான், படையின் இன்றியமையாமையை நாம் உணர்ந்து கொண்டோம்.

அரசு வினையாளரிடம் கையூட்டை எங்ஙனம் ஒழிப்பது என்று நம் இந்தியத் தலையரசும் உறுப்பரசுகளும் இன்று மும்முரமாக ஆராய்ந்து கொண்டிருக்கின்றன. பல குழுக்களைப் புதுவதாக அமைக்க எண்ணுகின்றன. இக்குழுக்களுக்குள்ளும் கையூட்டு நுழையாது என்று யார் உறுதி கூற முடியும்? கையூட்டைக் கண்டுபிடிக்க வழி செய்தலைக் காட்டிலும் கையூட்டு நிகழாதவாறு அலுவல் நெறிகளை அமைப்பதிற் கருத்துச் செலுத்த வேண்டும். இது பற்றி அரசியற் சான்றோராகிய வள்ளுவர்யாது கூறுகின்றார்?

நாடொறும் நாடுக மன்னன்; வினை செய்வான்
கோடாமை கோடா துலகு.
நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்.

மக்களின் வேண்டுகோள்கள் தூங்காதபடியும், திட்டங்கள் காலங் கடவாதபடியும் உடனுக்குடன் செய்யப்படுகின்றனவா என்று மேலவர்கள் தம் கீழவர்களை நாள் தோறும் கவனிக்க வேண்டும் என இடித்துக் காட்டுகின்றார் ஆசிரியர். தாமதமின்றிக் காரியம் நடக்குமென்றால், கொடுக்க யாருக்குத்தான் கைநீளும்? இன்னும் ஒன்று; வள்ளுவப் பெருமான் சொன்னபடி செய்தால் சிலவகைக் கையூட்டுகள் ஒழிந்துபோம் என்று நம்பலாம்.

காட்சிக் கெளியன் கூடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.

இன்று பெரிய வினைஞர்களைப் பார்க்க வேண்டும் என்றால், பணியாளன் தயவு வேண்டும். எழுத்துமூலம் சில எழுதினாலும் அவை மேலவர் பார்வைக்கு எட்டுமென்று சொல்ல முடியுமா? கட்டில் எடுத்து வைத்தாற்றானே கண்ணுக்குப்படும்? ஆதலின் அமைச்சர்களும் அமைச்சரனையவர்களும் நாள்தோறும் அரைமணி நேரமோ வாரத்தில் ஒரு பொழுதோ தம் அலுவலகத்திற்கு வெளியே வந்து தடையின்றி யாரையும் பார்க்க இசைவது, குறைகேட்பது முறை காண்பது என்று வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். அங்ஙனம் செய்யும் அன்பும் எளிமையும் இருக்குமாயின், “மக்கட்கு இறையென்று வைக்கப்படும்” என்ற வள்ளுவர் பாராட்டு அவர்கட்குக் கிடைக்கும். மக்கள் வாக்கும் மனமாரக் கிடைக்கும். மக்கள் வாக்கும் மனமாரக் கிடைக்கும். வள்ளுவர் நல்லரசுக்கு வேண்டும் நடைமுறையெல்லாம் அறிந்த அரசியல் மேதை ஆதலின் இந்திய அரசியல் வாழ்வில் செல்வார் அனைவர்க்கும் திருக்குறளறிவு இன்றியமையாதது என்பது வெளிப்படை.

4. உலக நலம் என்பது சமுதாய நலம். சமுதாய நலம் என்பது இல்லற நலம். இல்லற நலம் என்பது கணவன் மனைவியின் காதல் நலம். காதல் சிறவாவிட்டால் ஞாலத்தில் எத்துறையிலும் எப்பண்பும் சிறவாது. எம்முயற்சியும் விழலுக்கு இறைத்த நீராகிவிடும். உலகிடை வேறு வகையால் வரும் இன்பத்தினும் காதலர் தம் இன்பம் சிறந்தது ஐயமில்லை; ஆனால் வேறு வகையால் வரும் துன்பத்திலும் காதலர்களுக்குள் வரும் துன்பம் கொலையனையதன்றோ? காதலர்தம் வேற்றுமை அறத்தைக் கெடுக்கவும். அரசியலைக் கெடுக்கவும் காண்கின்றோம். ஒருவர் பொறை இருவர் நட்பு என்பது குடும்பத்தின் தலையாய பண்பு. உயிரொன்று என இலக்கியம் பாராட்டும் காதலர்களுக்குள்ளும் நீண்ட வாழ்நாளில் நெஞ்சு பொறுக்கமாட்டாச் சில பிணக்குகள் நிகழவே செய்யும். மனப் பூசல்கள் வஞ்சகத்தாலன்றி வாய் வார்த்தையால் வளரவே செய்யும்; சில சமயம் தடிக்கவும் செய்யும். அப்போது காதலின் நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொள்ளல் என்பது பொறுத்துக் கொள்ளுதலாகும். பொறுத்துக் கொள்ளாதார் புரியாதவரே, பிணக்கைப் புரிந்து கொண்டார், இன்பப் பெருமை எய்துவர்.

உப்பமைந் தற்றால் புலவி*;* அது சிறிது
மிக்கற்றால் நீள விடல்

பிணக்கம் அளவாகுக; மிகுதியாக்க வேண்டாம் என்று இல்லறப் பெருமகனாராகிய வள்ளுவர் காதலர்களுக்கு நுண்ணிய நாகரிக முறையில் புலப்படுத்துவர். அறம் பொருள் இன்பம் என்ற முத்திற வாழ்வுக்கும் எத்திறத்தானும் வழிகாட்டுவது திருக்குறள்.

பேராசிரியர் சி.இலக்குவனார் தமிழை வாழ்விக்கும் சிறந்த இலக்கு உடையவர். என்றும் நம்பிக்கைக்கு உரிய அன்புத் தமிழர். உலகப் பெருமொழிகளுள் ஒன்றாகிய நந்தமிழைக் காத்து வளர்க்கும் நோக்கத்தால், ‘குறள் நெறி’ என்னும்

நல்லிதழைத் தொடங்குகின்றா ர். அளவு கடந்த விற்பனைப் புகழ் நச்சி இன்று செய்தித் தாள்கள் கீழான செய்திச் சில்லறைகளை மேலாக வெளியிடுகின்றன. தெருச் சண்டையினும் கீழான வசைமாரி பெய்கின்றன. நல்ல எளிய புரியும் தமிழ்ச் சொற்கள் இருக்கவும், வேண்டுமென்றோ கருத்தில்லாமலோ கலப்பு மொழியைப்பரப்புகின்றன. இன்ன குறைபாடுகள் இன்றி 'குறள் நெறி' இயங்குமாக. இலக்குவனாரின் 'குறள் நெறி'யால் வள்ளுவரின் குறள் நெறி எங்கும் பரவுவதாக.

குறள்நெறி, தை 19, 1995 / 01.02.1964

Topics: கட்டுரை, தமிழறிஞர்கள் **Tags:** சொல் நேர்த்தி, சொல்லாட்சி, தினமணி, முனைவர் அ. அறிவுநம்பி, வ.சுப.மாணிக்கனார், மறக்க முடியுமா? பேராசிரியர் வ.சுப.மாணிக்கனார் – எழில்.இளங்கோவன்

இலக்குவனார் திருவள்ளுவன் 24 December 2017 No Comment



பேராசிரியர் வ.சுப.மாணிக்கனார்

“மாணிக்கச் சிந்தனைகள், எளிய வாழ்வு, அளவான பேச்சு, எந்நிலையிலும் எதிர்கால நம்பிக்கை, பதவிகளைத் தொண்டாக மதித்தல், தன்னைப் பற்றிய திருத்தமான சிந்தனைகள், வாழ்க்கைத் திட்டங்கள், பெரியவர்களின் வரலாறுகளைப் படித்தல், சோர்வுக்கு இடம் கொடாத ஊக்கங்கள், பகட்டின்றித் தூய எண்ணத்தால் இறைவனை வழிபடுதல்” ஆகிய பண்புகளுக்குச் சொந்தக்காரர், பேரறிஞர் பெருந்தகை, பேராசிரியர் வ.சுப.மாணிக்கனார் என்று நினைவு கூர்கிறார் அவரின் மாணவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன்.

தேர்ந்த சிந்தனையாளர், தெளிந்த உரையாசிரியர், திறன்மிகு உரைநடையாளர். ஆய்வாளர், பேராசிரியர், கவிஞர், பழைமை&- புதுமை இரண்டையும் ஒருமித்துப் போற்றியவர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள்.
இவர் தி.பி. 1948 சித்திரை 05 – 1917ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 17ஆம் நாள் புதுக்கோட்டை மாவட்டம் மேலைச்சிவபுரியில் பிறந்தார்.
தெய்வானை ஆச்சி, வ.சுப்பிரமணியன் இணையரின் ஐந்தாம் மகனாகப் பிறந்தார். இவரின் இயற்பெயர் அண்ணாமலை என்றாலும் மாணிக்கம் என்ற பெயரே நிலைபெற்று விட்டது.
தன் ஏழாம் அகவை வரை நடேச(ஐய)ரிடம், குருகுலப் பாடம் படித்த இவர், ஏழாம் வயதில் புதுக்கோட்டை உயர்நிலைப்பள்ளியில் தன் படிப்பைத் தொடர்ந்தார்.
இவரின் 18ஆம் அகவையில் பருமாவுக்கு வேலைக்காகச் சென்றார். அங்கு வட்டிக்கடை ஒன்றில் வேலை செய்தாலும், தொடர்ந்து அங்கு நீடிக்காமல் தாயகம் திரும்பிவிட்டார்.
தமிழகம் திரும்பிய வ.சுப.மாணிக்கனாருக்கு, அறிஞர் பெருந்தகை பண்டிதமணி கதிரேசனார் அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது.
அதன் விழைவாய்த் தமிழ்மொழியின் மீது பெருநாட்டம் கொண்ட மாணிக்கனார். பண்டிதமணியின் ஊக்குவித்தலினால் சிதம்பரம் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் வித்வான் தேர்வில் தேர்ச்சி அடைந்தார்.
இப்பல்கலைக் கழகத்தில் இராகவையங்கார், ந.மு.வேங்கடசாமி நாட்டார், அ.சிதம்பரநாதன் ஆகியோர் மாணிக்கனாரின் ஆசிரியர்களாக விளங்கினர்.
1945ஆம் ஆண்டு கீழ்த்திசைமொழி இளங்கலைப் பட்டமும் (பி.ஒ.எல்), 1951 ஆம் ஆண்டு முதுகலை(எம்.ஏ.) பட்டமும் பெற்றார்.
பின்னர் ‘**தமிழில் வினைச் சொற்கள்**’ என்ற தலைப்பில் ஆய்வு செய்து கீழ்த்திசைமொழி முதுகலைப்பட்டம் (எம்.ஓ.எல்.)பெற்ற இவர், ‘**தமிழில் அகத்திணைக் கொள்கை**’ என்ற தலைப்பை ஆய்வுக்கு எடுத்து அதில் முனைவர் பட்டம் பெற்றார்.
1941 தொடக்கம் 1948 வரை மாணிக்கனார் தாம் பயின்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 7 ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணியற்றினார்.
அப்பொழுது விரிவுரை பயின்ற குறிப்பிடத்தக்க இரு மாணவர்களில் ஒருவர் நாவலர் நெடுஞ்செழியன், மற்றொருவர் பேராசிரியர் க.அன்பழகன்.
1948 முதல் 1964 வரை 16 ஆண்டுகள் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார்.

1964-1970 ஆகிய 6 ஆண்டுகள் அழகப்பா கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்தார் மாணிக்கனார். அப்பொழுது அக்கல்லூரியின் மாணவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன்.
பின்னர் 1970 தொடங்கி 1977 வரை 7 ஆண்டுகள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய போது, இந்திய மொழிப்புல முதன்மையாளர் பொறுப்பில் இருந்து பணியாற்றி இருக்கிறார்.
1979 முதல் 1982 வரை மூன்று ஆண்டுகள் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகச் பொறுப்பேற்றுத் திறம்படப் பணியாற்றினார். இங்கு தமிழ்மொழியின் வளர்ச்சி, அறிவியல் துறை வளர்ச்சிக்கான இவரின் பணியை அப்போதைய தமிழக அரசு பெரிதும் பாராட்டியுள்ளது.
பல்கலைக் கழகத் துணைவேந்தர் பொறுப்பில் இருந்து ஓய்வு பெற்ற வ.சுப.மாணிக்கனார், கேரள மாநிலம் திருவனந்தபுரம் கல்லூரியில் திராவிட மொழியியல் கழகத்தின் முதுபேராய்வாளராக இருந்து சிறப்பு வாய்ந்த இருநூல்களை ஆங்கிலத்தில் எழுதினார்.
அவ்விரு நூல்களுள் ஒன்று '**தமிழ் யாப்பியல் வரலாறும் வளர்ச்சியும்**. மற்றொன்று "**தொல்காப்பிய ஆய்வு**!'
பேராசிரியர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள் பல்வேறு நூல்கள் எழுதி இருக்கிறார். அவற்றுள் **குறிப்பிடத்தக்க சில நூல்கள் வருமாறு**:
எழுத்துச் சீர்திருத்தம் எங்கே போகிறது, – தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நூன்மரபும்,- மொழி மரபும், – தொல்காப்பியப் புதுமை, தொல்காப்பியத் திறன், – தொல்காப்பியக் கடல், வள்ளுவம், ஒப்பியல் நோக்கு,- திருக்குறள் சுடர், – திருக்குறள் தெளிவுரை (மாணிக்கவுரை).
இம்மட்டுமன்று The Tamil Concept of Love, A Study of Tamil Verbs, Collected Papers, Tamilology ஆகிய ஆங்கில, நூல்களும் இவரால் எழுதப் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.
இவரின் நூல்கள் 2006 ஆம் ஆண்டில் நாட்டுடைமை ஆக்கப்பட்டன.
பேராசிரியர் மாணிக்கனார் அவர்கள் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவராக பொறுப்பேற்றுள்ளார்.
தமிழகப் புலவர்குழுத் தலைவராக இருந்துள்ளார்.
தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வடிவமைப்புக் குழுத் தலைவராகவும் இருந்து இவைகளின் மூலம் தமிழுக்குப் பெரும் தொண்டு ஆற்றியிருக்கின்றார்.
சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவரின் தமிழ்ப்பணிக்காக இவருக்குச் சிறப்பு முனைவர் (டி.லிட்.) பட்டம் வழங்கி உள்ளது.
'**முதுபெரும் புலவர்'** எனற விருதை குன்றக்குடி அடிகளார் வழங்கி இருக்கிறார்.

இவரின் சொந்த ஊரான மேலைச்சிவபுரியில் இயங்கி வந்த சன்மார்க்க சபை இவருக்குத் 'தமிழச் செம்மல்' என்ற சிறப்பு விருதை வழங்கி இருக்கிறது.
தமிழ்நாடு அரசு பேராசிரியர் வ.சுப.மாணிக்கனார் மறைவிற்குப் பின்னர், இவரைப் போற்றும் விதமாக இவருக்குத் 'திருவள்ளுவர்' விருதை வழங்கி சிறப்பித்து இருக்கிறது.
இவரின் மறைவுக்குப் பின்னர், இவர் எழுதிவைத்த இறுதிமுறியின்(உயிலின்)படி, சொந்த ஊரான மேலைச் சிவபுரி அறக்கட்டளைக்கு ஒருகுறிப்பிட்ட தொகை இவரின் சொந்தப்பணத்தில் இருந்து கொடுக்கப்பட்டு உள்ளது.
அதுபோல மேலைச்சிவபுரியில் சாதி மதவேறுபாடு இன்றி எல்லாக் குழந்தைகளின் உடல்நலம் பேண மருத்துவ உதவிக்காகவும் இவரின் பணத்தில் ஒரு தொகை வழங்கப்பட்டு உள்ளது.
இதே வழியில் சாதி மத வேறுபாடு இன்றி குழந்தைகளின் கல்விக்காக உதவும் பொருட்டும் கணிசமான தொகை ஒதுக்கித் தரப்பட்டுள்ளது.
இவரால் சேர்ந்து வைக்கப்பட்டிருந்த 4500 நூல்களைத் தான் பணியாற்றிய காரைக்குடி அழகப்பா கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கிவிட்டார்.
தன் ஆசிரியர் பண்டிதமணி கதிரேசனாரின் நூற்றாண்டு விழாவை அரசு விழாவாக ஆக்கியவர். மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையின் மூலம் பண்டிதமணியின் நூல்களைப் பதிப்பித்தவர். பண்டித மணியின் சொந்த ஊரான மதிபாலன் பட்டியில் அவருக்குச் சிலை அமைத்த அவரின் மாணவர் – தமிழுலகப் பேரறிஞர் பேராசிரியர் வ.சுப.மாணிக்கனார் தி.பிப. 2020 சித்திரை 13 ஆம் நாள் – 1989ஆம் ஆண்டு ஏப்பிரல் 25ஆம் நாள்,புதுவையில் இரவு 11 மணிக்கு மாரடைப்பால் காலமானார்.

எழில்.இளங்கோவன்



கருஞ்சட்டைத் தமிழர்

Topics: கட்டுரை, தமிழறிஞர்கள், பிற கருவூலம் **Tags:** எழில் இளங்கோவன், கருஞ்சட்டைத்தமிழர், மறக்க முடியுமா, வ.சுப.மாணிக்கனார், வ.சுப.மாணிக்கம்

தொகுப்பு : ப. முத்து தங்கம்





மனிதருள் மாணிக்கம்

பேராசிரியர்க்கெல்லாம் பேராசிரியராய் வாழ்வாங்கு வாழ்ந்தவர் பேராசிரியர் வ. சுப. மாணிக்கனார்.



தரணி புகழும் இந்தத் தமிழ்ப் புலவர் வரலாறு பற்றி நிறைய பதிப்புக்கள் - புத்தகங்களிலும், வலைதளங்களிலும் நிறைந்துள்ளன.

எனவே அது தவிர்த்து காணும் கண்ணோட்டமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

பொய் சொல்லா மாணிக்கம் என்று சிறு வயதிலேயே நற்பெயர் எடுத்து அதனை வாழ்நாள் முழுதும் கடைப்பிடித்து மனிதருள் மாணிக்கமானவர். இப்படிப்பட்ட மாமனிதர்களையும் தமிழகம் பெற்றிருந்தது என்பது ஆச்சரியமாகவும் ஏக்கமாகவும் இருக்கிறது, இன்றைய சூழ்நிலையில்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பேராசிரியர்களுக்கெல்லாம் பேராசிரியராய் இருந்தவர். ஆம், நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன் போன்றோர் இங்கு இவரிடம் ஒரு காலத்தில் கல்வி பயின்றனர்.

பதினாறு ஆண்டுகள் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகப் பதவி வகித்தார்.

மூன்றாண்டுகள் மதுரை காமராசர் பல்கலைக்கழக துணை வேந்தராக சிறப்புடன் பணிபுரிந்தார். இங்கு ஆற்றிய தமிழியல் வளர்ச்சி மற்றும் பிற அறிவியல் துறைகளின் வளர்ச்சிக்கான சிறப்பான தொண்டுகள் அரசால் மிகவும் பாராட்டப்பட்டன.

சிறிது காலம் திருவனந்தபுரத்தின் மொழி இயற் கழக ஆய்வு முதியராக வேலை பார்த்தபோது தமிழ்

யாப்பு வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதினார்.

பேச்சிலும், மூச்சிலும் மேலாக இதயத்திலும் தமிழ் உயிராய் இருந்ததால் அவரின் குழந்தைகளுக்கு தென்றல், பொற்கொடி தொல் காப்பியன், பூங்குன்றன், பாரி என்று அற்புதமான தமிழ்ப் பெயர்களை வைத்து பெருமை கொண்டார். தமிழ்ப் பெயர் வைப்பதை பாவமாகக் கருதும் இக்காலத்தில் மாணிக்கனாரின் தமிழ்ப் பற்று ஒரு நல்ல பாடமாக அமையும்.

தமிழுக்குத் "தொல்காப்பியமும்", வாழ்வின் உயர்வுக்குத் "திருக்குறளும்", உயிர்த் தூய்மைக்குத் "திருவாசகமும்", எனக்கு வழிகாட்டிய தமிழ் மறைகள்" என்று கூறி, வாழ்ந்த மூதறிஞர், தமிழ் இமயம் எனப் போற்றப்பட்ட வ.சுப.மாணிக்கனார்.

மதுரைப் பல்கலைக் கழக துணை வேந்தராக இருந்த காலக்கட்டத்தில் பல்கலைக்கழக நடைமுறைகள் அனைத்தும் தமிழிலேயே இருக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்து அமல் படுத்தினார்.

தனித் தமிழ் இயக்கத்துக்கு வித்திட்டவர் மறைமல அடிகள்; அதை வளர்த்தவர் தேவநேயப் பாவணர். அதனை மென்மேலும் வளர்த்து தழைத்தோங்க செய்தவர் வ. சுப. மாணிக்கனார்.

'பயனில சொல்லாப் பாவலன்' என்றும் "தீவினை, செய்யாச் செம்மல் செந்தமிழ்ப் பெம்மான், பொய்யா மாணிக்க புலவன்" என்றும் பாராட்டப் பெற்றுள்ளார்.

காந்திய நெறிமுறையை பின்பற்றி வாழ்ந்ததால் 'தமிழ்க் காந்தி' என்றும் 'தமிழ் இமயம்' என்றும் யாவர் போற்றப்பட்டார்.


'பயனில சொல்லாப் பாவலன்' என்றும் "தீவினை, செய்யாச் செம்மல் செந்தமிழ்ப் பெம்மான், பொய்யா மாணிக்க புலவன்" என்றும் பாராட்டப் பெற்றுள்ளார்.

காந்திய நெறிமுறையை பின்பற்றி வாழ்ந்ததால் 'தமிழ்க் காந்தி' என்றும் 'தமிழ் இமயம்' என்றும் யாவர் போற்றப்பட்டார்.

உலகப் பொது மறையாம் திருக்குறள் சொல்லும் வினைத் தூய்மையும், வினைத் திட்பமும் நிறைந்தே கொண்டிருந்தவர். அது மட்டுமல்லாமல் வள்ளுவம் சொல்படி வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

நம் அன்னைத் தமிழுக்கு தம் வாழ்வையே அர்ப்பணமாக்கியதால் தமிழ் கூறும் நல் உலகிற்கு என்றென்றும் ஆத்மார்த்தமானவர்.

அண்ணார் பேராசிரியர் வ. சுப. மாணிக்கனார் அவர்களின் நூற்றாண்டான இவ்வாண்டில் மட்டுமல்லாமல் என்றென்றும் நினைவில் கொள்வோம்!



ப. முத்து தங்கம் (ப. மு. தங்கமாதேஸ்வரன்), இந்திய அறிவியற் கூடத்தில் (IISc, Bangalore) முனைவர் (PhD) பட்டம் பெற்றவர். பள்ளி, கல்லூரி நாட்களில் சமுதாயம் சார்ந்த கட்டுரைகள், கவிதைகள் எழுதியவர். இந்திய அறிவியற் கூட தமிழ் சங்கம் துணைத் தலைவராக, மின்னல்' மாதாந்திரப் பத்திரிக்கையின் இணை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். ஒருமுறை கட்டுரைப் போட்டியின் நடுவராக இருந்த எழுத்தாளர் சுஜாதா இவரின் கட்டுரையை முதலாவதாக தேர்ந்தெடுத்து சில வரிகளையும் வாசித்துக் காட்டினார். தென் பூவகத்தில் (South Florida) வாழ்ந்த காலத்தில் குழந்தைகளுக்கு மூன்று வருடங்கள் தமிழ் ஆசிரியராக இருந்தார்.

திருக்குறள் அடிப்படையில் மூன்று நாடகங்கள் எழுதி ஆண்டு விழாவில் இரண்டு நாடகங்கள் வெற்றிகரமாக அதே குழந்தைகளைக் கொண்டு நடத்தினார் . இவரின் கவிதைகள், கட்டுரைகள் FeTNA மலர்களிலும், அமெரிக்க மாகாண தமிழ்ச்சங்க மலர்களிலும் பிரசுரமாகியுள்ளன.

வ.சுப.மாணிக்கனாரின் பாட்டுத்திறன்

முனைவர் ம.பெ.சீனிவாசன்
சிவகங்கை

தனி-ஏர் உழவர்

இருபதாம் நூற்றாண்டில் தமிழுக்குத் தகும் உயர்வளித்த பெரும் புலமையாளர்கள் பலர். அவருள் முன்வரிசையருள் ஒருவராய் முன்மொழியத் தக்கவர் நம் மாணிக்கனார். தன்னொப்பாரில்லாத் தனித்தமிழறிஞர் அவர். அவரின் புலமைக்கூறுகள் பலவும் வியந்தோதத்தக்கவை. ஆழ்ந்து அகன்ற தனி ஆய்வுக்குரியவை. பழந்தமிழுக்கு முடிமணியாகத்திகழும் தொல்காப்பியத்திற் புதுமை கண்டவர் அவர். புதுமைக்கவி பாரதியிடத்தும் பழமையின் மரபுவேர்களைக் கண்டு காட்டிய சிறப்பும் அவருக்குண்டு. பாட்டு, தொகை முதலான சங்க நூல்களின் மீதான அவரின் பார்வை மற்றவர்களிடமிருந்து வேறுபட்டது; தனி வீறு மிக்கது. உழுத சாலில் உழாமல் தனி ஏர் நடத்திய எழுத்து - ஏர் உழவர் அவர். சிலம்பு - மேகலை ஆகிய 'இரட்டைக் காப்பிய'ங்களை அவர் அணுகிய விதமும் புதுமையானதே. **'எந்தச்சிலம்பு?'** என்னும் கேள்வியின் மூலம் சிலம்பு பற்றிய முந்தைய ஆய்வுகளை அசைத்துப் பார்த்தவர் மாணிக்கனார். 'கம்பர்' என்னும் சிறு பனுவலில் - கவிச்சக்கரவர்த்தியின் காப்பியக் கடலை, ஒருகைப்பிடிக்குள் அடக்கிக்காட்டிய 'குறுமுனி' அவர். அந்த வித்தகத்தை - விந்தையை என்ன சொல்ல! 'பாலிருக்கும் பழமிருக்கும் பசியிருக்காது' என்ற திரையிசைப் பாடலைப் 'பசியடநிற்றல்' என்னும் தொல்காப்பிய நூற்பாவோடு(1215) பொருத்திக்காட்டிய புதுமைப் புலவர். காலந்தோறும் தோன்றிய தமிழ்இலக்கண இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், புராணங்கள், தனிப்பாடல்கள் என நம் காலத்துக் கலைஞரின் குறளோவியம் உட்பட அவரின் 'விமர்சன வெளிச்சம்' பாயாத நூல் ஒன்றும் இல்லை. திருக்குறளில் ஆழங்காற்பட்டவர்; "அது கருத்து வகையால் உலகமக்கட்கெல்லாம் உரியது; எனினும் மொழிகாரணமாய் நமக்கு உறவுடையது" (வள்ளுவம் ப.263) என்று உரிமை பாராட்டியவர். திருமுறைகளில் - குறிப்பாகத் திருவாசகத்தில் அவருக்கிருந்த பெருவிருப்பம் அளப்பரியது. ஆழ்வார்களின் ஈரத்தமிழையும் அவர் நன்கு அறிவார். அவர் படைத்த தனிநூல்களும் கட்டுரைகளும் இதற்குச் சான்று. இவையேயன்றி நூலாசிரியர் பிறர்க்கு வழங்கிய அணிந்துரை மற்றும் மதிப்புரைகளிலும் அவரின் புலமைத்தெறிப்புக்களைக் காணலாம். அவை காரிருளில் நடப்பவனுக்குச் சட்டெனத் தோன்றி மறையும் மின்னலின் வெட்டைப் போல வழி காட்டுபவை.

ஒரு சோற்றுப்பதமாக ஓர் எடுத்துக்காட்டு:

கம்பராமாயணம் - அண்ணாமலைப் பதிப்புக்கு (யுத்தகாண்டம் ஆறாம் பாகம், 1970) அவர் வழங்கிய 'நன்றியுரை'யில் (ப.VIII) கம்பன் கையாண்ட, 'திருத்தும்' என்னும் சொல்லுக்குத் திருமங்கையாரின் 'திருத்தாய் செம்போத்தே'

என்னும் பாசுரம் கொண்டு விளக்கம் தந்திருப்பதும் அதனடியாகச் சிறந்த பாடம் இன்னது என அறுதியிட்டிருப்பதும் அவரின் திறமான புலமைக்குச் சான்றாவன.

இப்படிப் பழமை ஊற்றமும் புதுமை நாட்டமும் கொண்டிருந்த மாணிக்கனார், பாட்டுத்திறன் படைத்தவராகவும் விளங்கினார். ஒருமுறை நாடறிந்த பெருங்கவிஞர் **சிற்பி** அவர்களிடம் கவிஞர் **பாலா** அருகிருக்க, அத்திறன் குறித்து நான் சொன்னதை இங்குக் குறிப்பது தவறாகாது.

" 'வசுபமா' கவிஞரல்லர்; ஆனால் அவர் கவிதை எழுதியிருக்கிறார்" என்னும் குறிப்புத்தான் அது.

'உரை'யில் அதாவது எழுத்தில் தனிநடை, தனிச்சுவை காட்டியவர் மாணிக்கனார். படைத்தவன் பழத்தினில் இனிப்பினைச் சேர்த்தது போலப் பாட்டிலும் அவர் கனிச்சுவை காட்டினார். அத்திறத்தினை மட்டும் இங்குச் சுருங்கச் சுட்டுவோம்.

ஆர்வப்பாட்டு

பாட்டுக்குச் சொல்லப்படும் இலக்கணம் யாது? தானாக எழுகிற அகத்தூண்டுதலின் வெளிப்பாடாக வழிந்தோடுவதே (Spontanious outflow) கவிதை என்பர் மேனாட்டறிஞர்.

> **உள்ளத்துள்ளது கவிதை - இன்பம்**
> **உருவெடுப்பது கவிதை**
> **தெள்ளத்தெளிந்த தமிழில் - உண்மை**
> **தெரிந்துரைப்பது கவிதை**

என்பார் நம் கவிமணி. உணர்ச்சியின் அடியாகவே இன்பம் உருவெடுக்கும். எனவே உணர்ச்சியும் உண்மையும் கவிதைக்கு இரு சிறகுகளாயின. இதனினும் சுருக்கமாக எட்டாம் நூற்றாண்டிலேயே பாட்டுக்கு இலக்கணம் சொன்னார் ஒருவர்.

> **"ஆர்வத்தால் பாடாதார் பாட்டு என்றும்**
> **பாட்டல்ல கேட்டாமே"**

என்பது அவர்கூற்று. ஆர்வப்பாட்டே பாட்டு; அவ்வார்வம் இன்றேல், என்றுமே அது பாட்டாகாது என்பது அவர் துணிபு.

யார் அவர்?

அவர் தாம், 'தமிழநன்னூல் துறைகள் அஞ்சுக்கு இலக்கியம்' செய்த திருமங்கையாழ்வார்.

நம் மாணிக்கனாரும் அத்தகைய ஆர்வப் பாட்டினரே. அதனால் தான் பெரும்பாலும் அவர் 'செய்தவை செய்யு'ளாகாமல் உணர்ச்சிக் கவிதைகளாயின. ஒருமுறை வாய்விட்டுப்படித்தோர் மனத்திலும் படிந்து நின்று, பக்கம் நின்று கேட்போர் நெஞ்சையும் கிறங்கடித்தன.

சான்று, டாக்டர் உ.வே.சா. அவர்களுக்கு 'அன்புறை' (உறை-காணிக்கை)யாக அவர் பாடிய பாடல்கள்.

‘தமிழ்க்காதல்’ தந்த நம் மாணிக்கனார்க்கு **உ.வே.சா.** மீது தனிக்காதல் உண்டு. அவரைப் **‘பதிப்பின்வேந்து’** என்று மதிப்பிட்டவர் அவர். ‘அவரின்றேல் பண்டைத்தமிழ் நூல்கள் இல்லை; தமிழரின் நனிநாகரிகம் பற்றி இவ்வுலகம் அறியவும் வாய்ப்பில்லை’ என்னும் கருத்தினர். ‘இன்றைய தமிழ்த் தேசிய உணர்வுக்கும் தமிழ்க்காப்புக்கும் - இனமான மறுமலர்ச்சிக்கும் வித்திட்டவர் உ.வே.சா.’ என்று நினைக்கிறார். அந்த நினைவுத்தொடர்ச்சியால் நெஞ்சம் நெகிழ்கிறார். கொஞ்சம் பின்னோக்கிப் பார்க்கிறார். ‘பார்காக்கவும் பயிர்காக்கவும் பாலர் உயிர்காக்கவும் காலந்தோறும் ஆயிரமாயிரம் பேர் இருந்தார்கள். ஆனால் தமிழ்காக்க யார் இருந்தார்கள்?’ இப்படி மனச்சோர்வுடன் நினைக்கையிலேயே, ‘சாமிநாதனின் எழுச்சி’ அவர் கண்ணுக்குத் தெரிகிறது. கவிதையும் பிறக்கிறது:

பார்காத்தார் ஆயிரம்பேர்; பசித்தார்க் காகப்
பயிர்காத்தார் ஆயிரம் பேர்; பாலர்க் காக
மார்காத்தார் ஆயிரம் பேர்; வாழ்ந்த நாட்டில்
மனம்காத்த தமிழ்த்தாய் ‘என் உடைமை எல்லாம்
யார்காத்தார்’ எனக் கேட்க ஒருவன், ‘அம்மா
யான்காப்பேன்’ எனவெழுந்தான் சாமிநாதன்
நீர்காத்த தமிழகத்தார் நெஞ்சின் உள்ளான்
நிலைகாத்த மலையிமய நெற்றிமேலான்

அடுத்து வரும்பாடல் அடிக்கரும்பாக - இன்னும் சுவையாக அமைகிறது. அடிக்கரும்பின் அடுத்தடுத்த மொழிகளைக் கடித்துச் சுவைக்கையில் மொழிக்கு மொழி தித்திப்பாவது போலப்பாடலின் அடிமேலடி சுவையேறி நிற்கிறது.

பொய்யாத தமிழ்க்குமரி ஈன்ற சாமி!
போகாத புகழ்க்கன்னி மணந்த நாத!
செய்யாத மொழித்தொண்டு செய்த ஐய!
சிறுகாத நெஞ்சத்தேம் வணங்கு செம்மல்!
எய்யாத திருவடியால் எண்பத் தாண்டும்
இளையாத உள்ளத்தால் எங்கும் சென்று
நெய்யாத தமிழ்நூல்கள் நிலைக்க வைத்த
நீங்காத தமிழ்க்குயிரே நின்தாள் வாழ்க!

எங்கேனும் ‘மாணிக்கக்கல்’ கரைவதுண்டா? உ.வே.சா.வின் தமிழ்த்தொண்டில் உருகி உருகிக் கரைந்து நிற்கிறது நம் ‘மாணிக்கம்’.

நாயகனுக்குத் தலைப்பட்ட நாயகி போல் ‘சாமிநாத ஐயர்’ என்று அவர் பெயர் சொல்லவும் நாணி, ‘சாமி’ என்றும் ‘நாத’ என்றும் ‘ஐய’ என்றும் முதல்

இரண்டடிகளின் வெவ்வேறு சீர்களில் அச்சொற்களைத் தனித்தனி நிறுத்தி நிறுத்திச் சொல்லிப் பார்க்கிறார்; சுவைகாண்கிறார். நாமோ அவற்றைச் ‘சாமிநாத ஐயர்’ என்று முறையே சேர்த்துப்படித்து அழகு பார்க்கிறோம்.

மனமொழிமெய்களால் முற்றும் தமிழான — பெருந்தமிழன் நீ. இனத்தால் உன்னை வேறுபடுத்தி விலக்கிப்பார்க்கும் ‘சிறியமனம்’ எங்களுக்கில்லை - என்பதை அவர் வெளிப்படுத்தும் விதமே தனி.

“சிறுகாத நெஞ்சத்தேம் வணங்கு செம்மல்”

என்பதிற் பொதிந்து கிடக்கும் பொருள் இதுவே. விரிவானம் போல் அவரின் விரிவான மனத்தைக் காட்டும் இடமிது. நிறைவாக,

“நீங்காத தமிழ்க்குயிரே நின்தாள் வாழ்க” என்று முடிக்கும்போது,

“தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே”

என்னும் திருநாவுக்கரசரின் தேவாரம் தான் நம் நினைவுக்கு வருகின்றது.

அது மட்டும் தானா? இதே ‘சாமி நாதப்புலவனுக்கு’ மகாகவி பாரதி பாடிய பாட்டொன்றும் கூடவே நம் நினைவில் ஓடுகின்றது.

‘நிதியறியோம் இவ்வுலகத் தொருகோடி
இன்பவகை நித்தந் துய்க்கும்
கதியறியோம்’ என்று மனம் வருந்தற்க
குடந்தைநகர்க் கலைஞர் கோவே!
பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்கு வாயே!

பாரதியின் இவ்வறுசீர் விருத்தப் பாடலோடு, நாம் முன்னர்க் காட்டிய வ.சுப.மாவின் எண்சீர் விருத்தப் பாடல்களை ஒப்பு நோக்குக; வாய்விட்டுப் படிக்க.

இப்போது மகாகவி பாரதிக்குப் பக்கத்தில் நம் மாணிக்கனார் வந்து நிற்பதைப் பார்க்கலாம்.

மற்றுமொருசான்று

இனி, மரபு — புதுமை இரண்டிலும் தடம் பதித்த **கவிஞர் மீராவின்** பாடலும் மூதறிஞர் மாணிக்கனார் பாட்டும் ஒத்து நடப்பதற்கு ஒரு சான்று காட்டுவோம்.

தென்றலும் நிலவும் போலப் பிறர்க்காக வாழ்வதே சிறந்த வாழ்க்கையாகும். எனவே தன்னால் மாநிலம் பயனுறுவதற்காகப் பராசக்தியிடம் வரம் கேட்டான் பாரதி. ‘உலகம் உண்ண உண் உடுத்த உடுப்பாய்’ என்றார் பாவேந்தரும். வாழையடி வாழையென வந்த பொதுமைச் சிந்தனை இது.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த இளம் பெருவழுதியும் பிறர்க்கென முயல்வோர் வாழ்வதாலேயே இவ்வுலகம் வாழ்கிறது (புறநா.182)

என்றான். சான்றோர் கூட்டுறவால் நிலம் - தன் பாரத்தைத் தாங்குகிறது (990) என்றும் பண்புடையார் இருப்பதாலேயே உலகம் இருக்கிறது (996) என்றும் உறுதியாக நம்புகிறது வள்ளுவம். இத்தகைய சிந்தனைப் பள்ளியில் பயின்றவரே அறிஞர் வ.சுப.மா.வும், தமக்கென வாழாத இயற்கைப் பொருள்களின் இயல்பினை அவர் எண்ணுகிறார். இவ்வியல்புக்கு விலக்கான பொருள் ஒன்றும் கூட அவர் கண்ணிற்படவில்லை. எனவே பார்க்கின்ற பொருளிலெல்லாம் இந்த எண்ணமே மனத்திற்பட்டுப் பாட்டுப் பிறக்கின்றது.

நல்லாவின் பால்முழுதும் கன்றுக் கில்லை;
நறும்பூவின் மணமுழுதும் சோலைக் கில்லை;
நெல்லாகும் கதிர்முழுதும் நிலத்துக் கில்லை;
நிறைகின்ற நீர்முழுதும் குளத்துக் கில்லை;
பல்லாரும் கனிமுழுதும் மரத்துக்கில்லை;
பண்ணரம்பின் இசைமுழுதும் யாழுக் கில்லை;
எல்லாமே பிறர்க்குழைக்கக் காணு கின்றேன்;
என் வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும் வேண்டும்.

வ.சுப.மா.வின் இக் கவிதை வாக்குமூலம் (Declaration) அவரின் பொதுமைச் சிந்தனையையும் அதன் மீது அவருக்கிருந்த தீரா வேட்கையையும் தெரிவிக்கின்றது. ‘ஆவின்பால் முதலான யாவும் அடுத்தவர்க்கே’ என்பதை அவர் அடுக்கிச் சொல்வது கவிதைக்கு அழகூட்டுகிறது. படிப்போரை மீண்டும் மீண்டும் வாய்விட்டுப் படிக்க வைக்கிறது. அது பற்றிச் சிந்திக்க வைக்கிறது. சிந்திப்போருள் சிலரேனும் செயல்படக் கூடுமன்றோ? அதுவே பாட்டின் பலன். அப்படி ஒரு பலன் கிடைத்தால், ‘பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்த பெருமை’ நம் மாணிக்கனார்க்கும் வந்து சேரும்.

இனி மீராவின் கவிதைக்கு வருவோம், பொதுவுடைமைப் பூவான ஜீவாவின் மறைவு குறித்த இரங்கற் பா அது.

தனக்காகக் கார்மேகம் பொழிவ தில்லை;
தனக்காகச் சோழநதி பாய்வ தில்லை;
தனக்காகப் பூங்குயில்கள் இசைப்ப தில்லை;
தனக்காகச் செவ்வாழை செழிப்ப தில்லை;
தனக்காக இயற்கையிலே முகிழ்த்த ஒன்றும்
தழைப்பதில்லை; பிழைப்பதில்லை மனிதன் மட்டும்
தனக்காக வாழ்கின்றான் என்பர் ; அந்தத்
தரையுரையைப் பொய்க்கவைத்த சான்றோன் நீயே!

தாமரை - ஜீவா நினைவுமலர் (1965)

மீரா நாடறிந்த பெருங்கவிஞர்; ‘வசுபமா’ — அறிஞர் போற்றும் பேரறிஞர். இவ்விருவரின் பாட்டும் உணர்ச்சி, கருத்து இரண்டாலும் ஒத்து நடப்பதைக்

காணலாம். 'போலச் செய்தலாக' இல்லாமல் தனித்தன்மையுடன் ஒன்றற்கொன்று அவை 'இணை'யாக நிற்பதும் காண்க.

நாம் இது வரை பார்த்த மாணிக்கனார் பாடல்கள் உணர்ச்சிப் பெருக்குடையன.

கருத்துச்செறிவு

'வ.சுப.மா' அவர்கள் தம் - **வள்ளுவம்** என்னும் நூலில் (கற்பனைப் பொழிவுகள் - அவர் படைத்த புதிய இலக்கியவகை) தமையனார் திருப்பதி அவர்களுக்கு 'அன்புறை'யாக இரண்டு வெண்பாக்கள் பாடியிருக்கிறார்.

எங்கள் குலமுதல்வன்; இல்லாண்மை ஏற்றமகன்;
பொங்கல் மனைபோற் பொலிவுடையன்; - சங்கத்
தமிழனைய தூயன்; தனைமறந்த தொண்டன்;
கமழும் குடிமைக்கோர் காட்டு (1)

குடும்பக் களத்துக் குறிக்கோட் படையால்
இடும்பைப் புறங்கண்ட எம்முன் - நெடும் பொறையை
வள்ளுவ நூலகத்து வாழ்வெண்ணிக் கற்பவர்
கொள்ளுப நெஞ்சிற் குறித்து (2)

இவ்விரு வெண்பாக்களும் குடிசெயல்வகை (103) குடிமை(96) இடுக்கணழியாமை(63) என்னும் திருக்குறள் அதிகாரக் கருத்துகளை உள்வாங்கிப் பாடப்பெற்றவை. அன்றியும்,

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும் (1023)
இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி (1030)

என்னும் குறப்பாக்களின் கருத்துச் செறிவாகவும் இவற்றைக் காணக்கூடும்.

முதல் வெண்பாவில் இடம்பெறும் 'இல்லாண்மை' வேறெங்கும் காணப் பெறாத ஒன்று; இவரின் புதிய சொல்லாக்கம். குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் வலிமைக்கு இவர் சூட்டிய புதிய பொன் மகுடம் அது.

ஒன்றை மட்டும் இங்குக் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும் ஆசிரியன், தனது நூலை - தன் மனம் உகந்தவர்க்குக் காணிக்கையாக்குவது புதுவதன்று; இயற்கையே. மகன் தந்தைக்கும் மாணாக்கன் ஆசிரியற்கும், 'அன்புறை'யாக்குவது போலத் தமையனுக்குத் தம்பி(ன்) செய்த காணிக்கை இது வாசகர்க்கும் இதற்கும் என்ன தொடர்பு? என்று நாம் நினைக்கலாம். நுட்பமாக நோக்கின் மற்றவர் போலன்றிப் படிப்பவர்க்கும் நூலுக்கும் ஒரு தொடர்பு காட்டுகிறார் மாணிக்கனார். அத்தொடர்பு, நூலைக் கற்போரையும் சேர்த்துப்

பிணிப்பது; குழந்தைக் கண்ணனை உரலோடு பிணித்த ‘கண்ணிநுண்’ சிறுத்தாம்பி’னைப் போன்றது.

இரண்டாம் வெண்பாவில், “வாழ்நெறி காட்டுவது வள்ளுவம்; அந்த நெறியின் நீங்காது வாழ்ந்து காட்டி, இடுக்கண்களை ஏற்றுக் குடும்பபாரத்தைச் சுமந்தவர் அண்ணன் திருப்பதி. எனவே இந்நூலினைக் கற்பார் அவரது நெடும் பொறையை (பெரும்பாரத்தைத் தனியொருவனாய் ஏற்று நின்றதை) நெஞ்சிற்குறிக் கொள்வாராக! கொண்டால் அவர் தம் வாழ்வு சிறக்கும்” என்னும் குறிப்பினைத் தருகிறார். தமையன் - தம்பி உறவுப்பாட்டாக இல்லாமல், ஆசிரியர் - வாசகர் உறவையும் சேர்த்துக் காக்கும் கருத்துச் செறிவே இதன் சிறப்பு எனலாம்.

முடிவுரை

‘தமிழ்க்காதல்’, ‘வள்ளுவம்’ ஆகிய இருபெருநூல்களின் ‘அன்புறை’ப்பாடல்களே இங்கு எடுத்துக் காட்டப்பட்டன. ‘கொடைவிளக்கு’ முதலான அவரின் ஏனைய பாட்டுப் பனுவல்கள் விரிவஞ்சி இங்குப் பேசப் பெறவில்லை. ஆழ்ந்து கற்பார், அவற்றிலும் ‘மாணிக்கப்பரல்’களைக் கண்டு மகிழலாம்.

தொடர்புக்கு:

ம.பெ.சீனிவாசன்
எஸ் 2, வரதா டீலக்ஸ்,
வசுதாரா வளாகம்,
ஆண்டாள்புரம், மதுரை 625003,
பேசி: 98424 36640.

மூதறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கம் நூற்றாண்டுத் தொடக்கம்!

By Sutha I Published: Sunday, April 17, 2016, 11:30 [IST] -
முனைவர் மு இளங்கோவன்

எளிமையின் உருவம்; புலமையின் இயக்கம்; சங்கப் பனுவலில் திளைத்த அறிஞர்; தொல்காப்பியக் கடலில் மூழ்கி முத்தெடுத்த வல்லுநர்; தமிழ்க்காதலால் வள்ளுவத்தை வரைந்து பார்த்தவர்; திருவாசகத் தேனுண்ணும் தும்பி; ஏழிளந்தமிழில் வாழப் பழகியவர்; பல்லாயிரம் மாணவர்களின் நெஞ்சக் கோவிலில் நிலைபெற்ற தெய்வம்; கற்றோர் உள்ளத்தில் கலந்த மேதை; தினைத்துணை உதவி பெற்றாலும் பனைத்துணையாகக் கொள்ளும் பண்பாளர்; தமிழ்வழிக் கல்விக்குத் தெருவிலிறங்கித் தமிழ் முழக்கம் செய்தவர்; கொடை விளக்கு வழங்கிய மாமலர்; தில்லையம்பலத்தில் திருமுறை முழங்க வேட்கையுற்றவர்; கல்லாத இனத்தைக் கற்க வைத்தவருக்குப் பாடாண் திணை பாடிய பாவலர்; வீடும் கொடுத்த விழுச்செல்வரைப் பாட்டு மாளிகையில் படிமமாக்கிக் காட்டியவர். பண்டிதமணியாரின் புலமைப் பிறங்கடை இருவருள் ஒருவர்; தமிழ்ப்பகையை எதிர்த்து நின்ற அரிமா; பார் காத்தவரையும் பயிர் காத்தவரையும் போற்றும் உலகில் பைந்தமிழ் காத்தவரைப் போற்றிய நன்றியாளர்; இவ்வாறு எழுதிக்கொண்டே செல்லலாம் மூதறிஞர் வ.சுப. மாணிக்கனாரின் தமிழ் வாழ்க்கையை! ஆம். தமிழ் வாழ்க்கை வாழ்ந்தவர்களின் பெருமையை முழுவதும் எழுதும் ஆற்றல் யாருக்கு உண்டு? வரம்பிலாப் பெருமைகொண்ட தமிழ்த்தாயின் தலைமகன் மூதறிஞர் வ.சுப. மாணிக்கம் அவர்களின் நூற்றாண்டு விழா இன்று தொடங்குகின்றது! அரசியல் ஆர்ப்பாட்டத்திலும் மட்டைப்பந்து மாயையிலும் திரைப்படக் கூத்தர்களின் வெட்டுருவக் கூத்துகளிலும் மூழ்கிக் கிடக்கும் இற்றைத் தமிழகத்தாருக்கு அறிஞர் வ.சுப. மாணிக்கம் அவர்களின் தமிழ்ப்பணிகளையும் தமிழ் வாழ்க்கையையும் எடுத்தியம்புவது எம்மனோர் கடமையாகும். வ. சுப. மாணிக்கம் அவர்கள் மேலைச்சிவபுரி என்னும் சிற்றூரில் வாழ்ந்த வ. சுப்பிரமணியன்

செட்டியார் - தெய்வானை ஆச்சி ஆகியோருக்கு ஐந்தாவது மகனாக 17. 04.1917 இல் பிறந்தவர். இளம் அகவையில் தம் பெற்றோரை இழந்தவர். பர்மாவில் தம் முன்னையோரின் தொழிலைப் பழகியவர். பொய்சொல்லா மாணிக்கமாகப் பொலிந்தவர். பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்களால் அடையாளம் காணப்பெற்று, தமிழறிவு தரப்பெற்றவர். அண்ணாமலை அரசரின் கல்விக்கோயிலில் தம் கல்விப்பணியைத் தொடங்கி, மாணவர்களுக்குத் தமிழ் இலக்கிய அறிவையும், தமிழுணர்வையும் ஊட்டியவர். வள்ளல் அழகப்பர் அவர்களின் கல்வி நிறுவனத்தில் தமிழ்ப்பணியைத் தொடர்ந்தவர். நேர்மை, எளிமை இவற்றுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். தம் விருப்பத்திற்கு மாறாக நடந்துகொள்பவர்கள் குருதியுறவு உடையவர்கள் எனினும் பொறுத்துக்கொள்ளாத மாசில் மனத்தவராக வ. சுப. மாணிக்கம் விளங்கியவர். தம் குறிக்கோள் வாழ்க்கையை விருப்பமுறியாக(உயில்) எழுதிவைத்துப் பின்னாளில் தம் விருப்பம் தொடர வழிவகை செய்தவர். எந்த நிலையிலும் அறத்திற்குப் புறம்பாகச் செயல்படாத மாசில் மனத்தினர்; நெறியினர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தராக இருந்து, மூத்த அறிஞர் பெருமக்களைத் தமிழாராய்ச்சிக்குப் பணியமர்த்தித் தமிழாராய்ச்சியை நிலைநிறுத்தியவர். தொல்காப்பியம், சங்க நூல்கள், திருக்குறள், திருவாசகம், கம்ப இராமாயணம், பாரதியத்தில் தனித்த ஈடுபாடு கொண்டவர். பழைமைப் பிடிப்பும் புதுமை வேட்கையும் நிறைந்தவர். தாய்மொழிவழிக் கல்வியை வலியுறுத்தி இயக்கம் கண்டவர். தமிழ் எழுத்துக்களைத் திருத்தம் என்ற பெயரில் குலைக்க அறிவியல், தொழில்நுட்பப் போர்வை போர்த்தி ஒரு குழு திரிந்தபொழுது அதனை வன்மையாகக் கண்டித்து எழுதியவர். ஆய்வு நூல்கள், படைப்பு நூல்கள், திறன் நூல்கள், புத்தாக்கச் சொற்கள் தந்து, தமிழ் வாழ்க்கை வாழ்ந்து தம் வாழ்நாளுக்குப் பிறகும் தமிழுக்குப் பெருமைசேர்க்கும் ஆக்கங்களைத் தந்த மூதறிஞர் வ.சுப. மாணிக்கம் அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவது ஒவ்வொரு தமிழரின் கடமையாகும்;

ஒவ்வொரு தமிழமைப்புகளின் கடமையாகும். அரசியல் செல்வாக்கோ, மற்ற பின்புலங்களோ இல்லாத மூதறிஞரின் கருத்துக்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது கற்றறிந்தார் கடமையாகும். அவர் படைப்புகளை மதிப்பிட்டுத் திறனாய்வு நூல்களை எழுதி, வெளியிடுவது எழுத்தாளர் கடமையாகும். மாணிக்கனாரின் வெளிவராத படைப்புகளைத் திரட்டித் தொகுத்து மாணிக்கப் புதையலை வெளிக்கொணர்வது உடன்பழகியோரின் பணியாகும். அவர் விரும்பிச் செய்த தமிழ்வழிக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்த அரசுக்கு வேண்டுகோள் வைப்பது இயக்கம் நடத்துவோரின் தலையாயப் பணியாகும். கோயில்களில் நாள்தோறும் திருமுறைகளைத் தமிழில் ஓதி, வழிபாடு நிகழ்த்துவதற்குக் குரல்கொடுப்பது இறையீடுபாட்டளர் கடமையாகும். மூதறிஞருக்குத் திருவுருவச் சிலையமைத்து அவர் நினைவுகளைப் போற்றுவதும், அவர் நினைவு என்றும் நின்று நிலவப் பணிபுரிவதும் அரசினரின் கடமையாகும். பல்கலைக்கழகங்கள், தமிழாய்வு நிறுவனங்கள் வ.சுப. மா. குறித்த ஆய்வரங்குகளையும், அறக்கட்டளைப் பொழிவுகளையும் நடத்தி அவருக்குப் பெருமை சேர்ப்பதைத் தலையாயப் பணியாக்குதல் வேண்டும். செம்மல் வ.சுப. மாணிக்கம் பிறந்த நாளில் அவர் கொள்கைளை நெஞ்சில் ஏந்துவோம்! நன்றி: http://muelangovan.blogspot.com

Read more at: https://tamil.oneindia.com/cj/mu-illangovan/dr-va-suba-manickam-s-centenary-celebrations-begin-today-251432.html

தமிழ்க்காதல் கொண்ட மூதறிஞர்!

September 6, 20190



-மேகலா இராமமூர்த்தி

புதுக்கோட்டை மாவட்டம், மேலைச்சிவபுரியில், சுப்பிரமணியன் செட்டியாருக்கும் தெய்வானை ஆச்சிக்கும் மகனாக 1917ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் நாளன்று பிறந்தவர் தமிழ் மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார். அவருடைய பிள்ளைத் திருநாமம் அண்ணாமலை என்பதாகும். மாணிக்கம் என்றும் அவர் அழைக்கப்பட்டதால் அந்தப் பெயரே பிற்காலத்தில் அவருக்கு நிலைத்துவிட்டது.

குழந்தைப் பருவத்திலேயே தாயையும் தந்தையையும் அடுத்தடுத்து இழந்த மாணிக்கத்தை அவருடைய தாய்வழிப் பாட்டனாரும் பாட்டியாரும்

வளர்த்தனர். தொடக்கக் கல்வியைப் புதுக்கோட்டையில் உள்ள பள்ளியொன்றில் பயின்ற அவர் தம் பதினோராம் வயதில் வட்டித் தொழில் பழகுவதற்காகப் பர்மாவுக்குச் சென்றார்.

அங்கே இரங்கூன் நகரத்திலுள்ள கடையொன்றில் உதவிசெய்யும் சிறுவனாக வேலைக்குச் சேர்ந்தார். அவர் வேலைசெய்த வட்டிக்கடை முதலாளி ஒரு சமயம் அவரிடம் ஒருவர் பெயரைக் குறிப்பிட்டு அந்த நபர் கடைக்கு வந்து தன்னை எங்கே என்று கேட்டால், ”முதலாளி இல்லை” என்று சொல்லிவிடுமாறு வற்புறுத்தினார். ஆனால் பொய்சொல்வதை அவ் இளம் வயதிலே யே பெருங்குற்றமாகக் கருதிய சிறுவன் மாணிக்கம், ”முதலாளி நீங்கள் வெளியில் சென்றிருந்தா ல் இல்லை என்று கூறலாம்; ஆனால் நீங்கள் இங்கேயே இருக்கும்போது எவ்வாறு இல்லை என்று கூறுவது? அப்படியெல்லா ம் நான் பொய்சொல்ல மாட்டேன்!” என்று பிடிவாதமாக மறுத்துக் கூறியதால் அந்த நாளிலேயே வட்டிக்கடை வேலையிலிருந்து நீக்கப்பட்டார். இதனாலேயே அவருக்குப் பொய்சொல்லா மாணிக்கம் என்று பெயர் வழங்கியதாகத் தெரியவருகின்றது.
வட்டிக்கடையில் வேலை செய்ய முடியாத சூழலில் பர்மாவிலிருந்து நாடு திரும்பிய வ.சுப. மாணிக்கனாருக்குத் தமிழ் நூல்களை ஊன்றிக் கற்ற பண்டிதமணி கதிரேசஞ் செட்டியாருடன் தொடர்பு ஏற்பட்டது. அவருடைய உதவியால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் வகுப்பில் பயின்று, முதன்மையாகத் தேர்ச்சியுற்றார்.

சில திங்கள் அப்பல்கலைக்கழகத்திலேயே ஆய்வு மாணாக்கராய் இருந்து பின் ஏழாண்டுகள் அங்கேயே விரிவுரையாளராகப் பணியாற்றினார். அப்போதே தனியாகப் படித்து பி.ஓ.எல், எம். ஏ பட்டமும், ’தமிழில் அகத்திணைக் கொள்கைகள்’ பற்றி ஆய்ந்து முனைவர்ப் பட்டமும் பெற்றார். பின்னர் 1948 தொடங்கி இருபது ஆண்டுகள் காரைக்குடி அழகப்பர் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகவும் முதல்வராகவும் பணிபுரிந்தார். மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று தமிழ்த்துறைத் தலைவராகவும் இந்திய மொழிப்புல முதன்மையராகவும் தொண்டாற்றினார். பின் மதுரைக் காமராசர் பல்கலை க்கழகத் துணைவேந்தர் பதவியேற்று

தமிழியல் வளர்ச்சிக்கு ம் பிற அறிவியல் துறைகளின் வளர்ச்சிக்கும் வழிவகுத்துத் துணைநின்றார். திருவனந்தபுரத்தின் மொழியியற்கழக ஆய்வு முதியராக வேலைபார்த்தபோது தமிழ் யாப்பு வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதினார். தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தி ல் தொல்காப்பியத் தகைஞராகப் பணிசெய்ததன் பயனாகத் தொல்காப்பியத்துக்கு இவர்தம் புத்துரை விளக்கம் கிடைத்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பொன்விழாவில் இவருக்கு டி.லிட். பட்டம் நல்கிச் சிறப்புச் செய்தது.

குன்றக்குடி ஆதீனம் 'முதுபெரும் புலவர்' எனும் சிறப்புப் பட்டத்தையும், மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை 'செம்மல்' எனும் சிறப்புப் பட்டத்தையும் நல்கின. அரசு இவர் மறைவுக்குப்பின் 'திருவள்ளுவர்' விருது வழங்கிச் சிறப்பித்தது.

தமிழ்ப்பல்கலைக்கழகத் தொடக்க நிலையில் செயன்முறைகளை வகுக்க அமைக்கப்பெற்ற வல்லுநர்குழுவின் தலைவராக இருந்து அதன் வளர்ச்சிக்கு வழிவகுத்தார் மாணிக்கனார். தமிழகப் புலவர் குழுவிற்கும், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்திற்கு ம், மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை கணேசர் செந்தமிழ்க் கல்லூரிக் குழுவுக்கும் தலைவராகத் திகழ்ந்து இவர் ஆற்றிய பணிகள் மிகப்பல. 'காரைக்குடி தமிழ்ச்சங்கம்' நிறுவிச் சங்க இலக்கிய வகுப்பு நடத்தியும் இளஞ்சிறார்க்கு 'அறநூல்கள் ஒப்புவித்தல் போட்டி' வைத்துப் பரிசுகள் வழங்கியும் ஒல்லும் வாயெல்லாம் தமிழ்த்தொண்டு செய்தார். தில்லையில் அம்பலத்தின்கண் நின்று திருமுறை கள் ஓதி வழிபடப் பேராசிரியர் வெள்ளைவாரணனார் போன்றோரின் துணையோடு போராடி வாகை சூடினார்.

வள்ளல் அழகப்பரின் கொடைவளம் ஏத்திக் 'கொடை விளக்கு' எனும் கவிதைநூல் படைத்தார். இவர்தம் தனிப்பாடல்களின் தொகுப்பு 'மாமலர்கள்' எனும் பெயரின் வெளிவந்துள்ளது. இவர்தம் படைப்புக்களுள் வள்ளுவமும், தமிழ்க்காதலும் இருகண்களெனப் போற்றத்தக்கவை. இவ்விரு நூல்களும் தமிழர் அனைவரும் படித்துப் பயன்கொள்ள வேண்டிய அற்புதமான ஆராய்ச்சி நூல்களாகும்.

காதலரின் பாலுணர்ச்சிகளை, அவர்தம் உளவியலைக் காட்சிப்படுத்துவதில் புலவர்களின் மாட்சி எத்தகையது என்பதை நுட்பமாய் ஆராய்ந்திருக்கு ம் நூல் தமிழ்க்காதல்.

அகப்பொருள் பேசும் எழுதிணைகளின் இயல்பைச் சுருங்கச்சொல்லி விளங்கவைக்க விரும்பிய மாணிக்கனார், கைக்கிளையை 'முதிராக் குறுங்கரு' என்றும், பெருந்திணையை 'முற்றிவீழ் கரு' என்றும் நடுவணதாய் அமைந்திருக்கும் அன்பின் ஐந்திணையே 'இயல்பான வளர்கரு' என்றும் விளம்பியிருப்பது அவரின் நுண்மாண்நுழைபுலத்துக்குத் தக்க சான்றாகும்.

அன்றைய பாடல்கள் குறித்து இன்றைய இளையோர் எழுப்பும் வினாக்கள் சிலவுண்டு. சங்கப்பாடல்கள் அடியெல்லை, கடுமையான இலக்கண வரம்புகள் முதலியவற்றை உள்ளடக்கியிருப்பது புலவரின் கற்பனைச் சிறகை ஒடிக்காதா? கவிதை ஆர்வத்தைச் சிதைக்காதா? என்பவை அவை. புலவர்கள் இந்த இலக்கண விதிகளையே பாடல் மரபெனக் கொண்டு அறிவறிந்து அடங்கிப் பாடல்படைத்த காரணத்தால்தான் ஞாலமதிப்பைப் பெற்று, அன்றைய புலவர்கள், இன்றளவும் புகழொளி வீசுகிறார்கள் என்று விடைபகரும் மாணிக்கனார்,
புகழ்பெற்ற மேனாட்டுச் சிந்தனையாளரான Bertrand Russell தம்முடைய 'Marriage and morals' எனும் நூலில் குறிப்பிட்டிருக்கும்," Love poetry depends upon a certain delicate balance between convention and freedom, and is not likely to exist in its best form where this balance is upset in either direction."
"காதற்பாட்டு, மரபுக்கும் உரிமைக்கும் இடையே மெல்லியதொரு சமநிலையை வேண்டிநிற்கும். அது சற்றே கோடினாலும் பாட்டு அதன் அழகுருவை இழந்துவிடும்" எனும் கருத்தைப் பொருத்தமாய் மேற்கோள் காட்டுவது அவரின் பரந்துபட்ட வாசிப்பையும் நமக்கு அறியத்தருகின்றது.
திருக்குறளில் தோய்ந்து, வள்ளுவர் நெஞ்சை ஆய்ந்து, வள்ளுவம் எனும் ஆராய்ச்சி நூலை படைத்திருக்கு ம் மாணிக்கனார், அதில் தம் உளக் கருத்துக்களைப் பன்னிரண்டு கற்பனைச் சொற்பொழிவுகளாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.
"தமிழர்களே! நாம் புகழ்சான்ற திருக்குறளைப் போற்றுகிறோம். பன்மாணும் பறைசாற்றுகிறோம். அவ்வளவோடு அமைதல் ஆகாது; 'புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும்' (538) என்பது ஒரு தனி வள்ளுவம். 'செய்யாது இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்' என்பது குறள்காட்டும் அச்சமுடிபு. ஆதலின் யார்க்கும் செயல் வேண்டும் என்பதுதா ன் வள்ளுவர் நெஞ்சம். இச்செயல் நெஞ்சமே என் திருக்குறட் பொழிவுகளின் உயிர்நிலை.

விளக்கமெல்லாம் இதன் சூழ்நிலை. ‘குறள் கற்பேன்; நிற்பேன்; நிற்கக் கற்பேன்; குறள்வாழ்வு வாழ்வேன்; வள்ளுவர் ஆணை’ என்று எண்ணுமின்!” என அந்நூலில் வள்ளுவர் நெஞ்சத்தை நமக்கு வெளிச்சமிட்டுக் காட்டிக் குறள் கற்கவும் அதன்வழி நிற்கவும் நம்மை வலியுறுத்துகின்றார்.

இந்நூல்களேயன்றித் தொல்காப்பியக் கடல், திருக்குறட்சுடர், சங்கநெறி, காப்பியப் பார்வை, இலக்கியச் சாறு, தமிழ்க்கதிர், தலைவர்களுக்கு முதலியவை இவர்தம் பிற படைப்புக்கள். திருக்குறளை யாவரும் எளிதில் புரிந்துகொள்ள ’உரைநடையில் திருக்குறள்’ எனும் நூலை இயற்றியுள்ளார்.

மணிவாசகர் நூலக வெளியீடான ‘கம்பர்’ என்னும் இவரது நூல் தமிழக அரசின் பரிசுபெற்றது. தமிழ் யாப்பு வரலாறு, தமிழில் வினைச்சொற்கள், தமிழில் அகத்திணைக் கொள்கைகள் என்னும் நூல்கள் இவரால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்றவையாகும். மன்பதையின் முன்னேற்றங்கருதி இவர் படைத்த நாடகங்கள் மனைவின் உரிமை, உப்பங்கழி, ஒருநொடியில் என்பனவாகும்.

இவற்றில் ’தலைவர்களுக்கு’ என்ற நூலை நாம் அரசியல் சார்ந்த நூலாகக் கருதலாம். 1965ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் இந்நூல் வெளிவந்ததாகத் தெரிகிறது. 1965, தமிழக வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் ஆண்டாகும். காரணம் அரசாங்கத்தின் இந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழகமே போர்க்கோலம் பூண்டிருந்த ஆண்டு அது. ஆதலால் அச்சமயத்தில் தாம் எழுதி வெளியிட்ட அந்நூலில் மொழிச்சிக்கல் குறித்தும் அதற்கு ஏழு விதமான தீர்வுகள் குறித்தும் தம் கோணத்தில் மாணிக்கனார் விரிவாகப் பேசியிருக்கின்றார்.

இவ்வாறு தமிழிலும் ஆங்கிலத்திலும் பனுவல் பல படைத்த அம் மூதறிஞர், தமிழ்ச் சொல்லாக்கத்துறைக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்திருக்கின்றார்.

“சொற்பொழிந்தேன், வானொலிக்கின்றேன், பழமொழிகின்றோம், அட்டவணைப்பர், நன்றியன், விருப்பன், ஈடுபாடன், இலக்கியர், இலக்கணர், தமிழ்வளர்ப்பிகள், இலக்கியப் படிப்பிகள், மாறுவேடி, நம்பிக்கைக் கேடி, தமிழ்மை, தமிழ் மன்னாயம், மக்கட் குழுவாயம், அணிய

நாடுகள், சால்பியம், புரட்சியம், மக்களியம், ஒப்பியம், படைப்பியம்” என்பன அவற்றுள் சில.

சிலப்பதிகாரம் எனும் காப்பியத்துக்கு அப்பெயர் சிலம்பு காரணமாக வந்தது என்பதை நாமறிவோம். எனினும் அச்சிலம்பு எது? யாருடையது? என்று கேட்டால் நம்மில் பெரும்பாலோர் கண்ணகியின் காற்சிலம்பே காப்பியத்தின் பெயருக்குக் காரணம் என்று கூறுவோம். ஆனால் வ.சுப. மாணிக்கனாரோ தம்முடைய ’காப்பியப் பார்வை’ எனும் நூலில் இடம்பெற்றுள்ள ‘எந்தச் சிலம்பு?’ எனும் ஆராய்ச்சிக்கட்டுரையில் கோப்பெருந்தேவியின் தொலைந்துபோன சிலம்பே சிலப்பதிகாரப் பெயருக்குக் காரணம் என்பதைத் தக்க சான்றுகளோடு நிறுவியுள்ளார். சிலப்பதிகாரப் பெயர் பற்றிய என் ஆராய்ச்சி, முன்னையோர் ஒருமுகமாகக் கூறிவரும் கருத்துக்கு முற்றுமுரணா க இருந்தாலும், உண்மை காண முயலுதலும், கண்ட உண்மையை வலியுறுத்துதலும் தமிழ் மாணவரின் கடன் எனும் உணர்ச்சியின் அடிப்படையிலே யே இக்கருத்தை வெளியிடுகின்றேன் எனக் கட்டுரையின் முடிவில் அவர் முத்தாய்ப்பாய்க் கூறியுள்ள கருத்து ஆய்வாளர் அனைவரும் மனங்கொளவேண்டிய ஒன்றாகும்.

தமிழ்மொழிபால் தணியாக் காதல்கொண்ட அப்பெருமகனார், மழலையர் ஆங்கிலப்பள்ளிகளைத் தமிழ்ப்பள்ளிகளாக மாற்றவேண்டும்; தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை பயிற்றுமொழி தமிழாதல் வேண்டும் எனும் கொள்கையினைப் பரப்பத் தமிழ்வழிக் கல்வி இயக்கங்கண்டு அதனைத் தமிழகம் எங்கணும் நடாத்திவந்தார். எழுத்துச் சீர்திருத்தம் எனும் பெயரில் எழுத்துமாற்றம் செய்து தமிழுக்கு ஊறுசெய்தலாகாது என்பதனைத் தம் கட்டுரைவழி அறிஞருலகுக்கு அறிவுறுத்தினார்.

வ.சுப. மாணிக்கனாரின் குணநலன்களைச் சுருங்க உரைப்பதென்றால்…

எளிய தோற்றமும், உயரிய நோக்கமுங்கொண்ட பழுத்த தமிழறிஞர் அவர்! சிறந்த சிந்தனையாளர்; தனித்தமிழ் இயக்கத்திற்குத் தாமே புதிய சொற்களைப் படைத்து எல்லாநிலைகளிலும் எங்கும் தமிழ்வளர ஓய்வென்பதறியாது உழைத்த உரஞ்சான்ற வித்தகர். அனைத்துக்கும் மேலாய்ப் பண்புவழி உலகினை நடத்தத் தம் மதிநுட்பத்தையும்

நூற்புலமையையும் அசைவிலா ஊக்கத்தோடு பயன்படுத்திவந்த சான்றோர். இருபதாம் நூற்றாண்டின் இறுதியில், பல நிலையினும் சிறந்தோங்கி த் தமிழ்ப்பணிக்காகவே வாழ்ந்து பண்பின் திருவுருவாகத் திகழ்ந்த மூதறிஞர்.
தமிழ்ப்புலமையும், சான்றாண்மையும், சிறந்த பண்புநலன்களும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற அருந்தமிழறிஞரான வ.சுப.மாணிக்கனார், 1989ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் நாள் இரவு மாரடைப்பால் புதுச்சேரியில் காலமானார்.
அப் பேரறிஞரின் பொன்னுடல் இப்புவியையைவிட்டு மறைந்தாலும், தன்னேரிலாத தமிழுக்கு அவராற்றியிருக்கின்ற அளப்பரிய பணிகளால் தமிழ்ச் சான்றோர் நெஞ்சில் என்றும் மாணிக்கமாய்ச் சுடர்விட்டு ஒளிர்வார்.
கட்டுரைக்கு உதவியவை:

1. https://ta.wikipedia.org/wiki /வ._சுப._மாணிக்கம்
2. வள்ளுவம் – வ.சுப. மாணிக்கனார் – மணிவாசகர் பதிப்பகம்
3. தமிழ்க்காதல் – வ.சுப. மாணிக்கனார் – மெய்யப்பன் பதிப்பகம்

MAANIDAL - மானிடள்

தமிழ் இலக்கியம் பற்றிச் சிந்திக்கும் வலைப்பூ

வ.சுப.மாணிக்கம் க்கான வினவலுக்குத் தொடர்பான முறையில் வரிசைப்படுத்திய இடுகைகளைக் காண்பிக்கிறது. தேதி முறையில் வரிசைப்படுத்து எல்லா இடுகைகளையும் காண்பி

திங்கள், ஜனவரி 16, 2017

மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார் சுட்டும் வள்ளுவ நடை வகை



நடையியல் என்பது தற்போது வளர்ந்து வரும் திறனாய்வுத் துறைகளில் ஒன்று. படைப்பாளர் ஒவ்வொருவரும் அவருக்கேற்ற நடைப்பாங்கைக் கடைபிடிக்கின்றனர். எழுத்தாளர்களின் நடை மக்களிடம் சென்று சேர்கிறது. நல்ல நடை, படிக்க ஆர்வம் ஏற்படுத்தும் நடை போன்றவை மக்களிடம் வெகுவிரைவில் சென்று சேர்கிறது. ஒரு எழுத்தாளரின் நடை இது என்று உறுதிப்படுத்தும் நிலையில் அவ்வெழுத்தாளரின் மற்ற படைப்புகளும் மக்களிடம் கவனம் பெற்றுவிடுகின்றன. எனவே, எழுத்தாளன் தொடர்ந்து எழுத வேண்டும். அவ்வெழுத்தாளன் தனக்கெனத் தனித்த நடையைக் கையாளவேண்டும். அந்நடை மக்களால் எளிதில் அடையாளப்படுத்தப்பட வேண்டும். இவ்வகையில் எழுத்துக்கான பெருமதிப்பை எழுத்தாளனின் நடை வழங்கிவிடுகிறது.

திருக்குறள் தொடர்ந்து கற்பிக்கப்படும், கற்கப்படும் நூல். இதன் யாப்பு ஒரே அமைப்பிலானது என்றாலும் எல்லாக் குறள்களும் ஒரே நடையுடையனவல்ல. ஒவ்வொரு குறளும் தனக்கெனத் தனித்த நடையமைப்பினைக் கொண்டுள்ளது. சில குறள்கள் கேள்விகளாக அமைகின்றன. சில குறள்கள் கேள்வி கேட்டுப் பதிலும் கூறுகின்றன. கேள்வி பதில் நடையைத் தவிர பல்வேறு நடைகளைத் திருவள்ளுவர் பயன்படுத்தியிருக்கிறார். அவரின் நடைத்திறனை மூதறிஞர் வ.சுப. மாணிக்கம் பதினான்கு வகைப்பட்டது என்று உரைக்கின்றார். வள்ளுவம் என்ற தம் நூலில் அவர் வள்ளுவரின் நடையாற்றலை ''திருக்குறள் நடை'' என்று தனித்தலைப்பில் தருகின்றார்.

வள்ளுவரின் திருக்குறள் நடை நலத்தை அறிந்து கொள்ள மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார் காட்டும் பின்வரும் சொற்றொடர்கள் போதுமானவை. “வள்ளுவர் தனக்கு உவமை இல்லா ஒழுக்கப் பேராசான். செயல் வேந்தன். ஒருவன் கண் எத்துணைக் குணப்பிழை காணினும், இனித் திருந்தான் என ஒதுக்கிவிடார். அவன் உயிருள்ளவரை ஒழுக்கத் திருத்தத்துக்கும் பதம் உண்டு என்ற துணிவால் மனநாடி பார்த்துச் செயல் மருந்து ஊட்டுவர். மருத்துவன் சொல்லுமாப்போல், உன்பால் மாசுகள் பலவுள. உனக்கு நல்வாழ்வில்லை என்று பின்னடையற்க. முதற்கண், 'தம்பி! இம்மாசினைப் போக்கிக்கொள்' என விட்டுவிடாது இசைப்பர். எவனொருவன் தன் குறள் நூலை எடுத்துக் கற்கின்றானோ, கற்கும் அம்மனப் பக்குவம் ஒன்றே, திருந்தும் உள்ளமுடையான் அவன் என்பதற்குப் போதிய சான்று என்ற தெளிவால், தீமை பல செய்தானுக்கும் ஒரு தூய்மை மருந்து எழுதுவர். ‘யான் அளவிறந்த குற்றம் உடையேன்’ என்றானை, அவன் தோள் புறம் தழுவி மார்புரம் காட்டி, ‘நம்பி! பலகிடக்க. இம்முதற் குற்றத்தை அகற்றிக்கொள்’ என்று ஓர் அறவழிப்படுத்துவர். (வள்ளுவம்.ப.237)” என்பது வள்ளுவரின் தனித்த நடையாகும்.

திருக்குறளை ஒருவர் எடுத்துப் படிக்க ஆரம்பித்தலே அவர் குறையற்றவராகிவிட்டார், திருந்தத் தொடங்கி விட்டார் என்று பொருள் என்பது வ. சுப. மாணிக்கனாரின் கூற்று. தற்காலத்தில் நடைபெறும் இழிவுகளுக்கு எல்லாம் காரணம், இழிவுகளைச் செய்பவர்கள் திருக்குறளைத் தொட்டே பாரத்தறியாதவர்கள் என்பதே ஆகும். திருக்குறளைத் தொட்டவர்கள், படித்தவர்கள் தன் வாழ்வில் திருந்திய நடை போட ஆரம்பிப்பார்கள் என்பது உறுதி. அவ்வகையில் திருக்குறள் மக்களைத் திருத்தும் நடை உடையது.

DR. M.PALANIAPPAN



முகவரியும் என் செல்பேசி எண்ணும்

முனைவர் மு.பழனியப்பன்
A1, சேது பிளாட்ஸ்,
மெ. மெ. வீதி
காரைக்குடி,
623 001
செல்பேசி எண்
9442913985

மின்னஞ்சல் முகவரி
muppalam2006@gmail.com

அலுவலக முகவரி
முனைவர் மு.பழனியப்பன்
இணைப்பேராசிரியர்,
மற்றும் துறைத் தலைவர்,
தமிழ்த்துறை,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருவாடானை
623402
இராமநாதபுர மாவட்டம்

காணொளிகள்

சங்க இலக்கியம் - அம்மூவனார் கவிதை சிறப்பு
திரு நாஞ்சில் சம்பத் அவர்கள் தலைமை இராமாயணமே இன்றைய வாழ்விற்குத் பட்டிமண்டபம்
முனைவர் கு. ஞான சம்பந்தன் தலைமை பட்டி மண்டபம் தமிழர் வரலாறு பண்பா

மின்னூல் விடுதலைக்கு முந்தைய பெண்களின் நாவல்கள்



வள்ளுவர் பயன்படுத்திய நடைகள் பதினான்கு என்று கணக்கிடுகிறார் வ. சுப. மாணிக்கனார். இதற்கு மேலும் இருக்கலாம் என்றாலும், தன்னால் இவ்வளவில் கணக்கிட முடிந்தது என்பது அவரின் கூற்று.

வள்ளுவர் பயன்படுத்திய நடைகள் பின்வருமாறு;

1. தற்சுட்டு நடை

2. தற்காப்பு நடை

3. அச்ச நடை

4. கொள்கை உறைப்பு நடை

5. ஒழுக்க வென்றி நடை

6. இருநெறி (செல்நெறி, கொள்நெறி) நடை

7. தான் உணர் நடை

8. விட்டுவிடா நடை

9. விளக்குநடை

10. முன்னறிவிப்பு நடை

11. பேணா நடை

12. செயலுய்ப்பு நடை

13. இலக்கிய நடை

14. கொண்டு கூறும் நடை

ஆகிய பதினான்கு நடைகளைத் திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ளமையைத் தக்க சான்றுகளுடன் விளக்குகிறார் மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார்.

இந்நடை அமைப்புகள் பெரிதும் வள்ளுவ நூலில் விளக்கப்பெற்றுள்ளன என்றாலும், அவற்றின் செறிவை இங்கு அறிந்துகொள்வது வள்ளுவ நடையியலை அறிந்து கொள்ள உதவும்.

1. தற்சுட்டு நடை

திருக்குறளில் தன்னைச் சான்றாக வைத்து, ஒவ்வொரு மனிதனும் அறம் அறியும், அறிவிக்கும் அடிப்படையில் அமைக்கப்பெற்ற நடை இதுவாகும்.

"தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்" (318)

என்ற குறளில் இந்நடை பயன்படுத்தப் பெற்றுள்ளது. உலகம் உன்பால் எவ்வழி நடக்கவேண்டும் என நீ கருதுகிறாய், அவ்வழி நீயும் உலகத்தார் மாட்டு நடந்துகொள் என்று தன்னைச் சான்றாக்கி இக்குறள் அறம் உரைக்கிறது.

2. தற்காப்பு நடை

பிறருக்குத் தீங்கு இழைக்காதே என வாளா தொடுக்காது, இழைப்பின் எறிந்த பந்து திரும்புமாப்போல நீ தீதடைவாய் என அச்சுறுத்தித் தற்காக்கும் நடையில் திருவள்ளுவர் பல குறள்களைப் படைத்தளித்துள்ளார்.

"தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்" (305)

என்ற குறள் தற்காப்பு நடையில் திருக்குறள்களை வள்ளுவர வடித்ததற்கான சான்றாகும்.

3. அச்ச நடை

அறிவு நடை கொண்டு திருந்தாத மாந்தரை அச்ச நடைகொண்டுத் திருத்த முயல்கிறார் வள்ளுவர்.

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு" (204)

என்ற குறள் அச்ச மெய்ப்பாட்டுடன் விளங்கும் குறளாகும். மறந்த நிலையிலும் மற்றவர்க்கு கேடு ஏற்படுத்தாதே. ஏற்படுத்தினால் அறமானது மற்றவர்க்கு கேடு ஏற்படுத்தியவனைத்தான் சூழ்ந்து கேடு செய்யும் என்று அச்ச முறையில் இக்குறள் அமைக்கப்பெற்றுள்ளது. அறம் நல்லது செய்வது, செய்தார்க்கு நலம் பயப்பது. அதே நேரத்தில் அறம் தீமைக்கு எதிரானது. தீமை செய்வோரைச் சூழ்ந்து அழிக்கும் வல்லமை பெற்றது என்ற அச்சத்தை இக்குறளுக்குள் திருவள்ளுவர் வைத்துள்ளார். இக்குறள் அச்சநடைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைவது.

4. கொள்கை உறைப்பு நடை

பிறர் செல் நெறி மாறி நடப்பினும் நாம் பற்றத் தகும் கொள்நெறி கூறும் நடையில் திருக்குறள்கள் அமைக்கப் பெறுவதுண்டு.

"சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்" (986)

என்ற குறள் கொள்கை உறைப்பு நடை சார்ந்தது என்று மூதறிஞரால் அடையாளம் காட்டப்பெறுகின்றது.

5. ஒழுக்க வென்றி நடை

தீயவை செய்தார்க்கு அஞ்சி வாழாமல், தீயவரை அடக்கி வெல்லவேண்டும் என்ற நிலையில் ஒழுகச் செய்யும் நடை இதுவாகும்.

மின்னூல் 2



பெரியபுராணத்தில் பெண்கள்.

மின்னூல் 3



சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் பெரியபுரான உரைத்திறன்

மின்னூல் 4




செம்மொழிக்களம்

சிறப்புடைய இடுகை

தமிழ்ப் படைப்புலகில் எழுத்தாளர் ஜெயகாந்தன்

எழுத்தாளர் ஜெயகாந்தன் தமிழ்ப் படைப்புலகின் மிகச் சிறந்த அடையாள அவருக்கு முன்னும் அவருக்குப் பின்னும் எவ்வெழுத்தாளரும் அடைய முடியா...



என்னைப் பற்றி

palaniappan

எனது முழு சுயவிவரத்தைக் காண்க

எனது நூல்கள்


* கணினியும் இணையமும்
* கம்ப வானியல்
* செம்மொழிக்களம்
* இணைய உலகம்
* திருவருட்பயன் (எளிய உரைநடையில்
* 1&0=நேர்&நிரை
* உண்மை விளக்கம் (எளிய உரைநடை
* பண்டிதமணி கதிரேசன் செட்டியார்
* சிந்தனைக் கவிஞர் பெரி. சிவனடியார

கட்டுரை
பொதுக்கட்டுரைகள்

வ. சுப. மாணிக்கனார் பதிவில் ‘திருக்குறள்’ தெளிவு

முனைவர் ப. சு. மூவேந்தன்
உதவிப்பேராசிரியர், தமிழியல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.





முன்னுரை

இலக்கியத்தின் இயல்பு இன்புறுத்தலும், அறமுரைத்தலும்; ஆகும். தமிழில் தோன்;றிய செவ்வியல் இலக்கியங்கள் யாவும் இவ்விரு பணிகளையும் இயல்பாய்ச் செய்துள்ளன. சங்க இலக்கியங்கள் கொண்டிருந்த அக, புற இயல்புகளை, அவை எடுத்துரைக்கும் வாழ்வியல் மெய்ம்மைகளை மறுதலித்து, அறத்திற்கே முதன்மை தந்து படைக்கப் பெற்றவை அறநூல்கள் ஆகும். அற இலக்கியங்கள் வெற்றென நீதி புகட்டும் போக்கில் அமைந்தன. ஒருவகையில் அவை தாம் பின்பற்றி ஒழுகிய சமயநெறி பரப்புவனவாக அமைந்தன. இதனால் அற இலக்கியங்கள் இலக்கிய இன்பம் நல்கும் பனுவல்களாக அமையாது, அற இலக்கண வரையறைகளாகக் கருதப்பட்டன. இவற்றில் இலக்கிய இன்பத்தையும், அவற்றிற்கிடையே அறக்கருத்துரைகளையும் வலியுறுத்திப் பேசிய நூல் திருக்குறள் மட்டுமே ஆகும். இதன்பொருட்டே இன்றைக்கும் நமக்குத் திருக்குறள் இன்பம் பயக்கும் நூலாக அமைந்திருக்கின்றது. இவற்றோடு மட்டுமல்லாது திருக்குறள் ஏனைய அறநூல்கள் யாவற்றுக்கும் தலைமைசான்ற நூலாகத் திகழ்கின்றது. கற்கக் கற்க கல்லாமை அகலும் என்பதனைப் போல, திருக்குறள் பயிலும்தொறும் நூல்நயம் நல்கும் இலக்கியமாகத் திகழ்கின்றது. ஆகையால் தமிழ் இலக்கணம், இலக்கியம் கற்றுத்

துறைபோகிய பேராசிரியர்களை அது வெகுவாக ஈர்த்தது. புதுப்புது விளக்கங்களைக் காணவைத்தது. அச்சிறப்பினைக் கருதியே தமிழ்ப்பேராசிரியர்கள் பலரும் திருக்குறள் கருத்துக்களுக்கு உரை வகுத்த முனைந்தனர். அவ்வகையில் அமைந்ததே வ.சுப. மாணிக்கனார் திருக்குறள் தெளிவுரை ஆகும்.

திருக்குறள் உரைகள்

மூலநூலாசிரியனுக்கும் கற்போனுக்கும் இடையே காலஇடைவெளி ஏற்படும்போது மூலநூலாசிரியனின் கருத்தைத் தெளிவுபடுத்த எழுந்தனவே உரைகள் ஆகும். திருக்குறள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, நன்னூல் போன்ற இலக்கண, இலக்கியங்கள் உரைநூல்களால் சிறப்புப் பெற்றுள்ளன. இன்றைய நிலையில் உரையில்லாத செய்யுள் நூல்களே இல்லை என்று கூறுமளவிற்கு உரைநூல்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. இவ்வாறு வளர்ச்சி பெற்ற உரைநூல்களை இயற்றிய அறிஞர்கள் பலராவர். இடத்தாலும் காலத்தாலும் வேறுபட்ட இவ் உரையாசிரியர்கள் தமிழிலக்கிய வரலாற்று ஆய்வுக்குத் துணைபுரிபவராய் அமைந்துள்ளனர்.

திருக்குறள் முதல் பதிப்பு உரை

திருக்குறள் முதன்முதலில் அச்சேறிய ஆண்டு 1812 ஆகும். திருக்குறள் மூலபாடமாக இது இருந்திருக்கின்றது. இதை ஞானப்பிரகாசம் என்பவர் வெளியிட்டிருக்கிறார். இதே ஆண்டில் எல்லீஸ் துரையும் ஆங்கில விளக்கத்துடன் திருக்குறளை வெளியிட்டுள்ளார். பின்னர், 1838இல் திருத்தணிகைச் சரவணப் பெருமாள் ஐயர் என்பவர் பரிமேலழகர் உரையுடன் கூடிய திருக்குறள் உரைப்பதிப்பினை முதன்முதலில் வெளியிட்டுள்ளார். இதுவே திருக்குறளின் முதல் உரைப் பதிப்பாகும். அன்று தொடங்கிய திருக்குறட் பதிப்புப் பணி இன்றுவரை தொடர்ந்து வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

திருக்குறள் கருத்துச் செறிவுடையது எளிமையானது; கற்பதற்கு இனிமை பயப்பது; படிக்குந்தொறும் புதுமையான கருத்துக்கு வழிவகுப்பது. இத்தகு நிலைகருதியே திருக்குறளுக்குப் பல்வேறு உரைகள் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். திருவள்ளுவமாலையின்,

“மணற்கிறைக்க நீருறும்; மைந்தர்கள் வாய்வைத்
துணச்சுரக்குந் தாய்முலை யொண்பால்-பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்
காய்தொறு மூறு மறிவு” **(திருவள்ளுவமாலை)**

என்னும் பாடலுக்கு ஏற்ப, பயிலுந்தொறும் பல நுட்பமான கருத்துகளைத் தரவல்லது திருக்குறள். அத்தகு சிறப்புமிக்க திருக்குறளின் நுட்பத்தைத் துய்த்துப் பலர் பல்வேறு உரைகள் கண்டனர்.

திருக்குறளுக்குப் பல்வேறு உரைகள் தோன்றியமைக்கான காரணங்களை வ.சுப. மாணிக்கனார்,

1. பாடவேற்றுமையால் சில உரை வேற்றுமைகள் காணப்படும்.

2. பாடம் கற்பித்துக் கொண்டு ஓரிருவர் புதுப்பொருள் காட்டியுள்ளனர்.

3. முன்னோர் எழுதிய உரைப்பொருளைப் பெரிதும் தழுவக்கூடாது; தாம் ஒரு தனியுரை எழுத வேண்டும் என்ற தன்முனைப்பும் எங்ஙனமேனும் பல குறட்குப் புத்துரை சொல்ல வேண்டும் என்னும் முனைப்புமே திருக்குறள் உரை பலவற்றின் தோற்றத்துக்குக் காரணம் எனச் சுருங்கச் சொல்லலாம்” **(வள்ளுவம். ப. 160)**

என்று கூறுகின்றார். இத்தகு நிலையிலேயே வ.சுப. மாணிக்கனார் திருக்குறள் தெளிவுரை எழுந்துள்ளது என்று அறியமுடிகின்றது.

திருக்குறள் தெளிவுரைகள்

1893இல் திரு.வி.க. வெளியிட்ட ‘திருக்குறள் மூலமும் கருத்துரையும்’ என்ற நூலே கையடக்கப் பதிப்பாக முதன்முதலில் வெளிவந்த நூலாகும். இதன் பின்னர் கி. வீரராகவன் வெளியிட்ட கையடக்கப் பதிப்பு ஒன்றும், 1928இல் இராமஸ்வாமி சாஸ்த்ருலு வெளியிட்ட கையடக்கப் பதிப்பு ஒன்றும் உள்ளது.

இதே ஆண்டில் திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் கா. சுப்பிரமணிய பிள்ளை பொழிப்புரையோடு கையடக்கப் பதிப்பினை வெளியிட்டது. கையடக்கப் பதிப்பு விற்பனையில் சாதனை படைத்தது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட மு.வரதராசனாரின் உரைப்பதிப்பு ஆகும். ஆகஸ்டு 2000 வரை இந்நூல் 156 பதிப்புகள் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1960இல் ‘திருக்குறள் செய்யுளும் தெளிபொருளும்’ என்னும் தலைப்பில் மீ.கந்தசாமிப் புலவரும், இதே ஆண்டில் ‘திருக்குறள் இனிய எளிய உரை’ என்னும் தலைப்பில் மயிலை சிவமுத்துவும், 1966இல் ‘திருக்குறள் தெளிவு’ என்னும் தலைப்பில் சுந்தர சண்முகனாரும், 1967இல் ‘திருக்குறள் தெளிவான உரை’ என்னும் தலைப்பில் செந்துறை முத்துவும், இதே ஆண்டில் ‘திருக்குறள் மாணவர் பதிப்பு’ என்னும் தலைப்பில் இரா.வே. ருத்தரப்பசாமியும், 1971இல் ‘திருக்குறள் தெளிவான உரை’ என்னும் தலைப்பில் ஞா. மாணிக்கவாசகனும், 1973இல் ‘கோனார் பொன்னுரை’ என்னும் தலைப்பில் ஐயன்பெருமாள் கோனாரும், 1977இல் ‘திருக்குறள் காமத்துப்பால்’ என்னும் தலைப்பில் கவிஞர் கண்ணதாசனும், 1983இல் ‘திருக்குறள் புதியஉரை’ என்னும் தலைப்பில் புலியூர்க்கேசிகனும், 1984இல் ‘திருக்குறள் தெளிபொருள் உரை’ என்னும் தலைப்பில் இரத்தினநாயக்கர் சன்ஸ் நிறுவனமும், 1985இல் ‘திருக்குறள் எளிமை உரை’ என்னும் தலைப்பில் லேனா. தமிழ்வாணனும், 1987இல் ‘திருக்குறள் இனியஉரை’ என்னும் தலைப்பில் புலவர் நாராயணசாமியும், 1991இல் ‘திருக்குறள் மிகமிகஎளிய உரை’ எனும் தலைப்பில் மு.பெரி.மு. இராமசாமியும், 1994இல் ‘திருக்குறள் மக்கள் உரை’ என்னும் தலைப்பில் கு. மோகனராசுவும், 2000த்தில் ‘திருக்குறள் எளிய உரை’ என்னும் தலைப்பில் கருமலைத் தமிழாழனும் கையடக்கப் பதிப்புரைகள் வெளியிட்டுள்ளனர்.

வ.சுப. மாணிக்கனார் திருக்குறள் தெளிவுரை

திருக்குறள் பல்கலைக்கழகங்களிலும், பள்ளி-கல்லூரிகளிலும் பாடநூலாக்கம் பெற்ற பின்னர் பள்ளி கல்லூரி ஆசிரியர்களிடையே திருக்குறள் பற்றிய கருத்தாக்கங்கள் பரவலாக்கம் பெற்றன. மாணவர்களுக்குப் பாடம் நடத்துங்கால் ஏற்பட்ட ஐயங்களைக் களைவதன் பொருட்டு ஆசிரியர்கள் மனத்தில் எழுந்த சிந்தனைப் போக்குகளே அவர்களது தெளிவுரைகளாக, கருத்துரைகளாக, மதிப்புரைகளாக, பொழிப்புரைகளாக வெளிவந்தன. அவ்வகையில் வெளியான ஒன்றாகவே வ.சுப. மாணிக்கனாரின் ‘திருக்குறள் தெளிவுரை’ அமைந்துள்ளது. கருத்துரை மட்டுமே கொண்ட கையடக்கப் பதிப்பாக சென்னை மணிவாசகர் பதிப்பகத்தாரால் 1991இல் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

திருக்குறளின்பால் வ.சுப. மாணிக்கனார் அவர்கள் கொண்டிருந்த ஆய்வுத்திறனும் போக்கும் ‘வள்ளுவம்’

என்னும் நூலின்வழி வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும் அனைத்துக் குறட்பாக்களுக்கும் எளிமையான தெளிவான உரை வழங்கவேண்டும் என்ற நோக்கின் அடிப்படையில் எழுந்த ஒன்றாகவே ‘திருக்குறள் தெளிவுரை’ அமைந்துள்ளது.

திருக்குறளில் அறம், பொருள், இன்பம்

சங்க இலக்கியக் காலத்துக்கு முன்பாகவே தமிழ் இலக்கியங்களில் அகம், புறம் என்னும் கோட்பாடும், அறம், பொருள், இன்பம் என்னும் கோட்பாடும் இலக்கிய வழக்கில் இருந்து வந்துள்ளன. இவற்றுள் அகத்துள் இன்பமும், புறத்தில் அறமும் பொருளும் அடங்கும் என்று குறிப்பிடுவர்.

தொல்காப்பியக் காலத்துக்கு முன்பாகவே அறம், பொருள், இன்பம் என்னும் பாகுபாடு நிலவியதனை,

“அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கு முரிய வென்ப” **(தொல். சூ. 1363)**

என்னும் நூற்பா புலப்படுத்துகின்றது. இவ்வைப்பு முறையினை,

“ஆற்றல்சால் கேள்வி யறம்பொரு ளின்பம்” **(குறிஞ்சிக்கலி, பா. 1)**

“அறனும் பொருளு மின்பமும் மூன்றும்” **(புறநானூறு, பா. 28:1)**

“அறம் பொருள் இன்பம் உயிரச்சம்” **(குறள். 501)**

என்னும் இலக்கிய அடிகளும் தெளிவுறுத்துகின்றன. சங்க இலக்கியத்தில் இன்பம், பொருள், அறம் என்னும் வைப்பு முறையும் வழக்கிலிருந்து வந்ததை,

“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை” **(தொல். சூ. 1038)**

என்னும் நூற்பா தெளிவுறுத்துகின்றது. இம்முறையின் அடிப்படையிலும் திருக்குறள் முறைவைப்பினைச் சில உரையாசிரியர்கள் அமைத்திருக்கின்றனர்.

பொதுவாக அறம், பொருள், இன்பம் என்பது முப்பொருள் கோட்பாட்டின் ஆக்கநிலை ஆகும். அறநூல்கள் கொள்ளும் வைப்புமுறையும் இதுவே என்பதனால், அறம் பொருள் இன்பம் என்னும் வைப்புமுறையிலேயே இந்நூலும் கட்டமைக்கப்பட்டுள்ளது.

அறம்

தனிமனிதன் பின்பற்றி நடக்கத்தக்க அறத்தைப் பற்றிப் பேசுவது திருக்குறளின் அறத்துப்பால் ஆகும். அது தனிமனிதன் தன்னை வளப்படுத்திக் கொள்வதற்குத் துணைநிற்கின்றது. சமூக வாழ்வியலின் சிறப்புக்குத் தனிமனிதர்களின் ஒழுக்கநெறிகளே தலைமைப் பண்புடையதாக விளங்குவதனால் திருவள்ளுவர் அறத்துக்கு வலிமை தரும் விதத்தில் அறன்வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தை வகுத்துள்ளார். இதற்கு உரைவிளக்கம் தந்துள்ள வ.சுப. மாணிக்கனாரின் உரைத்திறன் அறியத்தக்கதாகும்.

ஒருவனுக்குச் சிறப்பினையும், செல்வத்தையும் தரத்தக்கது அவன் பின்பற்றி நடக்கும் அறமே என்பதனை,

‘‘சிறப்புஈனும் செல்வம் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு’’ **(குறள். 31)**

என்னும் குறட்பா வலியுறுத்துகின்றது. இதற்கு, ‘‘அறம் மதிப்பும் செல்வமும் தரும். ஆதலின் அறத்தினும் வாழ்வுக்கு நல்லது வேறில்லை’’ என்கிறார் வ.சுப. மாணிக்கனார்.

மேலும் திருவள்ளுவர் அறம் என்பதனைப் பல குறட்பாக்களின்வழியும் தெளிவுறுத்துவதனைக் காணலாம். அறன்வலியுறுத்தல் அதிகாரத்தில் அறன் இத்தன்மைத்தானது என்பதனை,

‘‘மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்’’ **(குறள்: 34)**

என்று குறிப்பிடுவார். இதற்குரிய தெளிவுரையினை வ.சுப. மாணிக்கனார், ‘‘மனப்பிழை இன்றி நடத்தலே அறம். மற்றவை எல்லாம் வெளிப்பகட்டு’’ என்று தெளிவுறுத்துகின்றார். தன் மனத்திற்குப் பிழை என்று கருதிய ஒன்றைச் செய்யாதிருத்தலே அறம் என்று தெளிவுபடுத்துவது சமூக நலன் நோக்கிய சிந்தனையின் வெளிப்பாடாகும்.

திருவள்ளுவர் கல்வி, அறம் ஆகியனவற்றிப் பேசும் இடங்களில் காலத்தை முன்னிறுத்திக் கூறுவது சிறப்பு. ஒருவன் அறத்தைச் செய்வதற்குக் காலம் ஒரு தடையாக நிற்பதில்லை. அதனை நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளிப்போடாமல் இன்றைக்கே செய்திட முனைய வேண்டும் என்று கூறுவதனை,

‘‘அன்றறிவாம் என்னாது அறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை’’ **(குறள். 36)**

என்னும் குறள்வழி தெளிவுறுத்துவார். இக்குறள் வலியுறுத்தும் கருத்தினை, ‘‘சாகும்போது பார்த்துக் கொளவோம் என்னாது நாளும் அறஞ்செய்க; அதுவே உயிர்த்துணை’’ என்று விளக்கம் தருகின்றார் வ.சுப. மாணிக்கனார்.

ஒருவன் செய்யத்தக்கது அறமே. செய்யத்தகாதது பழிவரும் செயல்களே என்பதனை,

‘‘செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி’’ **(குறள். 40)**

என்னும் குறட்பா தெளிவுறுத்துகின்றது. இக்கருத்தினை, ‘‘யாரும் செய்ய வேண்டியது அறமே; யாரும்

விடவேண்டியது பழியே'' என்கிறார் வ.சுப. மாணிக்கனார்.

பொருள்

திருக்குறள் தனிமனிதனின் சமூகம் சார்ந்த உலகவாழ்வியலைக் கூறும் பகுதி பொருட்பால் ஆகும். அது நாடு, அரசு, அமைச்சு, படை, குடி, செல்வம், உணவு உள்ளிட்ட பகுதிகளை உள்ளடக்கியது. இதனுள் மனிதசமுதாயம் மேற்கொள்ள வேண்டிய அறங்கள் தெளிவுறுத்தப் பெறுகின்றன. அதனுள் பொதுநிலையான் அறியப்படும் செல்வப்பொருள் பற்றிப் 'பொருள் செயல் வகை' என்னும் அதிகாரம் விரிவாக எடுத்துரைக்கின்றது. இவ்வதிகாரத்திற்கு வ.சுப. மாணிக்கனார் தெளிவுறுத்தியுள்ள விளக்கம் நுட்பமும் செறிவும் வாய்ந்த ஒன்றாக அமைந்துள்ளது.

இவ்உலகில் பொருள் பெற்றுள்ள மதிப்பினை,

''பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்'' **(குறள். 751)**

என்னும் குறட்பா தெளிவுறுத்துகின்றது. இதற்கு, ''மதிப்பு இல்லாதவரையும் மதிப்பு உடையவராகச் செய்யும் செல்வமே சிறந்த செல்வம்'' என்று விளக்கம் தந்துள்ளார் வ.சுப. மாணிக்கனார். இதில் 'பொருள்' என்பதற்கு 'மதிப்பு' என்று குறித்துள்ள பொருள்நுட்பம் அறியத்தக்கதாகும். பொருள் என்பது மனிதனை மதிப்பிடும் அளவுகோலாக அமைந்துள்ளமையால் அது தனிமனித மதிப்பு, சமூக மதிப்பு, பயன்மதிப்பு என எல்லாநிலைகளிலும் மதிப்பினைத் தரும் கருவியாக அமைவதன் பொருட்டு இவ்வாறு குறித்தார் என அறியமுடிகின்றது. இதன்விளக்கத்தினை இதற்கு அடுத்து இடம்பெறும் குறளுக்கு (குறள். 752), ''செல்வம் இல்லாதவரை எல்லோரும் இகழ்வர்; உடையவரை எல்லோரும் சிறப்புச் செய்வர்'' என்று விளக்கம் தந்துள்ளார்.

பொருளை அறத்தின்வழிநின்று ஈட்டுதல் வேண்டும் என்பதில் திருவள்ளுவர் மிகுந்த கருத்துடையவராகத் திகழ்கிறார். இதன்பொருட்டே அவர்,

''அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்று வந்த பொருள்'' **(குறள். 754)**

என்னும் குறளினைப் படைத்தளித்தார். இக்குறள் உணர்த்தும் பொருளை, ''நெறியொடு குற்றமின்றி ஈட்டிய பொருள் அறமும் தரும், இன்பமும் தரும்'' என்று விளக்குகின்றார் வ.சுப. மாணிக்கனார். இதேபோன்று,

''ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு'' **(குறள்: 760)**

என்னும் குறள் விளக்கத்திலும், ''சிறந்த பொருளைத் திரளாக ஈட்டியவர்க்கு அறமும் இன்பமும் எளிதிற்

கிடைக்கும்’’ என்று குறித்துள்ளார் வ.சுப. மாணிக்கனார்.

திருக்குறளில் கூறப்படும் அறம் யாவர்க்கும் உரியது. வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் கடைப்பிடிக்க வேண்டியது என்பதே திருவள்ளுவரின் கருத்தாக்கமாகும். அறம், பொருள், இன்பம் என்னும் முப்பகுப்புடைய இந்நூலில் முதலாவதான அறத்துப்பாலில் சிறப்பாகத் தனிமனித நிலை, குடும்ப உறவுசார்ந்த நிலை, உறவுகள் சார்ந்த அடிப்படைப் பண்புகள், கடமைகள் எனப் பேசப்பட்டுள்ளன. இரண்டாவதான பொருட்பாலில் சமூகப் பொதுவாழ்வின் செயல்முறைகள், பொருளியல், குடிமக்கட் பண்பு என்பன முதன்மையிடம் பெறுகின்றன. இறுதி இயலான காமத்துப்பால் குடும்ப வாழ்வின் ஒரு கூறாகிய ஆண், பெண் உறவுநிலை திருமணத்துக்கு முன்னும் பின்னுமான காதல்நிலை பற்றிப் பேசுவது தெளிவாகின்றது.

இன்பம்

உயிரினங்கள் அனைத்தும் இன்பத்தை நாடுவதனையே தம் வழக்காறாகக் கொண்டுள்ளன. எல்லா நிலைகளிலும் இன்பமே உயர்ந்த ஒன்றாக அமைந்திருக்கின்றது. திருக்குறள் இன்பத்துப்பாலைக் காமத்துப்பால் என்னும் வழக்காறும் உண்டு. திருக்குறள் உரையாசிரியர்களில் சிலர் காமத்துப்பால் என்றே குறிப்பிடுவது காணத்தக்கது. இன்பங்கள் எல்லாவற்றிலும் தலையாயதாகக் கருதப்படுவது காதலர் தம்முள் பெறுகின்ற இன்பமே ஆகும். காதலர் திருமணத்துக்கு முன்னும் பின்னும் பெறும் இன்பமே இதில் கூறப்படுகிறது. காதலர் தம்முள் கூடிப்பெறுகின்ற இன்பமும் அதனோடு தொடர்புடைய பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் முதலாயினவும் இன்பத்துப்பாலில் பேசப்படுகின்றன. இதன்பொருட்டே இன்பத்துப்பால் திருக்குறளின் சிறப்புமிகு பால்பகுதிகளில் ஒன்றாக அமைகின்றது.

இன்பத்துப்பால் உயிரினங்களின் உள்ளப்புணர்ச்சி, உடற்புணர்ச்சி ஆகியவற்றின் படிநிலைகளை எடுத்துரைக்கின்றது. அதனை விளக்கும் அதிகாரமாக ‘புணர்ச்சி மகிழ்தல்’ அமைந்துள்ளது. இவ்அதிகாரத்திற்கு வ.சுப. மாணிக்கனார் தெளிவுறுத்தியுள்ள விளக்கம் பண்டைத் தமிழ்க்காதலின் நயத்தினை விளக்குவதாக அமைந்துள்ளது.

ஐம்பொறிகளால் நுகரப்படும் இடமாகவும், ஐம்புலன் உணர்வும் ஒரேஇடத்தில் கிடைக்கப்பெறும் இடமாகத் தலைவியின் உடல் திகழ்வதனைத் திருவள்ளுவர்,

‘‘கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள’’ **(குறள். 1101)**

என்னும் குறட்பாவில் கூறுகின்றார். இதற்குரிய பொருளை, ‘‘கண்டு கேட்டு உண்டு முகர்ந்து தொடும் ஐம்புல இன்பமும் இவளிடமே உண்டு’’ என்று தெளிவுறுத்துகின்றார்.

இவ்வுலகின் மேன்மைபெற்ற இன்பங்களெல்லாம் தாமரைக்கண்ணான் ஆகிய திருமாலின் உலகில் பெறலாம் என்பது சமயநெறி. அதனைப் பிறவிப்பேற்றினால்தான் பெறமுடியும். இதிலிருந்து மாறுபட்டு, இவ்வுலகில் நமது செயல்களுக்கேற்ற இன்பங்களையும், நாம் செய்யும் கெடுதல்களுக்கேற்ற

பயன்களாகிய துன்பங்களையும் இப்பிறவியிலேயே அனுபவிக்க வேண்டும் என்பதனைத் திருவள்ளுவர் ஒப்புகிறார். அதனால் தான் அவர் இன்பத்தையும் துன்பத்தையும் பயனின் விளைவுகளாக எண்ணிப் பார்க்கிறார். இதன்பொருட்டே இன்பத்துப்பாலிலும்,

“தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு” **(குறள். 1103)**

என்று குறித்தார். இக்குறள் உணர்த்தும் பொருளை, “தன் காதலியின் மென்தோளில் துயிலுதலைவிடத் திருமாலின் மேலுலகம் இனிதாமோ?” என்று விளக்குகின்றார் வ.சுப. மாணிக்கனார்.

இவ்வாறு திருக்குறளில் இடம்பெறும் சொற்களுக்கும், சொற்தொடர்களுக்கும் எளிமையான, புதுமையான வகையில் விளக்கம் தந்துள்ளார் வ.சுப. மாணிக்கனார். திருக்குறளின் இலக்கியச் சுவையைப் போன்ற தொடர்களைக் கையாண்டு விளக்கம் தர முனைந்திருப்பது சிறப்பிலும் சிறப்பு.

முடிவுரை

தமிழர்கள் போற்றிப் பேண வேண்டிய நூல்களில் திருக்குறள் தலையாயது ஒன்றாகும். அது எந்தவொரு நிலத்துக்கும், இடத்துக்கும், காலத்துக்குமாகக் கட்டுப்படாமல் எல்லாக் காலத்திற்கும் பொருந்தவரும் தனித்தன்மையதாக விளங்குகின்றது. திருக்குறள் எளிமையான சொற்களால் அமைந்து வலிமையான கருத்துக்களைத் தரவல்லது. இரண்டடியில் அமைந்த அதன் கருத்துக்கோவையைப் பல்லாயிரம் பக்கங்களுக்குச் சொல்லலாம். தமிழில் மிகுதியான உரைகளைப் பெற்ற நூலாகத் திருக்குறள் திகழ்கின்றது. ‘கற்றனைத்து ஊறும் அறிவு’ என்பதற்கேற்ப திருக்குறளின் கருத்துவளம் இன்றைக்கும் புதுப்புது விளக்கங்களைத் தந்துகொண்டே இருக்கின்றது. திருக்குறளின் கருத்துவளத்தில் கருத்தைச் செலுத்திய அறிஞர்கள் தான் உணர்ந்த கருத்தினைப் பிறருக்குத் தெளிவுறுத்த எழுந்தனவே உரைகள் ஆகும். அறிஞர் வ.சுப. மாணிக்கனார் திருக்குறளின்பால் கொண்ட ஈடுபாட்டினை வெளிப்படுத்துவதாக அவரது திருக்குறள் தெளிவுரை அமைந்துள்ளது. மிக எளிமையாக அமையப் பெற்ற இந்நூலின் கருத்துரைகளில் அறம், பொருள், இன்பம் ஆகியன தமிழ் மரபின் விளக்கமாக அமைந்துள்ளதனைக் காணமுடிகின்றது.

கருவி நூல்

1. திருக்குறள் தெளிவுரை, வ.சுப. மாணிக்கம், (உரை), மணிவாசகர் பதிப்பகம், சென்னை. (1991)

2. அ. சிவசூரியன், திருக்குறள் உரை வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. (2004)

*****



வேந்தன்பட்டி ஊசிவெள்ளையன் செட்டி ஆடிட்டர் பழ.மெ.சோம.ராமலிங்கம் - மரகதவல்லி ஆச்சி பேரனும் ராம. பழனியப்பன் - வள்ளிக்கண்ணு மகனுமாகிய செல்வன் பழ.இராமலிங்கம் மகாத்மா காந்தி பெயரில் அமைந்த இளைஞர் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு விருது- 2017க்கு தேர்வு பெற்றார் . இவருக்கு இவ்விருது புதுடில்லி ராஷ்டிரபதி பவனில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.

தமிழ் இமயம் வ.சுப.மாணிக்கனார்

பெற்றோரை இள வயதில் இழந்து சிறு கணக்கராய் இரங்கூன் தலைநகரில் வேலை பார்த்த போது தனது பதினெட்டாம் வயதில் வாய்மைக் குறிக்கோளை வாழ்வுக் குறிக் கோளாகக் கடைபிடித்த வ.சுப.மா அவர்களை எல்லோரும் "பொய் சொல்லா மாணிக்கம்" என்றே இன்றும் அழைக்கின்றார்கள். முறையான பள்ளிக்கல்வி இல்லாத நிலையில் பண்டிதமணி கதிரேசனார் உதவியால் அண்ணாமலை பல் கலைக்கழகத்தில் படித்து புலவர் பட்டம் பெற்றார். பின்னர் பி.ஓ.எல், எம்.ஓ.எல், எம்.ஏ. பட்டம் பெற்றார். சங்க இலக்கியங்களில் அகத்திணைக் கொள்கைகள் The Tamil Concept of Love பற்றி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார். இதுவே தமிழ்க்காதல் என்ற நூலாக வெளி வந்துள்ளது. முப்பதுக்கும் மேற்பட்ட தமிழ் நூல்களை இயற்றி தமிழன்னைக்கு அணிகலனாய் சூட்டியவர்.



வ.சுப.மா. புகழ் விருப்பமின்றி இருந்த போதும், பல் வேறு சிறப்புப் பட்டங்களும் விருதுகளும் தாமாகவே அவரை வந்து சேர்ந்தன மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை 'செம்மல்' என்றும், குன்றக்குடி ஆதீனம் 'முதுபெரும் புலவர்' என்றும், ஈப்போ பாவாணர் தமிழ்ச்சங்கம் 'பெருந்தமிழ்க்காவலர்' என்றும் சிறப்புப்பட்டங்களை வழங்கின. மேலும் அண்ணாமலை பல்கலைக்கழகம் தனது பொன்விழா ஆண்டில் 'முது முனைவர்' (டி.லிட்.) பட்டத்தையும், தமிழக அரசு திருவள்ளுவர் விருதையும் வழங்கின.

வ.சுப.மா.வின் தமிழால் ஈர்க்கப்பட்டு தமிழ் பயின்றோர் ஏராளம். அவருடைய தமிழ்க்காதல், வள்ளுவம், கம்பர் ஆகிய நூல்களைப் பயிலாமல் தமிழாய்வு மாணவர்கள் முனைவர் பட்டம் பெற முடியாது என்பது தமிழறிஞர்கள் கருத்து. கோழி தன் குஞ்சுகளை சிறகுகளுக்குள் வைத்துக் காப்பது போல மாணிக்கனார் தன் மாணாக்கர்களை காத்து வழி நடத்தினார்கள். அவர்களின் உயர்வுக்கு உற்ற துணையாக இருந்தார்கள். மிகச்சிறந்த மாணாக்கர் பரம்பரையை உருவாக்கி உள்ளார்கள். மாணிக்கத் தமிழ் கண்டு வள்ளுவமாய் வாழ்ந்த அப்பெருமகனாருடைய நூற்றாண்டு விழாவை அவருடைய மாணவர்களும், பல்வேறு பல் கலைக்கழகங்களும், தமிழ் ஆர்வலர் களும், அமெரிக்காவில் பல தமிழ்ச் சங்கங்களும் வெகு சிறப்பாகக் கொண்டாடி வருகின்றார்கள். செம்மலின் நூற்றாண்டு விழாவைத் தமிழின் எழுச்சி விழாவாகவே அனைவரும் நடத்தி வருகின்றார்கள்.

பட்டங்கள் பல பெற்றாலும், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பதவி வரை உயர்ந்தாலும், என்றும் நெறிகள் பிறழாத, வாய்மை தவறாத, எளிமை வாழ்க்கை வாழ்ந்த பெருமகனார் வ.சுப. தமிழ் வழிக்கல்வி இயக்கத்துக்காக தன் இறுதி மூச்சு வரை அயராது உழைத்தவர். தில்லை திருக்கோவிலில் திருமுறைகள் அம்பலம் ஏறப் போராடியவர். தம் இறுதி மூச்சு வரை திருக்குறளையும் திருவாசகத்தையும் சுவாசித்தவர் வ.சுப. அவர்கள். அவருடைய இந்த நூற்றாண்டில் அப்பெருமகனாரின் நினைவைப் போற்றி நாமும் தமிழ் வளர்ப்போமாக!

- அல்லி நடேசன்

குள.சண்முகசுந்தரம்

Published : 17 Apr 2016 11:45 am
Updated : 17 Apr 2016 11:47 am

தமிழுக்காகவே வாழ்ந்த வ.சுப.மாணிக்கனார்: நூற்றாண்டு இன்று தொடக்கம்



தமிழுக்காகவே தன்னை அர்ப் பணித்துக்கொண்ட மூதறிஞர் வ.சுப.மாணிக்கனாரின் நூற்றாண்டு இன்று தொடங்குகிறது.

11 வயதில் ஆறாம் வகுப்போடு வட்டிக் கடை கணக்குப் பிள்ளை யாக பர்மாவுக்குச் சென்றார் வ.சுப. அங்கே, 'உண்மையை மட்டுமே பேசுவேன்' என்றதால் 18 வயதில் பர்மா இவரை சொந்த ஊருக்கே திருப்பி அனுப்பியது. ஊருக்கு வந்ததும் தமிழ் படிக்க ஆசைப்பட்டவர், பண்டிதமணி கதி ரேசனாரின் கருணையால் சிதம் பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் சேர்ந்து புலவர் (பி.ஓ.லிட்) படிப்பில் முதல் மாணவ ராக வந்து, அங்கேயே ஆசிரிய ரானார். பிறகு, 1948-ல், காரைக் குடி அழகப்பா கல்லூரியில் விரி வுரையாளராகச் சேர்ந்து, பேராசிரி யராக வளர்ந்து, அக்கல்லூரியின் முதல்வராக உயர்ந்தவர். 1970-ல் மீண்டும் அண்ணாமலை பல்கலைக் கழகத்துக்கே திரும்பி, மொழிப்புல முதல்வராக அங்கீகரிக்கப்பட்டார்.

வள்ளல் அழகப்பர் பற்றி வ.சுப. எழுதிய 'கோடி கொடுத்த கொடை ஞன்' என்ற நெக்குருகும் வாழ்த் துப்பாதான் அழகப்பா பல்கலை.யின் நிறுவனர் வாழ்த்தாக இன்றள வும் உள்ளது. சங்க இலக்கியங் களில் அகத்திணை குறித்து ஆய்வுக் கட்டுரை எழுதி பி.எச்.டி, பட்டம் பெற்றார். 1979-ல் காமராசர் பல்கலை. துணைவேந்தராக நிய மிக்கப்பட்ட இவர், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்கிய போது அதன் அமைப்புக் குழு தலைவராகவும் இருந்தார்.

திருவள்ளுவர் விருது

யாப்பிலக்கணம் குறித்து ஆய் வுக் கட்டுரைகள் எழுதிக்கொண்டி ருந்தபோது நேர்முகத் தேர்வு ஒன் றுக்காக புதுச்சேரிக்கு சென்றிருந்த வ.சுப., அங்கே திடீரென உடல் நலன் பாதிக்கப்பட்டு இயற்கை எய்தினார். நாடக நூல்களில் ஆரம் பித்து 32 நூல்களை எழுதி இருக் கிறார். 2007-ல் இவரது நூல்களை அரசுடமை ஆக்கிய தமிழக அரசு, 1990-ல் திருவள்ளுவர் விருது வழங்கி கவுரவித்தது.

தமிழ்வழிக் கல்விக்காக தனி இயக்கம் தொடங்கிய மாணிக்க னார், மழலையர் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழ் யாத்திரை நடத்தினார். தமிழும் தில்லை அம்பலத்தில் அரங்கேற வேண்டும் என போராட் டங்களை முன்னெடுத்தார். எந்த வொரு காரியத்தையும் 'உ' 'சிவமயம்' போட்டு எழுதும் மரபை உடைத்து 'த' (தமிழ்) என்று போட்டு எழுதி தமிழுக்கு அணி சேர்த்தார்.

விருப்ப முறி

தனது வீட்டு நூலகத்தில் இருந்த சுமார் 10,000 நூல்களை அழகப்பா பல்கலை.க்கு தர வேண்டும் எனவும் தனது சொத்தில் ஆறில் ஒரு பகுதியை, தான் பிறந்த ஊரான மேலச்சிவல்புரியின் வளர்ச்சிக்காக செலவு செய்ய வேண்டும் என்றும் விருப்ப முறி (உயில்) எழுதி வைத்திருந்தார். தந்தையின் விருப்பத்தை இன்றள வும் நிறைவேற்றி வருகிறார்கள் அவரது வாரிசுகள்.

வ.சுப.மாணிக்கனார் 23 ஆண்டு கள் பணி செய்த காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் அவரது நூற்றாண்டு விழா தொடக் கத்தை நாளை கொண்டாடுகிறது. அதைத் தொடர்ந்து ஒரு வரு டத்துக்கு தமிழகம் மற்றும் புதுச் சேரியில் உள்ள மற்ற பல்கலைக் கழகங்களும் விழாவை கொண்டா டுகின்றன.

காலம் அழைத்தது

''நேர்மை, எளிமை, உண்மை யாக வாழ்ந்த அப்பா, திருக்குற ளைப் போலவே இரண்டு அடியில் ஆயிரம் குறட்பாக்களை எழுதத் தொடங்கினார். 578 குறட்பாக்கள் எழுதிக்கொண்டிருக்கும்போதே அவரை காலம் அழைத்துக் கொண்டது. அந்த குறட்பாக்களை 'மாணிக்கக் குறள்' என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட்டோம். 7 ஆண்டுகள் முயற்சியில் தற்சிந்தனைகள் என்ற தலைப்பில் தனது வாழ்க்கை குறிப்பை அப்பா எழுதி வைத்திருந்தார்.

நாளை அந்த நூலை நாங்கள் வெளியிடுகிறோம். எங்களது சொந்த ஊரில் அப்பா வுக்கு திருவுருவச் சிலை நிறுவி நூற்றாண்டு விழாவை நிறைவு செய்ய இருக்கிறோம்'' என்கிறார் வ.சுப.மாணிக்கனாரின் மகள் தென்றல்.

வ.சுப.மாணிக்கனார் | நூற்றாண்டு இன்று தொடக்கம் | குன்றக்குடி அடிகளார்

ஒரு மொழியால் அறிவை, ஞானத்தை பெறலாம்: ஆனால் வீடு பேற்றினை தருவது தமிழ் மொழி

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் புகழாரம்

பொன்னமராவதி ,செப்.3-

பொன்னமராவதி அருகே மேலச்சிவபுரியில் வா.சுப. மாணிக்கனார் நூற்றாண்டு விழா மற்றும் அவரது சிலை திறப்பு விழா நடந்தது.

விழாவிற்கு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தலைமை வகித்தார். வா.சுப.மாணிக்கனாரின் மகன் தொல்காப்பியன் வரவேற்றார். மதுரை தியாகராஜர் கல்விக் குழுமங்களின் தலைவர் கருமுத்து. கண்ணன் வா.சுப.மாணிக்கனாரின் உருவ சிலையை திறந்து வைத்து பேசியதாவது:

வா.சுப.மாணிக்கனார் மறைந்து 29 ஆண்டுகள் ஆகிறது. இவர் மதுரையில் 1982ம் ஆண்டுகளில் துணைவேந்தராக பதவிவகித்தபோது கண்டிப்பும் கிக்கனமாகவும் இருந்து சிறப்பாக செயல்பட்டார். இவரது உண்மையும் வாய்மையும் கடினமுயற்சியும் பேராசிரியராகி, முதல்வராகி, துணைவேந்தராகி 32 நூல்களை எழுதி சாதனை படைத்தவர். சமுதாயத்தில் இளைஞர்களுக்கு புரியும்படி உரையாற்றியவர். தமிழ் வாழ்வதற்காக தொல்காப்பியத்தை படித்தும் வாழ்க்கைக்கு வள்ளுவரையும் ஆன்மிகத்திற்காக திருவாசகத்தையும் 3 கண்களாக எடுத்து கொண்டார்.





பொன்னமராவதி அருகே மேலச்சிவபுரியில் நடந்த வா.சுப. மாணிக்கனார் நூற்றாண்டு விழாவில் வா.சுப.மாணிக்கனாரின் 33 நூல்களை தமிழ்மண் பதிப்பகம் 'மாணிக்க விழுமியங்கள்' என்னும் தலைப்பில் தொகுத்துள்ளதை குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் வெளியிட்டார். அருகில் நீதிபதி சொக்கலிங்கம், மதுரை தியாகராஜர் கல்விக்குழுமங்களின் தலைவர் கருமுத்து. கண்ணன் மற்றும் பலர் (உள்படம்) விழாவில் திறந்து வைக்கப்பட்ட வா.சுப. மாணிக்கனார் உருவ சிலை.

வா.சுப.மாணிக்கனாரின் கருத்துக்களை பின்பற்றி மனிதருள் மாணிக்கமாக திகழவேண்டும் என்றார்.

வா.சுப.மாணிக்கனாரின் 33 நூல்களை தமிழ்மண் பதிப்பகம் 'மாணிக்க விழுமியங்கள்' என்னும் தலைப்பில் தொகுத்துள்ளதை குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் வெளியிட்டு பேசியதாவது:

தமிழ்நாட்டிற்கு கிடைத்த தவம் வா.சுப.மாணிக்கனார். எளிமை இனிமையாக பழக கூடியவர். இளமை காலத்தில் காந்தியடிகள் போல வாய்மை தவறாதவர். வாழ்க்கை பயணத்தில் வெற்றி பெற்று வட்டிக்கடை அதிபராக இருக்கவேண்டியவர் தமிழுக்கு அதிபராக திகழ்கிறார். தன் தந்தை விட்டு சென்ற பணிகளை தன் பிள்ளைகள் செய்கிறார்கள் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறலாம். ஆனால் நல்ல தாய், தந்தை என்ற பட்டத்தை குழந்தைகள் மட்டுமே தரமுடியும். அதைப்போல் வா.சுப வின் பிள்ளைகள் நல்ல பெயரை பெற்று தந்துள்ளார்கள். ஒரு மொழியால் அறிவை, ஞானத்தை பெறலாம் ஆனால் வீடு பேற்றினை தரும் மொழியாக தமிழ் மொழி விளங்குகிறது அந்த மொழியின் ஞான கருவூலம்தான் திருவாசகம். எந்த விருதினையும் தேடிசெல்லாத வா.சுப. மாணிக்கனாரை விருதுகளும் புகழும் தேடிவந்தது .பர்மாவில் வட்டிக்கடையில் பணிபுரிந்தபோது உண்மை கூறியதால் பணியை துறந்தார் தமிழுக்காக மிகப்பெரிய அறப்போராட்டங்கள் நடத்தி தில்லையம்பலத்தின் மேடைகளில் திருமுறைகளை இயற்றியவர் வா.சுப. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று ஆசைபட்டவர் அவர் என்றார்.

தொடர்ந்து மாணிக்கனார் நூற்றாண்டு மலரை வெளியிட்டு நீதிபதி சொக்கலிங்கம் பேசியதாவது:

நான் மாணிக்கனாரின் மாணவன் என்பதில் பெருமை கொள்கிறேன். அனைத்து துறைகளையும் பற்றி அவர் எழுதிய நூல்கள் காலத்தை வென்ற நூல்கள். தமிழை தன் மூச்சாக கருதி வாழ்ந்தவர் துணைவேந்தராக இருந்தபோது மாணவர்களுக்கு வகுப்பு நடத்தியவர். இவருக்கு 5மொழிகள் சரளமாக தெரியும். காந்தியடிகள் போல எளிமையாக வாழ்ந்தவர் என்றார்.

தொடர்ந்து 'மாணிக்கனாரின் நூல் தமிழ் யாத்திரை' எனும் ஆவணப் படத்தை அந்துவன் சாரங்கபாணி வெளியிட்டார். தமிழ்அறிஞர்கள் செல்லப்பன், கலைக்கோவன், சன்மார்க்க தலைவர் சிங்காரம் அண்ணாமலை, சேதுராமன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். நிகழ்ச்சிகளை பேராசிரியர் இருங்கை சேதுபதி தொகுத்து வழங்கினார். வா.சுப குடும்பத்தினர் தொல்காப்பியன் பூங்குன்றன் மாதவி பொற்கொடி பாரி மற்றும் பங்குசந்தை நிபுணர் நெற்குப்பை சேதுராமன் சாத்தப்பன், கல்லூரி முதல்வர் கனகராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தென்றல் நன்றி கூறினார்.



பொய் சொல்ல மறுத்ததால் கிடைத்த 'தமிழ் இமயம்'!

பொய் சொல்ல மறுத்ததால்...

மிகவும் எளிமையானவர்

வ.சுப.மாணிக்கனார்

திருவாசகத்தின் வழி வாழ்க்கை!

மேலைச்சிவபுரியில் இன்று மாணிக்கனார் நூற்றாண்டு விழா

வட்டிகா... டார். அந்தக் கடை முதலாளி வருமானவரி

மிகவும் எளிமையானவர்

வ.சுப. மாணிக்கனாரின் பழக்க வழக்கங்கள் சில நம்மை ஆச்சரியப்படுத்துகின்றன. அதிகாலை 5.30 மணிக்கு எழுவார். வழக்கமாக, தரையில் ஓரிடத்தில் அமர்ந்தே சாப்பிடுவார். பாயில்தான் படுத்து றங்குவார். தூய தமிழிலேயே வீட்டில் பேசுவார். காபி அருந்துவதில் ஈடுபாடு மிகுதி, அடிக்கடி அருந்துவார்; ஆனால், குறைந்த அளவிலே குடிப்பார். நாள்தோறும் இரவில் நாட்குறிப்பு எழுதுவார். மிகவும் சிக்கனமானவர். கறைபடாக் கையினர். பிறருக்கு உதவிடும் உள்ளம் உள்ளவர். பிறர் பொருளுக்கு ஆசைப்படாதவர். சிறந்த நகைச்சுவையாளர். தன் வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவே வாழ்ந்து, தமிழ் வளர்ச்சி பற்றியே சிந்தித்து பல நிலையினும் சிறந்தோங்கித் தமிழ்ப் பணிக்காகவே வாழ்ந்த மூதறிஞர். தமிழின் சிறப்புக்களைப் பற்றி ஆய்வுகள் பல செய்தமையால் தமிழ் இமயம் என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்பட்ட வ.சுப.மா., பன்முக ஆற்றல் உடையவர். தமிழ், ஆங்கிலம் என்று இரண்டு மொழிகளிலும் சிறந்து எழுதும் ஆற்றல் அவரிடம் இருந்தது.

செம்மல் என்ற ...

மேலைச்சிவபுரியில் இன்று மாணிக்கனார் நூற்றாண்டு விழா

பொன்னமராவதி: மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் நூற்றாண்டு விழா மற்றும் உருவ சிலை. திறப்பு விழா மேலைச்சிவபுரி தமிழ்க்கதிர் அரங்கத்தில் இன்று நடக்கிறது. காலை 8.30 மணிக்கு நிகழ்ச்சி தொடங்குகிறது. குன்றக்குடி பொன்னம்பல அடிகள் தலைமை வகிக்கிறார். வ.சுப.மா.தொல்காப்பியன் வரவேற்கிறார். மாணிக்கனார் உருவ சி லையை கருமுத்து கண்ணன் திறந்து வைக்கிறார். நூற்றாண்டு விழா மலரை ஓய்வு பெற்ற நீதிபதி சொக்கலிங்கம் வெளியிடுகிறார். மாணிக்கனார் பற்றிய நூல்களை காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் சுப்பையா வெளியிடுகிறார். 'மாணிக்கனார் 100' தமிழ் யாத்திரை ஆவணப்படத்தை ஐஏஎஸ் அதிகாரி இறையன்பு வெளியிடுகிறார். முனைவர் செல்லப்பன், டாக்டர் கலைக்கோவன், சிங்காரம், அண்ணா மலை, ஞானம், டாக்டர் சேதுராமன் ஆகியோர் வாழ்த்தி பேசுகின்றனர். அழ.தென்றல் நன்றி கூறுகிறார். தொடர்ந்து மதியம் 2 மணி முதல் 4 மணி வரை கருத்தரங்கமும், மாலை 5 மணிக்கு உரையரங்கமும் நடக்கிறது.

மேலைச்சிவபுரியில்

வ.சுப.மாணிக்கனார் நூற்றாண்டு விழா



பொன்னமராவதி அருகே உள்ள மேலைச்சிவபுரியில் சனிக்கிழமை நடைபெற்ற வ.சுப.மாணிக்கனார் நூற்றாண்டு விழாவில் அவரது நூல்களின் தொகுப்புகளை வெளியிடுகிறார் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார். உடன் (இடமிருந்து) மருத்துவர் இரா.கலைக்கோவன், முனைவர் கா.செல்லப்பன், நீதியரசர் மெ.சொக்கலிங்கம், கருமுத்து தி.கண்ணன், சன்மார்க்க சபைத் தலைவர் ப.சா.சிங்காரம், அ.சுப. அண்ணாமலை.

பொன்னமராவதி, செப். 2: பொன்னமராவதி அருகே உள்ள மேலைச்சிவபுரியில் மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார் நூற்றாண்டு விழா மற்றும் அவரது திருவுருவச் சிலை திறப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தலைமை வகித்தார். வ.சுப.மாணிக்கனாரின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து மதுரை தியாகராஜர் கல்விக் குழுமங்களின் தலைவர் கருமுத்து தி. கண்ணன் பேசியது: வ.சுப.மாணிக்கனார் கண்டிப்பும், சிக்கனமும் நிறைந்தவர். அவர் காட்டிய வழியில் அவரது படைப்புகளைப் படித்து அதன் வழி நாம் வாழ வேண்டும் என்றார்.

வ.சுப.மாணிக்கனாரின் 33 நூல்களை தொகுத்து தமிழ் மண் பதிப்பகம் 'மாணிக்க விழுமியங்கள்' எனும் தலைப்பில் தொகுப்பை வெளியிட்டு குன்றக்குடி பொன்னம்பலஅடிகளார் பேசியது: ஒரு மொழியால் அறிவை, ஞானத்தைப் பெறலாம். ஆனால், வீடு பேற்றினை தரும் மொழியாக தமிழ் மொழி விளங்குகிறது. அந்த மொழியின் ஞானக்கருவூலம் தான் திருவாசகம். தமிழுக்காக மிகப்பெரிய அறப் போராட்டத்தை நடத்தி தில்லையம்பலத்தின் மேடைகளில் திருமுறைகளை ஏற்றியவர் வ.சுப. எங்கும் தமிழ் எதிலும் எல்லா நிலைகளிலும் தமிழ் வளர ஆசைப்பட்டார் வ.சுப. எனவே, அவர் நினைத்த தமிழ்ப்பணிகளை நாம் ஆற்றவேண்டும் என்றார்.

தொடர்ந்து வ.சுப. மாணிக்கனார் நூற்றாண்டு விழா மலரை வெளிட்டு நீதியரசர் மெ.சொக்கலிங்கம் பேசியது: அனைத்து துறைகளையும் பற்றி அவர் எழுதிய நூல்கள் காலத்தை வென்றவை. துணைவேந்தராக இருந்தபோதும் மாணவர்களுக்கு வகுப்புகள் எடுத்தவர் வ.சுப. பன்மொழிப் புலமை பெற்ற அவர், 4 ஆங்கில நூல்களையும் எழுதியுள்ளார் என்றார்.

அதைத் தொடர்ந்து 'மாணிக்கனார்-100-தமிழ் யாத்திரை' எனும் ஆவணப் படத்தை அந்துவன் சாரங்கபாணி வெளியிட்டார்.

நிகழ்ச்சியில், தமிழறிஞர்கள் கா.செல்லப்பன், இரா.கலைக்கோவன், சன்மார்க்க சபைத் தலைவர் ப.சா.சிங்காரம், அ.சு.அண்ணாமலை, மருத்துவர் வ.சுப.சொ.சேதுராமன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

நிகழ்ச்சியை பேராசிரியர் கிருங்கை சேதுபதி தொகுத்து வழங்கினார். வ.சுப. குடும்பத்தினர் தொல்காப்பியன், பூங்குன்றன், மாதவி, பொற்கொடி, பாரி ஆகியோர் பங்கேற்றனர். இறுதியாக அழ.தென்றல் நன்றி கூறினார்.

DINAMANI, Tiruchy Phone: 2743496, Fax: 0431-2743499 RNI Reg. No. TNTAM/2003/12849. Published by R.K. Jhunjhunwala on behalf of Express Publications (Madurai) Ltd., at Baba Towers, 2nd Floor, 24, Thennur High Road, Thillai Na

வலைத்தமிழ்.காம்
தமிழ் தகவல் களஞ்சியம்
ValaiTamil.com ISSN: 2581 – 7132

புதுச்சேரியில் வ.சுப. மாணிக்கம், க. வெள்ளைவாரணனார் நூற்றாண்டு விழா, நூல் வெளியீட்டு விழா! புதுவை முதலமைச்சர் வே. நாராயணசாமி பங்கேற்பு!



தமிழ் இலக்கிய உலகில் அனைவராலும் போற்றப்படும் வகையில் ஆராய்ச்சி நூல்களை வழங்கிய வ. சுப. மாணிக்கம், க. வெள்ளைவாரணனார் ஆகியோரின் நூற்றாண்டு விழாவினைப் புதுச்சேரியில் உள்ள உலகத் தொல்காப்பிய மன்றம் நடத்தியது(11.02.2017). முனைவர் மு.இளங்கோவனின் பணிகளைக் குறித்து அறிஞர்கள் வழங்கியுள்ள மதிப்புரைகளின் தொகுப்பான முனைவர் மு.இளங்கோவன் அகமும் புறமும் என்ற நூலும் வெளியிடப்பட்டது. புதுச்சேரி முதலமைச்சர் வே. நாராயணசாமி நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நூற்றாண்டு விழாக் காணும் தமிழறிஞர்களின் படத்தைத் திறந்து வைத்ததுடன், நூலினை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார்.

மயிலம் பொம்மபுர ஆதீனம் இருபதாம் பட்டம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற விழாவில் முனைவர் ப. பத்மநாபன் வரவேற்புரையாற்றினார். முனைவர் இரா. நிர்மலா நோக்கவுரையாற்றினார். சிவ. வீரமணி, புலவர் இ. திருநாவலன், புலவர் கதிர். முத்தையன், தூ. சடகோபன் ஆகியோர் முன்னிலையில் விழா நடைபெற்றது. மறைந்த தமிழறிஞர்களான கா. மீனாட்சிசுந்தரம், தமிழண்ணல், ச.வே.சுப்பிரமணியன், மணவை முஸ்தபா ஆகியோரின் மறைவுக்கு அக வணக்கம் முதலில் செலுத்தப்பட்டது.

பேராசிரியர் தெ. முருகசாமி, முனைவர் இளமதி சானகிராமன் ஆகியோர் வ.சுப.மாணிக்கம் குறித்து உரையாற்றினர். பேராசிரியர் கு. சிவமணி க. வெள்ளைவாரணனார் குறித்து உரையாற்றினர்.

தமிழறிஞர்களின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தும், முனைவர் மு.இளங்கோவன்: அகமும் புறமும் என்ற நூலினை வெளியிட்டும் புதுச்சேரி முதலமைச்சர் வே. நாராயணசாமி உரையாற்றினார்.

மக்கள் தொண்டர் திரு. ஏம்பலம் செல்வம், திருவாட்டி சிவகாமி நாயகர், தழல் ஆசிரியர் திருவாட்டி தா.பெ.அ. தேன்மொழி, திருவாட்டி இராசேசுவரி தமிழ்மணி ஆகியோர் நூலின் முதல் படிகளைப் பெற்றுக்கொண்டனர்.

கடலூர்த் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் பேராசிரியர் இரா. ச. குழந்தைவேலனார், விழாவில் வெளியிடப்பட்ட நூல் குறித்த திறனாய்வு உரையாற்றினார்.

தமிழறிஞர்கள் ம. இலெ. தங்கப்பா மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், கு.சிவமணி சட்டச்சொல் அகராதி உருவாக்கியமைக்காகவும், ப.அருளி தூய தமிழ் அகரமுதலி உருவாக்கப் பணிக்காவும், தனித்தமிழ்ப் பாவலர் தமிழியக்கன் கலிமண்டில இலக்கண நூல் உருவாக்கியமைக்காகவும் புதுச்சேரி முதலமைச்சாரால் சிறப்பிக்கப்பட்டனர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறையின் முன்னைப் பேராசிரியர் செ.வை.சண்முகம், பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் மகள் மங்கையர்க்கரசி, மருகர் மருத்துவர் திருநாவுக்கரசு ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக வருகை தந்தனர். அரங்க. மு. முருகையன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். முனைவர் மு. இளங்கோவன் நன்றியுரையாற்றினார். தமிழகம், புதுச்சேரியைச் சேர்ந்த தமிழறிஞர்கள், ஆர்வலர்கள், எழுத்தாளர்கள் திரளாக நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.


by Swathi on 16 Feb 2017 0 Comments


Tags: Va Supa Manickam Vellaivaarananar வ.சுப. மாணிக்கம் க. வெள்ளைவாரணனார்

DEC
2

தமிழ்க்கதிர் வ.சுப. மாணிக்கனார்! நூல் ஆசிரியர்கள் : பேராசிரியர் இரா. மோகன், நிர்மலா மோகன்! நூல் விமர்சனம் : கவிஞர் இரா. இரவி !

தமிழ்க்கதிர் வ.சுப. மாணிக்கனார்!


தமிழ்க் கதிர்
வ.சுப.மாணிக்கனார்
பேராசிரியர் இரா.மோகன்
பேராசிரியர் நிர்மலா மோகன்
வானதி பதிப்பகம்



இலக்கிய இணையரின் சிந்தனைக் கச்சேரி

வாழ்வதற்காக வள்ளுவம்! புகழ்வதற்கு அல்ல! 'திருவள்ளுவரை வழிபட்டு தெய்வம் ஆக்கி விடாதீர்கள். அவர் தெய்வப் புலவர்தான்! ஆனாலும், அவர் தந்த திருக்குறளை வழிகாட்டி நூலாகக் கொண்டு வாழ்ந்து காட்டுங்கள்' என்பதே பேராசிரியர்கள் மோகன், நிர்மலா இருவரும் இந்த வள்ளுவர் நூலின் வழி சொல்கின்ற தீர்ப்பு.

இரட்டை நாதஸ்வரம் வாசித்தால் கேட்டுக் கிறங்கிப் போவதைப் போல், தமிழறிஞராயும், பேராசிரியப் பெருந்தம்பதியராயும், சிரிக்க, சிந்திக்கப் பேசும் மோகன், நிர்மலா '**வழிகாட்டும் வள்ளுவம்**' நூலின் வழி ஒரு சிந்தனைக் கச்சேரி நடத்தியுள்ளனர். இவர்கள் வழங்கியுள்ள இந்நூல் நாம் வாசிக்க வேண்டிய அற்புதச் சிந்தனைப் பேழை.

முப்பாலை இவர்கள், ஒப்பியல், உரையியல், நோக்கியல் என்று முப்பிரிவுகள் ஆக்கிக் கொண்டு, 20 தலைப்புகளில் சிந்தனைகளை விதைத்துள்ளனர். ஆக்கப்பூர்வமான பல சிந்தனைகளை வள்ளுவரிட மிருந்து நமக்கு வழங்குவது பாராட்டத்தக்க புது முயற்சி. நம்பிக்கையும், உடன்பாட்டுச் சிந்தனையும் நூலின் வழி வெளிவந்துள்ளது.

வள்ளுவத்தை புதுமணத் தம்பதியரின் உற்சாகத்தில் இனிமையுற எழுதியுள்ள சிந்தனை நூல் இது.

- முனைவர் மா.கி.ரமணன்

வானதி பதிப்பகம்

நூல் ஆசிரியர்கள் : பேராசிரியர் இரா. மோகன், நிர்மலா மோகன்!

நூல் விமர்சனம் : கவிஞர் இரா. இரவி !

வானதி பதிப்பகம் 23 தீனதயாளு தெரு, தியாகராயர் நகர்
சென்னை 600 017 பக்கம் 230 விலை ரூ150.

******

பொய் சொல்லாத மாணிக்கம் என்று பெயர் பெற்ற தமிழ்க்கதிர் வ.சுப. மாணிக்கனார் நூற்றாண்டு விழா தமிழகம் மட்டுமின்றி அமெரிக்காவிலும் கொண்டாடி வரும் வேளையில் அவர் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பாக வந்துள்ள அரிய நூல்.

இன்றைய இளைய தலைமுறையினர் அவசியம் இந்நூலை வாங்கிப் படித்து மிகச் சிறந்த ஆளுமையாளர் வ.சுப. மாணிக்கனார் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

இலக்கிய இணையர் என்று பெயர் பெற்ற தமிழ்த்தேனீ இரா. மோகன், தமிழ்ச்சுடர் நிர்மலா மோகன் இருவரும் இணையராகவே இந்த நூலை வடித்துள்ளனர். பதிப்புகளில் புகழ் பெற்ற வானதி பதிப்பகத்தின் பெருமைமிகு வெளியீடாக வந்துள்ளது. அட்டைப்பட வடிவமைப்பு உள்அச்சு யாவும் மிக நேர்த்தியாக உள்ளன.

நூல் வாழ்க்கைக் குறிப்புடன் தொடங்கி உள்ளார். கவியரசர் முடியரசன் கவிதை மிக நன்று. 10 தலைப்புகளில் கட்டுரைகள் உள்ளன.

கவிதையின் சிறு துளி!

மாணிக்கப் புலவன்! கவியர்சர் முடியரசன்!

நண்பன் பண்பன் நயத்தகு தமிழைக்
கண்ணென உயிரெனக் கருதும் இயல்பினன்
கல்வியைத் தமிழ்க் கற்கத் தடையெனில்
அவ்வினை யதுதான் அழிகவென் நெழுந்து !

மேற்கோள் காட்டி உள்ள நான்கு வரிகளே
வ.சுப. மாணிக்கனாரின் சிறப்பியல்பை எடுத்து இயம்புவதாக உள்ளது. வ.சுப. மாணிக்கனார் அவர்களின் புதல்விகள் திருமதி மாதுரி வெள்ளையப்பன், திருமதி தென்றல் அழகப்பன் இருவரும் இலக்கிய இணையர் இல்லம் வந்து தந்தையின் நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று வேண்டுகோள் வைத்த அன்று நானும் இல்லம் சென்று இருந்தேன்.

என்னிடமும் வேண்டுகோள் வைத்தனர். அன்று முதல் வ.சுப.மாணிக்கனார் பற்றிய செய்திகள் எது வந்தாலும் உடன் வலைப்பக்கத்திலும் முகநூலிலும் பரப்பி வருகிறேன். எனது முகநூல் நண்பர். திருமதி தென்றல் அவர்களின் கணவர் அழகப்பன் அவர்கள் என் பதிவுகளை உடன் அவரது பக்கத்திற்குப் பகிர்ந்து விடுவார். நூல் ஆசிரியர் தமிழ்த் தேனீ இரா .மோகன் கலைமாமணி ஞானசம்பந்தன் மற்றும் புகழ்பெற்ற கவிஞர்களான அப்துல் ரகுமான் , மேத்தா , தற்போது காலமான இன்குலாப் வரை பயின்ற தீந்தமிழ் தியாகராசர் கல்லூரியில் தமிழ்க்கதிர் வ.சுப. மாணிக்கனார் நூற்றாண்டு விழா நடந்தது .படங்கள் எடுத்து முகநூலில் பதிந்தேன் .அவரது பக்கத்திற்குப் பகிர்ந்தார். இந்த நூல் விமர்சனத்தையும் பகிர்வார்.

தமிழ்த்தேனீ இரா.மோகன் அவர்கள் மிகவும் நேசிப்பது மு.வ. அதற்கு அடுத்த படியாக மிகவும் நேசிப்பது வ.சுப. மாணிக்கனார். 'கரும்பு தின்னக் கூலி தேவை இல்லை' என்ற பொன்மொழிக்கு ஏற்ப அவரது நூறாண்டு விழா கொண்டாட்டங்களுக்கும் நூல் வெளியிடு-களுக்கும் துணை நிற்பது மட்டுமின்றி வாழ்ந்து உடலால் மறைந்தாலும் தமிழ் ஆர்வலர்களின் உள்ளங்களில் என்றும் வாழ்ந்து வரும் மாமனிதருக்கு மகுடம் சூட்டும் விதமாக இந்த நூலை இலக்கிய இணையர் வடித்துள்ளனர். பாரட்டுகள். மாணிக்கத் தமிழ்.

தமிழ் இலக்கிய உலகில் மிக உயரிய ஆய்வு நூல்களாகக் கருதப்பெறும் 'தமிழ்க் காதல்' 'வள்ளுவர்''கம்பர்' போன்றவை அவர்தம் உயரியப் படைப்பாற்றலுக்குச் சான்று பகர்வை.

பேராசிரியர், துணை வேந்தர் போன்ற பதவிகளில் இருந்த போதும், மு.வ. அவர்களைப் போலவே படைப்பாற்றலும் வ.சுப. மாணிக்கனார் முத்திரைப் பதித்தார் என்பதை அறிய மகிழ்வாக இருந்தது. இன்றைக்கு, தான் உண்டு தன் கல்லூரி உண்டு என்று இருக்கும் பேராசிரியர்கள் படைப்பாற்றலின் கவனம் செலுத்திட வேண்டும். அப்போது தான் மறைந்த பின்னும் வ.சுப. மாணிக்கனார் போல பேசப்படுவீர்கள் எழுதப்படுவீர்கள் என்பதை உணர வேண்டும். வ.சுப. மாணிக்கனார் வாழ்வு சாதாரண வாழ்வு அல்ல சாதனை வாழ்வு..நேர்மையான வாழ்வு. தூய்மையான வாழ்வு வாழ்ந்தவர் .

தமிழ்வழிக் கல்வி என்பது இன்று தமிழகத்தில் அழிவு நிலையில் உள்ளது. ஆனால் அன்றே வ.சுப.மாணிக்கனார் தமிழ் வழிக் கல்வி மீது கொண்ட அளப்பரியப்பற்றினை வைத்து இருந்ததை இந்த நூலின் மூலம் அறிந்து கொண்டேன். அவர் இன்று இருந்து இருந்தால் இன்றைய தமிழகத்தில் தமிழ் வழிக் கல்வியின் நிலை கண்டு வேதனை அடைந்து இருப்பார்.

தமிழ்வழிக்கல்வி தமிழ் மீது கொண்ட அளப்பரிய அக்கறையாலும் ஈடுபட்டாலும் தமிழ்வழிக்கல்வியைத் தமது இறுதி மூச்சு வரை மாணிக்கனார் வற்புறுத்தி வந்தார். அதன் தொடக்க முயற்சியாக, மேலைச் சிவபுரியில் தமிழ்வழி மழலையர் பள்ளியை அவர் நிறுவினார். இப்படி பல அரிய தகவல்களை அறிந்திட வாய்ப்பாக வந்துள்ள அரிய நூல்.

தொல்காப்பியம் ‘இலக்கண இலக்கியம்’ என்ற முதல் கட்டுரையில் வ.சுப. மாணிக்கனார் எழுதிய ‘தொல்காப்பியக்கடல்’ என்ற நூலின் ஆய்வுக் கட்டுரையாக அமைந்துள்ள து. தொல்-காப்பியத்தின் சிறப்பையும் வ.சுப.மாணிக்கனாரின் எழுத்தாற்றலை எடுத்து இயம்பும் விதமாக உள்ளது.

நாம் இருவர் நமக்கு இருவர் நாம் இருவர் நமக்கு ஒருவர் என்பன குடும்ப நலத்திட்ட விளம்பரக் குரல்கள் நமக்கு ஒருவர் என்று சொல்லும் போது ஒருவர் என்பது ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் பொதுவாகப் பயன்படுகின்றது. நமக்கு ஒருவர் என்று சொன்னாலும் ஒருத்தி என்று சொன்னாலும் கருத்துத் தவறாகும். இருபாற் குழந்தையையும் பொதுவாகவும் சமமாகவும் குறிப்பதற்கு ‘நமக்கு ஒருவர்’ என்ற சொல்லை இவ்விடத்து ஆள்கின்றோம்.

இன்று ‘நாமே குழந்தை நமக்கு எதற்கு குழந்தை’ என்ற நிலைக்கு சில இணையர்கள் முடிவெடுத்து விட்டார்கள்.

அகத்திணையின் பெருமைகள் பற்றி வ.சுப. மாணிக்கனார் கருத்து இதோ!

‘காதலையும் அதன் உணர்வையும் அதன் கல்வியையும் தெரிய வேண்டின். தமிழ்ப் பேரினம் கண்ட அகத்திணையை நாடுக. நெறியாகவும் அளவாகவும் உரமாகவும் நாணமாகவும் கற்பாகவும் காமக் கூறுகளைச் செவ்வனம் காட்டும் ஓர் உலக இலக்கியம் தமிழிற்தான் உண்டு’.

இன்றைய காதலர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய வைரவரிகள். இப்படிப் பட்ட உயர்ந்த இலக்கியம் தமிழில் மட்டும் தான் உண்டு தமிழராகப் பிறந்ததற்காக உலகத் தமிழ்ர் யாவரும் பெருமை கொள்வோம். உன்னத இலக்கியத்தை உலகிற்கு தந்த மொழி தமிழ் மொழி. வ.சுப. மாணிக்கனாரின் படைப்புகளை ஆய்வு செய்து வடித்துள்ள அற்புத நூல். எல்லோருக்கும் அவரது படைப்புகளை வாசிக்க வாய்ப்பு இல்லை. இந்த நூலின் வழி அவரது படைப்பாற்றலை உணர வைத்துள்ளனர் இலக்கிய இணையர்.

வ.சுப.மாணிக்கனார் எழுதிய நூல்கள் பட்டியல் நூலில் உள்ளது. அது மட்டுமல்ல எழுதிட அவர் திட்ட மிட்ட நூல்களின் பட்டியல் கண்டு வியந்து போனேன். அவரது நூற்றாண்டை முன்னிட்டு மாணிக்க மொழிகள் நூறு நூலில் உள்ளன. அவற்றிலிருந்து சிறு துளிகள் இதோ!

என் தாய்மொழியாம் செந்தமிழுக்குப் பெருவளஞ்சேர்க்க வேண்டும் என்பது என் தலையாய குறிக்கோளுள் ஒன்று.

என் பிறப்பு பெருந்தொண்டுடையதாக வேண்டும் என்பது என் விளைவு.

நான் உலகிற்கு வழங்க எண்ணிக் கொண்டிருக்கும் பொருள் இரண்டே; வாய்மை, தற்சிந்தனை.

வைத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வாழ்வில் வாய்மையை வாழ்வியல் நெறியாக வாழ்ந்து தமிழுக்கு அளப்பரிய தொண்டுகள் செய்து சிறந்த மாமனிதர் வ.சுப.மாணிக்கனார்.அவர்களுக்கு சூட்டிய மாணிக்க மாலை இந்நூல்.(இலக்கிய இணையினருக்கு பாராட்டுகள்)

நன்றி
அன்புடன்
கவிஞர் இரா .இரவி

http://tamil.pratilipi.com/kavignar-eraravi

https://www.facebook.com/rravi.ravi

www.kavimalar.com

http://www.eraeravi.blogspot.in/
.
http://www.tamilthottam.in/f16-forum

http://eluthu.com/user/index.php?user=eraeravi

http://www.eegarai.net/sta/eraeravi

இறந்த பின்னும்
இயற்கையை ரசிக்க
கண் தானம் !

வ.சுப.மாணிக்கம் 10



தமிழறிஞர், கவிஞர், பேச்சாளர், நாடகாசிரியர், ஆய்வாளர், உரையாசிரியர் என பன்முகப் பரிமாணம் கொண்ட வ.சுப.மாணிக்கம் (V.S.Manickam) பிறந்த தினம் இன்று (ஏப்ரல் 17). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

* புதுக்கோட்டை மாவட்டம் மேலைச் சிவபுரியில் (1917) பிறந்தார். இயற்பெயர் அண்ணாமலை. இளம் பருவத்திலேயே பெற் றோரை இழந்தார். தாய்வழிப் பாட்டி, தாத்தாவிடம் வளர்ந்தார். 7 வயது வரை நடேச ஐயரிடம் குருகுலக் கல்வி கற்றார்.

* வணிகம் பழக 11 வயதில் பர்மா சென்றார். பொய் சொல்லுமாறு முதலாளி கூறியதை ஏற்க மறுத்தவர், வேலையை இழந்து 18 வயதில் தமிழகம் திரும்பினார். பண்டிதமணி கதிரேசன் செட்டியார் உதவியுடன் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் சேர்ந்து ‘வித்வான்’ பட்டம் பெற்றார்.
* சென்னை பல்கலைக்கழகத்தில் பிஓஎல், முதுகலை பட்டம் பெற்றார். ‘தமிழில் வினைச்சொற்கள்’ என்ற பொருளில் ஆய்வு செய்து எம்ஓஎல் பட்டமும், ‘தமிழில் அகத்திணைக் கொள்கைகள்’ என்ற பொருளில் ஆய்வு செய்து முனைவர் பட்டமும் பெற்றார்.
* அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பயின்றபோது, ராகவ ஐயங்கார், ந.மு.வேங்கடசாமி நாட்டார், அ.சிதம்பரநாதன் செட்டியார் உள்ளிட்ட அறிஞர்களிடம் பயிலும் வாய்ப்பு கிடைத்தது. அங்கு விரிவுரையாளராக 7 ஆண்டுகள் பணியாற்றினார். தலைசிறந்த உரைநடை எழுத்தாளராக புகழ்பெற்றார். தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் வல்லமை பெற்றவர், இரண்டிலுமே நூல்களைப் படைத்தார்.
* காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பணியில் சேர்ந்தார். 1964 முதல் 1970 வரை அதன் முதல்வராகப் பணியாற்றினார். மீண்டும் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இருந்து அழைப்பு வந்ததால், அங்கு 7 ஆண்டுகளுக்கு மேல் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றினார்.
* மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் துணைவேந்தராக 1979 முதல் 1982 வரை பணியாற்றினார். அப்போது, பண்டிதமணி அரங்கை நிறுவினார். பல்கலைக்கழக நடைமுறைகள் தமிழில்

இருக்க வேண்டும் என ஆணை பிறப்பித்ததுடன், அங்கு தமிழ் ஆய்வு நடைபெறவும் வழிவகுத்தார்.
* தமிழில் பல புதிய சொல்லாக்கங்களை தந்தவர். வீட்டிலும் கலப்படமற்ற தூய தமிழில் பேசினார். தாய்மொழி வழிக் கல்வியை வலியுறுத்தினார். தமிழ்வழி கல்வி இயக்கம் என்ற அமைப்பின் தலைமைப் பொறுப்பேற்று, தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொண்டார்.
* துணைவேந்தர் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு, திருவனந்தபுரம் திராவிட மொழியியல் கழகத்தில் முதுபேராய்வாளர் என்ற பதவியில் ‘தமிழ் யாப்பியல் வரலாறும் வளர்ச்சியும்’ என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஆய்வு மேற்கொண்டார். தொல்காப்பிய ஆய்வு மேற்கொண்டு, நூலாக எழுதி வெளியிட்டார். தொடர்ந்து பல நூல்களை எழுதினார்.
* திருக்குறள் நெறிகளின்படி வாழ்க்கை நடத்தினார். தன் சொத்தில் ஆறில் ஒரு பங்கை அறநிலையத்துக்கும், தன் சொந்த ஊரில் இலவச கல்வி, மருத்துவம் போன்ற சேவைகளை வழங்குவதற்காகவும் உயில் எழுதிவைத்தார். தன் நூலக நூல்களை அழகப்பா பல்கலைக்கழகத்துக்கு வழங்குமாறும் உயிலில் குறிப்பிட்டிருந்தார்.
* தினமும் அதிகாலையில் எழுந்து 4 மணி நேரத்துக்கு மேல் புத்தகம் படிக்கும் பழக்கம் கொண்டவர். கடுமையான உழைப்பாளி. சங்க இலக்கியங்களைத் தன் நுனிநாக்கில் வைத்திருந்தவர். மூதறிஞர், செம்மல், முதுபெரும் புலவர், பெருந்தமிழ்க் காவலர் என்றெல்லாம் போற்றப்படும் வ.சுப.மாணிக்கம் 1989 ஏப்ரல் 25-ம் தேதி 72-வது வயதில் மறைந்தார்.

தென்றல்

டாக்டர் வ.சுப. மாணிக்கனார்

செந்தமிழ்க் கல்லூரியாலும், சன்மார்க்க சபையாலும் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாராலும் பெருமை பெற்ற ஊர் மேலைச்சிவபுரி. வ.சுப்பிரமணியன் செட்டியார் - தெய்வானை ஆச்சிக்கு, ஏப்ரல் 17, 1917 அன்று மகவாகத் தோன்றினார் வ.சுப. மாணிக்கம். அருணாசலேஸ்வரர் மீது கொண்ட பற்றாலும், தாய்வழிப் பாட்டனாரின் பெயர் என்பதாலும் பெற்றோர்கள் அவருக்கு அண்ணாமலை என்று பெயர் சூட்டினர். பெற்றோர் இருவரும் அவரது இளமைப் பருவத்திலேயே தவறிவிடவே, தாய்வழிப் பாட்டி மீனாட்சியும், தாத்தா அண்ணாமலையும் மாணிக்கனாரை வளர்த்தனர்.

மாணிக்கனாரின் தொடக்கக் கல்வி திண்ணைப் பள்ளிக் கூடத்தில் தான். சன்மார்க்க சபையோடு தொடர்பு கொண்ட சைவ அறிஞர் நடேச ஐயர் இவர்மீது தனி அக்கறை கொண்டு பயிற்றுவித்தார். மாணிக்கனாரின் தமிழார்வம் சுடர் விட்டது. குடும்பச் சூழ்நிலை காரணமாக, பிற தனிகவணிகர் போலவே மாணிக்கனாரும் பர்மாவுக்குச் செல்ல நேர்ந்தது. ரங்கூனில் உறவினர் ஒருவர் கடையில் வணிகம் பயின்றார். ஏழு ஆண்டுகள் பணியாற்றினார். ஒருமுறை முதலாளி மாணிக்கனாரிடம், வாடிக்கையாளர் கேட்டால் 'தாம் இல்லை' என்று பொய் கூறுமாறு வற்புறுத்தவே, மாணிக்கனார் பொய்கூற விரும்பாததால் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். 1935ஆம் ஆண்டு, பதினெட்டாம் வயதில் தமிழகம் திரும்பினார்.

மேலைச்சிவபுரியில் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரையும், அ.நா. பழனியப்பச் செட்டியாரையும் சந்தித்தார். அது பெரும் திருப்புமுனை ஆனது. பண்டிதமணியின் துணையால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்வான் பட்டப்படிப்பில் சேர்ந்தார். அப்போது அவருக்கு ஆசிரியர்களாக விளங்கிய தமிழறிஞர்களான பண்டிதமணியார், நா.மு. வேங்கடசாமி நாட்டார், அ. சிதம்பரநாதன் செட்டியார், ரா. ராகவ அய்யங்கார், ரா. கந்தசாமி, மு. அருணாசலம் போன்றோரால் மாணிக்கனாரின் தமிழார்வம் அதிகரித்தது. முதன்மையான மாணவராகத் தேர்ச்சி பெற்றதாலும், சிறந்த ஆய்வு மாணவராகப் பணியாற்றியதாலும் தாம் பயின்ற பல்கலைக் கழகத்திலேயே அவருக்கு விரிவுரையாளர் பணி கிடைத்தது. அதே காலத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பி.ஓ.எல். பட்டம் பெற்றார். 1945ல் நெற்குப்பையைச் சேர்ந்த ஏகம்மை ஆச்சியுடன் திருமணம் நடந்தது.

1948ல் காரைக்குடி அழகப்பர் கல்லூரியில் பணியாற்ற மாணிக்கனாருக்கு அழைப்பு வந்தது. அதனை ஏற்று அங்கு தமிழ்ப் பேராசிரியர் பணியில் சேர்ந்தார். அங்கே தமிழ் ஆராய்ச்சித் துறையைத் தோற்றுவித்தார். தமிழ்ச் சங்கத்தை நிறுவி, பல அறிஞர்களை வரவழைத்து உரையாற்றச் செய்தார். பல கருத்தரங்குகளிலும், சொற்பொழிவுகளிலும் கலந்துகொண்டார். போட்டிகள் நடத்தி மாணவர்களையும், சிறார்களையும் இலக்கியத்தில் ஈடுபாடு கொள்ள வைத்தார். இவற்றோடு, சென்னைப் பல்கலைக்கழகத்தின் எம்.ஓ.எல்., ஏம்.ஏ. ஆகிய பட்டங்களையும் பெற்றார். பின்னர் தமிழில் அகத்திணைக் கொள்கைகள் என்ற தலைப்பில் முதுநிலை ஆய்வு மேற்கொண்டு, முனைவர் பட்டம் பெற்றார். அழகப்பா கல்லூரியின் முதல்வராக உயர்ந்த மாணிக்கனார் பல ஆய்வு நூல்களை எழுதி வெளியிட்டார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மாணிக்கனாரை மீண்டும் பணியாற்ற அழைக்கவே, அதன் தமிழ்த் துறைத் தலைவராகப் பொறுப்பேற்றார். அதே பல்கலையின் இந்தியமொழிகள் துறை முதன்மையர் பொறுப்பையும் வகித்தார்.

மாணவர்களின் மனதை அறிந்து அதற்கேற்றவாறு பாடம் நடத்தும் பாங்கு, எளிமை, தூய்மை, நேர்மை போன்றவற்றை மாணவர்ளும் சக ஆசிரியர்களும் பெரிதும் மதித்தனர். சங்க இலக்கியங்களில் ஆழ்ந்த பயிற்சி, பல உரை நூல்களைக் கற்ற தெளிவு, ஆழ்ந்த புலமை, ஆராய்ச்சி அறிவு ஆகியவற்றால் அவரது வகுப்பு, மாணவர்களால் புறக்கணிக்க முடியாததாக இருந்தது. கம்பன், வள்ளுவன் பற்றியும் சிற்றிலக்கியங்கள் பற்றியும் இவர் ஆற்றிய சொற்பொழிவுகள், பல மாணவர்களுக்கு அவற்றை விரிவாக ஆய்வதற்கான ஆவலைத் தூண்டியது. கம்ப ராமாயணச் செம்பதிப்புப் பணியை சிறப்பாக நிறைவு செய்தார். பல்கலைக்கழகத்தின் புகழை நாடறியச் செய்தார்.

வ.சுப. மாணிக்கனார் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு உயர்ந்தார். அப்பொறுப்பேற்று பல்வேறு சாதனைகளைச் செய்தார். அவற்றுள் குறிப்பிடத்தக்கது ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டின் போது பல்கலைக்கழகத்தின் சார்பில் பல அரிய கண்காட்சிகளை அமைத்ததும், பல நூல்களை வெளியிட்டுச் சிறப்பித்ததும் ஆகும். பல்வேறு துறைகளை உருவாக்கினார். பல்கலைக்கழக நடைமுறைகள் அனைத்தும் தமிழிலேயே இருக்கவேண்டும் என ஆணை பிறப்பித்தது, சிறந்த தமிழ் அறிஞர்களைச் சிறப்புநிலைப் பேராசிரியராக அமர்த்தி தமிழ் ஆய்வுக்கு வழி செய்தது போன்றவை குறிப்பிடத்தக்கன. பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையைச் சீர்செய்து, இரண்டு கோடிக்கு மேல் சேமித்துக்காட்டியது பாராட்டப்பெற்றது. "ஆட்சித்திறன் என்பது, தாம் சார்ந்த நிறுவனத்தை ஓர் அங்குலமேனும் உயர்த்துவது. வ.சுப.மா. துணைவேந்தராகப் பொறுப்பேற்றிருந்த காலம் கோபுரத்திற்குக் கலசம் வைத்தது போன்ற சிறப்புடைய காலமாகும்" என்கிறார் டாக்டர் தமிழண்ணல்.

65ஆம் வயதில் துணைவேந்தர் பொறுப்பிலிருந்து விடுபட்ட மாணிக்கனார், தமிழ் ஆய்வுப் பணியைத் தொடர்ந்தார். திருவனந்தபுரம் திராவிட மொழியியற் கழகத்தில் 'தமிழ் யாப்பியல் வரலாறும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் ஓர் ஆய்வை மேற்கொண்டார். யாப்பின் வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். பின்னர் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வல்லுநர் குழுவின் தலைவராக இருந்து அதன் செயல்முறைகளை வகுத்துக் கொடுத்தார். தொல்காப்பியம் குறித்து அவர் மேற்கொண்ட விரிவான ஆய்வு நூல் 'தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நூன்மரபும் மொழிமரபும் மாணிக்கவுரை' என்ற தலைப்பில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப் பெற்றது. பல இதழ்களுக்குக் கட்டுரைகளும், ஆய்வு நூல்களும் தொடர்ந்து எழுதலானார். சிலம்பையும், மணிமேகலையையும் ஒப்புநோக்கி ஆராய்ந்த இவரது 'இரட்டைக் காப்பியங்கள்' நூல் தனிச் சிறப்பு வாய்ந்தது. இவர் எழுதிய தமிழ்க்காதல், நெல்லிக்கனி ஆகியவை சொற்சிறப்பும், பொருட் சிறப்பும் வாய்ந்தவை. குறிப்பாக வள்ளுவமும், தமிழ்க்காதலும் மிகச் சிறப்பானவையாகும்.

வள்ளுவத்தின் மீது பேரன்பு கொண்டு அதன் வழி நடந்த அவர், அதன் சிறப்பை விளக்கும் வகையில் வள்ளுவம், திருக்குறட் சுடர், உரைநடைத் திருக்குறள் போன்ற நூல்களையும், மாணிக்கக்குறள் என்ற கவிதை நூலையும் எழுதியிருக்கிறார். பல காப்பியங்களை, சங்க இலக்கியங்களை ஆய்வு செய்து காப்பியப் பார்வை, ஒப்பியல்நோக்கு, இலக்கியச்சாறு, சங்க நெறி, தொல்காப்பியக் கடல் போன்ற நூல்களை எழுதியிருக்கிறார். இவர் எழுதிய 'கம்பர்' என்னும் ஆய்வு நூல் தமிழக அரசின் சிறப்புப் பரிசு பெற்றது. அது தவிர ஆங்கிலத்திலும் Tamilology, A Study of Tamil Verbs, The Tamil Concept of Love போன்ற பல ஆய்வு நூல்களை எழுதியிருக்கிறார். மனைவியின் உரிமை, நெல்லிக்கனி, உப்பங்கழி, ஒரு நொடியில் போன்ற நாடக நூல்களையும் மாணிக்கனார் தந்திருக்கிறார்.

"தனித் தமிழ் இயக்கத்துக்கு வித்திட்டவர் மறைமலை அடிகள்; அதை வளர்த்தவர் தேவநேயப் பாவாணர்; அது மென்மேலும் வளர்ந்து தழைத்தோங்கச் செய்தவர் டாக்டர் வ.சுப. மாணிக்கனார்" என்பது அக்காலத் தமிழறிஞர்களின் கூற்று. தமிழின் வளர்ச்சி பற்றியே சிந்தித்து தமிழின் சிறப்புக்களைப் பற்றியே ஆய்வுகள் மேற்கொண்ட மாணிக்கனார், தம்மிலும் மூத்த அறிஞர், சான்றோர் பெருமக்கள் மீது பேரன்பும், பெருமதிப்பும் கொண்டவர். மதுரை

காமராஜர் பல்கலையில் தாம் துணைவேந்தராகப் பணிபுரிந்தபோது 'பண்டிதமணி அரங்கு' என்பதனை அங்கே நிறுவி, தன் ஆசானின் பெருமையை பலர் அறியச் செய்தார். தம்மீதுமிகவும் அன்பு பாராட்டிய வள்ளல் அழகப்பரின் பெருமையை 'கொடைவிளக்கு' என்னும் கவிதை நூலில் படிப்போர் உள்ளம் உருகும் வண்ணம் பதிவு செய்திருக்கிறார். தமிழகப் புலவர் குழுவிற்கும், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்திற்கும், மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை கணேசர் செந்தமிழ்க் கல்லூரிக் குழுவுக்கும் தலைவராக இருந்து இவர் ஆற்றிய பணிகள் பல.

"பயனில சொல்லாப் பாவலன் என்றும், நயனுள மொழியும் நாவலன்" என்றும், "தீவினை, செய்யாச் செம்மல் செந்தமிழ்ப் பெம்மான், பொய்யா மாணிக்கப் புலவன்" என்றும் கவிஞர் முடியரசன் வ.சுப.மாணிக்கனாரைப் போற்றியிருக்கிறார். தமிழ்வழிக் கல்விக்காகக் குரல் கொடுத்த மாணிக்கனார் தேவார, திருவாசகப் பாடல்கள் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். அவை சிதம்பரத்தில் அம்பலம் ஏற மிகவும் உறுதுணையாக இருந்தார். இவரது தமிழ்ப் பணியைப் பாராட்டி மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை 'செம்மல்' என்னும் பட்டத்தையும், குன்றக்குடி ஆதீனம் 'முதுபெரும்புலவர்' என்னும் பட்டத்தையும் வழங்கினர். 1979ல் தனது பொன்விழாவைக் கொண்டாடிய அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மாணிக்கனாருக்கு 'மூதறிஞர்' என்னும் பட்டத்தை வழங்கி சிறப்புச் செய்தது. காந்திய நெறியைப் பின்பற்றி வாழ்ந்ததால் 'தமிழ்க் காந்தி' என்றும், 'தமிழ் இமயம்' என்றும் இவர் போற்றப்பட்டார்.

தமிழுக்குத் தொல்காப்பியமும், வாழ்வின் உயர்வுக்குத் திருக்குறளும், உயிர்த் தூய்மைக்குத் திருவாசகமும் எனக்கு வழி காட்டிய தமிழ் மறைகள் என்று கூறும் மாணிக்கனார், பதவிகளைத் தொண்டாக மதித்தல், தன்னைப்பற்றிய திருத்தமான சிந்தனைகள், பெரியவர்களின் வரலாறுகளைப் படித்தல், பகட்டின்றித் தூய எண்ணத்தால் இறைவனை வழிபடுதல் போன்றவற்றையே தாம் கண்ட முன்னேற்ற நெறிகளாகக் குறித்திருக்கிறார்.

எதிலும் தன்னை முன்னிறுத்திக் கொள்ளாது, தன்னை புகைப்படம் எடுத்தலைக் கூட விரும்பாது வாழ்ந்த மாணிக்கனார், சைவத்தையும் தமிழையும் தனது இரு கண்களாகக் கருதியவர். புதுச்சேரிப் பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்று அங்கு சென்றிருந்த அவர், திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டு ஏப்ரல் 25, 1989 அன்று காலமானார். அப்போது அவர் கையில் இருந்த நூல் திருவாசகம்.

அவரது மறைவிற்குப் பின் தமிழக அரசு அவருக்குத் திருவள்ளுவர் விருது வழங்கிச் சிறப்பித்ததுடன், அவரது நூல்களை நாட்டுடைமை ஆக்கியது. அவரது மகன்கள் தொல்காப்பியன், பூங்குன்றன், பாரி ஆகியோரும் தந்தையைப் போன்று தமிழார்வலர்களாகளே. தென்றல், மாதரி, பொற்றொடி ஆகிய மூன்று பெண்மக்களும் மாணிக்கனாருக்கு உண்டு. தந்தையின் நினைவாக மாணிக்கனார் அறக்கட்டளையை நிறுவி அவரது வாரிசுகள் தமிழ்ப்பணி, சமுதாயப் பணி ஆற்றிவருகின்றனர்.

இலக்கணம், இலக்கியம், சமயம், உரைநடை எனத் தமிழின் அனைத்துத் துறைகளிலும் சீரிய பங்காற்றியிருக்கும் டாக்டர் வ.சுப. மாணிக்கனார், தமிழார்வலர்கள் எண்ணி எண்ணிப் போற்றத் தகுந்த, பெருமைக்குரிய முன்னோடிகளுள் ஒருவர்.

(நன்றி: டாக்டர் வ.சுப. மாணிக்கம்; முனைவர் இரா. மோகன், சாகித்திய அகாதெமி வெளியீடு)

பா.சு. ரமணன்

அமெரிக்காவில் வ.சுப.மாணிக்கனார் நூற்றாண்டு விழா

தமிழறிஞர் வ.சுப. மாணிக்கனாரின் நூற்றாண்டு விழா அமெரிக்காவில் உள்ள மேரிலாண்டில் நவ.19-ல் நடைபெற உள்ளது.

தமிழ் இமயம் என்று அறிஞர்களால் போற்றப்பட்டு, கொண்டாடப்பட்டவர் வ.சுப.மாணிக்கம். கவிஞர், உரைநடை ஆசிரியர், நாடக ஆசிரியர், ஆய்வாளர், உரை ஆசிரியர் என்று பன்முகங்கள் கொண்டு தமிழ்ப் பணி ஆற்றியவர்.

தமிழகத்தில் 1917-ம் ஆண்டு பிறந்த வ.சுப.மாணிக்கனாருக்கு நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாட அமெரிக்காவில் உள்ள மேரிலாண்டைச் சேர்ந்த உலக தமிழ் அறக்கட்டளை தீர்மானித்துள்ளது.

நவம்பர் 19 – தேதி சனிக்கிழமை நடைபெற இவ்விழாவில், சிறப்பு விருந்தினராக சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் வா.மு.சே.முத்து ராமலிங்க ஆண்டவர் கலந்து கொண்டு மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் குறித்து சிறப்புரையாற்றுகிறார்.

பன்னாட்டு புறநானூற்று குழுத் தலைவர் முனைவர் பிரபாகரன் தலைமை தாங்குகிறார். வட அமெரிக்க தமிழ்ச் சங்க முன்னாள் தலைவர் நாஞ்சில் பீட்டர் முன்னிலை வகிக்கிறார். இவ்விழாவில் வ.சுப. எனும் தமிழ்க்கடல் நூல் வெளியிடப்பட உள்ளது. பின்னர் முனைவர் வா.மு.சே.ஆண்டவர் மற்றும் உலகத் தமிழ் அறக்கட்டளை நிறுவனர்வா.மு.சே.தமிழ்மணிகண்டன் ஆகியோர் ஏற்புரை வழங்குவர்.

கருத்தரங்கம், உரை அரங்கம், கவியரங்கம், நாடகம், நடனம் ஆகியவையும் இடம் பெற உள்ளது.

நம் கருத்தைப் புரிந்து கொண்ட ஆசான், தன் கருத்தைத் தெரிவிக்கும் நடையை வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார்.

“எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி” (145)

என்ற குறள் இந்நடையது.

இவ்வாறு பதினான்கு நிலைகளில் வள்ளுவர் பயன்படுத்திய நடை வகைகளை வரையறுத்துள்ளார் மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார். இதன் வழி வள்ளுவரின் நடை ஆளுமையும் தெரியவருகிறது. வ.சுப. மாணிக்கனாரின் ஆய்வுத் திறமும் அறிய வருகிறது. இவ்வகையில் பல ஆய்வுக்கண்களைத் திறக்கும் வல்லமை மூதறிஞர் வ. சுப. மாணிக்கனாரின் நூல்களுக்கு உண்டு என்பது தெளிவு.

பதிவிட்டது palaniappan நேரம் 3:26 பிற்பகல் கருத்துகள் இல்லை: இணைப்புகள்

Languages

duraiarasanblogspot.com

Vaarppu Poems

Ministry of HRD

தமிழ்வெளி

காப்புரிமை

http://ethirneechal-lab.blogspot.in/2011/09/encryptor.h

சனி, ஜனவரி 10, 2009

வ. சுப. மாணிக்கனாரும் வள்ளுவச் செயல் நெறியும்

வள்ளுவ வழி வளம் பெருக்கும் வழியாகும். படிப்பது, பொருளோடு படிப்பது என்பதைத் தாண்டி வள்ளுவ வழியில் செயல்படுவது என்பதை நோக்கமாகக் கொள்ள வேண்டும். இந்நோக்கம் அனைவரையும் வளப்படுத்தும். திருக்குறள் வெறும் மேற்கோள் நூலல்ல; அது செயல்வழி நூல் என மொழிந்தவர் செம்மல் வ. சுப. மாணிக்கனார் ஆவார்.
இவர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மேலைச்சிவபுரி என்ற ஊரைச் சார்ந்தவர். அவ்வூரிலேயே தொடக்கக் கல்வி கற்றுப் பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சார்ந்து தன் கல்வியறிவை மேம்படுத்திக் கொண்டவர். இப்பல்கலைக்கழக வழியாக பி.ஓ.எல், எம்.ஏ, முனைவர் போன்ற பட்டங்கள் பெற்றவர். இளம் வயதில் பர்மாவிற்குச் சென்ற இவர் அங்குப் பொய் கூறச் சொல்லி வற்புறுத்தல் ஏற்பட்டபோது அதனை மறுத்து மெய்யன்றி வேறு கூறேன் என்ற கொள்கைவழி நின்றவர். இதனால் இவர் பொய் சொல்லா மாணிக்கம் என்றும் பொய் சொல்லா மெய்யர் என்றும் போற்றப் பெற்றவர். தொடர்ந்து அந்நெறிப்படியே வாழ்ந்தவர். இவர் தன் ஆசானாக பண்டிதமணி கதிரேசன் செட்டியாரை வரித்துக் கொண்டவர். மதுரைப்பல்கலைக்கழகத் துணைவேந்தராகவும், தமிழ், பாண்டிச்சேரி பல்கலைக்கழகங்களின் உருவாக்கத்தின்போது துணைசெய்தவராகவும் இவர் விளங்கினார். காரைக்குடி அழகப்பா கல்லூரியின் முதல்வராகவும் இவர் விளங்கினார். சங்க இலக்கியப் புலமையும், திருக்குறள் புலமையும் ஒருங்கே கொண்ட இவர் தமிழ்வழிக்கல்வி, தமிழ்வழிபாடு முதலானவற்றை தமிழகம் முழுவதும் கொண்டுவரப் பாடுபட்டார்.
இவர் பல நூல்களை வரைந்துள்ளார். இவரின் தமிழ்க்காதல் மிகச் சிறந்த சங்க இலக்கிய ஆய்வு நூலாகும். இது ஆங்கில மொழியிலும் தமிழ் மொழியிலும் வெளிவந்துள்ளது. இந்நூல் காட்டும் திறனாய்வுப் பாதை வழிப் பல திறனாய்வு நூல்கள் தோன்ற இயலும்.
இவர் படைத்த நூல்களில் திருக்குறள் கருத்துக்களுக்கு முக்கிய இடம் இருக்கும். இவரின் திருக்குறட்சுடர், உரைநடைத்திருக்குறள், வள்ளுவம், திருக்குறள் தெளிவுரை முதலியன இவரின் திருக்குறள் புலமையைக் காட்டும் நூல்கள் ஆகும்.
குறிப்பாக இவரின் வள்ளுவம் என்ற நூல் திருக்குறளை ஆழ்ந்து படித்தோரை இன்னும் ஆழமாகச் சிந்திக்கத் தூண்டும் நூல் ஆகும். இந்நூல் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்து மூன்றாம் ஆண்டில் எழுதப் பெற்றுள்ளது. இது ஒரு சொற்பொழிவு நூல். இவர் ஒரு சொற்பொழிவாளராக இருக்க பன்னிரண்டு நாட்கள் வாய்மைக் கழகம் என்னும் பெயர் கொண்ட கழகத்தாரால் நடத்தப் பெற்ற கற்பனைக் கூட்டத் தொடர் இதுவாகும். இக்கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கினர் வந்து கலந்து கொண்டதாகவும்- அவர்களில் பலர் பல்வேறு நாட்டவராக இருந்தததாகவும் இப்பொழிவாளர் கொண்டு இந்நூலைப் படைத்துள்ளார். இந்நூலின் இத்தன்மை மிகப் புதுமை வாய்ந்ததாகும்.
இந்நூலுள் இவரின் வள்ளுவ ஈர்ப்பு நெஞ்சம் தெரியவருகிறது. திருக்குறளை இவர் தெளிவு சான்ற வாழ்க்கைச் செயல் நூல்(வள்ளுவம் ப. 81) என்பதாகக் காண்கிறார்.
திருக்குறள் ஒரு மருந்துக்கடை. அவரவர் நோய்க்கேற்ப உரிய மருந்துகள் கடையில் உளவாதல் போல திருக்குறளகத்தும் நம் வாழ்நிலைக்கு ஏற்ப உரிய அறங்கள் உண்டு. ஆயின் ஒரு பெருவேறுபாடு. நம் உடல் நிலையை மருத்துவனால் அறிந்து மருந்தினை அவன் பாலோ பிறர் பாலோ வாஙு;குகிறேhம். திருக்குறளோ வள்ளுவர் தாமே செய்துவைத்துச் சென்ற உயிர் மருந்துக் கடையாதலின் நம் வாழ்நிலையை நாமே நாடி நிலைக்கேற்ற அறத்தினையும் நாமே கண்டு கொள்ளல் வேண்டும். ஈண்டு பொறுப்பும் எடுப்பும் நம் மேலன(வள்ளுவம். ப. 45)
திருக்குறள் என் கருத்தில் ஒரு பெருஞ்சந்தை. நடப்புச் சந்தையில் பல இனச் சரக்குகளும், ஓரினத்துள்ளே பலவகைப் பொருள்களும் உள. திருக்குறட் சந்தைக் கண் அதிகாரங்கள் பல வினச் சரக்குகளாகும்.(வள்ளுவம்.ப. 61)
என்று காணும் பொருள்களெல்லாம் நடக்கும் நடப்பெல்லாம் திருக்குறள் மயமாகவே வ. சுப. மாணிக்கனார் கண்டுள்ளார்.
இவரது பேச்சுரை பன்னிரண்டு தலைப்புகளை உடையதாக உள்ளது. இவ்வுரை கேட்க வந்தோர் சிற்சில வேண்டுகோள்களை அவ்வப்போது வைத்துள்ளனர். அவற்றுள் சில பின்வருமாறு.
சில நாட்கள் பேசி முடித்தபின் அன்பர் ஒருவர் உரை கேட்க வந்திருக்கும் அனைவருக்கும் தன் செலவில் திருக்குறள் நூல் ஒன்றைப் பரிசாக அளிப்பதாகக் கூறுகின்றார். இச்செயலை வேண்டாம் என மறுத்துரைக்கிறார் இவர்.திருக்குறள் என் வாழ்க்கைச் சுவடி என்று உணர்ந்து அவரவரும் தாமே வாங்கிக் கற்கும் நாள் வரும். உழைத்து ஈட்டிய தன் பொருளால் திருக்குறள் யாரும் பெறுக(வள்ளுவம். ப. 57) என்று இவர் திருக்குறள் நூல் அன்பளிப்பைத் தவிர்த்து மாற்றாக அவரவர் உழைப்பில் திருக்குறளைப் பெற வழிவகை செய்கிறார்.
இதுபோன்றே மற்றொரு நாள் இவர் உரை கேட்ட செல்வர்கள் பலர் ஒன்று கூடி பல பத்தாயிரம் ரூபாய்களைச் சேர்த்து இவரிடம் திருக்குறள் பரப்ப ஆவன செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். திருக்குறளை யாண்டும் யார்க்கும் பரப்பவேண்டும். தமிழகமும், இந்தியாவும், உலகமும் ஏசு பெருமான் விவிலிய நூல் போல் அறியச் செய்ய வேண்டும்.... வள்ளுவர்க்குக் கோயிலொடு மண்டபம் கட்டலும் இன்ன பிறவும் எங்கள் நோக்கம் என்று கூறிய அவர்களைப் பார்த்து வள்ளுவ வழிபரவத் தக்க வழியை இவர் எடுத்துரைக்கிறார்.
மக்கட்கெல்லாம் கல்வி வேண்டும்; கேள்வி வேண்டும்; முயற்சி வேண்டும் என்பது வள்ளுவம். இக்கோட்பாடு செயற்படுத்தற்கு உரிய வழித்துறைகளை அன்பராகிய நாம் பற்றல் வேண்டும். கல்வி வேண்டும் வள்ளுவர் பெயரால், தெருத்தோறும் பள்ளி அமைக்க. ஊர் தோறும் பெரும்பள்ளிகள் நிறுவுக. நூல் நிலையம் படிப்பகங்கள் பெருக்குக. கேள்வி வேண்டும் வள்ளுவர் பெயரால் கூடங்கள் கட்டுக. முயற்சி வேண்டும் வள்ளுவர் பெயரால் தொழிற்களகள் உழைப்புச்சாலைகள், உழவுப் பண்ணைகள் தொடங்குக. ஈகை வேண்டும் வள்ளுவர் பெயரால் ஏழை இல்லங்கள், குழந்தை விடுதிகள் பேணுக. மடிமனும், பசிமகனும், மடமகனும் இல்லை எனும்படி பள்ளியில் தெருவும், தொழிலில் ஊரும் இல்லை எனும்படி வள்ளவர்க்குத் தொண்டு செய்க. .. இவ்வெல்லாம் முதற்கண் தத்தம் ஊரிலேயே ஆற்றுவார் ஆற்றுக. செல்வ மிகுதியிருப்பின் பிற ஊர்களுக்குத் தொண்டினைப் பரப்புக. கோடிச் செல்வம் குவியின் வள்ளுவர் பல்கலைக் கல்லூரிகளும், வள்ளுவர் பல்கலைக்கழகமும் நிறுவ முயல்க. (வள்ளுவம். ப.102) என்ற இவரின் கூற்று ஊர்தோறும் நடைபெறவேண்டியனவாகும்.
ஐம்பதாண்டுகளுக்கு முந்தைய இவரின் பல்கலைக்கழக கனவு இன்று மெய்யாகிவிட்டது. அப்பல்கலைக்கழகம் மற்ற பல்லகலைக்கழகங்கள் ஆற்றும் பணிகளைச் செய்து வருகிறது. இருப்பினும் அது வள்ளுவ நெறி பரவத் தனித்திட்டம் கொள்ள வேண்டும்.
இவ்வகையில் வள்ளுவத்தை வாழ்விலக்கியமாகக் கொண்டு வ. சுப. மாணிக்கனார் வாழ்ந்துள்ளார். இவர் இவ்வள்ளுவ நூலில் கூற வரும் மையக் கருத்து தனிமனிதர் ஒவ்வொருவரின் நெஞ்சமும் தூய்மைப்பட வேண்டும் என்பதே ஆகும். இது நிறைவேறினால் உலகம் நல்வழிப்படும், இதுவே வள்ளுவரின் நெஞ்சம் என்கிறார்,
மனமாசுடையவர் யாவர் கண்ணும் இகலுவர். முரணுவர். பகைப்பர். மனமாசற்றவர் எவ்வகை வேற்றுமைக் கண்ணும் உறவு கொள்வர்; உதவுவர்; கலப்பர். இதுவே முடிந்த பேரடிப்படை உண்மை. ஆதலின் திருக்குறளுக்குச் சாதி, சமய முதலாய பொதுமை நிலைக்களமன்று. மக்கள் மனம் நிலைக்களம். ஆளுக்கொரு மனம் உடையராதலின் அப்பன்மை நிலைக்களம் மனத்து விரிந்து பரந்த நல்ல தீய எண்ணங்கள் நிலைக்களம். சாதி சமய நாடுகளிடைப் பொதுமைநாட்டல் திருக்குறள் நோக்கமன்று. மேற்கூறியாங்குப் பொதுமைக்குள் பகையும் வேற்றுமைக்குள் நட்பும் கண்ட மனவறிஞர் வள்ளுவராதலின் தனித்தனியோரின் வஞ்சனை போக்கி நெஞ்சத்தூய்மை செய்வதே வள்ளுவம்.(வள்ளுவம் ப.44)
வள்ளுவத்தை செயல்நூலாக்கி, வள்ளுவரைச் செயலாக்க ஆற்றல் உடையவராக உயர்த்தி உலக சிக்கல்களுக்குத் தீர்வு காண விழையும் திருக்குறள் அன்பராக வ. சுப. மாணிக்கம் அமைந்துள்ளார் என்பது தெளிவு.
--

பதிவிட்டது palaniappan நேரம் 4:42 முற்பகல் கருத்துகள் இல்லை: இணைப்புகள்

திங்கள், மார்ச் 28, 2011

செம்மொழித் தமிழின் தனித்தன்மை

விவரங்கள்
எழுத்தாளர்: ந.முருகேச பாண்டியன்
பிரிவு: உங்கள் நூலகம் - மார்ச் 2018
வெளியிடப்பட்டது: 22 மார்ச் 2018

மறுவாசிப்பில் வ.சுப.மாணிக்கனாரின் தமிழ்க் காதல்

அச்சிடுக

- தமிழ் இலக்கியங்கள்
- தமிழ்ச் சான்றோர்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஓலைச் சுவடிகளில் இருந்து அச்சு வடிவம் பெற்ற குறுந்தொகை உள்ளிட்ட பதினெட்டு நூல்களும் தமிழர்களிடையே உருவாக்கிய அடையாள அரசியல், சங்க இலக்கியம் குறித்த மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. அகம்ஙீபுறம் என்ற இலக்கியப் பாகுபாடும் இலக்கண நூலான தொல்காப்பியப் பொருளதிகாரமும் பருண்மையான நிலையில் தமிழ்ப் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்தன. சம்ஸ்கிருதம்தான் கற்றோரின் மொழியென முன்னிறுத்தப்பட்ட சூழலில், இரண்டாயிரமாண்டு களுக்கு முந்தைய தமிழர் வாழ்க்கைப் பின்புலத்தில் விரிந்திடும் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் தமிழிலக்கியக் கல்வியிலும் ஆய்விலும் பெரும் மாற்றத்தை உருவாக்கின. தமிழுக்குச் செம்மொழி ஏற்புடைமை வழங்கப்பட்டமைக்குச் சங்க இலக்கியப் பிரதிகள்தான் காரணம்.



சங்ககாலத் தமிழர் வாழ்க்கை குறித்து உருவாக்கப்பட்டிருக்கிற பெருமித உணர்வு, தமிழ் மொழி வழியாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிற நுண்ணரசியல் காத்திரமானவை. சங்க இலக்கியப் படைப்புகள் குறித்த ஆராய்ச்சி, வரலாற்றுச் சான்று களுடன் ஒப்பிடப்பட்டு, உருவான பதிவுகள் இன்றளவு செல்வாக்குடன் விளங்குகின்றன.

சங்க இலக்கியப் பிரதிகள் குறித்தான பேச்சுகள் இன்று பல்வேறு தளங்களில் கோட்பாடுகள் அடிப்படையில் நிகழ்த்தப் படுகின்றன. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சங்க இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட தமிழறிஞர்கள், பேராசிரியர்கள் தங்களுடைய கருத்துகளை அழுத்த மாகப் பதிவாக்கியுள்ளனர்.

ஐம்பதுகளில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய வ.சுப.மாணிக்கம் The Tamil Concept of Love என்ற தலைப்பில் முனைவர் பட்டத்திற்காக மேற்கொண்ட ஆய்வு, 1962-இல் தமிழ்க் காதல் என்ற தலைப்பில் நூலாக வெளியானது. சங்க இலக்கியப் படைப்புகளைப் போற்றி எழுதுவது பரவலாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில், தொல்காப்பியரின் பொருளதிகாரக் கோட்பாடுகளின் அடிப்படையில் வ.சுப.மா. சங்க இலக்கியத்தை விரிவாக அணுகியிருந்தார். சங்க இலக்கியத்தை முன்வைத்து இன்று நூற்றுக்கும் மேற்பட்டோர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்; பலர் ஆய்வேடுகளை நூலாக வெளியிட்டுள்ளனர்.

இத்தகைய சூழலில் 55 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியான தமிழ்க் காதல் நூலினை மறுவாசிப்புச் செய்ய வேண்டியுள்ளது. பின் காலனியம், பின் நவீனத்துவம், மார்க்சியம், பெண்ணியம், தலித்தியம், உளவியல், அமைப்பியல் என்று பல்வேறு கோட்பாடுகள் சார்ந்து திறனாய்வு மேற்கொள்ளப்படுகிற சூழலில், வ.சுப.மா.வின் சங்கக் கருத்தியல் போக்குகள் பெறுமிடம் கவனத்திற்குரியன. தமிழ்க் காதல் நூல் முன்னிறுத்துகிற அடிப்படையான ஆய்வு முடிவுகள், இன்றைய நவீனக் கோட்பாடுகளுடன் ஒத்திசைந்தும், வேறுபடுகிற களங்கள், சங்க இலக்கியம் குறித்த வ.சுப.மாவின் ஆய்வுப் புலமைக்குச் சான்றாக விளங்குகின்றன.

இன்று பின் நவீனத்துவக் கோட்பாடு வலியுறுத்துகிற மறுவாசிப்பு என்ற செயல்பாடு, பிரதிக்குள் பொதிந் திருக்கிற பல்வேறுபட்ட குரல்களை முன்னிறுத்துகிறது; ஒற்றைத் தன்மையை மறுக்கிறது. இத்தகைய போக்கின் கூறுகள், தொல்காப்பியத்தில் நுட்பமாக இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய உரையாசிரியர்கள், தங்களுடைய கருத்தியலை நூற்பாக்கள் மீது சுமத்தி எழுதியுள்ள உரைகள், பிரதியின் பல்வேறு சாத்தியங்களை அறிமுகப்படுத்தியுள்ளன. சங்கப் பாடல்களின் அசலான கருத்துகளை நுட்பமாக அறிந்திட முயன்றுள்ள வ.சுப.மா. இலக்கண உரையாசிரியர்களின் கருத்துகளை மறுத்துப் புதிய விளக்கம் தந்துள்ளார்.

சங்கப் பிரதிகளை ஆராய்ந்திட பேராசிரியர் வ.சுப.மா. பயன்படுத்தியுள்ள விமர்சன அணுகுமுறை, இன்று பின் நவீனத்துவக் கோட்பாடு முன்னிறுத்தும் மறுவாசிப்புச் செயல்பாடுதான். பண்டைய இலக்கண இலக்கியப் பிரதிகளை ஆராய்ந்திடும்போது, வ.சுப.மா. தர்க்கரீதியில் தந்துள்ள கண்டுபிடிப்புகள் ஏற்புடையன. தொல்காப்பியத்தின் பின்புலத்தில் அகத்திணை மரபு குறித்த நுட்பமான புரிதல், தமிழ்க் காதல் நூல் முழுக்க அழுத்தமாகப் பதிவாகியுள்ளது. இன்று அகத்திணை ஆய்வினை மேற்கொண்டுள்ள ஆய்வாளர்கள் எதிர்கொள்கிற சிக்கல்கள் குறித்து விவாதம் நூலில் விரிவாக இடம் பெற்றுள்ளன.

அகத்திணை எனில் அன்பின் ஐந்திணை என்றும் ஏனைய கைக்கிளையும் பெருந்திணையும் ஒப்பீட்டளவில் தரமற்றவை என்றும் உரையாசிரியர்கள் உருவாக்கிய கருத்துகள், பன்னெடுங்காலமாக ஆதிக்கம் செலுத்து கின்றன. அன்பின் ஏழு திணைகள் என்ற கருதுகோளின் அடிப்படையில் தரவுகளை விவாதப் போக்கில் கட்டமைத்துள்ளார் வ.சுப.மா. கைக்கிளை என்ற சொல்லுக்கு முதிராக் குறுங்கரு எனக் கருத்து அடிப்படையில் தரும் விளக்கம் நுட்பமானது.

கண்டதும் காதல் எனக் காதல் வயப்படுகிற இளைஞனின் பார்வைக் கோணத்திற்கும், புணர்ச்சிக்குத் தயாராகாத உடலினைக்கொண்ட காமம் சாலாத மனநிலையுடைய சிறுமிக்கும் இடையிலான முரண், கைக்கிளைத் திணையின் அடிப்படையாகும். ஒரு கணம் இளைஞனின் மனதில் தோன்றும் காதல் விழைவை முன்வைத்திடும் அகத் திணையானது, கைக்கிளையில் அடங்கும். அந்தளவில் திடீரென அரும்பிடும் காதல், தூய்மையானது; அன்பிலானது என இலக்கணம் வகுத்திடும் வ.சுப.மாவின் ஆய்வு, அகத்திணைசார் மரபில் ஏற்புடையது.

பொருந்தாக் காமம் என்பது வலிந்து பெண்ணுடன் புணர்ச்சி என உரையாசிரியர்களால் குறிப்பிடப்படுகிற பெருந்திணை குறித்து வ.சுப.மா. புதிய நோக்கில் கருத்துரைத்துள்ளார். ஆரியர் வழக்கினிலான பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் ஆகிய நான்கினையும் பெறும் திணை, பெருந்திணையானது என்ற நச்சினார்க் கினியரின் கூற்றைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளார். ‘‘இது சிறு கணக்கு நயமேயன்றிக் காரணம் ஆகாது. ஐந்துவரை எண்ணுவதற்காக ஐவிரல்களைப் படைத்தான் என்று கட்டுரைப்பது போலும்’’.

என நெற்றியடியாக வ.சுப.மா. மறுத்துரைத்துள்ளார். பெருந்திணைப் பெயர் ஆரியர் மணமுறைகளை எண்ணி இடப்பட்டது என்ற வாதம், அறியாமையை வெளிப்படுத்துகிறது என்பது வ.சுப.மா. வின் வாதம். கைக்கிளையும் பெருந் திணையும் அகத்திணை சார்ந்தவை அல்ல என்ற பிற்காலத்தியக் கருத்தியல் போக்கும், அவை குற்றேவல் செய்வாரின் காதல்கள் என்ற இளம்பூரணரின் கருத்தும் சரியல்ல என்று மறுக்கிறார் வ.சுப.மா. சிறிய அளவில் நடைபெற்றதை அவையல் கிளவியாகப் பெருந்திணை எனச் சொல்வது வழக்கானது என்ற சோமசுந்தர பாரதியாரின் கருத்தினை, இதையெல்லாம் மங்கல வழக்காகச் சொல்ல வேண்டிய தேவை இல்லை என்று கருத்துரைக்கிறார். ஐம்பதுகளின் பிற்பகுதியில் முனைவர் பட்டத்திற்காகச் செய்த ஆய்வில், தமிழ் மரபுஙீஆரிய மரபு குறித்த வ.சுப.மா.வின் நுண்ணரசியல் வெளிப் பட்டுள்ளது. இடைக்காலத் தமிழ்ச் சமுதாயத்தில் மதங்களும் சாதிகளும் முன்வைத்த கோட்பாடுகளைச் சங்க இலக்கியம், தொல்காப்பியம் போன்ற பண்டைய

நூல்களில் புலவர்கள் காண முயன்றதால், குழப்பங்கள் நடைபெற்றன என்ற வரையறை கவனத்திற்குரியது. பொதுவாக அகத்திணை என்ற வரையறையை நுட்பமாக ஆராய்ந்திட்ட வ.சுப.மா.வின் விளக்கம் இன்றைக்கும் பொருந்துகிறது.

சங்க இலக்கியம் பண்டைத் தமிழரின் பெருமையைப் பறைசாற்றுகிறது; குறிப்பாகக் காதலின் மகத்துவத்தை மேன்மைப்படுத்தியுள்ளது என்று பொதுப்புத்தியில் இன்று உருவாக்கப்பட்டுள்ள கருத்தியலுக்கு மாற்றாகத் தமிழ்க் காதல் நூல் விளங்குகிறது. தூய காதல் என்று உருவாக்கப்பட்டுள்ள புனைவை மறுதலித்து உடல்களின் காமத்தைக் கொண்டாடுகிற பிரதியெனச் சங்க இலக்கியத்தை வ.சுப.மா. முன்னிறுத்துகிறார். சங்கப் பிரதிகளில் மையமாக ஒலிக்கிற குரல்கள் அடையாளங் கண்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சங்ககாலத்தில் காதலர்கள் களவுக் காலத்தில் தங்கள் விருப்பம் போல புணர்ச்சியில் ஈடுபட்டனர் என்று அகப் பாடல்களின் வழியாக வ.சுப.மா. நிறுவுகிறார். விரும்பிய ஆணும் பெண்ணும் உடலுறவுகொள்வதை பண்டையத் தமிழ்ச் சமூகம் இயல்பானதாகக் கருதி அங்கீகரித்தது என்பது, இன்றைய தமிழர்கள் அறியாதது.

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் கரணம் எனப்பட்ட சடங்கு வகுக்கப்பட்டது என்ற தொல் காப்பியரின் நூற்பா குறித்து ஏற்கனவே உரையாசிரி யர்கள் விளக்கம் தந்துள்ள நிலையில், வ.சுப.மா. அவற்றைக் கேள்விக்குள்ளாக்குகிறார். எண்ணுவார் தம் எண்ணத்தை அந்த நூற்பாவில் காண விழைகின்றனர் என்று குறிப்பிடுகிறவர், தனது கருத்தை ஆய்வு நோக்கில் வெளிப்படுத்தியுள்ளார்.

களவுக் காலத்தில் காதலித்த பெண்ணுடன் உடலுறவுகொண்ட காதலன், பின்னர் பொய்யாக மறுத்ததால் கரணம் தோன்றியது என்பதில் வ.சுப.மா.விற்கு உடன்பாடு இல்லை. களவு வாழ்க்கையில் மட்டுமின்றி, திருமண வாழ்க்கையில் கணவன் பரத்தையுடன் சேர்ந்து வாழ்கிற வழுவினையும் கரணம் தடுக்காது. பின்னர் தொல்காப்பியர் குறிப் பிடுகிற பொய்யும் வழுவும் எதைக் குறிக்கின்றன? கரணம் என்பது திருமணக் காலத்தில் செய்யப்படுகிற ஒருவகையான சடங்கு. பொய்யும் வழுவும் இல்லாத பெண்ணும் ஆணும் திருமண உறவில் ஒன்றிணையும் போது, நிகழ்த்தப்படுகிற சடங்குதான் கரணம் என்ற வரையறை ஏற்புடையது. அழகிய இளைஞிக்கும், இளமையான மனைவிக்கும் தோற்றத்தில் வேறுபாடு இல்லாத நிலையைப் பொய் எனவும் அண்மையில் திருமணமான பெண்ணின் எழிலான இளமைத் தோற்றம், இளைஞரின் மனதில் ஏற்படுத்துகிற ஈர்ப்பினை வழு என்றும் தொல்காப்பியர் குறிப்பிட்டு உள்ளார். இத்தகைய இளம் மனைவியும் இளைஞனும் குழம்புவதற்குக் காரணமாக விளங்குகிற வழுவும் பொய்யும் சமுதாயத்தின் குறைதான். இந்நிலையைப் போக்குவதற்குக் காரணமாகத்தான் சான்றோர் கரணத்தை உருவாக்கினர். எந்தவகையான கரணம் பின்பற்றப்பட்டது எனத் தொல்காப்பியர் குறிப்பாகச் சுட்டவில்லை. பொய்யும் வழுவும் என்பதற்கு இதுவரை மரபான முறையில் சொல்லப்பட்ட விளக்கங்களை மறுத்து, புதிய கோணத்தில் வ.சுப.மா. சொல்லியுள்ள கருத்து, அகத்திணைக் கோட்பாட்டுக்கு வலுச் சேர்க்கிறது.

பெண் குழந்தைக்குக் குழவிப் பருவம் முதலாகக் காலில் அணிவிக்கப்பட்ட சிலம்பு என்ற அணிகலனைத் திருமணத்திற்கு முன் நீக்கப்படும்போது, அச்சடங்கு விழாவாகக் கொண்டாடப்பட்டது. சிலம்பு கழி நோன்பு சடங்கு, இளம் பெண் திருமணமானவள் என்பதைப் பிறர்க்கு உணர்த்திடும். இதுபோன்று திணைதோறும் வேறுபட்ட கரணங்கள் வழக்கினில் நிலவியிருக்கலாம் என்பது வ.சுப.மாவின் கருத்து.

பண்டைய நாளில் இளம் பெண்கள் கூந்தலில் மலர் சூடுவது வழக்கம் இல்லை. களவின்போது தலைவன் பெண்ணின் கூந்தலில் பூவைச் சூடியதால் ஏற்பட்ட பூவின் வாசம், அவளைத் தாயிடம் காட்டிக் கொடுப்பதாகச் சங்கப் பாடல் குறிப்பிட்டுள்ளது. குமரிப் பெண் கூந்தலில் பூவைச் சூடும் உரிமையைத் திருமண நாள் முதலாகப் பெறுகின்றாள். கரணம் என்ற சொல்லின் பின்னர் பொதிந்திருக்கிற பண்டைத் தமிழரின் பண்பாட்டு வாழ்க்கை நெறியைச் சங்கப் பாடல்கள் மூலம் அழுத்தமாக வ.சுப.மா. நிறுவி யுள்ளார். அவருடைய ஆய்வுப் பொருண்மையானது பண்பாட்டு மானுடவியல் நெறியில் அமைந்துள்ளது.

சங்க இலக்கிய மருதத் திணைப் பாடல்களில் இடம் பெற்றுள்ள பரத்தை பற்றிய செய்திகளை முன் வைத்து, அன்றைய சமூகச் சூழலை வ.சுப.மா. ஆராய்ந் துள்ளார். அன்பின் ஐந்திணை வாழ்க்கையில் ஒத்த கருத்துடைய ஆணும் பெண்ணும் சேர்ந்து துய்க்கிற இன்பத்தை முன்னிறுத்துகிற சங்கப் பாடல்களில் பரத்தையை எப்படி அணுகுவது என்பது முக்கியமான கேள்வி. சங்கப் பரத்தை என்பவள் கீழ்மகள் அல்லள் எனத் துல்லியமாக மதிப்பிடப்படுகிற நிலையில், பரத்தை குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. குடும்பப் பெண்ணின் ஊடலை வெளிப் படுத்த பரத்தை ஒழுக்கம் என்ற விளக்கம் பொருத்த மன்று. ''பண்டைச் சமுதாயத்தில் கனிகை மடந்தையர் இயல்பாகப் பெற்றிருந்த நிலையான செல்வாக்கை நாம் மறைப்பதற்கில்லை'' என்று குறிப்பிடுகிற வ.சுப.மா. அகத்திணைக் கோட்பாடுடன் அதை எப்படிப் பொருத்துவது எனக் குழம்பியுள்ளார். சங்க இலக்கியம் குறிப்பிடுகிற பரத்தை என்பவள் பண்டைய தாய்வழிச் சமூகத்தின் எச்சம். சங்கப் பிரதிகள் வலியுறுத்துகிற குடும்பம் என்ற நிறுவனத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற வரையறையைப் பொருட்படுத்தாமல், தன்னியல்பாக வாழ்ந்த சுதந்திரமான பெண்ணைப் புலமை மரபு, பரத்தை என்று குறிப்பிட்டுள்ளது. அவளுடைய பாலியல் விழைவும் தேர்வும்கூட அன்பு வயப்பட்டது தான். எனவே வ.சுப.மா. வலியுறுத்துகிற அகத்திணைக் கோட்பாட்டு நெறிக்குள் பரத்தமை ஒழுக்கம் இடம் பெறுகிறது.

வ.சுப.மா. தனது கருத்தை அழுத்தமாக வலியுறுத்திட உரையாசிரியர்களின் தட்டையான விளக்கங்களை விமர்சனத்திற்குள்ளாக்கியுள்ளார். ஒருவரையருவர் விரும்பிய இளைஞனும் இளைஞியும் கரணம் என்ற திருமணச் சடங்கினுக்குப் பின்னர், தங்குதடையின்றி உடலுறவு இன்பத்தைத் துய்ப்பர் என்பதைப் பின்வரும் தொல்காப்பிய நூற்பா குறிப்பிட்டுள்ளது.

கரணத்தின் அமைந்து முடிந்த காலை

நெஞ்சுதனை அவிழ்ந்த புணர்ச்சி

களவுக் காலத்தில் தயக்கத்துடன் காதலர்கள் அனுபவித்த கலவி இன்பம், மணச்சடங்கு பலரறிய முடிந்த பின்னர், கற்புக் காலத்தில் கட்டற்றுப் பொங்குகிறது என்பது இந்நூற்பாவின் இயல்பான பொருளாகும். இந்த நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் எழுதியிருக்கிற உரையின் பின்னர் பொதிந்திருக்கிற வைதிக அரசியலைக் கண்டறிந்த வ.சுப.மா. கடுமையாகச் சாடியுள்ளார். “இவ்வெளிய இனிய கற்பியல் நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் ஒழுக்க மில்லுரை எழுதியிருக்கிறார் என்று வரைய என் எழுதுகோல் நடுங்கினும் எடுத்துக் காட்டினாற்றானே தெரியும் என்ற முறையால், எழுத என் மனம் ஒப்புகிறது. ‘கரணப்படி முதல் நாள் திங்களுக்கும் இரண்டாம் நாள் கந்தருவருக்கும் மூன்றாம் நாள் அங்கிக்கும் தலைவியை அளிப்பார்களாம். இத் தெய்வங்களோடு அவள் பள்ளி செய்து ஒழுகுவாளாம்; இந் நாளெல்லை முடிந்த காலத்து அங்கியங்கடவுள் நாலாம் நாள் தலைவனுக்குத் தலைவியை அளிப்ப, அவன் அவளை நுகர்வானாம்; வரைந்த பின் முன்று நாளும் கூட்டமின்மையால் நிகழ்ந்த மனக்குறை, நெஞ்சு தளை நாலாம் நாள் இரவின் புணர்ச்சியால் தீருமாம்; இது வேத வழக்கு எனத் தலைவன் தலைவியிடம் கூறுவானாம்’ என இவ்வாறு நச்சினார்க்கினியர் கருத்துரை செய்துள்ளார். தமிழர் கண்ட கற்பியல் இதுவா? தமிழினத்தின் நாகரிக ஏடான தொல் காப்பியத்துக்கு உரையா இது? இக்கருத்தெல்லாம் அல்தமிழ் நெறியன்று அகற்றுக.” இன்றளவும் உயர் சாதியினர் இல்லத் திருமணங்களில் பிராமணர்கள் இத்தகைய மந்திரங்களைச் சம்ஸ்கிருத மொழியில் சொல்லி திருமணத்தை நடத்தி வைக்கின்றனர். தமிழர் பண்பாட்டிற்கு முரணான வைதிகச் சீரழிவு தொடர்கிறது. அகத்திணைக் கோட்பாடு, தமிழர் நெறியில் அமைந்தது என்று காரணகாரியத்துடன் நிறுவுகிற வ.சுப.மா, அதனை வைதிக நெறியுடன் இயைபுபடுத்துவதைக் கடுமையாகக் கண்டித்துள்ளார். சங்க அகப் பாடல்களையும் தொல்காப்பியரின் அகத்திணை இயலையும் நுட்பமாக வாசித்து, அவற்றின் தனித்துவத்தைக் கண்டறிந்திட்டவர் தமிழர் பண்பாட்டினுக்கும் அடையாள அரசியலுக்கும் வழிவகுத்துள்ளார்.

தலைவி, தலைவன் உள்ளிட்ட பதினைந்து மாந்தர்களுடன் இயைந்துள்ள அகத்திணைக் கோட்பாடு முழுக்கப் புனைவுமயமானது என ஒதுக்கும் போக்கு இன்றளவு நிலவுகிறது. சங்க இலக்கியத்தின் சிறப்பான அகத்திணைக் கோட்பாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், பல்வேறு கேள்விகளை எழுப்பி, அவற்றுக்கு வ.சுப. மா. சொல்லும் தீர்வுகள், குறிப்பிடத்தக்கன. ஐந்திணையின் பொருள் வரம்பினை விரித்தால் அளவற்றுப் பெருகிட வாய்ப்புண்டு. அவை: காதலர் பிரிவு, வேறு புதிய துணையைத் தேடுதல், தலைவனுக்குத் தோழியுடன் பாலுறவு, தோழிக்கும் பாங்கனுக்கும் காதல், தலைவிக்கும் பாங்கனுக்கும் பாலுறவு, வன்புணர்ச்சி, ஐந்திணை மாந்தர் மரணம், உடன்போக்கு / இரவுக்குறியில் விலங்கு தாக்கி தலைவன் அல்லது தலைவி இறத்தல், பெற்றோர் திருமணத்திற்கு ஒப்புதல் தராமையினால், காதலர் நஞ்சுண்டு இறத்தல், பொருள் ஈட்டச் சென்ற நாட்டில், ஈட்டிய பொருளை எல்லாம் செலவழித்துவிட்டு வெறுமனே திரும்புதல். இன்ன பிற சம்பவங்கள் அகத்திணை

மரபில் அடங்காதவை; பொருந்தாதவை என்ற வ.சுப. மா.வின் விவரிப்பு, பாடல் சான்ற வழக்கினை நினைவூட்டுகிறது. ஐந்திணை இலக்கியத்திற்குக் காமமே காலம் என்ற நிலையில், அங்கே தோன்றும் காதல் செயல்பாடுகளே பொருளாக அமைகின்றன.

வ.சுப.மா. அகத்திணைக் கோட்பாட்டினைப் பாலியல் கல்வி என்று குறிப்பிடுவதில் நுண்ணரசியல் பொதிந்துள்ளது. ஒருவகையான லட்சிய நோக்கினுக்குக் காமம் சார்ந்த சங்கப் பாடல்கள் முக்கியத்துவம் தந்துள்ளன; உடல்களின் வேட்கையைப் போற்று வதுடன், பாலியல் துய்ப்பைக் கொண்டாட்டமாக்கி யுள்ளன, பாலியல் துய்ப்பை முன்னிறுத்திய உடலரசியல் வரலாற்றில் காமம் சார்ந்த சங்கப் பாடல்கள் தனித்துவமானவை.. “காமம் நிலையாது, மெய்யுறு புணர்ச்சி தீது. துறவுக் கோட்பாடுகளை ஐந்திணைக்கண், அகத்திணைக்கண் காண முயலுதல் ஆண் வயிற்றில் கருக் காண்பதை ஒக்கும்” என்ற வ.சுப.மா.வின் நிலைப்பாடு ஏற்புடையது. காமத்தின் பயனின்மையை அறிவுறுத்தவே அகத்திணையைத் தொல்காப்பியர் இயற்றினார் என்ற உரையாசிரியர் இளம்பூரணரின் கருத்து, மூலஆசிரியரின் நோக்கத்திற்கு முற்றிலும் மாறுபாடானது. ஜைன சமயத்தைச் சார்ந்த இளம் பூரணர் காமத்தைப் பாவம் எனவும் மெய்யின்பத்தைச் சிற்றின்பம் எனவும் பெண்ணை அணங்கு எனவும் குறிப்பிடுகிற சமயக் கருத்தியலை அகத்திணைக்குப் பொருத்துவதை வ.சுப. மறுப்பது, இன்றைய பெண்ணிய வாசிப்பினில் முக்கியமானதாகும். பூமியில் மனித உடல்களைப் புறக்கணித்து, புலன்களால் கிடைக்கிற இன்ப நுகர்வைத் தவிர்ப்பதுடன், இயற்கையான பாலியல் விழைவைக் குற்ற மனத்துடன் தொடர் புடையதாக்குகிற மத அடிப்படைவாத அரசியல், காலந்தோறும் எப்படி அதிகாரம் செலுத்துகிறது என்பதற்கான மூலம் உரையாசிரியர் காலத்தில் தொடங்கிவிட்டதை வ.சுப.மா.வின் மறுப்புரையில் அறிய முடிகிறது.

பழந்தமிழ் இலக்கியப் பயிற்சியுடையவரால் சங்க இலக்கியப் பாடல்களை வாசித்து, அவற்றின் பொருளையும் கவித்துவச் செழுமையையும் புரிந்திட இயலும். எனினும் பிற்காலத்தில் வகுக்கப்பட்ட திணை, துறைக் கோட்பாடுகள், சங்க இலக்கிய வாசிப்பில் புதிய அணுகு முறையை உருவாக்கின. அவ்வடிப்படையில் தொல் காப்பிய அகத்திணையியல் அடிப்படையில் சங்கப் பாடல்களை விளக்கி, அகக்கோட்பாட்டின் பன்முக அம்சங்களை வரையறுத்துள்ளது, தமிழ்க் காதல் நூலின் தனித்த அடையாளமாகும். திணை, துறை என்ற நிலையில் பாடல்களில் ஊடாடும் கருத்தியல் போக்கு களைத் துல்லியமாக வரையறுத்திட முயன்றது, இன்றளவும் அகத்திணை ஆய்வில் முன்னோடியாக விளங்குகிறது. இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் புணர்ச்சி, பகல் / இரவுக் கூட்டங்கள், வெறியாட்டு, அலர், மடலேறுதல், உடன் போக்கு, பொருள்வயின் பிரிவு, பரத்தை, நொதுமலர் வரைவு போன்ற அகத்திணைக் கலைச்சொற்களை இளம் ஆய்வாளர்கள் நுண்ணிதின் அறிந்திடுமாறு, ஆழமாகவும் அகலமாகவும் தமிழ்க்காதல் நூலில் விளக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்க் காதல் நூலுக்கு முகவுரையில் வ.சுப.மா. குறிப்பிட்டுள்ள அகப் பாடல்கள் குறித்த மதிப்பீடுகள், இன்றைய மறுவாசிப்பிலும் கவனத்திற்குரியனவாக விளங்குகின்றன. அவை: “அகத்திணை கற்ற கணவனும் மனைவியும் பிறந்த உலகை மதிப்பர், எடுத்த உடம்பை மதிப்பர், கொண்ட மனத்தை மதிப்பர், ஒருவர் ஒருவர் தம் காம நாடிகளைப் புரிவர், காமக்குறைவு கடமைக் குறைவாம் என்று உணர்வர். வித்தில்லாக் காமப் பழத்தை உண்பர், மெய்யின்பத்தை உயிரின்பமாகப் போற்றி ஒழுகுவர், அகத்திணை வாழ்க்கையை அன்புத் திணை வாழ்க்கையாகக் காண்பர்”. இரண்டாயிரமாண்டு களுக்கு முன்னர் வாழ்ந்த சங்கத் தமிழரிடமிருந்து பாலியல் தொடர்பான செய்திகளை அறிந்திடும் சூழலில், பாலியல் கல்விக்கும் அகத்திணைக் கோட்பாடு முன்னோடியாக விளங்குவது, வரலாற்றில் விநோதம் தான்.

(காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் 22-02-18 அன்று நடைபெற்ற அறக்கட்டளைக் கருத்தரங்கச் சொற்பொழிவில் நிகழ்த்தப்பட்ட உரையின் கட்டுரை வடிவம்)

வ.சுப. மாணிக்கனார் நூற்றாண்டு விழா

வ.சுப. மாணிக்கனார் நூற்றாண்டு விழாவை ஏப்ரல் 17, 2016 தொடங்கி உலகத்தமிழ் இயக்கங்களும், பல்கலைக்கழகங்களும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றன.

உலகத்தமிழ் அறக்கட்டளை அமைப்பின் சார்பில் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் மகன் பொறிஞர். தமிழ்மணிகண்டன் முயற்சியால் நவம்பர் 19, 2016 அன்று அமெரிக்காவில் மேரிலாண்டு மாகாணத்தில் ஹாலிடே இன் வளாகத்தில் இவ்விழா சிறப்புற நடைபெற்றது.

பன்னாட்டுப் புறநானூற்றுக் குழுத்தலைவர் முனைவர். பிரபாகரன் தலைமை வகித்தார். வ.சுப.வின் மாணவரும் தொழிலதிபரும் கல்வியாளருமான பழனி. ஜி. பெரியசாமி அவர்கள் முன்னிலையில் தொடங்கிய விழாவில் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் முன்னாள் தலைவர் நாஞ்சில் பீட்டர், வாஷிங்டன் தமிழ்ச்சங்கத் தலைவர் பரிவிளாகம். சா. பார்த்தசாரதி, துணைத்தலைவர் குழந்தை இராமசாமி, முன்னாள் தலைவர் பாலகன் ஆறுமுகசாமி, மருத்துவர் சோம இளங்கோவன், முனைவர் வா.மு.சே. ஆண்டவர் ஆகியோர் உரையாற்றினர். வ.சுப.வின் மகள் தென்றல் அழகப்பன் நெகிழ்வுரையாற்றினார். வா.மு.சே.வின் புதல்வர்கள் ஆண்டவர் மற்றும் தமிழ்மணிகண்டன் எழுதிய 'வ.சுப. எனும் தமிழ்க்கடல்' நூல் நூற்றாண்டு விழா சிறப்பு வெளியீடாக வெளியானது.

வ.சுப.வின் தமிழ்த்தொண்டு, ஈகை, தற்சிந்தனைகள், நிர்வாகத்திறன், தனிமனித ஒழுக்கம் போன்ற தலைப்புகளில் கருத்தரங்கமும் உரையரங்கமும் நடைபெற்றன. திரு. அரசு செல்லையா, திரு. துரைக்கண்ணன் சுந்தரக்கண்ணன், திரு. சோமலெ. சோமசுந்தரம், திரு. ஞானசேகரன் இராசமாணிக்கம், திரு. மகேந்திரன் பெரியசாமி, திரு. சுப்பிரமணிய முனியசாமி, திரு. பஞ்சாட்சரம் வைத்தியலிங்கம், நெல்லிக்கனி அழகப்பன் ஆகியோர் உரையாற்றினர். மாணிக்கனாரின் தமிழ்க்கல்வி என்னும் தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. பள்ளிக்குழந்தைகள் திருக்குறளும் மாணிக்கக்குறளும் ஒப்புவித்தனர்.

நெல்லிக்கனி அழகப்பன்,
மேரிலாண்டு

வாழ்வியல் சிந்தனைகள்

தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்களின் வாழ்வியல் கட்டுரைகள்

புதன், 14 ஜூன், 2017

எல்லாமே எல்லார்க்கும் - புரிந்துகொள்வோம்!



தமிழ் மொழி, இலக்கியம் - இவைகளுக்கு மிகப் பெரிய தொண்டாற்றி, மறைந்தும் மறையாதவர்களாக, தலைமுறை தலைமுறைகளாக வாழ்ந்துவரும் ‘சாவா மாமனிதர்கள்’ - மேதைகளாக, மூதறிஞர்களாக முதிர்ந்து ஒளிவிளக்குகளாக வழிகாட்டிக் கொண் டுள்ள எண்ணற்ற நம் இனப் பெரியோர்களை - தமிழ்த் தொண்டர்களை - நாம் நம் இளைய தலை முறையினருக்கு அறிமுகப்படுத்திக் கொண்டே இருக்கவேண்டும்.

புதுப்புது ஆரவாரங்களில் திளைக்கும் நம் இளையர்களுக்கு, வேர்களின் பெருமையை விளக்கி னால்தான் - அவ்விழுதுகள்கூட நாளை அந்த வேர் களைப்போல் உறுதியாக நின்று, மரத்தைக் காக்கும் மகத்தான கடமையாற்றிட முடியும்.

வட அமெரிக்காவில் சிகாகோ தமிழ்ச்சங்கம் தொடர்ந்து சிறப்பான மொழி, இனம், கலை, பண்பாடு, நமது தனித்த நாகரிகச் சிறப்பு - மானுட நேயம் - எல்லாவற்றையும் முன்னிறுத்தி நல்ல பல நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர்.

தோழர் சாக்ரட்டீஸ் அவர்களும், அவரது செயற் குழு நண்பர்களும் தொடர்ந்து செய்யும் இவ்வறப் பணிகளில் ஒன்று, நம் கவனத்திற்கு வந்தது - மகிழ்ச்சி அடைந்தோம்.

டாக்டர் வ.சுப.மாணிக்கம் அவர்களுக்கு நூற் றாண்டு விழாவை அங்கே நடத்தி, தமது நன்றி உணர்வைக் காட்டினர். டாக்டர் வ.சுப.மாணிக்கம் நமது தலைமுறையில் வாழ்ந்து மறைந்த தமிழறிஞர். ‘வள்ளுவம்‘ என்ற அவரது நூல் ஒரு சிறந்த ‘நவில் தொறும் நயம்‘ தரும் நூல். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராக விளங்கிய பிறகு, மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்தவர்!

‘பொய் சொல்லா மாணிக்கனார்’ என்று அவருக்கு ஒரு பெயரே உண்டு; அவ்வளவு தூரம் உண்மை விளம்பி

தமிழர் தலைவர், ஆசிரியர்



கி.வீரமணி

கோ.வீ.ராகவனிடம் நலம் விசாரிப்பு



22.5.16 முற்பகல் 10.30மணி அளவில் கோ.வீ.ராகவன் இல்லம் சென்று தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி கோ.வீ.ராகவனிடம் நலம் விசாரித்தார்

அவர்!

அவரது நூற்றாண்டு விழாவை நடத்தியவர்கள், அருமையான அழைப்பிதழை அச்சிட்டிருந்தனர். அவரது மொழியில், அவர் எழுதிய கவிதை வடிவில் செய்தியையே அச்சிட்டிருந்த முறை முற்றிலும் புதிது! அறிவு விருந்தும்கூட!

‘நல்லாவின் பால் முழுவதும் கன்றுக்கில்லை’ என்று தொடங்கும் அவரது வாழ்வின் குறிக்கோள் பற்றிய கவிதை வரிகளில்...

‘நல்லாவின் பால் முழுவதும் கன்றுக்கில்லை

நறும்பூவின் மணமுழுதும் சோலைக்கில்லை

நெல்லாகும் கதிர் முழுதும் நிலத்துக்கில்லை

நிறைகின்ற நீர் முழுதும் குளத்துக்கில்லை

பல்லாரும் கனி முழுதும் மரத்துக்கில்லை

பண்ணரம்பின் இசை முழுதும் யாழுக்கில்லை

எல்லாமே பிறர்க்குழைக்கக் காணுகின்றேன்

என் வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும் வேண்டும்'

என்பதுதான் முக்கியம்.

தன் பெண்டு, தன் பிள்ளை என்ற சின்னதோர் கடுகு உள்ளம் தவிர்க்கப்பட்டு, தொல்லுலக மக்கள் நம் மக்கள் என்ற பரந்த, விரிந்த, மனப்பான்மை நமக்குத் தேவை! சமூக வாழ்வும், அக்கறையும் பளிச் சிடுகின்றன.

டாக்டர் வ.சுப.மாணிக்கம் அவர்கள் எழுதிய வள்ளுவத்தில், பண்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டு தந்தை பெரியார் என்று எழுதுகிறார். அதற்கு அவர் சுட்டும் எடுத்துக்காட்டு,

“கடவுள் நம்பிக்கை இல்லாத தந்தை பெரியார் அவர்கள் மேடையில் - அவர் கலந்துகொள்ளும் பொது நிகழ்ச்சிகளில் கடவுள் வாழ்த்து பாடப் படும்பொழுது எழுந்து நிற்பார் - தள்ளாடிய, முடியாத நிலையில்கூட (மற்றவர் துணையுடன்).

என்னே நயத்தக்க நாகரிகம்! தன்னிய உயர்ந்த பண்பு” என்று பாராட்டுவார்!

பல நூற்றாண்டு விழாக்களை நாம் நடத்துவது அவர்களுக்குப் பெருமை சேர்க்க அல்ல; நம் தரத்தை உயர்த்திட; நமது மனிதத்தைப் பெருக்கிட, நமது பட் டறிவை, பகுத்தறிவை, பொது அறிவை விளக்கிடவே!

எளிமை, நிறைகுடம் தளும்பாத அடக்கம் இவைகளை நாம் கண்டறிந்து வியந்தோம்.

வாழ்க வ.சுப.மாணிக்கனார்!

-விடுதலை,12.6.17

இடுகையிட்டது parthasarathy r நேரம் முற்பகல் 10:00

கருத்துகள் இல்லை:

கருத்துரையிடுக


உங்கள் கருத்தை உள்ளிடுக...

இவ்வாறு கருத்துரையிடு: Google கணக்கு

வெளியிடு முன்னோட்டம்

புதிய இடுகை முகப்பு பழைய இடுகைகள்

இதற்கு குழுசேர்: கருத்துரைகளை இடு (Atom)



58,634

இந்த வலைப்பதிவில் தேடு

தே

பிரபலமான இடுகைகள்

பொது வாழ்வில் உள்ளோர் கற்க வேண்டிய பாடங்கள் இவை!

இன்று திராவிடப் பெருந்தகையாள ரும், தென்னிந்திய நல உரிமைச்சங்கம் வி.மி.லி.தி. என்ற நீதிக்கட்சியைத் தோற்று வித்தவர்களில் ஒருவருமான த...

சில நேரங்களில் சில மணமக்கள்!

திருமணங்களை வைதீகர்கள் நாள், நட்சத்திரம், ஜோஸ்யம் இவை களையெல்லாம் பார்த்துதான் நிச்சயிக்கின்றனர். இதில் வர்க்க பேதமின்றி, ஏழை, பணக்கார...



கொலஸ்ட்ரால் - கவலை வேண்டாம்! - புதிய தகவல்

‘கொலஸ்ட்ரால்’ என்ற கொழுப்பு மிகுதிச் சத்து நம் ரத்தத்தில் கூடுதலாகச் சேருவதால், பலவித உடல் நோய் களுக்கு அது வழிவகுக்கும் ஆபத்து என்ற கருத...

இதோ, நம்முள் உள்ள கடும் எதிரி!

மனித வாழ்வின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் பெரிதும் தேவை - கடும் உழைப்பும், புத்திக் கூர்மையோடு கூடிய நுண்ணறிவு அணுகுமுறையாகும்! ...



கலைஞரின் பார்வையில் வாளேந்திய வீரத்தாய் இதோ!

கடலூரில் அய்யாவின்மீது செருப்புப் போடப்பட்ட இடத்தில் எழுப்பப்பட்ட சிலை அருகே - நெருக்கடி காலம் முடிந்து, பெரியார் நூலகம் திறப்பு விழா 1...

அறிவியல் சிந்தனைகள் 7. ஊன்றிப் படியுங்கள்! உயர்ந்து வாழுங்கள்!!

நமது வாழ்க்கையை ஒவ்வொரு மனிதரும் செம்மையான, சீர்மையான, சிறப்பான, மகிழ்ச்சிகரமான வாழ்க்கையாக வாழ முயலவேண்டும் ஒரு நாளில். நம்மால் முயன்றால்...

தலைமைத்துவம் என்பதன் தத்துவம் இதோ

மக்களை, கட்சிகளை, இயக்கங்களை, (குடும்பம் உட்பட) பல்வேறு அமைப்பு களை, தலைமை தாங்கி நடத்துவது ஆற்றல் மிகுந்த ஒரு சிறந்த கலை என்றே சொல்...



கவிதை நடையில் ஒரு நூல்!

பகுத்தறிவுப் பகலவன் என்று அனைவராலும் போற்றப்படும் தந்தை பெரியார் அவர்களைப் பற்றி - அண்மைக் காலத்தில், தெரிந்து கொண்டோரும், அறிந்து கொண்டோ...

தோழர் பாண்டியன் படைத்த அமுது!

நேற்று முன்னாள் (4.4.2018) ஆய்வறிஞ ரான மானமிகு தோழர் புலவர் பா. வீரமணி அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் மானமிகு தோழர் தா. பாண்...



சிங்கமென கர்ஜித்த புறநானூற்று வீரத்தாய்!

நூற்றாண்டு விழா காணும் நம் தலைவர் அன்னை ஈ.வெ.ரா. மணியம்மையாரின் தொண்டு - பல பரிமாண வடிவங்களைக் கொண்டது! கற்றுக் கொள்ள வேண்டிய தலைமைப் பண்...

லேபிள்கள்

அரும்பேராசான் வ.சுப.மாணிக்கனார்

By -முனைவர் வ. குருநாதன் | Published on : 23rd July 2017 02:41 AM | அ+ அ அ- |



1975 முதுகலைத் தமிழ் வகுப்பில் சேரவேண்டி, சென்னைப் பல்கலைக்கழகம் சார்ந்த இரு கல்லூரிகளுக்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கும் விண்ணப்பித்திருந்தேன். கல்லூரிகள் இரண்டிலுமிருந்து சேர்க்கைக் கடிதம் வந்த நிலையில், நான் மிகவும் விரும்பிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து அழைப்பு வரவில்லை. தெரிந்து வரலாமென்று நேரில் சென்று, தமிழ்த்துறைத் தலைவரைக் கண்டு வணங்கி, "ஐயா, நான் எம்.ஏ. வகுப்பில் சேர விண்ணப்பித்திருக்கிறேன்' என்று சொல்லி முடிப்பதற்குள், "எம்.ஓ.எல். வகுப்பில் சேருகிறாயா?' என்று விடை வினா வந்தது. அதுவரை நான் அறிந்திராத ஒரு படிப்பில் சேரச் சொன்னதால், "ஐயா, நான் எம்.ஏ...' என்று இழுப்பதற்குள், "பன்னிப்பன்னிப் பேசக்கூடாது; எம்.ஓ.எல். சேருகிறாயா?' என்ற அதே வினா! ஒருநொடி நான் வாயடைத்த நிலையில் உடன்பட்டுத் தலையசைத்தேன் போலும். "கடிதம் வரும்'. "உடனே வந்து சேர்' என்று ஆணை பிறந்தது. வெளியில் வந்துதான் வினவித் தெரிந்துகொண்டேன், எம்.ஓ.எல். என்பது "மாஸ்டர் ஆஃப் ஓரியண்டல் லேர்னிங்ஸ்' (கீழைக்கல்வி வல்லுநர் - தமிழ்) என்றும், அதைப்படிக்கச் சொன்னவர்தாம் பேராசிரியர் வ.சுப. மாணிக்கனார் என்றும்!

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அந்தக்காலத் தமிழ் எம்.ஏ. - யை விடவும் அகலமும் ஆழமும் கொண்ட தமிழறிவுப் பாடத்திட்டத்துடன் பயிற்றுவிக்கப்பட்ட எம்.ஓ.எல். தமிழ்ப்படிப்பைப் பற்றி மாணவர்கள் பலரும் அறியாமையாலும் அறிந்து மிரண்டதாலும் அவ்வகுப்பில் மாணவர் சேர்க்கை அருகியிருந்தது. ஆயினும், பேராசிரியர் அப்படிப்பை வளர்க்கும் கொள்கைப் பிடிப்போடு, எம்.ஏ. வகுப்பிற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களை மடைமாற்றம் செய்து எம்.ஓ.எல்.

வகுப்பில் சேர்த்துப் பயிற்றுவித்தார். அந்த ஆண்டில் முதல் மாணவனாகச் சேர்ந்த என்னைத் தொடர்ந்து 10 மாணவர்களும் 5 மாணவிகளுமாக 16 பேரைச் சேர்த்து வெற்றி கண்டார் வ.சுப. அடுத்த ஆண்டும் தொடர்ந்த எம்.ஓ.எல்., 1977 - இல் பேராசிரியரின் ஓய்வுக்குப்பின் தொடர இயலாமல் துவண்டது.

இன்றுபோல் கருத்தரங்குகள் மிகவும் நடைபெறாத அக்காலங்களில், "தொல்காப்பியக் கருத்தரங்கு' என்பதுபோல் ஒவ்வொரு பொதுத்தலைப்பில் துறையாசிரியர்கள் அனைவரும் தனித்தனி ஆய்வுக்கட்டுரைகள் படிக்க வேண்டும் என்ற கட்டாயத்துடன், ஆண்டிற்கு இருமுறையாக ஏழாண்டுகளில் 14 கருத்தரங்குகளை மும்மூன்று நாள்களில் கோலாகலத் திருவிழாக்களைப்போல் நடத்திய சாதனை குறிப்பிடத்தக்கது.

1976 - 1977 கல்வியாண்டில் பேராசிரியர் வ.சுப.வின் தலைமைப் பெருமிதம் வெளிப்படுமாறு நிகழ்ந்ததோர் நிகழ்வு இங்கே நினைவுகூரத்தக்கது. நடுவண் அரசில் முன்னாள் அமைச்சராயிருந்த ஆற்றலும் செல்வாக்கும் மிக்க ஒருவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராய் வந்திருந்தார். ஒருநாள் முன்னறிவிப்பு ஏதுமின்றித் தமிழ்த்துறையைப் பார்வையிட வந்திருந்த துணைவேந்தர், அங்கே மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர், பெரும்புலவர் செ.வேங்கடராமச் செட்டியார் போன்ற முதுபெரும் பேராசிரியர்கள் அமர்ந்திருந்த ஆய்விருக்கைப் பகுதிக்குள் சென்று, பாரம்பரியத் தோற்றத்திலிருந்த அச்சான்றோர்களை மதிக்காமல், "நீங்கள் யார்? இங்கே என்ன செய்கிறீர்கள்?' என்று வினவவே, தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டு "நான் கம்பராமாயண ஆய்வு செய்கிறேன்' என்று கூறிய அறிஞரிடம், "மிகவும் அவசியந்தான்' என்று இகழ்ச்சியாகக் கூறிப்போய், அடுத்த அறையில் பண்டிதமணியின் மகனார் கதி. தியாகராசன் பாடம் நடத்திக் கொண்டிருந்த எம்.ஓ.எல். முதலாமாண்டு வகுப்பினுள் நுழைந்தவர், தரையில் கிடந்ததோர் காகித கிழிசலைக் கண்டு கொதிப்படைந்து, அதனை எடுக்குமாறு ஆசிரியரையே ஏவினார்.

அவர் திகைத்து நின்ற நிலையில், மாணவர்கள் பொங்கியது கண்ட துணைவேந்தர் அங்கிருந்து போய்விட்டார். உடனே, மாணவர்கள் அனைவரும் வகுப்பை விட்டு வெளியே வந்து துணைவேந்தருக்கு எதிராக முழக்கமிடவே, அவர்களை உடனடியாக அமைதிபடுத்திய பேராசிரியர் வ.சுப. தாமே விரைந்துபோய்த் துணைவேந்தரைச் சந்தித்து, நுண்மாண் நுழைபுலத்தோடு நயந்து உரையாடி, அவரே வருத்தம் தெரிவிக்குமளவு அவர்தம் மிகைச்செயல்களை உணர்த்திவிட்டு மீண்டார். அன்றைய நிகழ்வில் அரும்பேராசான் வ.சுப., மலையமானின் மக்களை யானைக்கால்களால் இடறத் துணிந்த புறநானூற்றுக் கிள்ளிவளவனின் மிகைச்செயலை மாற்றிய கோவூர்கிழாராகவே எங்களுக்குத் தோன்றினார்.

காரைக்குடியில் தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவித் தாம் அதன் தலைவராயிருந்து அருந்தமிழ்த் தொண்டுகள் பல ஆற்றியுள்ளார் வ.சுப. அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பணி ஓய்வுக்குப்பின்

மதுரை - காமராசர் பல்கலைக்கழத்தின் துணைவேந்தராகப் பொறுப்பேற்றுப் புரிந்த சாதனைகள் பலவற்றுள், அப் பல்கலைக்கழகத்தோடு இணைந்திருந்த வெவ்வேறு ஊர்களைச் சேர்ந்த ஐந்து கல்லூரிகளின் தமிழ்த்துறைகளை உயராய்வு மையங்களாகத் தரமேம்பாடு செய்தது இங்கே நினைவுகூரத்தக்கது. அம்முறையில் காரைக்குடி அழகப்பா கல்லூரியின் தமிழ்த்துறை முதலில் உயராய்வு மையமானதன் தொடர்ச்சியாகவே அது பல்கலைக்கழகமாய் வளர்ச்சியுற்றது. தாம் ஏற்கெனவே பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் முதல்வராகவும் பணியாற்றிய அழகப்பா கல்வி நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் அவ்வகையில் சிறந்த வழிவகுத்தார் வ.சுப.

வ.சுப. தமிழகம் உள்ளிட்ட இந்தியத் திருநாட்டிற்கும் உலகத் தமிழர்களுக்கும் கொடுத்துள்ள தமிழ்க்கொடைகள் உச்சிமேற்கொண்டு மெச்சத்தக்கவை. ஆய்வுநூல்களாகவும் அருந்தமிழ்ப் படைப்பிலக்கியங்களாகவும் நேர்முக அரங்குகளிலும் கற்பனை அரங்குகளிலும் ஆற்றிய சொற்பொழிவு நூல்களாகவும் கடித இலக்கியமாகவும் அவரளித்துள்ள நூற்கொடைகள் ஆழ்ந்தகன்ற கருத்துக் கருவூலங்களாய் அமைந்துள்ளன.

ஆய்வு நூல்களுள் தலைமை சான்ற தமிழ்க் காதல், தொல்காப்பிய இலக்கணங்களோடு சங்க இலக்கியங்களில் பாடப்பெற்ற அகத்திணைகளின் தனித்தன்மைகளை ஆய்ந்து விளக்கும் அருமையுடையது. அந்நூல் வெளிவந்த நாள்முதல் அதன் ஆய்வுக் கருத்துகளை மேற்கொள்ளாமல் ஓர் அகத்திணை ஆய்வும் சிறப்புற அமைந்ததில்லை. அவ்வகையில் இன்றியமையாத அகத்திணை ஆய்வாகத் தமிழ்க்காதலை வடித்துள்ளார் வ.சுப.

அண்ணாமலைப் பல்கலைக்கழக அறக்கட்டளை அரங்கில் காப்பியப் பார்வை, காப்பியக் களங்கள், காப்பிய நேர்மை என்னும் மூவகை நோக்கில் கம்பராமாயணத்தின் அமைப்பும் கம்பரின் சிறப்பும் குறித்து வ.சுப. நுட்பமுடன் நிகழ்த்திய மூன்று சொற்பொழிவுகளின் நூல்வடிவே "கம்பர்' என்பதாம். உலகப்பொதுமறை திருக்குறளின் கருத்துகளைப் பன்னிரு தலைப்புக்களில் பகுத்துக்கொண்டு கற்பனை அரங்குகளில் நிகழ்த்திய சொற்பொழிவு நூலாகக் குறிக்கோள் நடையுடன் "வள்ளுவம்' என்ற நூலையும் வழங்கிள்ளார்.

தொல்காப்பியக் கடல், சங்கநெறி, திருக்குறட்சுடர், காப்பியப்பார்வை, இலக்கியச் சாறு ஆகிய ஐந்து தொகுப்புகளில் அவ்வப்பொருண்மை பற்றி மொத்தம் 111 ஆய்வுக்கட்டுரைகளை அளித்துள்ள பேராசிரியரின் ஆய்வு நுட்பங்கள் அறிந்து போற்றத்தக்கவை.

மனைவியின் உரிமை, நெல்லிக்கனி, உப்பங்கழி, ஒருநொடியில் எனும் நாடக நூல்கள் நான்கினைப் படைத்துள்ள பேராசிரியர், அவற்றின் வாயிலாய் இலக்கிய மரபிலும் சமூக - குடும்ப நிலைகளிலும் கடைப்பிடிக்க வேண்டிய கருத்து விளக்கங்களைக் கவினுறக் காட்டியுள்ளார்.

இளமை முதலே தோய்ந்த சொல்நயம், பொருள் நயங்களோடு தாம் பாடிய பாடல்கள், கவிதைகளை மாமலர்கள் என்ற தொகுப்பு நூலாக வெளியிட்டுள்ளார் வ.சுப. வள்ளல் அழகப்பரைப் பற்றி அவர் பாடிய 171 வெண்பாக்களின் தொகுப்பு கொடைவிளக்கு என்ற நூலாக

ஒளிர்கின்றது. அண்ணாமலை அரசர், முத்தையவேள், அழகப்பர் ஆகியோர் பற்றி, அவரவர் கல்வி நிறுவனங்களில் பாடப்பட்டு வருகின்ற வாழ்த்துப்பாடல்கள் எல்லாம் வ.சுப.வின் வார்ப்புக்களேயாம்.

இவ்வாறு ஆய்வாளராக, ஆசிரியராக, நாடகப் படைப்பாளராக, கவிஞராக, இன்னும் பன்முகப்பட்ட ஆளுமைத்திறன்களோடு ஆற்றல் வாய்ந்த நெஞ்சுரம் மிக்க நிர்வாகியாகவும் திகழ்ந்தவர் அரும்பேராசான் வ.சுப.மாணிக்கனார்.

தமிழ நம்பி

தமிழ், தமிழர், தமிழ்நாட்டு நலன்சார்ந்த எழுத்துக்கள். தமிழ் மரபுப்பாடல்கள். கலைச்சொல்லாக்கம், மொழிபெயர்ப்பும் பிறவும்.

செவ்வாய், 9 ஆகஸ்ட், 2016

‘காதற் காமம்’ – மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் விளக்குகிறார்!

‘காதற் காமம்’ – மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் விளக்குகிறார்!



தமிழ்த்திணை எனத்தகும் அகத்திணைக்கு வெறும் உள்ளக்காதலும் பொருளன்று., வெறும் மெய்க் காம்மும் பொருளன்று. உள்ளம் இயைந்த உடலுறவும், உடல் இயைந்த உள்ள உறவும், சுருங்கக்கூறின் உயிர்மெய்ப் புணர்ச்சியே அதன் பாடுபொருளாம்.

ஆண்டாள் காதல் அகத்திணையாகாது, மெய்யுறல் இன்மையின். மாருத வேகன் சுதமதியைக் கூடியதும் அகத்திணையாகாது, உள்ளிசைவு இன்மையின். மெய்யாக நோக்கின் காதல் என்பதனுள் உடற்கலப்பும் அடங்கும்.

“உடற்கலவியின்றிக் காதற்றன்மை செவ்வுறாது. பாலுறவுதான் காதல் என்னும் தகுதிக்கு உரியது. காதல் என்ற பெயர் மேலிட்டுப் பிறவாறு சொல்லுவன வெல்லாம் அரைகுறையான உருவகமாவன” என்பர் ஆசுவால் சார்ச்சு.(The psychology of sex. P.105)

காதற் காமம் காமத்துச் சிறந்தது
விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி -(பரிபாடல்.9.) என்று இருசொற்களையும் இயைத்தார் குன்றம் பூதனார்.

பொதுவான மொழி வழக்கில் காதல் என்பது உள்ளப பற்றையும், காமம் உடற்பற்றையும் குறிக்கும் என முன்னர்க் கண்டோம். இரு சொல்லையும் ஒருங்கு காட்டும் ஒரு தமிழ்ச்சொல் உண்டா? உண்டு. அதுவே அகம் என்னும் சொல். எனினும் முன்னிலைப் படுத்திக் கூறும் நான்மறையாளர்க்கு விளங்கவேண்டி, குன்றம் பூதனார் “காதற்காமம்” (காதலங்காமம் - பரி.6, அன்புறு காமம் - நற்.389) என்ற ஒரு புதுத்தொடரை ஆக்கினார். ஆக்கி, “விருப்பு ஓரொத்து மெய்யுறு புணர்ச்சி” எனப் பொருளும் நிரல்பட விரித்துக் காட்டினார்.

இக் காதற்காமந்தான் அகத்திணை. அகத்திணை தலைமக்கள் உள்ளங்கூடிய உடற்கூட்டாளிகள். உடல்மட்டும் கலந்ததா, உள்ளம் கலந்ததா? என்ற வினாவிற்கு இவர்பால் விடையில்லை. ஆதலின் அகப்பாட்டின்கண் காதல் என்ற சொல் வருமிடத்துக் காமப் பொருளும் உண்டெனக் கொள்க. காமச்சொல் வந்த இடத்துக் காதற் பொருளும் உண்டெனக்கொள்க.

என் இன்னொரு வலைப்பதிவு

http://piliral.blogspot.com

என்னைப் பற்றி

தமிழநம்பி

எனது முழு சுயவிவரத்தைக் காண்க

Thiratti.com

வலைப்பதிவு காப்பகம்

(தமிழ்க்காதல்– வ.சுப.மாணிக்கம், இயல், தஞ்சாவூர். பக்.402,403.)

Posted by தமிழநம்பி at பிற்பகல் 2:14
Labels: காதல், காமம், வ.சுப.மா.

கருத்துகள் இல்லை:

கருத்துரையிடுக

Links to this post

இணைப்பை உருவாக்குக

புதிய இடுகை முகப்பு பழைய இடுகைகள்

இதற்கு குழுசேர்: கருத்துரைகளை இடு (Atom)

► மே (2)
► ஏப்ரல் (3)
► மார்ச் (3)
► பிப்ரவரி (1)
► 2015 (9)
► 2014 (5)
► 2013 (4)
► 2012 (11)
► 2011 (12)
► 2010 (19)
► 2009 (41)
► 2008 (42)
► 2007 (5)

லேபிள்கள்

'தாழி' ஆய்வு நடுவம் (2)
'பொதிகை'த் தொலைக்காட்சியில் தமிழ் இழிப்புயில் (1)
(மறுமொழி) கட்டுரை (3)
அடிகளாசிரியர் இரங்கல் (1)
அடிமை விலங்கொடி (1)
அடைமொழி (1)
அண்ணா (2)
அண்ணா நூற்றாண்டு நினைவேந்தல் (1)
அண்ணாவின் சறுக்கல் (1)
அண்ணாவின் பெருமை (2)
அணுவுலைத் திணிப்பு (1)
அதிகன் (1)
அம்மா (1)
அமுதசுரபி வெண்பாப் போட்டி (1)
அரசியல் (1)
அருட்செல்வன் (1)
அவலம் (1)
அறக்கொலை (1)
அறிமுக உரை (1)
அறிவிப்பு (5)
அறிவியல் (1)
அறிவியல் அவலம் (1)

வ.சுப. மாணிக்கனாரின் கல்விச் சிந்தனைகள்

vallamai.com/

September 27, 2018

-முனைவர். இரா. மூர்த்தி



தொல்காப்பியர் காலம் முதல் இக்காலம் வரை காலந்தோறும் கல்வியில் பல்வேறு மாறுதல்கள் நடந்து கொண்டிருக்கிறது. தனியொரு மனிதன் தனது சிந்தனைகள் அனைத்தும் ஒரு பொருளின் மீதும், ஒரு செயல்பாட்டின் மீதும் செலுத்தும்போது அவனுக்குள் பல புரிதல்கள் எழத்தொடங்குகிறது. அப்புரிதல்கள் அதே நிலையிலிருக்காமல் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு நகரச் செய்கிறது. இச்செயல்பாடுகளுக்குத் தேவையாக இருப்பது அறிவு. அவ்வறிவே பின்னாளில் கல்வியாக வளர்கிறது. அக்கல்வியே பின்னாளில் தனித்து இயங்குவதோடு தன்னைத் தனிநிலையில் அடையாளப்படுத்தவும் செய்கிறது. தனியொரு மனிதனின் அறிவுப்போக்கு எவ்வாறு அடுத்தடுத்து மாற்றம் கொள்கிறதோ அதைப்போன்றுதான், கல்வியின் தரமும் அடுத்தடுத்து உயர்ந்து கொண்டே செல்லும். இக்கல்வி மூதறிஞர் வ.சுப. மாணிக்கனாரின் சிந்தனையில் எவ்வகை மாற்றங்களை ஏற்படுத்தின.

ஏனென்றால் தொடக்ககாலத் தமிழர்கள் மத்தியில் அகத்திணைக் கல்வி, பாலியற்கல்வி, பின்னைய காலகட்டத்தில் தடைப்பட்டு வெறும் அறிவுக்கல்வியாக தமிழ்ச்சூழலில் உலாவியது; உலவுகிறது. இதனால் மொழியின், பண்பாட்டின் மரபுகள் தொடர்ந்து நசுக்கப்பட்டு வந்தன. இதற்கிடையில் செம்மொழிச் சிறப்பு பெற்ற தமிழ்மொழிக்குள் மதம் சார்ந்த மொழிகளும் உட்புகுத்தப்பட்டன. அதுகுறித்து மூதறிஞர் கூறும் கல்விச் சிந்தனைகளை தொகுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கல்வி – விளக்கம்

கல்வி என்பது ஒருவரின் வாழ்க்கை முழுவதும் தொடரும் ஒரு நடைமுறையாகும். இக்கல்வி இறந்த காலத்தைப் புதுமைப்படுத்துகிறது. நிகழ்காலத்தைப் பாதுகாக்கிறது. எதிர்காலத்தில் மனிதனின் முன்னேற்றத்திற்கு வழிகோலுகிறது. அக்கல்வி வாழ்நாள் முழுவதும் கற்க வேண்டுவது. இதனை வள்ளுவர்,

"யாதானும் நாடாமல் ஊராமல் என் ஒருவன் சாந்துணையும் கல்லாத வாறு" (குறள்:397)

என்று கூறுகிறார். அத்தகைய சிந்தனைப்போக்கு இன்றைய சூழலில் தளர்ந்து வெறும் போதனைக் கல்வியாகவும், சான்றிதழ் பெறும் பட்டமாகவும், மதிப்பெண் கல்வியாகவும், உயிர்களைக் காவு வாங்கும் உயிர்கல்வியாகவும் மாறிவந்துள்ளது. இதனால் மக்களிடத்தில் சமூகத்தின் மீதான ஈர்ப்புப் போக்கு மாறத்தொடங்கியுள்ளது. இக்கல்வி குறித்து ஹெர்பார்ட் அவர்கள் கூறும்போது, கல்வி என்பது கடைநிலை உட்கிடைக்கைகளை உயரிய நுண்ணறிவால் வெற்றிக் கொள்வதே என்றும், "பிரவுன் என்பவர் கல்வி என்பது நாம் அறிந்து வேண்டுமென்றே கட்டுப்பாட்டுடன் செயல்படுத்தும் ஒரு நடவடிக்கை. அதன் மூலம் தனி மனித நடத்தையிலே மாற்றங்களும் தனித்தவர் வாயிலாகச் சமூகத்தில் மாற்றங்களும் தோற்றுவிக்கப்படுகின்றன என்றும், கல்வி என்பது பிறர் அறிவுத் தொகுதி, இறந்தகால நிகழ் காலத்துக் கருத்துத் தொகுதி, எள்ளும் பஞ்சும் போல்வது" என்று வ.சுப.மாணிக்கனாரும் கல்விக்கு விளக்கங்கள் கூறுகின்றனர்.

அகத்திணைக் கல்வி

தமிழ்ச் சமூகத்தின் தொடக்ககால வாழ்க்கை ஆண் பெண் இணைந்த காதல் வாழ்க்கையாகவே தொடங்கியது. அகத்தை உள்ளம், காதல், மனம், ஞானம், பாவம், உடல், வீடு, நிலம், உயிர், ஆன்மா என்று உடலோடும் உயிரோடும் உள்ளத்தோடும் தொடர்பு படுத்தி, நிலத்துக்கான (நிலம் – பெண்), உயிர் உருவாக்குதல் – பெண் என்ற உருவாக்கச் சூழலில் காதலாக வெளிக்காட்டுகிறது.

அக்காதல் உடலுக்கு நல்லது. உள்ளத்துக்கு நல்லது. ஊருக்கு உலகத்துக்கே நல்லது. அந்நல்ல காதல் எது? காதல் என்பது உடற்பசி, உள்ளப்பசி, உயிர்ப்பசி, பிறவிப்பசி, அப்பசி தீர்க்கும் உணவு நெறி எது? அஃறிணையுயிர்களின் காதலாவது கல்லாக் காமம், இயற்கை வீறு. மொழி பேசும் மக்களினத்தின் காதல் நினைவில் இனித்து, அறிவில் விளங்கிக் கல்வியில் வளர்வது அவ்வளர்ச்சிக் கல்வியே அகத்திணைக் கல்வியாகும் என்கிறார் மூதறிஞர்.

அகத்தை 'அகம்' என்று கூறும் முன்னர் அதன் உட்பிரிமாணங்களை விளக்கும்போது உள்ளம் என்றும் குடும்பத்தோடு இணையும்போது வீடு, இல், மனை என்று பொருளிடுகிறது என்கிறார். மேற்சுட்டல்களைத் தெளிவுறுத்தும்போது களவு கற்பு வாழ்வாகக் காதல் இலக்கியமாக அகத்திணை வெளிப்படுகிறது. இக்காதல் இன்பத்துப் பேரின்பம், உணர்ச்சியுள் பேருணர்ச்சி, ஆற்றலுள் பேராற்றல் அடிப்படையுட் பேரடிப்படை, உரிமையுள் எல்லார்க்கும் உரியது, நட்பினுள் இருபாலரையும் இணைப்பது, கல்வியுள் கசடறக் கற்க வேண்டுவது, நாணினுள் நனி நாணுடையது. ஒழுக்கத்துள் விழுமியது. இத்தகைய காதலை ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ளவேண்டும். அதன் வீறுகளையும்

மாறுகளையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால் அகத்திணை மாந்தர்கள் உய்ப்பித்த அகத்திணை (காதல்) கல்வியை முழுவதும் உய்த்துணர்வது இன்பம் பயக்கும் என்றக் கருத்தினையும் வெளிக்காட்டுகிறார்.

அகத்திணையறிவு பெண்ணுக்கும் ஆணுக்கும் இன்றியமையாத கல்வியாகும். நம் தமிழ் முன்னோர் அகக்கல்வியைச் செம்மையாகப் பெற்றிருந்தனர். அதனால் அன்னவர் இல்லற வாழ்வு பூசலின்றி இயங்கியது. அகக் கல்வியும் தமிழ்ச் சமுதாயத்தில் நல்லுரம் பெற்றிருந்தது. நல்வளம் தந்தது. இத்தகு கல்வி சங்கப் பிற்காலத்து குறைந்தமையால் தமிழ் நாட்டில் பல்லூறுகள் ஏற்பட்டன. இதனால் அகக்கல்விப் பரவலால் படிப்படியாக குறையத் தொடங்கின. அகத்திணையின் தோற்றமும் நோக்கமும் அமைப்பும் எல்லாம் விளங்காது, விளக்குவாரின்றி மறைக்கப்பட்டன. விளக்க முற்படுவாரும் சமயக் கல்வியாகவும், வீடுபேற்றிற்கு உரிய இலக்கியமாகவும் திரித்து எழுதினர். கற்பித்தனர். அதனால் அகத்திணை தன் உண்மையை இழந்து, மாறான பொய்யேற்றம் கொண்டது. தமிழினமும் உலகினமும் காதற் துறையில் ஆண் பெண் இருவருக்குமிடையில் தாழ்வு மனப்பாண்மை இன்றிப் புத்துயிரும் புது வாழ்வும் பெறவேண்டுமேல் தமிழகச் சூழலில் அகத்திணைக் கல்வியைப் பரப்ப வேண்டும். பொய்களைந்து மெய்ம்மைகளைப் பரப்ப வேண்டும். இந்நோக்கத்தால் ஆண் பெண் இருவரிடையே கொலை, உயிரிழப்பு குறைந்து சாதி, வேத, பாகுபாடின்றி தமிழ்ச் சமூகத்தை வெளிக்கொணர முடியும் என்ற ஆழ்ந்துரைப்பதை இவரது படைப்புகள் வாயிலாகக் காணமுடிகிறது.

அகத்திணை கற்ற கணவனும் மனைவியும் பிறந்த உலகை மதிப்பர். எடுத்த உடம்பை மதிப்பர். கொண்ட மணத்தை மதிப்பர். ஒருவருக்கொருவர் தம் காம நாடிகளைப் புரிவர். காமக்குறைவு கடமைக் குறைவாம் என்று உணர்வர். வித்தில்லாக் காமப் பழத்தை உண்பர். மெய்யின்பத்தை உயிரின்பமாகப் போற்றி ஒழுகுவர். அகவாழ்க்கை அன்பு வாழ்க்கையாக எண்ணி இல்வாழ்க்கை சிறக்க செய்திடுவர். இத்தகு அகக்கல்வியினால் ஒரு குடும்பானது, ஆண்பாலின் பெருமிதத்தையும், உரனையும் மனைவி மதிப்பதும், பெண்பாலின் அருமையையும் நிறைவையும் நாணத்தையும் கணவன் மதிப்பதும் ஆகிய கல்வியை அகத்தாற் பெறலாம் என்ற கொள்கையைக் கொண்டுள்ளார். வாழ்க்கைக்கு அகக் கல்வியின் தேவை பயன்படுவதுபோல் குமரப்பருவத்தினரிடையே பாலியற்கல்வி குறித்த சிந்தனைகள் எழவேண்டும் என்கிறார்.

பாலியற் கல்வி

அகத்திணை முழுக்க முழுக்க பெண்ணியத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதால் அதனை பெண்ணிலக்கியம் என்று கூறலாம். ஏனென்றால் சங்க காலத்தில் பெண் மாந்தர்களே தொல்காப்பியர் கூறும் வாயில் காப்பாளர்களாக இனங்காணப்பட்டு முதன்மைப் படுத்தப்பட்டுள்ளனர். அதனால் பாலியல் கல்வியே முதன்மையாகக் கொள்ளப்பட்டது என்கிறார் மூதறிஞர். இக்காமம் குறித்துக் கூறும்போது, காமம் என்பது பருவவுணர்ச்சி,

மெல்லிய உடலுணர்ச்சி, இவ்வுணர்ச்சி பெருகி ஊறுங்காலம் இளமை எனவும், குறைந்து சிறுகுங்கால் முதுமை எனவும் படும். ஆதலின் குறைவு தொடங்குவதற்கு முன்னுள்ள இளமையில் பாலின்பம் துய்ப்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும் என்கிறார்.

அகத்திணைக் கல்வி குடும்பமென்ற கருத்தில் இட்டுச்செல்லும் தன்மையில், பாலியற் கல்வி குறித்துக் கூறும்போது பாலியற் கல்வி வாழ்வைத் தொடாது, அறிவைத் தொடாது, இன்றியமையாத உணர்ச்சி நிலையைப் பெறார். சமுதாயத்தோடு இசைந்த புணர்ச்சி நிலையை எண்ணார். ஆகவே, அகக்கல்வியும் பாலியற் கல்வியும் கற்கும் இளைஞர், இளைஞியர் இன்றியமையாத உள்ளப் பண்புகளை கற்பாகவும், இன்றியமையாத உடல் வினையைக் காமம் என்றும் தெளிவாக விளங்கிக் கொள்வர். இதனால் ஒருவர் காமத்தை ஏனையவர் மதித்து ஒழுகுவர். காமநிறைவு மனநிறைவாம் என்று இன்பச்செய்கையில் மீக்கொள்வர், ஞாலத்தைக் காதலுக்குப் பயன்கொண்டு தம் காதலால் ஞாலத்தை வாழ்விக்கச் செய்வர் என்று பாலியல் கல்வியின் உளப்பாங்கை உடல் ரீதியாக வெளிக்காட்டி வாழ்க்கைக் கல்வியிலிருந்து பிரித்தாளுவதைக் உணரமுடிகிறது.

அறிவுக் கல்வி

அறிவுக் கல்வி என்பது கற்கக் கற்க பெருகக் கூடியது. வருங்காலத்திற்கான முன்னுணர்வு. தொடர் வளர்ச்சியை ஈட்டக் கூடியது. இது குறித்து வள்ளுவர் கூறும் கருத்தானது,

(“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு” குறள்:396)

என்கிறார். இதற்கு உரைகண்ட மூதறிஞர் மணற்கேணியகத்து நீர் என்ற ஒரு பொருள் உண்டு. முன்னரே அமைந்து கிடக்கும் அந்நீர் தோண்டுதோறும் புறப்படுகின்றது. அவ்வளவிற்கேயொழியத் தோண்டுகை தண்ணீரைப் படைப்பதின்று. இவ்வுண்மை கல்வியறிவுகளுக்கும் பொருந்தும் என்கிறார். புதிதென ஓரியற்கையைப் படைக்கும் ஆற்றல் மக்கட்கு இல்லை. படைப்புற்றுக் கிடக்கும் ஞாலப் பல்லியற்கைகைக் கண்டு தமதாக்கிக் கொள்ளும் செய்வினையே அன்னோர்க்கு உரித்ததாக அமைகிறது. இக்கல்வி ஒரு தோண்டு வினை. அச்சொல்லே தன் செயலைக் காட்டி நிற்பது. அவ்வினை முன் இல்லாத அறிவை ஒருவர்க்கு உண்டு செய்யும் தன்மையுடையது என உரைகாணுகிறார். இத்தகைய அறிவை,

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு” (குறள்:423)

என்று அறிவின் செயல்பாட்டைச் சூழ்நிலைக் கல்வியோடு மனிதனை ஒப்பிட்டு மொழிகிறார். கற்ற அறிவை, கல்வியை ஒருவரின் மீது எதிர்நோக்குப் பாய்ச்ச வேண்டும் என்றும் கூறுகிறார். கற்க கல்வியை ஒருவருக்கு பாய்ச்சும்போது அவர் எய்திய இறைத்

தன்மையைக் கணித்தற்கு வேறு அளவுகோல் வேண்டாம். அவர்தம் அறிவே அமையும் என்று அறிவின் மையத்தை வள்ளுவர் கூறும் கருத்துகள் வாயிலாக வெளிக்கொணர்கிறார். கல்வியில் அகத்திணைக் கல்வி, பாலியற் கல்வி, அறிவுக் கல்வியின் வினைப்பாடுகள் ஒரு புறம் இருப்பினும், இன்றைய சூழலில் தமிழகத்தில் தமிழ்க் கல்வி, மொழிக்கல்வியின் பின்னிலைப்போக்கு எத்தகைய மாற்றத்தை சந்தித்து வந்துள்ளது என்பதையும் வெளிக்காட்டியுள்ளார்.

தமிழகத்தில் தாய்மொழிக்கல்வியின் பின்னிலைப் போக்கு

மொழி ஒரு மனிதனின் அடையாளத்தை, பண்பாட்டைத் தனித்து வெளிக்காட்டக் கூடியது. அவ்வகையில் வ.சுப. மாணிக்கனார் தமிழ் மொழியின்மீது கொண்ட பற்றினால் தமிழகத்தில் மழலையர் ஆங்கிலப் பள்ளிகளைத் தமிழ்ப்பள்ளிகளாக மாற்றவேண்டும். தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை பயிற்று மொழி தமிழாதல் வேண்டும். தமிழகத்தில் மக்கள் மத்தியில் எழுத்துச் சீர்திருத்தம் என்னும் பெயரில் தமிழுக்கு ஊறு விளைவிக்காமல் தடுக்க வேண்டுவதுடன், தமிழைப் பயிற்று மொழியாகத் தமிழகம் முழுவதும் செயல்படுத்த வேண்டும் என்ற கொள்கையைத் தமது கட்டுரைகள், நூல்கள் வாயிலாக வெளிப்படுத்தி வந்தவர். தனித்தமிழ் இயக்கத்திற்குத் தாமே புதிய சொற்களைப் படைத்து எல்லா நிலைகளிலும் எங்குந் தமிழ் வளர ஓய்வென்பதறியாது உழைத்த உரஞ்சான்ற வித்தகர்.

அத்தகையோர் எண்ணத்தில் இந்திய நாட்டின் மீதும் அதிக ஈடுபாடு எழுந்தது. நம் இந்தியப் பெருநாடு ஆயிரம் ஆண்டு அடிமைத் தளையறுத்து உரிமைப் பணிபூண்டு நிறைவடைந்த நிலையில், ‘ஆங்கிலேயர் இந்நாட்டு இயல்பு அறிகிலர், மக்கள் உள்ளம் தெரிந்திலர் – தெரியும் நோக்கம் இலர்- கால்கொள்ளா வேற்றாட்சியால் நம் பண்டைப் பண்பும் மொழிகளும் கலைகளும் மக்கள்போல் நலிவுற்றன. தன்னாட்சி பெறின் எல்லா வளமும் பெருக்குவோம் என்றெல்லாம் நெஞ்சறியப் பறைசாற்றி உரிமைப்போர் தொடுத்தோம். வெற்றி கண்டோம். வெற்றி கண்டபின்பு அதன் நிலை என்னவாயிற்று என்று மக்கள் வெளிக்காட்டினர். மக்களாய்ப் பிறந்தாரெல்லாம் ‘கற்க’ வேண்டும் என்று வள்ளுவப் பெருந்தகையார் கூறுகிறார். ஆனால் இன்னார் கற்றற்கு உரியர், இன்னார் உரியல்லர் என்று அறவே ஒதுக்கியது சில குடிகள், சில மக்கள், ‘எல்லோரும் கற்க, பெண்டிரும் கற்க என்று கூறிய வள்ளுவரின் வாக்கு விதந்து காணப்பட்டது. பெண்கள் கல்வி கற்பதற்குத் தடைவிதிக்கப்பட்ட இவரது காலத்தில் அடிமைகளுக்கும் கல்வி மறுக்கப்பட்டிருந்தது என்று தனது நூல் வாயிலாக எடுத்துரைக்கிறார்.

பள்ளி கல்லூரிகளில் மாணக்கர்களுக்குப் பொதுஅறிவுக் கல்வியே அதிகம் கற்பிக்கப்பட்டது; குறியொன்றும் இல்லாமல், எல்லார்க்கும் எல்லா நிலையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இறுதிவரை காட்டும் கல்விதான் கற்பிக்கப்பட்டது. ஒரு துறைக் கல்வியைக் கற்கும் மாணாக்கர்கள் வளரவில்லை. இருப்பினும், மக்கள் அனைவரும் பொதுஅறிவினைப் பெற்றுப் பெற்று ஒழிவதால், நாடு வினைச் சிறப்பும் விளைவுப் பெருக்கும் உறாது. இந்தியப் நாட்டின் கீழ்மைக்கும் இதுவே காரணமாக

அமைந்துள்ளது. சில ஆண்டுகள் பொதுஅறிவு பெற்றாலும் பல ஆண்டுகள் துறையறிவு வழங்க வேண்டும். வழங்கும் தொழில் கூடங்களும் பெருக வேண்டும் என்று எடுத்துரைக்கிறார்.

மொழிக்கல்வி ஒரு காலத்தில் முறையாக கற்பிக்கப்பட்டதா என்றால் இல்லை. ஆசிரியர் மாணவரிடையே தொடர் ஒப்புவித்தலாகவே இருந்து வந்துள்ளது. குறள் ஒப்புவித்தல் மற்றும் உரைகள் எழுதும்போதும், குறள் குறளாக ஒப்பித்துச் சேறல் வள்ளுவக் கொலையாகும் என்று பிறிதொருவன் அஞ்சி நடுங்குவதும், யாரொருவர் மனத்தையும் புண்ணாக்காமல் அனைத்தும் என்நோக்கம் என்ற குறள் ஆணைப்படி பிறர்க்கு உரைக்கின்றனரோ அவரே உரை செய்ய வேண்டும். அவனே மொழியின் மீது நோக்கம் உடையவன் என்கிறார்.

அதே நேரத்தில் மாணாக்கர்களின் நிலையும் ஆசிரியர் வாயிலாக தினமும் பாடம் கேட்கும் முறையே உருவாகியுள்ளது. அதற்குத் தகுந்தாற் போன்றே கல்வித் திட்டமும் நீளமாக அமைக்கப்பட்டுள்ளது அதன் தன்மை மாறவேண்டும். மாணாக்கர்கள் தேர்வு பித்தினால் ஆளுவதால் அறிவுத் தெய்வம் பெருகுகிறது. தேர்வுப் பூதம் காணீர்! நடைமுறை நோக்குழி, மாணக்கரைத் தேர்வுக்குரியோர் என்றும், ஆசிரியரைத் தேர்வு செய்வோர் என்றும் கல்வி வகுப்பாரை தேர்வு வகுப்பார் என்றும், கல்விக் களங்களைத் தேர்வுக் களங்கள் என்றும், கலைமகளைத் தேர்வு மகள் என்றும் அழைக்கும் மரபு இன்றைக்கு மக்களிடத்தில் பெருக்கெடுத்து வந்துள்ளது. மாணாக்கர்கள் மனத்தில் தேர்வு மூச்சுதான் கல்வி மூச்சாக ஓடுகிறது. இதனால் மாணாக்கர்களின் சிந்தனைகள் மழுங்கடிக்கப்படுகின்றன. மாணாக்கர்களும் மணனம் என்னும் தன்முனைப்பில் தனது இன்ப துன்பங்கள் அனைத்தையும் தேர்வின் மீதே செலுத்துகின்றனர். அந்நிலைக்கு அரசும் ஆட்சியாளர்களும் கல்வித் திட்டத்தை தொழில் நோக்கில் செயல்படுத்தி வந்துள்ளனர்.

முடிவுகள்

தமிழகச் சூழலில் கல்வியானது அகத்திணைக் கல்வியாக தொடக்கம் கொண்ட தமிழ்க்கல்வி, தமிழ்நாடு, பின்னைய காலத்தில் அதுவே பாலியற்கல்வியாகவும் வளரவில்லை, அகக்கல்வியாகவும் தமிழகச் சூழலில் வளரவில்லை. அதன் மூலம் மறைக்கப்பட்டு மாணாக்கர்கள் மத்தியில் வெறும் அறிவுக் கல்வியாகவும், தேர்வுக்கல்வியாகவும் வளர்ந்து நிற்கிறது. இதில் மொழிக்கல்விக்கான தரமும் வெறும் தொடக்க கல்வி நிலையிலே செயல்படுத்தப்படுகிறது. அதுவும் முதல் நிலையில் இல்லாமல் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலையாக உள்ளது. மாணாக்கர்களும் ஆய்வாளர்களும் ஆங்கிலக் கல்வியின் மீது வேலை வாய்ப்புப்பெற வேண்டும் என்ற நோக்கில் அடுத்த கட்ட நிலைக்கு மாறத் தொடங்கியுள்ளனர். இதனால் மொழிக்கல்வியின் மோகம் மக்கள் மத்தியில் குறையத் தொடங்கியுள்ளது. தமிழகச் சூழலில் மூதறிஞர் கூறியதுபோன்று அகக்கல்விக்கும், மொழிக்கல்விக்கும் ஒருதுறை சார்ந்த கல்விக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். இதனால் மொழியில் மூலம் தொடர்ந்து நிலைநாட்டப்படும்.

பார்வை நூல்கள்

1. வ.சுப.மாணிக்கம் – தமிழ்க்காதல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – டிசம்பர்-2012
2. வ.சுப.மாணிக்கம் – கம்பர், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – 1990.
3. வ.சுப.மாணிக்கம் – மாணிக்கக் குறள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – 1991.
4. இ.பா.வேணுகோபால் – கல்வியியல் புதுமைகள். சாரதா பதிப்பகம், 2013, ஜீவா 4 -வது தளம், ஸ்ரீனிவாச காம்ப்ளெக்ஸ், மோகனூர் ரோடு, நாமக்கல் – 637001.

*****

ramvini2009@gmail.com

கட்டுரையாளர் – உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரி கோயம்புத்தூர் – 641020. E-Mail: செல் , 9751104241

வ.சுப. மாணிக்கனார் பார்வையில் வினைத்தொகை

vallamai.com/

December 5, 2017

-முனைவர் த. சரவணன்

தமிழுக்கே உரிய சிறப்புக் கூறுகளாக எ, ஒ, ழ, ற, ன ஆகிய ஐந்து எழுத்துக்களைக் கூறுவர். அதேபோன்று சொல்லாக்க முறைகளில் வினைத்தொகை என்னும் தொகைச்சொல் வடிவமும் தமிழுக்கே உரியது என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய வினைத்தொகைபற்றி இலக்கணிகள் குறிப்பிடுவது பற்றியும் வ.சுப. மாணிக்கனார் அவற்றில் இருந்து வேறுபடுவது பற்றியும் இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

வினைத்தொகை

வினைத்தொகையானது இரண்டு சொற்கூறுகளைக் கொண்டது. அதன் முதற்கூறு வினையடியாகவும் இரண்டாவதுகூறு பெயராகவும் காணப்பெறும். சான்றாகக் கொல்களிறு என்ற சொல்லில் உள்ள கொல் என்பது வினையாகவும் களிறு என்பது பெயராகவும் காணப்படுகிறது.

வினைத்தொகையைப் பற்றித் தொல்காப்பியர்

வினையின் தொகுதி காலத் தியலும்”“ (தொல். எச்சவியல். 19) என்கிறார். இதில் வினைத்தொகை என்பதை வினையின் தொகுதி என வழங்குகிறார் அவர். வினைத்தொகையானது கால இடைநிலை தொக்குப் பொருள் தரும் என்பது இந்நூற்பாவால் பெறப்படுகிறது.

நன்னூலார் வினைத்தொகையை,

“காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை” (நன்னூல். 364)

என்கிறார். வினைத்தொகையை விரித்துப் பொருள் கொள்ளும்பொழுது எச்சமாக மாற்றியே பொருள்உரைக்க முடிகிறது. சான்றாகக் கொல்களிறு என்பதைக் கொன்ற களிறு என்னும்போது இறந்தகாலப் பெயரச்சமும், கொல்கின்ற களிறு என்னும் போது நிகழ்காலப் பெயரெச்சமும் கொல்லும் களிறு என்னும் போது எதிர்காலப் பெயரெச்சமும் இடம்பெறுகிறுகிறது. எனவே இப்பெயரெச்சங்களைத் தொகையாக்கிக் கூறும்போது வினைத்தொகை உண்டாகிறது என்பது பொதுவான கருத்து.

வினைத்தொகை என்னும் சொற்கூட்டின் முதற்கூறு வினையும் வினைப்பெயரும் தோன்றுவதற்குரிய வேர்ச்சொல்லாக அமைந்து இருக்கின்றது. வினை என்பது காலம் காட்டும் தன்மை உடையது ஆகும். ஆகவே வினைத்தொகையும் காலமொடு வருகிறது.

வினைத்தன்மையே அச்சொற்கூட்டில் இருப்பதால் வினைத்தொகை என்று பெயர்கொடுக்கப்பெற்றுள்ளது. எனவே வினைத்தொகை என்பதற்கு வினைத்தன்மை அதாவது காலம்காட்டும் நிலை தொக்கது என்று விளக்கம் அளிக்கலாம்.

வ.சுப.மாணிக்கனார் பார்வையில் வினைத்தொகை

வ.சுப. மாணிக்கம் அவர்கள் A Study of Tamil verbs என்னும் நூலில் வினை வடிவங்களை அடையாளம் காண்பதில் உதவும் காரணியாக வினைத்தொகையைக் காண்கிறார்.

"வினைத்தொகையைக் கட்டமைக்கும் அச்சொற்கூட்டின் முதல் பகுதியானது எந்த ஒரு வினையின் மூலவடிவத்தையும் உறுதிசெய்வதற்குத் தவிர்க்க இயலாக் காரணியாக விளங்குகிறது. சான்றாக ஆகூழ், ஆகாறு, ஆகிடன், அளவாகு மொழிமுதல் ஆகிய சொற்களில் ஆகு என்னும் தூய வினைவடிவத்தை நாம் காணமுடியும்" (A Study of Tamil verbs, ப.37)

ஏவல் வடிவங்கள் வினையின் உண்மையான வடிவத்தைக் காட்டுவதில் தோல்வி அடையும்போது வினைத்தொகை வடிவங்களே நம்மைக் காப்பாற்றுவதாகவும் வ. சுப. மாணிக்கனார் குறிப்பிடுகிறார். மேலும் சிக்கலுக்குரிய வினைவடிவமாகிய வா, தா என்பவற்றின் வினையடியாக வரு, தரு என்பதையே கொள்ளலாம் என்பதைப் பின்வரும் கூற்றின் மூலம் விளக்குகிறார்.

"ஐயத்திற்குரிய எந்த ஒரு வினைவடிவத்தின் உண்மையான மூலத்தையும் அடையாளம்காண நமக்கு உதவுவது வினைத்தொகையின் முதற்கூறான வினையடியே. பின்வரும் சான்றுகளில் வரு, தரு என்னும் சொற்கள் வினைத்தொகையில் அதன் தூய வடிவத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. வரு விசிப்புனல் (தொல்.1008) வரு விருந்து (குறள்.83) புனல்தரு பசுங்காய் (குறுந்தொகை. 292)" (A Study of Tamil verbs, ப.44)

வினைத்தொகை பற்றிப் பிற்கால இலக்கணிகள் கொண்டிருந்த கருத்துக்கு மாற்றாகத் தொல்காப்பியரைப் பின்பற்றி, வினைத்தொகையில் இறந்தகாலத்தையும் நிகழ்காலத்தையும் மட்டுமே உணரமுடியும் என்பதைப் பின்வருமாறு வலியுறுத்துகிறார்.

"இறந்தகாலத்தையும் நிகழ்காலத்தையும் குறிப்பிடும் இரண்டு பெயரெச்சங்களை மட்டுமே தொல்காப்பியர் பின்வரும் நூற்பாவில் குறிப்பிடுகிறார்.

அவ்வறு பொருட்குமார் அன்ன உரிமையசெய்யும் செய்த என்னும் சொல்லே (தொல். 718)

கொல் களிறு போன்ற சொற்களில் நிகழ்காலத்தையும் இறந்தகாலத்தையும் மட்டுமே விளங்கிக்கொள்ள முடிவதாகஅவர் எண்ணுகிறார். இதற்குச் சான்றாகப் பின்வரும் நூற்பாவைக் குறிப்பிடலாம்.

செய்யும் செய்த என்னும் கிளவியின்மெய்யொருங்கு இயலும் தொழில்தொகு மொழியும்"" (தொல். 482)" (A Study of Tamil verbs, ப.102)

மேற்கண்ட கூற்றில் தொழில்தொகு மொழியாகிய வினைத்தொகையில் செய்யும் செய்த என்னும் இரண்டு காலமே அதன் விரியில் வருவதை எடுத்துக்காட்டி இடைக்கால இலக்கணிகள் குறிப்பிடும் முக்காலமும் காட்டும் என்பதனை வ.சுப. மாணிக்கனார் மறுப்பதை அறியமுடிகிறது.

"உம் ஈறு நிகழ்காலத்துக் குரியது எதிர்காலத்துக்குரியதாவது எதனாற் பெறுதும்? என்பது வினா. பெயரெச்ச விகுதிகளுள் அகரம் இறப்பு நிகழ்வுக் காலங்கட்குரியது. உம் நிகழ்வுக்குரியது. எதிர்வுக்குப் பெயரெச்ச விகுதி இல்லையாதலின் உம் விகுதியைக் கொள்ளவேண்டும்." (தொல்காப்பியம் உரைவளம் சொல்லதிகாரம் – எச்சவியல், பக்.132) என்று ஆ. சிவலிங்கனார் குறிப்பிடுவதையும் இங்கு எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. எதிர்வுக்குப் பெயரெச்ச விகுதி இல்லாமையாலேயே இரண்டு பெயரெச்சங்களே வினைத்தொகையில் காணப்படுகின்றன என்று வ.சுப. மாணிக்கனார் முடிவு செய்கிறார். தொல்காப்பியர் வினைத்தொகையைப் பற்றிக் குறிப்பிடும் நூற்பாவில் காலத்தியலும் என்று பொதுப்படையாகக் கூறி இன்ன காலம் என்று குறிப்பிடாமல் சென்றுள்ளதும் இதற்குக் காரணமாகும்.

இறுதியாக, வினைத்தொகை என்பதில் கடந்த கால, நிகழ்காலப் பெயரெச்சங்களே தொக்கி நிற்கின்றன என்பதும் வினையடியின் தூய வடிவைக் கண்டறிவதில் வினைத்தொகையின் முதற்கூறு உதவுகிறது என்பதும் வ.சுப. மாணிக்கனாரின் இலக்கணப் பார்வையின் மூலம் அறிய முடிகிறது.

******

துணைநின்ற நூல்கள்:

Manickam,V.Sp. 1972. A Study of Tamil Verbs. Annamalai Nagar: Annamalai University.

சிவலிங்கனார், ஆ. 1998. தொல்காப்பியம் – சொல்லதிகாரம் (உரைவளம்) எச்சவியல். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

******

கட்டுரையாசிரியர் இளநிலை ஆராய்ச்சி அலுவலர் இலக்கியத்துறை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் #40, ஐ.ஆர்.டி வளாகம், நூறடிச்சாலை, தரமணி, சென்னை – 113.

வ.சுப.மாணிக்கனாரின் ‘மாமலர்கள்’ வீசும் மணம் – 1

vallamai.com/

October 20, 2017

-முனைவர் ச.அருள்

முன்னுரை

நேர்மையின் இலக்கணமாய், புலமையின் இயக்கமாய், எளிமையின் உருவமாய்ச் சங்கப் பனுவலில் திளைத்தவர் மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார். தமிழ்க்காதலால் வள்ளுவத்தை வரைந்து காட்டியவர்; திருவாசகத் தேன் உண்ணும் தும்பியிவர். ஏழிளந்தமிழில் வாழப்பழகியவர்; மாணவர்களின் மனக்கோவிலில் நிலைபெற்றுத் தெய்வமானவர்; கற்றோர் உள்ளத்தில் கலந்திட்ட மாமேதை; ‘எங்கும் தமிழ் எதிலும் தமிழ்’ என்று கூறி, தமிழ் வழிக்கல்விக்காகத் தெருவில் இறங்கித் தமிழ் முழக்கம் செய்தவர்; கொடை விளக்கு வழங்கிய மாமலர் இவர்; தில்லையம்பலத்தில் தேவார, திருவாசகத் திருமுறைகளை முழங்கச் செய்தவர்; கல்லாத இனத்தைக் கற்க வைத்தவருக்கு அண்ணாமலைச் செட்டியார் பாடாண் திணை பாடிய பாவலர்; வீடும் கொடுத்த விழுச்செல்வரைப் (வள்ளல் அழகப்பர்) பாட்டு மாளிகையில் படிமமாக்கிக் காட்டியவர்; பண்டிதமணி கதிரேசன் செட்டியாரின் புலமை வழித்தோன்றலில் இவரும் ஒருவர்; தமிழ்ப் பகையை எதிர்த்து நின்றதில் சிங்கம் போன்றவர்; பார் காத்தவர்களையும் பயிர் காத்தவர்களையும் போற்றும் உலகில் செந்தமிழ் காத்தவர்களைப் போற்றிய பண்பாளர் வ.சுப.மாணிக்கனார். இவர்தம் ‘மாமலர்கள்’ என்னும் கவிதை நூலினை இக்கட்டுரை ஆராய்கிறது.

மாமலர்கள் – கவிதைப் பொருண்மைகள்

1.இந்தியப் பாயிரம், 2. காந்தி எட்டு, 3. திருவாசகச் சுவட்டில், 4. உரிமைப் பாடல்கள், 5. கையுறைப் பாடல்கள், 6. வள்ளல் அண்ணாமலையரசர், 7. பாராட்டுப் பாடல்கள், 8. வாழ்த்துப் பாடல்கள், 9. குழந்தைப் பாடல்கள், 10. அறப்பாடல்கள், 11. பாடற் கலம்பகம், 12. அழகப்பர் பத்து, 13. எண்ணம் இருபது, 14. ஊர்தி முப்பது. 15. தமிழாட்டு, 16. தமிழ் சூடி, 17. புரட்சி மண்டோதரி, 18. கொல்லாச் சிலம்பு, 19. அன்னை கொதிக்கிறாள், 20. உலகப்பாயிரம்.

பாயிரம்

பாயிரம் என்பது முன்னுரை, முகவுரை, அணிந்துரை, மதிப்புரை போன்றதாகும். எனினும் இலக்கணத்தில் கூறப்படும் முன்னுரையே பாயிரம் என்னும் சிறப்புடைத்தாகும் என்று வ.சுப.மாணிக்கனார் கூறுகின்றார். இலக்கணப் பாயிரத்தில் மொழி வழங்கும் எல்லைகள்,

அடிப்படை, நுவல்பொருள், நெறி, நோக்கம், அரங்கேறிய இடம், காலம், ஆசிரியன் பெயர், ஆசிரியர் தகுதி என்னும் அறிமுகக் கூறுகள் பெருமிதமாகவும் சுருக்கமாகவும் சுட்டப்படுதல் உண்டு.

வ.சுப.மாணிக்கனாரின் ‘மாமலர்கள்’ என்னும் கவிதை நூலில் இடம் பெற்றுள்ள தொடக்கக் கவிதையின் தலைப்பு ‘இந்தியப் பாயிரம்’ என்பதாகும். முடிவுக் கவிதையின் தலைப்பு ‘உலகப் பாயிரம்’ என்பதாகும். இந்தியப் பாயிரத்தில் தொடங்கி, உலகப் பாயிரத்தில் முடிவது போல் இந்நூலை வ.சுப.மாணிக்கனார் படைத்திருக்கும் திறம் போற்றத்தக்கதாகும்.

“வடவேங்கடம்
தென்குமரி
ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்” தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் பாடிய பனம்பாரனார், (தொல்.சிறப்புப்பாயிரம்,1-3)

என்று தமிழகத்தின் எல்லைகளைக் குறித்துள்ளார். எனவே, வடக்கே வேங்கட மலை முதல் தெற்கே குமரி வரை தமிழ் பேசப்பட்டதாக இதன் மூலம் அறியமுடிகிறது.

வ.சுப.மாணிக்கனார் இந்தியப் பாயிரம் என்னும் கவிதையில்,

“வடவிமயம்
தென்குமரி
ஆயிடைக்குடியரசு நடத்துங் கோடாச்
செங்கோல்படிமிசைச் சிறந்த பாரதம் வாழிய” (மாமலர்கள், ப. 63)

“பாருக்குள்ளே நல்ல நாடு –
எங்கள் பாரதநாடு” என்று கூறியுள்ளார். அஃதாவது வடவேங்கடத்துக்கும் தென் குமரிக்கும் இடைப்பட்ட பகுதியில் மிகச் சிறப்பாக குடியாட்சி நடத்தும் பழம்பெருமை வாய்ந்த பாரதநாடு வாழிய என்று சுட்டுகின்றார். சிறந்த பாரம்பரியத்தையும், உயர்ந்த பண்பாட்டையும் உடையநாடு. இங்குத் தோன்றிய சிந்து வெளி நாகரிகம், உலக நாகரிகங்களுள் தொன்மையானது. நில வளமும், நீர் வளமும் கலை வளமும் மிகுந்த நாடு பாரதநாடு. இதன் சிறப்பினை பாரதியாரும், – (பாரதநாடு – பல்லவி)

என்று புகழ்ந்துரைக்கின்றார்.

“உலகம் என்பது கலகம்
ஆகி இன்றோ நாளையோ என்றோ
அறியோம்வாரா அழிவுகள் வருவ

போலும்;மாயமுன் னேற்றம் மயங்க
வேண்டா;அடக்கமொடு வளர்தல் அறிவா
கும்மே;உலகம் என்பது உயிர்களின்
உடைமைமரமுத லாக மானிடம்
ஈறாஎல்லா வுயிர்க்கும் இருப்பிடம் ஆகும்''உலகப் பாயிரம் என்னும் கவிதையில்,
வ.சுப.மாணிக்கனார், – (மாமலர்கள், ப. 183)

என்று உரைக்கின்றார். இதில், உலகில் கலகம் ஏற்பட்டு இன்றோ, நாளையோ, என்றோ ஒரு நாள் அழிவுகள் ஏற்படலாம்; ஆனால் மாய முன்னேற்றம் கண்டு மயங்காமல் அடக்கத்துடன் வளர்ச்சி அடைவதே அறிவுக்கு உகந்ததாகும் என்கிறார். மேலும், உலகம் என்பது எல்லா உயிர்களுக்கும் பொதுவானது, மரம் முதலாக, மனிதன் ஈறாக எல்லா உயிர்களுக்கும் இதுவே இருப்பிடமாகும் என்கின்றார்.

நாட்டுப் பற்று

நாட்டுப் பற்று என்பது ஒவ்வொரு குடிமகனிடமும் அவசியம் இருக்க வேண்டும். குடிமக்களிடம் நாட்டுப் பற்று நிலை கொண்டிருந்தால் நாட்டை சிறந்த முறையில் வழி நடத்துவதோடு நாட்டை மேம்படுத்தவும் முடியும். வ.சுப.மாணிக்கனார் தம் படைப்பின் வழி நாட்டுப் பற்றை வெளிப்படுத்துகின்றார்.

''சாதிப் பற்றும் சமயப்
பற்றும் காதல் அன்ன கட்சிப்
பற்றும்மோதல் இல்லா மொழியின்
பற்றும்ஆசை நீங்காக் காசுப்
பற்றும்பாசம் ஏறிய பதவிப்
பற்றும்நேசங் கலந்த ஈசன்
பற்றும்தேசப் பற்றுமுன் சிறுபற்
றாகுக;பற்றுக நாட்டுப் பற்றினைப்
பற்றுகமற்றோர் பற்று மனம்புகல் வேண்டா'' – (மாமலர்கள், ப. 63)

இந்தியாவில் வாழும் அனைவரும் தேசப்பற்று கொண்டவர்களாகவும், தேசத்திற்காக உயிர் விடவும் துணிந்தவர்களாகவும், எந்தச் சூழலிலும் யாருக்காகவும் எதற்காகவும் தேசத்தை விட்டுக் கொடுக்காதவர்களாகவும் இருக்க வேண்டும் என்கிறார். இந்தியத் திருநாடு எந்தச் சூழ்நிலையிலும் பிளவுப்பட்டுப் பிரிவினைவாத நிலைக்கு தள்ளப்படக் கூடாது என்ற நோக்கத்தில் சாதி, சமயம், காதல், கட்சி, பதவி, பணம், மோதல் இல்லா மொழிப்பற்று ஆகியவற்றில் குறைவான பற்றும் நாட்டின் மீது அதீதப் பற்றும் கொள்ளவேண்டும் என மொழிகின்றார்.

மொழிப்பற்று

உலகில் பிறந்த அனைத்து மக்களுக்கும் தாய்ப்பால் போன்றது அவரவர் தாய்மொழி. பாரதியார் தன் தாய்மொழியான தமிழ் மொழியை,

“யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி
போல்இனிதாவது எங்கும் காணோம்” – (பாரதியார் கவிதைகள் – தமிழ், வரி.1-2)

என்கின்றார். இந்த உலகில் மிக உயர்வான பண்புகளைக் கொண்ட இனம் தமிழினம். தமிழ், தமிழர் என்று மொழியாலும் இனத்தாலும் அடையாளப்படுத்தி பெருமைப்பட வேண்டியவர்கள் இன்று தமிழில் பேசுவதற்கே தயங்குகிறார்கள். மொழியைப் பற்றி தந்தை பெரியார் கூறுமிடத்து, “ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு தேவைப்படும் பற்றுகளுள் முதன்மையானது மொழிப்பற்றே ஆகும். அத்தகைய மொழிப்பற்று இல்லாதவனிடத்து தேசப்பற்றும் இருக்காது என்பது நிச்சயம். தேசம் என்பது மொழி அடிப்படையாகக் கொண்டு இயங்குவது ஆதலால் தமிழர்களுக்கு மொழிப்பற்று பெருக வேண்டும் என்பதே என் பிரார்த்தனை” என்கிறார்.

வ.சுப.மாணிக்கனார் தாய் மொழியாம் தமிழ் மொழியை உயர்த்திப்பாடுகின்றார்.

“தாய்காட்டும் தாய்மொழிக்கே முதன்மை
வேண்டும் தாராத அரசினையாம்
மதிப்பதில்லைதாய்நாட்டுப் பற்றுக்கே முதன்மை
வேண்டும்தடுமாறும் கட்சியையாம் மதிப்பதில்லை” – (மாமலர்கள், ப.104)

அரசும், அரசியல் கட்சிகளும் தாய்மொழிக்கு முக்கியத்துவம் தர வேண்டும். அவ்வாறு தரவில்லை எனில் அவற்றை நான் மதிக்க மாட்டேன் என்கிறார்.

தமிழ் மொழியின் பெருமைகளை ‘அன்னை கொதிக்கிறாள்’ என்னும் கவிதையில் அழகுறப் பட்டியலிடுகின்றார்.

“இந்திய மொழிகளுட் செந்தமிழ்
ஒன்றேஉலக மொழியெனும் ஒண்புகழ்க்
குரியதுஇலங்கை சிங்கை எழிலார்
மலேயாபருமா செய்கோன் பல்வள
மொரைசுபீசி முதலாப் பிறநா
டெல்லாம்தமிழ்மொழி பேசுந் தங்குடி கொண்டது” – (மாமலர்கள், ப.162)

செம்மொழித் தகுதி பெற்றுள்ள தமிழ் மொழியை உலகம் முழுவதும் சுமார் 80 மில்லியன் மக்கள் பேசுகிறார்கள். தமிழ்மொழி இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, பர்மா (இன்றைய மியான்மர்), மொரீசியஸ், செய்கோன், பிஜி தீவு ஆகிய நாடுகளில் பேசப்படுவதாக வ.சுப.மாணிக்கனார் தம் கவிதை வழிப் புலப்படுத்துகின்றார்.

'பச்சைத் தமிழர்' என்று பெரியாரால் பாராட்டப்பட்டவர் காமராசர். இவர் தம் சொந்த முயற்சியில் ஆங்கிலம் கற்றவர். கேரளத்தில் இருந்த குறைவான காலத்தில் மளையாளம் கற்றுக் கொண்டார். தெலுங்கும் தெரியும், இந்தியும் பேசுவார். நாடாளுமன்றத்தில் அவர் ஒருமுறை ஆங்கிலத்தில் உரையாற்றியதை 'மாசற்ற ஆங்கிலம்' என்று புகழ்ந்து எழுதியது 'தி இந்து' ஆங்கிலம் நாளிதழ் ஆனாலும், அகில இந்திய காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் மாநாடுகளில் பேசும்போது தமிழில்தான் பேசுவார். கையெழுத்தும் தமிழில்தான். இவரது பெருமையைப் போற்றி கவிதைப் படைக்கின்றார் வ.சுப.மாணிக்கனார்,

''உலகுபுகழ் நேருவின் உடல்மறை
காலைஞாலத் தலைவர்கள் நடத்திய
தில்லிஇரங்கற் கூட்டத்து எளியோர்
தலைவன்காமனை வென்ற
காமராசன்தமிழிற் பேசித் தாய்புகழ்
நிறுத்தினன்;ஞாலப் பெரியோன் நம்மகன்
காந்திசாலும் தமிழில் தன்பெயர்
எழுதினன்;தன்கல் லறையில் தண்டமிழ்
மாணவன்என்று பொறித்தனன் இறையடி
போப்பன்;முதுமையில் தமிழை முறையொடு
கற்றபின்எதுகை குறையா ஏகக்
காப்பியம்ஆரமா அணிந்தான் வீரமா
முனிவன்;தனித்து வளரும் தகையது
எனவேகணித்துப் புகழ்ந்தனன் கால்டு
வேலன்;வடமொழி பிரெஞ்சு வளமார்
ஆங்கிலம்நடைமொழி பலவும் நவின்ற
பாரதியாமறி மொழிகளுள் நற்றமிழ்
ஒன்றேதாமினி தாகும் சால்பது என்றான்;'' – (மாமலர்கள், பக்.163-164)

காந்தியடிகள் தன் பெயரைத் தமிழில் எழுதியதை நினைவுபடுத்தியுள்ளார். மகாத்மாவின் தாய்மொழி குஜராத்தியாக இருந்தாலும் தமிழ்மொழி மீதும் பற்று கொண்டவர். வள்ளுவரைப் பற்றி மகாத்மா, "யான் தமிழ் கற்க விரும்பியதற்குக் காரணம், வள்ளுவரின் வாய்மொழியை அவருடைய தாய்மொழி மூலம் படித்தறிவதற்கேயாம்" என்று தன் விருப்பத்தைக் கூறியுள்ளார். ஜி.யு.போப் தன் இறப்புக்குப் பின் தனது கல்லறையில் "இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்" என்னும் வாசகம் இடம்பெற வேண்டும் என தனது உயிலில் எழுதியிருந்தார். ஆனால், இவரது ஆசை நிறைவேறவில்லை.

தமிழிகத்தில் வாழ்ந்த புலவர்களுள் பல்துறை வித்தகராகத் திகழ்ந்தவர் வீரமாமுனிவர். தேம்பாவணி என்னும் காப்பியத்தை இயற்றியதற்காக வீரமாமுனிவருக்கு ‘செந்தமிழ்த் தேசிகர்’ என்னும் பட்டம் வழங்கப்பட்டது. இவர் இலக்கண அறிவு, இலக்கியப் புலமை, மொழியியல் உணர்வு, பக்தி இலக்கிய ஆற்றல், ஆய்வியற் சிந்தனை, பண்பாட்டில் தோய்வு எனப் பல்வகையிலும் சிறந்தவர். தமிழுக்காகவே வாழ்ந்து தொண்டு செய்து புகழ் எய்திய வீரமாமுனிவரைப் புகழ்ந்துரைக்கின்றார் வ.சுப.மாணிக்கனார். ராபர்ட் கால்டுவெல் திராவிட மொழியியலின் தந்தை எனப் போற்றப்படுபவர். திராவிட மொழிகளின் தனித்துவத்தை நிலைநிறுத்தியதில் பெரும்பங்கு இவருடையது. இவருக்கும் வ.சுப.மாணிக்கனார் கவிதை மலர்களால் மாலைச்சூட்டியுள்ளார். பாரதியார், தமிழ், ஆங்கிலம், இந்தி, சமற்கிருதம், வங்காளம் ஆகிய மொழிகளில் புலமைப் பெற்றவர். ஆனால், ‘தமிழ்மொழி போல் இனிமையான மொழி வேறு எங்கும் இல்லை’ என்று தன் தாய்மொழியான தமிழ் மொழியை உயர்த்திப் பாடியதற்காக மகாகவிக்கு கவிதை மாலை சூட்டியுள்ளார் வ.சுப.மாணிக்கனார். பாரதியின் தமிழ்மொழிப் பற்றை வ.சுப.மாணிக்கனார் தம் கவிதை வழிக் கலந்து தமிழர்களுக்கு தமிழமுதம் ஊட்டுகின்றார்.

ஆங்கில மோகம்

குழந்தைகளின் மன வளர்ச்சிக்குத் தாய்மொழியே சிறந்தது என காந்தியடிகள் உள்ளிட்ட பலரும் எடுத்துரைத்தாலும் தமிழர்களை ஆங்கில மோகம் கெட்டியாக பிடித்துக் கொண்டிருக்கிறது. ‘ஆங்கிலம் உலகப் பொதுமொழி’ என்ற வலுவான எண்ணம்தான் இதற்குக் காரணம். சீனத்திற்கும் ஸ்பானிசிற்கும் அடுத்த நிலையில்தான் ஆங்கிலம் உள்ளது. இங்கிலாந்து அருகில் உள்ள பிரான்சில் ஆங்கிலம் ஒரு மொழியாகவே கருதப்படவில்லை. தமிழர்கள் தம் தாய்மொழியான தமிழ் மொழியைப் புறக்கணித்து ஆங்கில மோகத்தில் அலைகிறார்கள். தங்கள் குழந்தைகளை ஆங்கிலப் பள்ளிகளில் சேர்த்து அவர்களின் அறிவை மழுங்கடிக்கிறார்கள். இதனை வ.சுப.மாணிக்கனார்,

“பாலர் பள்ளியாம் பாழ்கொலைக்
களங்கள்காளான் போலவும் கறையான்
போலவும்பட்டி தொட்டி பட்டினம்
எல்லாம்எட்டிப்பிடித்தும் இழுவலை
வீசியும்மூன்று வயதில் முழுத்தமிழ்க்
குழவிகள்அஆ என்பதை அறியா
வகையில்ஆங்கிலம் ஒன்றே ஆசையொடு
கற்கும்பாங்கில் உணர்ச்சியைப்
பரப்புகின்றனபள்ளிச் சிறாஅர் படிப்பிது
வாயின்கொள்ளி தமிழ்க்கெனக் கூறவும் வேண்டுமோ?” -(மாமலர்கள், ப.170)

என்று ஆதங்கத்தோடு சாடியுள்ளார். காளான் போலவும் கறையான் போலவும் பட்டி தொட்டி எங்கும் பரவியிருக்கு மழலையர் (Nursery) பள்ளிகளைக் கொலைக்களங்கள் என்று மனக்குமுறலோடு குறை கூறுகின்றார். மூன்று வயதே நிரம்பிய மழலைகளுக்கு

தாய்ப்பாலுடன் சேர்த்து தமிழ்ப்பாலை (தமிழ்மொழியை) ஊட்டாமல், புட்டிப்பாலை (ஆங்கிலத்தை) ஊட்டுவது பொருத்தப்பாடு இல்லாததாகும்.

இந்தி எதிர்ப்பு

இந்தி மட்டும் இந்திய அரசாங்கத்தின் மொழியாக ஆவதையும் அது மாநிலங்களில் மறைமுகமாகத் திணிக்கப்படுவதையும் அறிஞர்களும், அரசியல் தலைவர்களும் புலவர்களும் கல்வியாளர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் நாள்தோறும் எதிர்த்து வருகிறார்கள். இன்றைய சூழலில் இந்தி படித்தால்தான் நடுவண் அரசின் பதவி கிட்டும் என்றும், வடநாட்டில் பணிபுரியும் வாய்ப்பு கிட்டும் என்றும் கூறிச் சிலர் இந்தியைக் கற்கும்படி மக்களை வற்புறுத்துகின்றனர். "இந்திக்கு அடிமையாகி இறப்பதை விட இப்பொழுதே இறந்து விடுவது மேல்" என எண்ணி எரியில் மூழ்கி உயிர் நீத்த சின்னசாமியின் வீரச்செயல் கூடத் தமிழர்களை தட்டி எழுப்ப வில்லையோ என எண்ணத் தோன்றுகிறது. அதனால்தான் வ.சுப.மாணிக்கனார்,

இந்தியை ஏனையோர் இனித்துக்
கற்கஉந்தும் நடுவரசு உறுபொருள்
அளிக்கும்;நந்தமி ழரசோ நம்மவர்
தமக்கேசெந்தமிழ் வாயிலாய்ச் சிறப்புமேற்
கல்வியைவந்து கற்க வருபொருள்
வழங்கும்.சிறுமையோ பெருமையோ சிந்திப்
பீரேஆண்மையும் துறவும் அரசுக்
கில்லைமானமும் தெளிவும் மக்கட் கில்லை" "– (மாமலர்கள், ப.171)

என்று கேள்வி கேட்கிறார். 'மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு' என்பார் பெரியார். 'மானமும் தெளிவும் மக்களுக்கு இல்லை' என்று சாடுகிறார் வ.சுப.மாணிக்கனார்.

இந்தியாவின் தேசிய மொழி எது எனக் கேட்டால் பலரும் இந்தி என்று பதில் கூறுகின்றனர். வட இந்தியாவைச் சேர்ந்தவர்கள் இந்திதான் தேசிய மொழி என்கின்றார்கள். ஆனால் உண்மையில் இந்தி தேசிய மொழி அன்று. இந்திய அரசால் அங்கீகரிக்கப் பெற்ற 22 மொழிகளில் இந்தியும் ஒன்று. வட மாநிலங்களில் அதிகமாகப் பேசப்படும் மொழியாக இந்தி உள்ளது. இந்தியாவில் தில்லி, ராஜஸ்தான், அரியானா, உத்தரகண்ட், உத்திரப் பிரதேசம், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், இமாச்சலப் பிரதேசம், ஜார்கண்ட், பீகார் போன்ற மாநிலங்களில் இந்தி பேசப்படுகிறது. பிற மாநிலங்களில் இரண்டாவது, மூன்றாவது மொழியாக இந்தி பயிற்றுவிக்கப்படுகிறது. இந்தி மொழி இந்தியாவிற்கான பொதுமொழி இல்லை என்பதை,

"இந்திய மொழிகளுள் இந்தியும்
ஒன்றாம்என்னுடைப் போர்த்தியுள் இவளொடு
சிறுமிஅன்ன உறவில் அன்பும்

உடையேன்அவள்தன் வளர்ச்சியில் அழுக்காக
றில்லைஇந்தி ஒன்றே பொதுமொழி
என்பதைஇந்தியன் இன்றே எதிர்க்க
வேண்டும்எதிர்க்கா எவனும் இந்தியன்
ஆகான்இந்தித் தாய்மொழி இந்தியன்
கூடப்புந்தியில் கொள்கையைப் பொசுக்க
வேண்டும்இந்தியை எதிர்த்தல் இந்தியத் தொண்டாம்" – (மாமலர்கள், ப. 177)

என்னும் கவிதை வழி வ.சுப.மாணிக்கனார். உணர்த்துகின்றார். இந்தி மொழி வளர்ச்சி அடையட்டும். அதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், இந்தி மொழி ஒன்று மட்டுமே இந்தியா முழுவதும் ஆட்சி மொழி என்பதை நான் எதிர்கிறேன், இந்தியர்களும் எதிர்க்க வேண்டும் எனச் சாடியுள்ளார்.

[தொடரும்]

வ.சுப.மாணிக்கனாரின் ‘மாமலர்கள்’ வீசும் மணம் – 2

vallamai.com/

October 22, 2017



-முனைவர் ச.அருள்

தமிழ் வளர்த்த சான்றோரைப் பாராட்டல்

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய அறிஞர்கள் பலர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது. தெலுங்கு, மராட்டியம், ஆங்கிலம் எனப் பல நூற்றாண்டுகளாக பிறமொழி ஆதிக்கத்தால் தொய்வுற்றிருந்த தமிழ் மொழியை மீட்டெடுத்து தமிழர்களைப் பெருமையுறச் செய்த தமிழ் அறிஞர்கள் பலர். அவர்களுள் தலைசிறந்த தமிழ் அறிஞராக இன்றும் என்றும் போற்றத்தக்கவர் உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள். இவர் மட்டும் தமிழ்நாட்டில் பிறந்திருக்காவிடில் எத்தனையோ இலக்கியங்கள் தமிழர்களுக்குக் கிட்டாமலேயே போயிருக்கும். ‘ஏடு காத்த ஏந்தல்’ என்று இவரைச் சிறப்பிக்கின்றார்கள். பல்வேறு ஆசிரியர்களிடமும் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடமும் பயின்றவர். உ.வே.சாமிநாத ஐயர் சிந்தாமணி, சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு, புறநானூறு, மணிமேகலை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், பெருங்கதை முதலிய இலக்கியங்களை ஓலைச்சுவடியில் இருந்து தொகுத்து, உரைகளைச் சரிபார்த்து தொகுத்து தமிழ் உலகத்திற்குத் தருவதற்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்.

கவிஞர் வைரமுத்து, 'மொழி காத்தான் சாமி' என்னும் பொருண்மையில் உ.வே.சா. குறித்து எழுதிய கட்டுரையில், "தமிழ் என்பது விழுமியம், பெருமிதம், வீரம், ஈரம், காதல், பண்பாடு, தத்துவம் என எல்லாம் கூடிக் கலந்த ஒரு பெரிய கலாசாரக் கடல். இத்தனை கருவிகளுக்கும் சான்று தந்தவர்தாம் உ.வே.சாமிநாதையர். அவர் இல்லையெனில் தமிழின் தொன்மைக்கும், தமிழினத்தின் பெருமைக்கும் தடயங்களும் சான்றுகளும் ஆவணங்களும் இல்லை. ஊர் ஊராய் ஏடு தேடி அந்த அந்தணக் கிழவன் சந்தனமாய்த் தேய்ந்திராவிடில் ஒரு செம்மொழியின் முதல் தகுதியான தொன்மை என்பதற்கு நாம் ஆதாரமற்றுப் போயிருப்போம்" என்று கூறியுள்ளார்.

வ.சுப.மாணிக்கனார், 'மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர்க்கு' என்னும் கவிதையில்,

பார்காத்தார் ஆயிரம்பேர் பசித்தார்க்
காகப்பயிர்காத்தார் ஆயிரம்பேர் பாலர்க்
காகமார்காத்தார் ஆயிரம்பேர் வாழ்ந்த
நாட்டில்மனங்காத்த தமிழ்த்தாய் ''என் உடைமை
யெல்லாம்யார்காத்தார்'' எனக்கேட்க ஒருவன்
அம்மாயான்காப்பேன்
எனவெழுந்தான்சாமி
தான்!நீர்காத்த
தமிழகத்தார்நெஞ்சின்
உள்ளான்நிலைகாத்த மலையிமய நெற்றி
மேலான்.பொய்யாத தமிழ்க்குமரி ஈன்ற
சாமி!போகாத புகழ்க்கன்னி மணந்த
நாத!செய்யாத மொழித்தொண்டு செய்த
ஐய!சிறுகாத நெஞ்சத்தேம் வணங்கு
செம்மல்!எய்யாத திருவடியால் எண்பத்
தாண்டும்இளையாத உள்ளத்தால் எங்குஞ்
சென்றுநெய்யாத தொன்னூல்கள் நிலைக்க
வைத்தநீங்காத தமிழ்க்குயிரே! நின்தாள் வாழ்க!"" – (மாமலர்கள், .72)

என்று வாழ்த்துகிறார். உலகினைக் காத்தவர்கள் பசித்தோர்க்கு உணவு கொடுக்கப் பயிர் செய்து அந்தப் பயிரைக் காத்தவர்கள்; குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுப்பதற்காக தாய்மடி காத்தவர்கள்; இவர்கள் மத்தியில் தமிழ்த்தாயின் உடைமைகளை, தமிழ் இலக்கியங்களைக் காப்பதற்காக தன்னார்வத் தொண்டராக வந்தவர்தாம் உ.வே.சாமிநாதையர். இவர் தமிழ் மொழிக்குத் தொண்டு செய்தவர். எண்பது ஆண்டுகளுக்கு மேல் ஓய்வில்லாமல் தமிழ்த் தொண்டாற்றி தமிழர்கள் உள்ளத்தில் நிலைத்து நிற்கிறார். தமிழைத் தன் உயிர் மூச்சாகக் கொண்டவர் தமிழுக்கு உயிரானவர் உ.வே.சா.சாமிநாதையர் அவர்தம் தாள் வாழ்க என்கிறார் வ.சுப.மாணிக்கனார்.

அண்ணாமலை செட்டியார்

செட்டி நாட்டு அரசர் சர் ராஜா அண்ணாமலை தமிழ் இசைக்காக தமிழ் மொழிக்காக உழைத்த உத்தமர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினை நிறுவி பலருக்குக் கல்வி வழங்கிய அண்ணாமலை செட்டியார் சிறந்த கொடை உள்ளம் படைத்தவர். தமிழ் இசை மீது ஈடுபாடு கொண்ட அண்ணாமலை செட்டியார் தமிழிசையை ஆய்வு செய்வதற்காக 1941– இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்கு நிதியுதவி செய்தார். இந்த நிதியானது தமிழிசை இயக்கத்திற்கு ஓர் உந்துதலாக இருந்தது. வ.சுப.மாணிக்கனார் 'வள்ளல் அண்ணாமலையரசர்' என்னும் கவிதையில்,

நில்லாத செல்வத்தை நிலைக்கச்
செய்தான்;நீங்காத கலைப்புரட்சி நிரம்பச்
செய்தான்;கல்லாத இனமெல்லாம் கற்க
வைத்தான்;காணாத பெருங்கழகம் களத்து
வைத்தான்;இல்லாத புலவர்களை இருப்போர்
ஆக்கிஇணையாத தமிழ்ப்புகழை ஈட்டிக்
கொண்டான்;வெல்லாத செயலில்லை என்று போற்ற
விளங்கியவன் மன்அண்ணா மலையன் வாழ்க." – (மாமலர்கள், 76)

என்று அண்ணாமலை செட்டியாரைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். நிலைத்து நிற்காத செல்வத்தை நிலைக்கச் செய்து, கலைகளில் புரட்சி செய்தவர் அண்ணாமலையரசர். மிகப்பெரும் பல்கலைக்கழக்தை உருவாக்கி, கல்லாத மக்களே இல்லாத நிலையை உருவாக்கியவர். தமிழறிஞர்களை ஊக்குவித்து தமிழின் புகழை உலகறியச் செய்தவர். அண்ணாமலை அரசர் தம் பல்கலைக்கழகத்தில் (மீனாட்சி, தமிழ்க்கல்லூரி) தலைவராக உ.வே.சாமிநாதையரை நியமித்து, விபுலானந்த அடிகள், கா.சுப்பிரமணியப்பிள்ளை, சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார், ந.மு.வேங்கடசாமி நாட்டார், ரா.ராகவையங்கார், அ.சிதம்பரநாதன், கோ.சுப்பிரமணியப் பிள்ளை, மு.அருணாசலம், தெ.பொ.மீனாட்சி சுந்தரம்பிள்ளை, ரா.பி.சேதுப்பிள்ளை முதலிய தமிழ் அறிஞர்களைப் பணியில் அமர்த்தியவர். இவர்களைப் பற்றி விரிவாக மேற்கண்ட கவிதையில் மேலும் வரிகள் நீட்சி பெறுகின்றன.

தமிழ்சூடி

ஔவையார் எழுதிய ஆத்திசூடியின் பாயிரம் 'ஆத்திசூடி அமர்ந்த தேவனை ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே' என்று அமைந்திருந்ததால் பாடலின் முதல் சொல்லையே இந்த இலக்கியத்திற்கு உரிய பெயராக அமைத்துக் கொண்டனர். ஔவையாருக்குப் பின்னர் ஆத்திசூடிகள் எழுதியவர்களில் பாரதியார் – புதிய ஆத்திசூடி, பாரதிதாசன் ஆத்திசூடி, வாணிதாசன், சுத்தானந்த பாரதி, ந.சஞ்சீவி, மு.வரதராசன் ஆகியோரின் புதிய ஆத்திசூடி, ந.ரா.நாச்சியப்பன் – நெறிசூடி, ச.மெய்யப்பன் – அறவியல்சூடி, தமிழண்ணல் – ஆய்வு சூடி, ரெ.முத்து கணேசன் – முத்துசூடி, புலவர் சோம.இளவரசு – நீதி சூடி எனத் தங்கள்

விருப்பத்திற்கேற்ப பெயர்களை அமைத்துக் கொண்டனர். இவர்களைப் போல் வ.சுப.மாணிக்கனார் தமிழ்சூடி என்னும் நூலை இயற்றியுள்ளார். இந்நூலில் சிறுவர்கள் சிந்திக்கத்தக்க 118 சிறந்த அறக்கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. தமிழ்சூடி பாயிரத்தில்,

"தமிழ்சூடி வழிபாடு செய்வாய்
குழந்தாய்தாய்மொழி தவறாது கற்பாய்
குழந்தாய்திருக்குறள் கண்போலத் தெளிவாய்
குழந்தாய்தீமைகள் மனத்தினும் தீண்டாய்
குழந்தாய்துடிபோலப் பள்ளிக்குத் தொடர்வாய்
குழந்தாய்தூய்தமிழ் எங்குமே சொல்வாய்
குழந்தாய்தென்றலில் நன்றாகத் திளைப்பாய்
குழந்தாய்தேனினிய நூலகம் செல்வாய்
குழந்தாய்தைத்திங்கள் பொங்கலில் தளிர்ப்பாய்
குழந்தாய்தொண்டுகள் பலசெய்யத் துடிப்பாய்
குழந்தாய்தோலாத தமிழ்நூல்கள் தொகுப்பாய்
குழந்தாய்தமிழ்சூடி வழிபாடு செய்வாய் குழந்தாய்" – (மாமலர்கள், ப.140)

என்று வ.சுப.மாணிக்கனார் பாடியுள்ளார். தாய்மொழியாம் தமிழ் மொழியைத் தவறாமல் கற்றுத் திருக்குறளில் தெளிவு பெற்றால் மனத்தில் தீமைகள் அண்டாது என்கிறார். துடிப்போடு பள்ளிக்குச் சென்று தூய தமிழில் பேச சொல்கிறார். இயற்கைக் காற்றை சுவாசித்து, நூலகத்தில் நல்ல நூல்களை வாசித்து தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை நன்றாகக் கொண்டாடப் பணிக்கின்றார். வாண்டுகள் தொண்டுகள் பல செய்து, தமிழ் நூல்களைத் தொகுத்து தமிழை மாலையாகச் சூடி வழிபடச் சொல்கின்றார்.

வ.சுப.மாணிக்கனார் தமிழ் சூடியில் தமிழ்மொழி, தமிழ் நூல்கள், தமிழ் இனம் குறித்துப் பேசுகிறார். செந்தமிழ் பயில் (50), சொல்லைக் கலவேல் (53), இந்தியை விலக்கு (21), தாய்மொழி முதன்மொழி (62), அகத்தமிழ்படி (1), புறத்திணை படி (88), தொல்காப்பியம் படி (70), திருக்குறள் வரப்பண் (63), சங்க நூல் போற்று (44), ஔவையைப் போற்று (12), குறுந்தொகை படி (36), முத்தமிழ் பரப்பு (100), தமிழிசை பரப்பு (61), யாப்புப் பழகு (108), தேவாரம் பாடு (68), விவிலியம்படி(113), மொழிபல கல் (104), நூல்கள் எழுது (77), கண்ணகி வழிநட (19), சிலம்பை நடி (46), பூம்புகார் போற்று (89), பேகனைப் புகழ் (91), ஆழ்வார் நெறிநில் (2) எனத் தமிழ்சூடி உரைக்கின்றது. தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்று, அதற்கு ஏற்ப வாழுமாறு வலியுறுத்துகின்றார். மேலும், தீண்டாமை யொழி (64), போரையொழி (94), மதுவை விலக்கு (96), கையூட்டு மறு (40), கிளர்ச்சி எதற்கு (34) எனச் சமூக அவலங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளார்.

நெஞ்சை உயர்த்து (78), உன்னைத் திருத்து (31), ஏனென்று கேள் (8), சாவிலும் மகிழ் (45), பிறவியை மதி (86), மக்களை மதி (14), யமனைப் புறங்காண் (45), மாற்றம் விரும்பு (97) என தன் முன்னேற்றச் சிந்தனைகளை விதைத்துச் சென்றுள்ளார்.

பெண்மையைப் போற்றிய வ.சுப.மாணிக்கனார்

இலங்கை வேந்தன் இராவணனின் மனைவி மண்டோதரி, அரக்க மன்னன் தேவதச்சன் மயனின் மகள். அழகு, கடமை, கண்ணியம், நேர்மை பண்புகள் நிறைந்தவள். இராவணன் பிறன் மனையாளாகிய சீதையைக் காமுற்று அசோகவனத்தில் கொண்டு வந்து சிறை வைத்திருக்கிறான் என்ற செய்தி கேட்டு மண்டோதரி மனம் உடைந்து கலங்குகிறாள். அவனைத் திருத்தத் துணிவு கொள்கிறாள். இராவணன் நள்ளிரவில் அசோகவனம் சென்று இரந்து சீதையின் காலடியில் விழ முற்பட்டபோது, அங்கு முன்னரே சென்றிருந்த மண்டோதரி எதிரே நிற்கிறாள். தன் மனைவியைக் கண்ட இராவணன் நடுங்குகிறான். மண்டோதரி அவனுக்கு அரசு நெறியையும் ஒழுக்க நெறியையும் இடித்துச் சொல்லிச் சீதைக்கு உடனே, விடுதலை அளிக்கிறாள். கணவனைத் திருத்திய மண்டோதரியின் கற்புப் புரட்சியை,

நுழையாத குடிசைக்குள்
நோன்பிருப்பார் விட்டகன்ற நொடிமை
பார்த்துவிழையாத முனிவேடம்
மேற்கொண்டுபிறனுடலை விரும்பித்
தூக்கிஇழையாத துயர்வனத்தில்
இல்லாள்கள் செவிகேட்க வைத்தான்
என்றால் பிழையாத மனைவியர்க்கும்
பிழைசெய்யஇடங்கொடுத்த பிசடு
போமேகளித்தாடுங் கணவனையும்
கழிகாமக் கணவனையும் கன்று
சூதல்விளித்தாடுங் கணவனையும்
வினைசுருக்கித்தசைபெருக்கி வீம்பே
பேசிநெளித்தாடுங் கணவனையும்
நெஞ்சரிக்கும்புகைகுடித்து நீள
ஊதித்திளைத்தாடுங் கணவனையும்
திருத்துகின்ற பொறுப்புடையாள் தீமை யில்லாள் – (மாமலர்கள், பக்.147-148)

என்று ‘புரட்சி மண்டோதரி’ பாடல் பாடுகின்றார். இராமன் இல்லாத கவிதையில் நேரத்தில் முனிவர் வேடத்தில் சீதையைத் தூக்கி வந்த இராவணனைத் திருத்தும் கற்புடையாளாக மண்டோதரியைக் காட்டியுள்ளார் வ.சுப.மாணிக்கனார். இந்தப் படைப்பில் இராவணணின் கயமை, பேதைமை, கீழ்மை, சூழ்ச்சி பேசப்படுகிறது. மண்டோதரியை புரட்சிப் பெண்ணாகக் காட்சிப்படுத்தியுள்ளார்.

வீரச்செல்வி செம்மலர்

'கொல்லாச் சிலம்பு' என்னும் கவிதையில், பொற்கொல்லன் மனைவி செம்மலர் என்பவள் தன் வீட்டின் உள்ளறைக்குள் விலை உயர்ந்த சிலம்பு ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருப்பதைத் திடீரென காண்கிறாள். பாண்டிமாதேவி தன் ஒரு சிலம்பு காணாமல் போயிற்று என்று சொன்ன செய்தி நினைவுக்கு வருகிறது. குடுகுடுப்பைக்காரனுக்குப் பொற்கொல்லன் கொடை செய்த அருமையும் அவள் நினைவுக்கு வருகிறது. உடனே, பாண்டியன் தேவியைப் பார்க்கிறாள். புகாரிலிருந்து மனைவியொடு வந்த ஒரு வணிகன் தன் சிலம்பைக் களவாடினான் எனவும் பெருந்தண்டனை பெறுவான் எனவும் தேவி வெளிப்படுத்துகிறாள். இவருவரும் அரசவைக்குச் சென்ற சமயம் கள்வனைக் கொன்று சிலம்பினைக் கொண்டு வருக என்று பாண்டியன் ஊர்க் காவலர்க்குக் கட்டளையிட்டுக் கொண்டிருக்கிறான். அரசனை இடைமறித்துச் செம்மலர் இத்தீர்ப்பு முறையற்றது எனக் கூறித் தான் அன்று எதிர்பாராது ஓரிடத்துக் கண்ட சிலம்பினைக் காட்டுகிறாள். அதுதான் காணாமல் போன பாண்டிமாதேவியின் காற்சிலம்பு.

நிகழ இருந்த கொலையைத் தவிர்த்து செங்கோலையும் தங்கள் உயிர்களையும் காத்து அளித்த செம்மலர் நல்லாளைப் பாண்டியன் அரசவையில் பொதுமக்கள் முன்னிலையில் பாராட்டுகிறான். அவளது பெருந்தொண்டினையும் துணிச்சலையும் உலகத்தார் அறிய வேண்டிய 'செம்மலர்' என்ற நாடகம் அரசு விழாவாக ஆண்டு தோறும் நடைபெற வேண்டும் என்று ஆணையிடுகிறான். பாண்டியன் அன்புப் பரிசாக வழங்கிய முத்து மாலையைச் செம்மலர் தன் தொண்டின் பரிசாக வாங்க மறுத்து விடுகிறாள். தங்களுக்கு வர இருந்த தீய விளைவுகள் செம்மலரின் கடமை வீரத்தால் மாறி விட்டன என்ற நிலையறிந்த கோவலனும் கண்ணகியும் 'வீரச்செல்வி' என்று செம்மலராளை மனத்தில் வைத்துப் போற்றுகின்றனர். செம்மலர் நங்கையின் நற்புகழினை,

"சோலை மலருட் சுருண்ட
பாம்புபோல்சேலை யடுக்கினுட் சிலம்பணி
கண்டாள்பொன்செய் கொல்லன் பொன்னன்
மனையாள்நன்செய் போலும் நல்வரம்
புடையவள்பைங்கலன் கொழிக்கும் பட்டினம்
பிறந்தவள்செம்மலர் என்னும் செல்லப்
பெயரினள்நாற்பது வயதினும் நலியா
இளமையள்ஏற்பதை ஏற்பாள் எதிர்ப்பதை
எதிர்ப்பாள்திண்ணைப் பள்ளியிற் சிறுதமிழ்
கற்றாள்எண்ணல் பெருக்கல் இளங்கணக்
கறிவாள்உண்மைக் கதைகளை உள்ளங்
கொள்வாள்அரிய தாயினும் உரியதைப்
பேணிஉரிய தாயினும் ஊர்வம்பு

பேசாள்அன்புடைக் கணவன் அரண்மனைக்
கொல்லன்என்ற தொடர்பால் இல்லற
முதலேபாண்டிய தேவியொடு பழகி வருவாள்" – (மாமலர்கள், ப.153)

என்று வ.சுப.மாணிக்கனார். புகழ்ந்துப் போற்றியுள்ளார். செம்மலர் என்பவள் நல்லவற்றை ஏற்பவளாகவும் அல்லவற்றை எதிர்ப்பவளாகவும் படைக்கப்பட்டிருக்கிறாள். பாண்டியனைக் கொலைப் பழியில் இருந்து காப்பாற்றியதற்காக,

எதிரது அறிந்துடன் எல்லாம்
தடுத்த முதுக்குறை நங்கைக்கு முடிதாழ்
வணக்கம்!கொலையும் பழியும் கொடுமையும்
தவிர்த்துநிலையும் புகழும் நேர்மையும்
காட்டிஉற்ற காலத்துள் ஓடோடி
வந்துகுற்றம் புகாமல் கோன்மை
காத்துப்பெற்ற தாயினும் பேரன்பு
செய்தவெற்றிச் செம்மலர் வீரியை வணங்குதும்" – "(மாமலர்கள், பக்.157-158)

என்று செம்மலரைப் புகழ்ந்து வணங்குகிறார். பெற்ற தாயினும் சிறந்தவளாக செம்மலரை பாண்டிய மன்னன் உயர்த்திப் போற்றியுள்ளான். கண்ணகியைப் புலம்ப வைத்த பொல்லாச் சிலம்பை கொல்லாச் சிலம்பு என்று வ.சுப.மாணிக்கனார் கூறுகின்றார். சிலம்புக்கு உரியவளான கண்ணகியையும் அவளது கணவன் கோவலனையும் கொல்லாச் சிலம்பு புகழ்ந்து பேசுகிறது. பாண்டிய மன்னனின் தீர்ப்பு இந்தப் படைப்பில் ரத்து செய்யப்படுகிறது. கோவலன் மீது சுமத்தப்பெற்ற குற்றம் நிராகரிக்கப்பட்டுள்ளது. பாண்டிய மன்னன் நல்லவனாகவும் குடிமக்களுக்கான நீதியை நிலை நாட்டக் கூடியவனாகும் கடமை தவறாதவனாவும் காட்சிப்படுத்தபட்டிகிறான். இந்தப் படைப்பை வ.சுப.மாணிக்கனார் சிலப்பதிகாரத்தின் மாற்றுச் சிந்தனைக்கான விதையாக ஊன்றியுள்ளார்.

முடிவுரை

வ.சுப.மாணிக்கனார் படைப்பாளர், பேராசிரியர், தமிழ்ப் பற்றாளர், பதிப்பாளர், உரைநடை ஆசிரியர், உரை ஆசிரியர், நாடக ஆசிரியர், கவிஞர், ஆய்வாளர், ஆங்கிலப் புலமையாளர் எனப் பன்முக ஆற்றல் வாய்ந்தவராக ஒளிர்கின்றார். இவரது கவிதை நூல்கள் இவரை மிகச் சிறந்த கவிஞராக அடையாளப்படுத்துகின்றன. தொல்காப்பியம், சங்க நூல்கள், திருக்குறள், திருவாசகம், இராமாயணம், பாரதியம் ஆகியவற்றில் தனித்த ஈடுபாடு கொண்டவர் என்பதை இவரது கவிதைகள் மெய்ப்பித்துக்காட்டுகின்றன. குறிப்பாக, மாமலர்கள் என்னும் கவிதை நூல் இவரை மாபெறும் கவிஞராகவும், சிந்தனையாளராகவும் வெளிக்காட்டியுள்ளது. இந்நூலினைப் பல்வகைச் செய்யுளோடு பல்வகைப் பொருண்மைச் சார்ந்ததாகப் படைத்திருக்கிறார்.

பழைமையில் பிடிப்பும் புதுமையில் வேட்கையும் கொண்டவராகத் திகழ்கின்றார். இந்தியை எதிர்த்தும் தாய்மொழியாம் தமிழ்மொழிக் கல்வியை ஆதரித்தும் எழுதியுள்ளார். தாய்மொழியைக் கற்க வலியுறுத்தும் வ.சுப.மாணிக்கனார் மொழிக்கலப்பினால் தாய்மொழியான தமிழ்மொழிக்குக் கேடு விளையும் என்பதையும் தெளிவுற உரைக்கின்றார்.

எழுத்துச் சீர்திருத்தத்தை பெரிதும் ஏற்றுக் கொள்ளாதவர் என்பதை இவரது கவிதைகள் புலப்படுத்துகின்றன. தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழ் இனம் பற்றிய சிந்தனைகள் இவரது கவிதைகளில் நீக்கமற நிறைந்திருக்கின்றன.

தமிழர்கள் ஆங்கிலத்தின் பால் கொண்ட மோகத்தைச் சாடியுள்ளார். இந்தி இந்தியாவின் பொதுமொழி இல்லை என்பதைத் தம் கவிதை வழி நிறுவியுள்ளார். தமிழ் மொழி, தமிழ் இசை, தமிழ்க் கல்வி, தமிழர் கலை வளர்த்த சான்றோரை உச்சி முகர்ந்து புகழ்ந்துள்ளார்.

வ.சுப.மாணிக்கனார் உள்ளம், சொல், செயல்களால் தூய்மையானவர் என்பதால் நாடு நலம் பெற நற்கருத்துக்களை நாளும் சிந்தித்து எழுதியுள்ளார். சிறார் மனங்களில் நல்ல கருத்துக்களை விதைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஆத்திசூடி அமைப்பில் தமிழ்சூடி இயற்றிச் சிறுவர் உள்ளமும் வாழ்வும் செழிப்புற வழிவகைக் கண்டுள்ளார். 'புரட்சி மண்டோதரி', 'கொல்லாச் சிலம்பு' என்னும் இரண்டு கவிதைகளும் இராமாயணம், சிலப்பதிகாரம் சார்ந்த காப்பியங்களாகவும், இவை பெண்மைக்கும் பெண்களின் புரட்சிப் பண்புக்கும் மதிப்பளிக்கும் புதிய படைப்புகளாக மிளிர்கின்றன.

தன் வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவே வாழ்ந்து தமிழ் வளர்ச்சியைப் பற்றியே சிந்தித்துத் தமிழின் சிறப்புகளைப் பற்றி ஆய்வுகள் செய்து தானே தமிழாகி விட்ட தமிழ்ப் பேராசானுக்கு இக்கட்டுரை சமர்ப்பணம்.

வ.சுப.மாணிக்கனாரின் மொழிச்சிந்தனைகள்

vallamai.com/

March 18, 2018

செ.செந்தில்பிரகாஷ்,முனைவர்

உதவிப் பேராசிரியர்,

தமிழாய்வுத்துறை,

அ.வ.அ.கல்லூரி (தன்.),

மன்னன் பந்தல்,

மயிலாடுதுறை.

`தமிழ் இமையம்'ஞால முதன்மொழியாய் உயர்தனிச் செம்மொழியாய் வீற்றிருக்கும் தமிழ்மொழி தான் தோன்றிய காலந்தொட்டு இன்று வரை பல்வேறு வகைப்பட்ட தாக்குதல்களுக்கும் அழிப்பு வேலைகளுக்கும் ஆட்பட்டே வருகின்றது. இத்தகைய வரலாற்று நிகழ்வுகளைத் தொல்காப்பியர் காலந்தொட்டு இன்றளவுமான நெடிய வரலாற்றுப் பாதையில் நம்மால் காணமுடிகின்றது. இவ்வகையில் இருபதாம் நூற்றாண்டின் மொழிப்போராட்ட வரலாற்றில் தமிழ்த்தாய்க்குத் துணை நின்ற தமிழறிஞர்களுள் ஒப்பற்ற மணியாய் திகழ்பவர் வ.சுப.மாணிக்கனார் ஆவார். இவர் தம் வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவே வாழ்ந்து தமிழ் வளர்ச்சி பற்றியே சிந்தித்து தமிழின் சிறப்புகள் பற்றி பல ஆய்வுகள் செய்தமையால் என்று தமிழறிஞர்களால் போற்றப்பட்டவர். தமிழுக்கு ஆக்கம் சேர்க்கும் நூல்கள் பல படைத்தவர். தமிழ் கலைச்சொற்கள் பல உருவாக்கியவர். தன் வாழ்வில் படிப்படியாய் உயர்ந்து தான் வகித்தப் பதவிகளுக்குப் பெருமை சேர்த்தவர். தமிழின் உரிமையினை நிலைநிறுத்த சிதம்பரம் கோயிலில் திருமுறைகள் பாடப்பெற வேண்டும் என்று தமிழ் ஆர்வலர் துணையோடு போராட்டம் நடத்தி வெற்றி கண்டவர். தமிழ் வழிக் கல்வி இயக்கம் தொடங்கி தமிழ் நலக்கருத்து பரப்புரை செய்து மழலையர் பள்ளிகள் எல்லாம் தமிழ் வழிப்பள்ளிகளாக விளங்க வேண்டும் என்று வற்புறுத்தி வந்தவர். இவர் படைத்த நூல்கள் யாவிலும் தமிழ் மொழி, இனம், நாடு குறித்த சிந்தனைகள் பெரிதும் மிளிர்வதைக் காணலாம். அவற்றுள் தலைவர்களுக்கு என்ற தலைப்பில் எழுதப்பட்ட கடித வகையிலான நூலில் தமிழ்மொழி குறித்த சிந்தனையோடு இந்திய மொழிகளின் எதிர்கால நிலை குறித்த சிந்தனைகளும் இடம்பெறுவதைக்காணலாம்.

வ.சுப.மாணிக்கனாரின் தலைவர்களுக்கு

25வ.சுப.மாணிக்கனாரால் கடித வடிவில் எழுதப்பட்ட தலைவர்களுக்கு என்ற தலைப்பிலான கடிதங்களைக் கொண்ட இந்நூல் இந்திய மொழிகளின் எதிர்கால வளர்ச்சிக்கான சிந்தனைகளை முன் வைப்பதோடு இன்று நிலவும் மொழிச்சிக்கலுக்கான தீர்வினைக் கொடுக்கும் வகையிலும் அமைந்துள்ளது. இந்நூல் எழுதப்பட்ட சூழலானது மிக நீண்ட வரலாற்றுப் பின்புலத்தினைக் கொண்டுள்ளது. அவற்றை இக்கட்டுரையின் முதல் பகுதியில் காணலாம்.

பன்மொழி தேசிய கூட்டாட்சி நாடாக உருவாக்கப்பட வேண்டிய இந்தியத் துணைக்கண்டம் ஒரு மொழித் தேசியமாகக் கட்டப்படுகின்றது. இதனால் பிற மொழித் தேசியங்கள் நசுக்கப்பட்டு வருகின்றன. இந்தியானது இந்தியத் துணைக்கண்டத்தில் வாழும் பல மொழிகள் மீது ஆதிக்கம் செலுத்துவதால் மொழிச்சிக்கல் உருவாகின்றது. இதனைக் கண்டுகொள்ளாமல் மெத்தனமாக இருந்தால் இந்தியா பல பகுதிகளாக உடையும் என்பதையும் கணித்த வ.சுப.மாணிக்கனார் இந்திய ஒருமைப்பாடு என்பது சிதையாமல் காக்கப்பட அவர் முன்மொழியும் மொழிச்சித்தாந்தங்களை இக்கட்டுரையின் பின்பகுதியில் காணலாம். மாணிக்கனார் நூல் எழுதப்புகுமுன் மூன்று முத்தான கருத்துக்களை முன் வைத்தே தொடங்குகிறார். அவற்றில் உடன்பாடு உள்ளோரே மேற்கொண்டு தன் கடிதத்தைத் தொடரவேண்டும் என்று தெளிவுறுத்துகிறார். அவை,

1. வன்முறை எதற்கும் என்றும் எவரும் கையாளக்கூடாது.
2. பாரதத்தின் ஒருமை பாழ்படக்கூடாது.
3. அடிப்படை உரிமையில் ஏற்றத்தாழ்வு கூடாது.

`இந்தியத் தமிழன்'என்பதுவேயாகும். இவற்றின் மூலம் அவரின் உண்மையான இந்திய ஒருமைப்பாட்டுணர்வு புலப்படும். மேலும் ஒவ்வொரு கடிதத்தின் இறுதியிலும் தன்னை என்றே அடையாளப்படுத்திக் கொள்கிறார். இவ்வுணர்வுடனேயே அவரின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டே இக்கட்டுரையும் எழுதப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்திக் கொள்கின்றேன். ஏனெனில் இந்தித் திணிப்பிற்கு எதிராகப் பேசுபவர்கள் இந்திய நாட்டிற்கே எதிரானவர்களாகவும் இந்தியை ஏற்றுக் கொள்பவர்களே இந்திய தேசபக்தர்கள் என்று பார்க்கப்படும் தவறான போக்கு இன்று பெருகிக் கொண்டிருப்பது முதன்மைக் காரணியாகும்.

நூல் இயற்றப்படுவதற்கான வரலாற்றுப் பின்புலம்

இன்று இந்தியா என்றழைக்கப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட இப்பெரு நிலப்பரப்பு வரலாற்றில் ஆங்கிலேயர் வருவதற்கு முன்னர் ஒருங்கே இருந்தது இல்லை. இப்பெரு நிலப்பரப்பினை ஆட்சி செய்து வந்த மன்னர்கள் தங்கள் வலிமையின் வழி ஒருசில பகுதிகளைத் தவிர்த்த ஒற்றைப் பேரரசாகவோ பலநூறு குறுநில மன்னர்களால் ஆளப்படும் பகுதிகளாகவோ பல காலகட்டங்களில் மாறுதல்களுக்கு உட்பட்டே இருந்தது. ஓர் பகுதியை பிறமொழி இனத்தவர்கள் வந்து ஆள நேரிட்டபோதிலும், மக்கள் மொழியே நீதி மன்றங்களிலும் அலுவல் நிலைகளிலும் ஆட்சிமொழியாகப் பயன்பட்டு வந்தது. முகலாயர்

ஆட்சியில் இந்நிலை சற்று மாறினாலும் பாதிப்பு பெருமளவு இல்லை. ஆனால் ஆங்கிலேயர் இம்மண்ணைப் பிடித்து ஆட்சி செய்ய முற்பட்டபோதுதான் ஆட்சிமொழி பற்றிய சிக்கல் ஏற்படத் தொடங்கியது. இந்தியத் துணைக்கண்டம் பற்பல நாடுகளாகவும் சிற்றரசுகளாகவும் சுதந்திரம் உள்ளவை, சுயாட்சி பெற்றவை, கப்பம் கட்டுபவை என மூவகையாக இருந்து வந்தன. எனவே இந்தியப் பேரரசு என்பது இல்லாது இருந்ததால் மத்திய அரசு என்ற ஒன்று

இருந்ததில்லை. இவ்வாறாக அதுவரை இல்லாத இந்தியத் துணைக்கண்டத்தினையே ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனி தன் துப்பாக்கியின் வலிமையால் ஒரு நாடாக உருவாக்கியது. ஆங்கிலேயர்கள் தங்களின் நிர்வாக வசதிக்காகப் பலமொழி பேசும் மக்களை ஒன்றாக இணைத்து ஆளும் மாகாண ஆட்சி முறையைப் புகுத்தினர். இம்மாகாண ஆட்சி முறையில் மக்களின் மொழிகள் பயன்படுத்தப்படாமல் ஆங்கில மொழி பயன்படுத்தப்பட்டது. பல்லாண்டுகளாக அடிமைப்பட்டிருந்த பாரத துணைக்கண்டத்தின் பல தேசிய இனங்கள் ஒன்றிணைந்து ஒரு குடையின்கீழ் நின்று தங்களது விடுதலைக்காக போராடி வந்த நிகழ்வுகளை வரலாற்றில் நாம் கண்கூடாகக் காணலாம்.

இந்திய ஒன்றியத்தின்கீழ் ஏற்பட்ட மொழிச்சிக்கல்

`மாகாண சுயாட்சி’193519201945ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்ற நிலை எடுத்தபோது விடுதலைப் போராட்டத் தலைவர்களுக்கும் அறிஞர்களுக்கும் இடையில் அடுத்து எவ்வகை அரசு ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கேள்வி எழுந்தது. பல்வேறு மொழிவழித் தேசிய இனங்களும், மத அடிப்படையில் இஸ்லாமியர்கள் செறிவாக உள்ள மாகாணங்களும் உள்ள இந்தியத் துணைக்கண்டத்திற்கு ஏற்றதாக இருக்கும் என்ற கருத்து நிலவியது. மாநில சுயாட்சி என்ற அரசியல் தீர்வு பல்வேறு மொழிவழித் தேசிய இனக்கோரிக்கைகளை நிறைவு செய்யவல்லது என்பது பல இந்தியத் தலைவர்களும் ஆங்கிலேயர்களும் கண்ட முடிவு. ஆகவேதான் இல் மாநில சுயாட்சி என்ற அமைப்பை ஆங்கிலேயர்கள் அறிவித்தனர். அக்கால காங்கிரஸ் கட்சியும் மாநில சுயாட்சியை மிக வலிந்து கோரியது. ஆம் ஆண்டு முதல் ஆம் ஆண்டு வரை மாநிலங்கள் மொழி அடிப்படையில் பிரிய வேண்டும் என்ற கொள்கையை பலமுறை காங்கிரஸ் உறுதி செய்தது.

19561522ஆனால் இந்திய விடுதலையின் போது நடந்தது என்பது வேறு கதை. இந்தியா இரண்டாகப் பிரிந்த நிலையில் கலவரங்களும் வன்முறைகளும் நிகழ்ந்ததைக் காரணம் காட்டி ஒரு வலிமையான மத்திய அரசை காங்கிரஸ் உருவாக்கியது. இந்நிலை ஒற்றை மொழி வளர்ச்சிக்காகவும் ஒற்றை ஆதிக்க தேசிய இன மேலாண்மைக்காகவும் வட இந்தியப் பெரு முதலாளிகளின் ஒட்டுமொத்த சுரண்டலுக்கும் நிலைக்களனாக அமைந்தது. மொழிவழி மாநில சுயாட்சி உருவாக்கப்பட்டு தங்கள் மொழிசார்ந்த கலை, பண்பாட்டுக் கூறுகள் மேம்பாடடையும் என்று எண்ணியிருந்த மொழியுணர்வாளர்களின் தலையில் பேரிடியாக விழுந்தது. இந்தியா முழுவதும் மொழிவழி மாநிலம் வேண்டி போராட்டங்கள் எழ ஆரம்பித்தன. சிலபகுதிகள் மாநிலங்களாகப் பிரிந்தன. மேலும்

கிளர்ச்சிகள் தோன்ற ஆம் ஆண்டு பசுல் அலி என்பவர் தலைமையில் மாநிலச் சீரமைப்புக்குழு அமைக்கப்பட்டது. மொழிகள் தேசிய மொழிகளாக அறிவிக்கப்பட்டன. இன்று மொழிகள் இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் தேசியமொழிகளாக இடம்பெற்றுள்ளன. இன்னும் சில மொழிகள் வரிசையில் காத்துக்கிடக்கின்றன.

பயனற்ற மொழிவழி மாநிலம்

19561950356இல் ஏற்படுத்தப்பட்ட மொழிவாரி மாநிலங்கள் இவர்களது தேசிய இன உணர்வின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யவில்லை. ஏனெனில் ஆம் ஆண்டே இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி என்று முடிவு செய்யப்பட்டுவிட்டது. இறையாண்மையற்ற தேசிய இன வரையறையற்ற, அதிகாரமற்ற மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு இந்தியாவின் மத்திய அரசிற்கு ஆடும் கைப்பாவை போல மாநிலங்கள் அமைக்கப்பட்டன. மேலும் சுயமாக நடக்கக் கூடிய மாநில அரசை கலைப்பதற்கு இந்திய அரசுச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. இதனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசை ஒரே இரவில் கலைத்துவிடலாம். இந்திய அரசியல் வரலாற்றில் பல மாநில அரசுகள் கலைக்கப்பட்டும் உள்ளன.

தேசிய இனங்களின் மொழிப்போராட்டம்

19631326.01.196526.01.19651965தேசிய இனங்களின் தன்னெழுச்சிப் போராட்டங்களுக்கு இடையில் ஆட்சிமொழி ஆணைக்குழு மற்றும் நாடாளுமன்ற ஆய்வுக்குழு தந்த பரிந்துரைகளின் அடிப்படையில் ஆட்சிமொழிச் சட்டத்தை ஏப்ரல் ஆம் நாள் அன்றைய உள்துறை அமைச்சர் இலால் பகதூர் சாஸ்திரி அவர்கள் நாடாளுமன்றத்தில் முன்மொழிந்தார். அதில் ஆம் நாள் முதல் இந்தியே இந்தியாவின் ஆட்சிமொழி மேலும் ஆங்கிலம் இந்தியுடன் கூடுதல் மொழியாகப் பயன்படுத்தலாம் எனப்பட்டது. இதில் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக நீடிக்கும் என்று அதில் உறுதியாகச் சொல்லப்படவில்லை. இது இந்தி பேசாத மாநில மக்களுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியது. க்குப் பின்னர் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் மத்திய அரசால் இந்தியில் வெளியிடப்படும் மத்திய அரசுச் சட்டங்கள், ஆணைகள், கட்டளைகள், நெறிமுறைகள் ஆகியவை மட்டும்தான் அதிகாரப்பூர்வமானவை. மாநில அரசுகள் மைய அரசினை தொடர்பு கொள்ளும்போது இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டு மாநில ஆளுநர் அனுமதியுடன் வெளியிடப்பட வேண்டும். செப்டம்பர் முதல் I.A.S மற்றும் I.P.S போன்ற மத்திய அரசுப் பணிகளுக்கான தேர்வுகளை ஆங்கிலத்தோடு இந்தியிலும் எழுதுவதற்கு இந்தி ஆட்சி மொழிச்சட்டம் வகை செய்தது.

நூல் எழுந்த காலச்சூழல்

இந்தி மொழியின் தடையில்லா வளர்ச்சி காரணமாக இந்தி பேசும் மக்கள் அரசுப்பணி, நிர்வாகம், நீதித்துறை என அனைத்துத் துறைகளிலும் மேம்பாடு அடைந்து வருவர் அதற்கு மாறாக இந்தி பேசாதவர்கள் மொழி மூலமாக வாய்ப்பு மறுக்கப்படுவதால் தாழ்வு அடைகின்றனர். தங்களின் உரிமைகளை இழந்த இந்தி பேசாத மாநில மக்கள் தங்கள் மாநிலங்களில் இந்திய அரசுக்கு எதிராகப் பல போராட்டங்களை நடத்தினர். இதில் இந்திய ஆட்சி மொழிச் சட்டத்தை எதிர்த்து மத்திய அரசை எதிர்த்து தமிழ்நாடு நடத்தியப் போராட்டம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகும். இப்போராட்டத்தில் பல ஊர்களில் உள்ள அஞ்சலகங்களும் தொடர்வண்டி நிலையங்களும் காவல்துறை வண்டிகளும் மட்டுமல்லாமல் இராணுவ வண்டி பஞ்சாலை திரையரங்கம் என பல தீக்கிரையாக்கப்பட்டதாகத் தெரிகிறது. இப்போராட்டத்தை கலைக்கவும் அடக்கவும் தமிழகக் காவல் துறையினர் 33,000 பேர்களும் ஆந்திர, மைசூர், கேரளா, மகாராட்டிரம், மத்தியப்பிரதேச காவல் துறையினர் 4,000 பேர்களும் 5,000க்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களும் ஈடுபடுத்தப்பட்டனர். காவலர்கள் ஆர்ப்பாட்டக் கூட்டத்தினரைக் கலைக்க 70க்கும் மேற்பட்ட இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஒரு இடத்தில் மட்டும் இராணுவத்தினர் இயந்திரத் துப்பாக்கியால் சுட்டனர். இந்த துப்பாக்கிச் சூட்டில் 500க்கும் மேற்பட்ட தமிழர்கள் இறந்ததாகத் தெரிகிறது. ஆனால் 70 பேர்களே இறந்ததாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. காவலர்கள் 4பேர் இறந்தனர். 210பேர் காயமுற்றனர். ஐம்பது நாட்கள் நடைபெற்ற இப்போராட்டத்தில் மொத்தம் 6 மொழியுணவாளர்கள் இந்தித் திணிப்பை எதிர்த்து தீக்குளித்தும் 2பேர் நஞ்சுண்டும் இறந்தனர். இவ்வாறாக தமிழர்கள் தங்கள் உடல் உறுப்புகளையும் உடைமைகளையும் இழந்து இன்னுயிரையும் ஈகம் செய்து நடத்தப்பட்ட இத்தகைய போராட்டச் சூழலை மையமிட்டே மாணிக்கனாரின் தலைவர்களுக்கு என்ற கடித நூல் எழுதப்பட்டது. இதில் இந்திய ஆட்சிமொழி குறித்துச் சிந்தித்த இந்தியத்தலைவர்கள் தெளிவுற வேண்டிய இடங்கள் குறித்தும் இந்தி மொழியானது பிற இந்திய தேசிய மொழிகள் மீது ஆதிக்கம் செலுத்துவதால் ஏற்படும் மொழிச்சிக்கல்கள் குறித்தும் அதற்கு தீர்வுகள் கொடுக்கும் அவரது சிந்தனைகளையும் இனிக் காணலாம்.

சிதையும் தேசிய மொழிகள் குறித்தச் சிந்தனை

இந்தியத் துணைக்கண்டமானது பன்மொழித் தேசிய இனங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. அவற்றுள் இந்தி ஒரு திசை வழக்கு, தமிழ் ஒரு திசை வழக்கு இவை போல பல மொழிகள் உள்ளன. இவற்றுள் இந்தியை மட்டும் பொதுமொழியாகவும் நடுவணரசின் வளர்ப்பு மொழியாகவும் இருப்பதனால் பிறமொழிகளின் வாழ்வு தடைபடும். பிறமொழி வட்டாரங்களில் எல்லாம் இந்தி வழக்குப் பெருகும். எல்லா மாநிலங்களிலும் இந்தித் தாய்மொழியாளர் என்ற புதுவினம் இடையிடையே முளைக்கும். இந்தி ஒரு திசை வட்டார வழக்கு என்ற தன்மை ஒழிந்து பரந்து வழங்கும் பாரத மொழியாகிவிடும். அரசுக்கு எது மதமோ அதுதான் நாடெங்கும் பரவும், அரசுக்கு எது மொழியோ அதுதான் நாடெங்கும் சிறக்கும். அதுபோல அரசுக்கு எது மொழியோ அதுதான் நாடெங்கும் ஆதிக்கம் செலுத்தும். மற்ற தேசிய மொழிகளை மிகச் சிறுமொழி,

குறுமொழியாக்கிவிடும். முன்னர் வடக்கே வாழ்ந்த முண்டா பெருமொழியும் அதன் கிளை மொழிகளான சந்தாலி, முண்டாரி, சவேரா, கரியா போன்ற மொழிகள் தன்னிலையிலிருந்து திரிந்தன. வடக்கில் வாழ்ந்த திராவிட மொழிகளான ஒரோவான், மால்டோ, கோந்து, கோலமி, பிராகூய் முதலானவை சுருங்கிக் குன்றிப் போனமைக்கு வட இந்திய மொழிகளின் ஆதிக்கமே காரணமாக அமைந்தது. இம்மொழியாளர்களுக்கு நாளடைவில் வட இந்திய மொழிகளே தாய்மொழிகளாகிவிட்டன. என்ற எடுத்துக்காட்டோடு தேசிய மொழிகளுக்கும் இத்தகைய நிலை ஏற்பட்டுவிடும் என்று வ.சுப.மாணிக்கனார் எச்சரிக்கை செய்தார்.

இந்தி ஒன்றே பொதுமொழி என்பதால் அதனைப் பாரத அரசு கோடி கோடிப் பொருள் செலவிட்டு அதிகாரத்தோடு மூலை முடுக்கெல்லாம் பரப்புகிறது. அதனால் பழைய மதமாற்றம் போன்று புதிய மொழிமாற்றம் ஏற்படும். ஏனைய மொழியினர் வாழ்வு நச்சி இந்தியைத் தாய்மொழியாகவே தழுவும் நிலை வரும். வந்தால் அஞ்சத்தக்க விளைவுகளும் கொடுமைகளும் உண்டாகும். இந்தியை மட்டும் படித்தால் போதும், தன் மாநிலத்திலும் வேலை கிடைக்கும், பிற மாநிலங்களிலும் வேலை கிடைக்கும். மத்திய அரசிலும் வேலை கிடைக்கும், மதிப்பு உயரும், பொருள் உயரும், பதவி உயரும், அதிகாரம் உயரும் என்று எண்ணுவதுதான் உலகியல். இப்படிப் போவதுதான் உயிரியல், வாழ்வியல், தமிழ் ஒன்றே பொதுமொழியானாலும் மற்ற மொழிகளானாலும் பிற மொழியினத்தவர்களின் நிலை இப்படித்தான் இருக்கும். வேலை வாய்ப்பை எங்கும் தரும் இந்திப் பட்டதாரி ஆவதையே எல்லோரும் விரும்புவர். தமிழில் சொல்லிக் கொடுக்கும் பொறியியல், கலையியல், மருத்துவ இயல் எல்லாம் அணிலாடு முன்றில் போல மாணவர் தொகையின்றி எடுபட்டுவிடும். தமிழிற்கு ஆள் வரவில்லையே, மாணவர்களும் பெற்றோர்களும் விரும்பவில்லையே, தமிழ்ப்பற்று இல்லையே என்று இன்றுபோல் அரசு ஒப்பாரி வைக்கும் நிலை வரும் என்று மாணிக்கனார் கூறியது இன்று உண்மையாகிவிட்டது.

மக்களின் மொழிச்சிந்தனை

இந்தி ஒன்றே பொதுமொழி, தென்னக மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமும் இணை மொழியாக இருக்கும் என்பது அரசின் நிலை. ஆனால் மக்களோ எப்படியும் சட்டப்படி ஒருநாள் இந்தி பொதுமொழியாகிவிடும். அதற்குண்டான நடவடிக்கைகளை நடுவணரசும் செய்து கொண்டிருக்கிறது என்பதால் நாள் தள்ளிப் படிப்பதை விட இப்போதே படிக்க முந்திக்கொண்டு விடுவோமே என்று படிக்கத் தொடங்கிவிடுவர். குழந்தைகளையும் படிக்கச் செய்வர். ஆங்கிலம் அகலும்போது அவ்விடத்தை இந்தி கைப்பற்றுமாதலின் என்றும் மாநில மொழிகள் வளராது. இவற்றுக்கு ஒருநாளும் விடுதலை இல்லை. இம்மொழிகளுக்கு தனி வளர்ச்சி என்பது இல்லை. என்று தொலைநோக்குப் பார்வையுடன் எழுதிய வ.சுப.மாணிக்கணாரின் கருத்துக்கள் இன்று எந்த அளவு மெய்யாகி இருக்கின்றன என்பதை நாம் உணரலாம். இந்தியை எதிர்த்துப் போராட்டம் நடத்திய தமிழ் மக்களே இன்று சி.பி.எஸ்.சி. பள்ளிகளில் சேர்க்கப் பாடுபடுகின்றனர். சமச்சீர் பாடத்திட்டத்தால் பதின்மப் பள்ளிகள் (மெட்ரிகுலேசன்), ஆங்கிலோ – இந்தியப்

பள்ளிகள், ஓரியண்டல் பாடத்திட்டப் பள்ளிகள் போன்றவற்றின் பாடத்திட்டங்கள் ஒழியும் என்பதால் பதின்மப் பள்ளிகளைத் திறக்கலானார்கள், இது மட்டுமல்லாமல் இன்று தமிழகத்தின் பன்னாட்டுப் பாடத்திட்டப் பள்ளிகளும் பெருமளவில் முளைக்கத் தொடங்கியுள்ளன. இதற்கு மக்களின் வரவேற்பும் மிகுதியாக உள்ளது. இப்பள்ளிகளில் படித்து முடித்தவுடன் தங்களின் பிள்ளைகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்துவிடலாம் என்ற

எண்ணம் பெற்றவர்களுக்கு உருவாகிவிட்டது. இப்படி வளரும் குழந்தைகளுக்கு எப்படித் தாய் நாட்டுப்பற்று வளரும்? `தாய்மொழிப் பற்றே தாய் நாட்டுப் பற்றை உருவாக்கும்’ என்று தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் சொன்னதை நாம் நினைவுகூற வேண்டாமா? நாட்டுப்பற்று இல்லாத நாடு பிற நாட்டினரின் கையில் எளிமையாக அடிமையாகிவிடும் என்ற வரலாறு சொல்லிக் கொடுத்த பாடத்தை நாம் மறக்கக்கூடாது.

தென்னாட்டு வடநாட்டுத் தலைவர்களின் மொழிச்சிந்தனை

நாட்டுப்பற்றில் ஓருணர்வு கொண்ட நம் தலைவர்கள் மொழிப்பற்றில் ஈருணர்வு கொண்டவர்களாக விளங்குகின்றனர் என்பதாக வ.சுப.மாணிக்கனார் கூறுகின்றார். இந்தி மக்களும் இந்தித் தலைவர்களும் தங்களுடைய மொழிப்பற்றில் எந்தவித வேறுபாடுமின்றி உள்ளனர். வடநாட்டைச் சார்ந்த தலைவர்கள் இந்தி மக்களின் தலைவராகக் கருதிப் பேசுகின்றனரேயன்றி, இந்திய மக்களின் தலைவராகக் கருதிக் கருத்துக்களை தெரிவிப்பது இல்லை என்பதை ஜவகர்லால் நேரு, வினோபாபாவே, மாவ்லங்கர் போன்ற தலைவர்களின் கூற்றினை ஆராய்ந்து இந்நூலில் தெளிவுறுத்துகின்றார். சென்னைப் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் இலக்குமணசாமி முதலியார் 1951 இல் பாராள்மன்றத்தின் அவை நாயகராக இருந்த திரு மாவ்லங்கருக்கு ஒரு நற்கடிதம் எழுதினார். ஐ.நா. அவையில் ஒரே சமயத்துப் பன்மொழி நடப்புக்களை மொழிபெயர்க்கும் கருவிகள் உள எனவும் அக்கருவிகளை நம் மன்றத்திலும் வைத்துக் கொள்ளலாம் இதற்கு மூன்று இலட்ச ரூபாய் இருந்தாற் போதும், சபையின் நடப்புக்கள் உறுப்பினர் எல்லாருக்கும் புரியும் என்று எழுதினார். இதற்குத் தலைவர் மாவ்லங்கர் `இவ்விதம் செய்தால் இந்தி பரவுமா, பரப்ப உதவியாகுமா?’ என்று விடைகூறினார் என்பதை எடுத்துரைக்கும் மாணிக்கனார் வடநாட்டுத் தலைவர்கள் இந்தியத் தலைவர்களாக இல்லாமல் வெறும் இந்தித் தலைவர்களாகவே இருக்கின்றனர் என்பதற்கு சான்று பகர்வதாக அமைகின்றது.

தென்னாட்டுத் தலைவர்களோ தென்னாட்டு மக்களின் மொழியுணர்வோடு கலக்காமல் பேசுகின்றனர். தென்னாட்டு மக்களின் மொழியுணர்வை வளர்க்காமலும் இந்தி மொழிக்கு ஒப்ப விடுதலை செய்து வளர்க்கும் அன்புத் துணிவு இல்லாமலும் இருக்கின்றனர். இவர்கள் தம் மொழிகளுக்குத் தலைமையுரிமை கொடாமல் நாட்டொருமை சுட்டியும், ஆட்சியெளிமை சுட்டியும் வேலைவாய்ப்புச் சுட்டியும் இன்னொரு மொழிக்கே எக்காலத்தும் தலைமை வழங்கும் அறியாமை தென்னாட்டுத் தலைவர்களிடம் வளர்ந்தோங்கிவிட்டது என்று சாடுகின்றார். மேலும் இந்தித்திணிப்பு என்றபொழுது நாம்

அதிலிருந்து தற்காத்துக் கொள்ள ஆங்கிலத்தை நாமே திணித்துக் கொள்கின்றோம். ஆங்கிலம் என்றால் இமயம் முதற் குமரி வரை ஆங்கிலமே இருக்க வேண்டும். தாய்மொழிகள் என்றால் அவரவர் தாய்மொழிகளே இடம்பிடிக்க வேண்டும் என்ற சமநிலைக் கருத்தினை வ.சுப.மாணிக்கனார் முன்மொழிகின்றார்.

மொழியுரிமைச் சிந்தனை

மக்களுரிமைகளுள் தலை சிறந்த உரிமையாகக் கருதப்படுவது மொழியுரிமையே ஆகும். நாடு சீராக இயங்க வேண்டுமானால் அடிப்படை உரிமைகளுள் கை வைக்கக்கூடாது. உரிமையில் கைவைப்பது உயிரிற் கை வைப்பதற்கு ஒப்பாகும் மக்களுரிமையினைக் காப்பாற்றுவதே ஓர் நல்லரசிற்கான இலக்கணமாகும். உரிமைகளை மேடைப் பொருளாகவோ தேர்தற் பொருளாகவோ, கட்சிப் பொருளாகவோ வாக்கெடுப்புப் பொருளாகவோ மக்களுரிமையை நிறுத்தக் கூடாது. மாறக்கூடிய மதவுரிமை, கட்சியுரிமைகளிலும் மாற இயலா தாய்மொழி உரிமை தலையானது. அதுவே பிறப்புரிமை என்று மொழியுரிமைக்கான முதன்மைத்துவத்தை இந்நூலின் பல இடங்களில் வலியுறுத்திச் செல்வதைக் காணலாம்.

ஆங்கிலேயர்கள் இந்நாட்டை விட்டகன்ற பின்னர் நம்மவர்கள் ஆட்சியில் தலைமையிடம் பெற்றனர். கல்வித்துறையிலும் பிற துறைகளிலும் தலைமையிடத்தை அடைந்தனர். தாங்கள் தலைமை பெற்றது போலத் தங்கள் மொழிகளும் தலைமையிடம் பெற வேண்டும் என்று சிந்திக்காமல் விடுத்தனர். விடுதலைக்கு முன் இருந்த துணிவும் தியாகமும் விடுதலைக்குப்பின் இல்லை என்றே கூறலாம். நாட்டுக்கு உரிமை பெற்ற நாமே நம் மொழிகளை அடிமைப்படுத்தி வைத்துக் கொண்டோம். அதனால் உரிமைப்பெற்றதன் முழுப்பயனை நுகரமுடியாமல் வளர்ச்சிகளைச் சிந்தனை செய்யாமல் இடையூறுகளையே சிந்தனை செய்துகொண்டிருக்கின்றோம்.

நம் நாட்டு மொழிகளையெல்லாம் நம்பிக்கையோடு துணிவாக உயர்த்தி மொழிப்புரட்சி செய்துவிட்டோமானால் கங்கை, காவிரி பாய்ந்த நிலம் போல வளம் பல பெருக காணலாம். இதனால் உடல் நலம் பெருகும், கல்வித்தெளிவு உண்டாகும், அறிவுப் புரட்சி ஏற்படும், எண்ணவீறு செறியும், இனிய உறவு தழைக்கும், ஒற்றுமையுரன் கூடும், உள்ளம் உயரும், நோபல் பரிசு வாங்கும் பல்லுயிர்கள் பிறக்கும் நிலை உருவாகும் என்பதை மாணிக்கனார் தன் உள்ளத்தெளிவுடன் கூறுகிறார்.

ஆங்கிலப் பயன்பாட்டளவு

நம் தாய்மொழிகள் பல துறையில் ஆழ்ந்து அகன்று ஆக்கம் கூறுவதற்கு ஆங்கிலத்தைத் தவிர வேறு துணையில்லை. ஆங்கில மொழியின் உலக மதிப்பையும் இந்திய உறவையும் நாம் புறக்கணித்துப் பேசுவது தற்கொலைக்கு ஒப்பாகும். ஆங்கிலமே ஞாலத்திற்கும் இந்தியாவிற்கும் ஒரு நூற்றாண்டிற்கு மேல் அறிவுப் பாலமாக இருந்து வருகின்றது. தற்கால நிலைமைக்கு நம் மொழிகள் 20 விழுக்காடு கூட வளராத நிலையில் நம்

மொழிவளர்ச்சிக்கு நாம் ஆங்கிலத்தையே சிக்கென பிடித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டிய ஆங்கிலத்திற்கு பதவிநிலை கொடாது உதவிநிலை பெறும் முறையே சிறந்ததாகும். ஆங்கிலத் தேவைக்கு சட்டம் இயற்றத் தேவையில்லை. பொதுமொழிப் பதவிநிலை வேண்டியதில்லை. ஆங்கிலத்திற்குச் சிறப்பு அதன் பதவியைப்

பொறுத்தது அன்று அறிவு வளர்ச்சிக்குச் செய்யும் உதவியைப் பொறுத்ததாகும். ஆற்றலற்ற ஆற்றல் சேரவேண்டும் என்று நினைக்கின்ற ஒன்றுக்குத்தான் பதவியளிக்க வேண்டும். நம் நாட்டு மொழிகள் தற்கால வளர்ச்சி பெறவில்லை. பெறும்படி செய்வதற்கு ஆட்சிப்பீடத்தில் தூக்கி வைக்க வேண்டும் என்று நம் இந்திய மொழிகளையும் ஆங்கிலத்தையும் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நுட்பத்தினை இந்நூலின் ஏழாவது கடிதத்தில் கூறிச்செல்கின்றார்.

மொழிச்சிக்கலுக்கான தீர்வுச்சிந்தனை

பாரதப் பங்கு எல்லா மொழிகளுக்கும் இருக்குமாறு, பாரதப் பற்று எல்லா மொழி மக்களுக்கும் பிறக்குமாறு, பாரத எண்ணம் எல்லா மொழி நிலத்தும் படியுமாறு பாராள்மன்றம் பதினான்கு மொழி (அட்டவணை மொழி 22) மன்றமாக ஆங்கிலத்தையும் பல்லாண்டு தழுவிப் பதினைந்து மொழி மன்றமாக இயங்க வேண்டும் என்பதுவே மாணிக்கனாரின் எதிர்பார்ப்பாகும். மேலும் பன்மொழி வைப்பு பல குழப்பத்தைத் தரும் என்று கூறுவதை விடுத்து ஒருமொழி வைப்பால் ஏற்படும் ஒற்றுமைக் குழப்பத்தை சிந்திக்க வேண்டும். ஒருமொழி வைப்பால் ஏற்படும் ஒற்றுமைச் சிக்கலை விட பன்மொழி வைப்பால் ஏற்படும் நிர்வாகச் சிக்கல் பெரிது இல்லை. என்று கூறிப் பன்மொழி வைப்பால் ஏற்படும் நிர்வாகச் சிக்கலுக்கு வழிமுறைகளையும் கூறுகிறார். அவை

1. பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தாய்மொழியிலேயே பேசவேண்டும். அவர்கள் கற்ற, சிந்தித்த மொழியிலேயே தங்கள் எண்ணங்களைப் புலப்படுத்த வேண்டும் என்று மொழியுரிமை வழங்குதலே குடியரசு முறை, அவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் தத்தம் தாய்மொழியில் பேசும் பேச்சுக்களை மொழிபெயர்ப்புக் கருவி அமைத்தும் மொழிபெயர்ப்புச் சிறுதுறை அமைத்து மொழிபெயர்ப்பாளர்களை நியமித்தும் பாராளுமன்ற நடவடிக்கைகளை நடத்த வேண்டும்.

2. பன்மொழி வைப்பு நம் நாட்டிற்கு எளிது; ஏற்றது; ஏன்? ஒவ்வொரு மொழிக்கும் தனிநிலம், தனிமக்கள், தனி வளர்ச்சியுண்டு. மத்திய அரசுக்கோ பாராள் மன்றத்துக்கோ வேண்டிய மொழி நடவடிக்கைகளையும் அச்சுக்களையும் பதிப்புகளையும் மாநிலங்களிடம் ஒப்படைத்துவிடலாம். இவை பற்றிய செலவினங்களை மாநிலங்கள் ஏற்றுக் கொள்ளும். மத்திய அரசுக்குப் பெருகும் மொழிச்செலவு இராது. ஒரு மொழிச் சார்வு என்ற மாசும் வராது. மாநில ஆட்சி முழுவதும் வட்டார மொழிகளில் நடக்கும் போது அப்படியே அம்மொழிகளை மத்திய ஆட்சி மொழிகளாகவும் தழுவிக் கொள்வது தானே படிமுறை? அதனால் மேலும் எளிமைக்கும் சிக்கனத்துக்கும் இடமுண்டல்லவா? மத்திய ஆட்சி என்பது தனியாட்சியன்று, மாநில அரசுகளின் கூட்டாட்சி, பாரதம் என ஒரு தனிநிலம் இல்லை. மாநிலங்கள் கூடிய பரப்பே பாரதம். பாரதமொழி என ஒன்று இல்லை, ஒன்றை உருவாக்குவதும் உருப்படியாகப்

போவதில்லை. மாநில மொழிகளே பாரத மொழிகளாகும். இங்ஙனம் சிந்திப்பதே இயற்கை சிந்திப்பு, ஆதலின் வீட்டுமொழி, வட்டாரமொழி, பாரதமொழி என்று மொழிப்பிரிவினை செய்யாது முத்தன்மையும் எல்லா மொழிகளுக்கும் கிடைக்குமாறு மொழியுரிமை அளிப்பதே குடியரசு முறையாகும்.

3. அஞ்சலகம், வருமான வரியகம், உயிர்க்காப்பகம், புகைவண்டி நிலையம், வானொலி நிலையம் முதலான பல பொதுத்துறைகளுள் ஒவ்வொரு மாநிலத்துக்கும் உள்ளன அல்லவா? இம்மத்தியத் துறைகளில் மாநில மொழிகள் ஆட்சி செய்ய வேண்டும்.
4. வானொலியை மாநிலங்களின் மொழிகளை பண்பாட்டினைக் காக்கும் சாதனமாக பயன்படுத்த வேண்டும். (அக்காலத்தில் தொலைக்காட்சி இல்லை) ஆனால் திரைப்படம் இருந்தது. ஆகையால் திரைப்படத்தினை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற அறிவுரை கூறுகிறார். திரைப்படம் என்பது குழந்தை, பெண்டிர் முதலான எல்லா நிலையினர்க்கும் வாழைப்பழத்தில் ஊசிபோல எளிதில் மொழியுணர்ச்சி ஊட்டும் வழியாகும். இப்படங்களில் மாநில மொழிகளின் இடங்களை இந்தியும் ஆங்கிலமும் பறித்துக் கொள்கின்றன. இது குடியரசு முறையன்று இயல்பான தாய்மொழி உணர்ச்சிக்கும் பெருந்தடையாகும். தமிழ் நாட்டில் காட்டப்படும் ஒவ்வொரு செய்திப் படத்திலும் தமிழ் வாசகங்கள் திரையில் இடம்பெற வேண்டும். ஏனை மாநில மொழிகளும் அவ்வவ்நிலத்து இடம்பெற வேண்டும்.

5. இந்திய நாடு பன்மொழி நாடாதலின் அப்பன்மொழியும் நிகரான வளம் பெற்று வாழ வேண்டும் என்பது நம் விழைவாதலின் செய்ய வேண்டுவது என்ன? ஒவ்வொரு மாநிலத்தும் இந்தி என்னும் ஒரு மொழி மட்டுமின்றிப் பன்மொழி பரவுதற்கு அடிகோல வேண்டும். பன்மொழி நிலையங்கள், பன்மொழி பெயர்ப்பாளர்கள் பன்மொழிச் சிறு நூல்கள் எல்லாம் நகரங்கள் தோறும் பேரூர்கள் தோறும் பரவ வழி காணவேண்டும். பன்மொழிக் காற்று இமய முதற் குமரி வரை நாலாறு திசையிலும் வீச வேண்டும். இக்காற்று வீசினால், நம் பாராள் மன்றம் நாலைந்து மொழியளவில் இயங்கும் மன்றமாக விளங்கக் காண்பீர்கள். மத்திய அலுவலர்கள் சில முக்கிய மொழிகளைக் கற்றிருத்தல் காண்பீர்கள். குடியரசு என்னும் கோடாச் செல்வி இந்திய கோல் ஏந்தி இனிய நடை பயின்று எங்கும் உலாவி வரக்காண்பீர்கள்.
6.

   மத்திய அலுவலகங்கட்கும் மாநில அலுவலகங்கட்கும் இந்தியப் பொதுமக்கள் எத்திசையிலிருந்து எம்மொழியிற் கடிதம் எழுதினாலும் எழுதிய மொழியிலேயே பதில் பெற வேண்டும். 7. பன்மொழி ஆட்சிமொழிகளாக உள்ள சுவிட்சர்லாந்து, அயர்லாந்து, பின்லாந்து, கனடா, யூகோசுலேவியா, இரசியா, மலேசியா முதலான நாடுகளுக்கும் ஐக்கிய நாட்டவைக்கும் மொழிக்குழுக்களை அனுப்பி ஆட்சி நடைமுறைகளைப் பார்த்து வரச்செய்ய வேண்டும்.

என்பனவாகப் பல முத்தாய்ப்பான கருத்துக்களைக் கூறும் வ.சுப.மாணிக்கனார் தனது 24வது கடிதத்தில், தான் நூல் முழுவதும் கூறிய மொழிபற்றிய கருத்துக்களைத் தொகுத்து ஒரு வரிச்செய்தியாக கருத்துத் தெளிவுடன் படிப்போர் யாவரும் எளிமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் 12 கருத்துக்களாகக் கூறியுள்ளார்.

1. இந்தி ஒன்றே பொதுமொழியாதல் கூடாது.
2. இந்தி ஆங்கிலம் என்ற இரட்டையாட்சி கூடாது.
3. மத்திய அரசுக்கு ஒருமொழிச் சார்பு கூடாது.
4. ஆங்கிலம் கல்வித்திட்டத்தில் பேரிடம் பெறுக.
5. பதினான்கும் (அட்டவணை மொழிகள் 22) பாரதப் பொதுமொழிகள் ஆகுக.
6. பதினான்கும் (அட்டவணை மொழிகள்22) பாராள்மன்ற மொழிகள் ஆகுக.
7. பதினான்கும் (அட்டவணை மொழிகள்22) பாரதப் பணித்தேர்வு மொழிகள் ஆகுக.
8. தாய் மொழியைத் தன்னிறைவாக்குக.
9. நம்மொழிகள் உயர்கல்வி மொழியாக ஆண்டு குறிக்க.
10. பன்மொழியறிவை நாட்டிற் பரப்புமின்.
11. பங்கு நல்கிப் பற்று வளர்மின்.
12. வன்முறை என்னும் சின்முறை ஒழிமின்.

என்று மாணிக்கனார் அரசுக்குக் கூறும் அறவுரை மொழிகள் இக்காலக்கட்டத்திற்கும் பொருந்தும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. இன்று உயிர்ப்புடன் பலத்த உத்வேகத்துடன் செயல்படுத்திக் கொண்டிருக்கும் நடுவணரசின் மொழிப்பரப்புத் திட்டம்

என்ற ஆலமரத்தின்கீழ் மாழில மொழிகள் என்ற சிறு செடிகள் வளர முடியாது என்பது தெளிவாகத் தெரிகிறது. இன்று மாநில அரசுகள் தங்களது மாநில ஆட்சிமொழித் திட்டத்தில் மட்டுமல்லாமல் கல்வித் திட்டத்திலும் தோல்வியடைவதற்கு ஆங்கில மோகம் என்பதோடு இந்தியின் வல்லாதிக்கமும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. நடுவணரசு படிப்பில் சலுகைகள் தந்தும் வேலையில் சலுகைகள் தந்தும் புகட்டப்படும் கல்வியே வெற்றிபெறும். தமிழ் படித்தால் தமிழில் படித்தால் தமிழ் நாட்டளவில் மட்டுமே வேலை வாய்ப்பு; ஆனால் இந்தியில் படித்தால் இந்தியா முழுவதும் வேலை வாய்ப்பு; ஆங்கிலம் படித்தால் உலகம் முழுவதும் வேலை வாய்ப்பு பெறலாம் என்ற நிலையில் தமிழ் படிப்பதற்கும் தமிழில் படிப்பதற்கும் யார் முன் வருவார்கள்? இந்நிலை தமிழகத்திற்கு மட்டுமல்ல அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும். எனவே இத்தகைய நிலையிலிருந்து இந்தியாவில் வதியும் தேசிய மொழிகளைக் காக்க அட்டவணை மொழிகள் அனைத்தையும் ஆட்சி மொழிகளாக்கும் திட்டம் வகுத்து செயல்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் இந்தியா, மொழிச்சிக்கல் இல்லாத உண்மையான குடியரசு நாடாகத் தோற்றம் தரும்.

நிறைவாக

மனிதனின் நாகரிக வளர்ச்சிக்கும் பண்பாட்டு அயர்ச்சிக்கும் அவனிடம் தோன்றும் சிந்தனை இன்றியமையாத்து ஆகும். அச்சிந்தனை செயற்பாட்டிற்கும் பரவுவதற்கும் மொழி மிகவும் இன்றியமையாதது ஆகும். அப்படிப்பட்ட மொழியைப் பயன்படுத்துவதற்கு அரசிடம் சிக்கல் தோன்றுமானால் அங்கு தெளிந்த அறிவு வளர்ச்சிக்கு இடம் இல்லாமல் போய்விடும் என்பதை உணர்ந்து மொழிச்சிக்கல் அறிவுக்குத் தடை, நாட்டன்புக்குத் தடை என்று கூறி இந்திய மொழிச்சிக்கலுக்குத் தீர்வினை வழங்கியவர்தான் மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் ஆவார். அவரின் மொழிக்கொள்கைகளை இந்திய அரசு ஏற்றுக் கொண்டிருந்தால் மொழிச்சிக்கல் என்ற தொல்லை என்றோ ஒழிந்து பிரிவினைக் கொள்கை அழிந்து அடிமையுணர்வு அகன்று நாம் இந்தியர் என்று மெய்யாக மார்தட்டிக் கொள்ளும் நிலை பிறந்திருக்கும். ஆனால் இன்றோ நாம் இந்தியர் என்ற உணர்வு திரைப்படத்தின் மூலமாகவும், மட்டப்பந்து விளையாட்டின் மூலமாகவும் பள்ளிப்பாடத்திட்டத்தின் மூலமாகவும் விளம்புகை செய்வதின் மூலமாக மட்டுமே மேலோங்கி உள்ளது. இதை விடுத்து ஒரு மாணவன் இந்த மாயையிலிருந்து விடுபட்டு ஆராயும்போது சிந்திக்கும்போது இவையெல்லாம் உடைபட்ட பொம்மையின் விரிசல் தெரியாமல் இருக்க பூசப்பட்ட மேல்பூச்சு என்ற குட்டு மண் பொம்மை உடைவது போல உடைபட்டுப் போகின்றது. இந்நிலையில் நாம் ஒன்றை முழுமையாக நம்பி அதன்வழி நடந்து அதுவே தன் வாழ்க்கையாக எண்ணி நடந்து வருபவர்க்கு தான் நம்பியது பொய் என்ற உண்மை தெரியும் இடத்தில் எந்த அளவிற்கு மன வலியும் நெருடலும் தோன்றுமோ அந்த நிலை ஏற்படுகிறது. முன்பு தமிழகத்தில் மட்டும் காணப்பட்ட இந்தித்திணிப்பு எதிப்புப் போராட்டம் இன்று இந்தியா முழுவதும் பல மாநிலங்களில் பரவியிருப்பதை நம்மால் காணமுடிகின்றது. எனவே மொழியுணர்வாளர்களை தேசத்துரோகிகள் என்று முத்திரை குத்துவது இந்திய ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிக்கும் சதிச்செயல் என்பதை

உணர்ந்து, மொழியறிஞர்களின் சிந்தனைகளை மதித்து செயலாக்கி இந்திய அரசாங்கம் இந்திய மொழிச்சிக்கலைத் தீர்த்து தேசிய இனங்களின் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும். இது இன்று கூர்மையாகிக் கொண்டிருக்கும் மொழிச்சிக்கல் எதிர்காலத்தில் பெரிய மொழிப்போராக வெடிக்காமல் இருப்பதற்கான வழியாகும் என்பதை புரிந்து செயல்படவேண்டும்.

—————————————-

துணைநூற் பட்டியல்

1. வ.சுப. மாணிக்கம் – இந்திய ஆட்சிமொழி – சாரதா பதிப்பகம் – சென்னை.
2. செ. செந்தில் பிரகாஷ் – மொழிப்போர் வரலாற்றில் தமிழகம் – முனைவர் பட்ட ஆய்வேடு – தமிழ்ப்பல்கலைக்கழகம் – தஞ்சாவூர்.
3. அ. இராமசாமி – என்று முடியும் இந்த மொழிப்போர்? – செம்புலம் பதிப்பகம் – மதுரை.
4. த. சுந்தரராசன் – தமிழ் ஆட்சிமொழி – மணிவாசகர் பதிப்பகம் – சென்னை.
5. 02.2000 – தினகரன் வசந்தம் இதழ், ப.20.

வ.சுப.மாணிக்கனாரின் வள்ளுவம் கூறும் விழுமியங்கள் – 1

vallamai.com/

December 1, 2017



-முனைவர் சு.இரமேஷ்

முன்னுரை

வளர்ந்துவரும் தமிழ்ஆய்வுக் களத்திற்குத் தமிழ்ப் பேரொளியாக விளங்கியவர் மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார். தமிழ்மரபு சார்ந்த ஆய்வுகளில் புதுமையான நெறிகளை வளர்ந்து வரும் சமூகத்திற்குக் கொடையாக அளித்தவர். தமது ஆய்வு நூல்களில் தமிழின் தனித்துவத்தைப் புலப்படுத்திச் சிந்திக்கச் செய்தவர். மறைமலையின் ஆய்வுத் திறனும் திரு.வி.க.வின் மொழிநடையும் ஒருங்கே பெற்ற தமிழ்வல்ல மூதறிஞர். இவர், நுண்மாண் நுழைப்புலத்துடன் எழுதிய 'வள்ளுவம்' என்னும் நூலானது புதிய சிந்தனைத் தெளிவினை அளிக்க வல்லதாகும். 1953–இல் பாரி நிலையமும், 1987–இல் மணிவாசகர் நூலகமும் வெளியிட்ட இந்நூலை தமிழ்மண் பதிப்பகம் 2017 –இல் வெளியிட்டுள்ளது.

இந்நூலில் பன்னிரண்டு கட்டுரைள் உள்ளன. அவையாவும் தொடர் சொற்பொழிவுகளாக அமைந்துள்ளன. ஆனால் அவையாவும் முன்னும் பேசப்பட்டவை அல்ல. வள்ளுவரை முன்வைத்துப் பேசினாற்போல் எழுதிய கற்பனைச் சொற்பொழிவுகள். நம்மிடை நேரே

நின்று உரையாற்றுவதாய் அமைந்துள்ளன. ஏனெனில் "உங்களுக்கும் எனக்கும் நெஞ்சக்கலப்பும் சுற்றப் பிணைப்பும் உண்டாக்கும்" என்று முகவுரையில் பதிவு செய்கின்றார். இலக்கியநெறி உலகில் இஃது ஓர் புதிய உத்தியாகவே கருதமுடிகிறது. வரையறுத்துக் கொண்டு முரணறுத்து எழுதிய முறைநூலாக வள்ளுவம் என்னும் நூல் திகழ்கின்றது. இந்நூலில் உள்ள 12 தலைப்புகளில் முதல் ஆறு கற்பனை சொற்பொழிவுகளான 1. வள்ளுவர் நெஞ்சம், 2. பலநிலையறம், 3. பொருள் நிலை, 4. பொருட் பயனிலை 5. இன்மை நிலை, 6. அறிவுப் பிறப்பு ஆகிய தலைப்புகளில் அமைந்த கற்பனைச் சொற்பொழிவுகளை மட்டும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

வள்ளுவர் நெஞ்சம்

வள்ளுவரின் நெஞ்சத்திற்கும் திருக்குறளுக்கும் தொடர்பு என்னவென்பதை இத்தலைப்பு ஆராய்கிறது. திருக்குறள் வள்ளுவனாரின் அறிவுக்குழவி மட்டுமல்லாது வள்ளுவரின் நெஞ்சோடு நம் நெஞ்சினைப் பிணைக்கும் எண்ணக் கயிறு என்று கருதுமிவர், வள்ளுவரின் நெஞ்சமானது நிலத்தில் இட்ட வித்தாகவும் நெஞ்சம் தந்த அறிவு விதை தோற்றிய மரமாகவும் குறள்கள் மரம் தாங்கிய விதைகளாகவும் இருக்கின்றன என்று கருதுகிறார். பற்பல எண்ணங்களைத் தோற்றுவிக்கும் ஆற்றல்பெற்ற அறிவின் ஊற்றுக்கண்ணாகத் திகழும் திருக்குளை "நவில்தோறும் நூல்நயம் போலும்" (783) என்னும் குறளின்வழி எடுத்துரைக்கின்றார். (வள்ளுவம், ப.8). சொல் ஒருவனின் உள்ளக் கருத்தினை தொடக்கூடியது. அறத்தை ஒளித்துக்காட்டும் பொய்த்திறமும் சொல்லிற்கு உண்டு என்பதை, "வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு" (819), "எனைத்தொன்றும் சொல்லினால் தேறற்பாற்றன்று" (825) சொல் என்பது மக்களின் நெஞ்சூர்தியல்ல… கருத்தூர்தி என்றுக் கருதுகின்றார்.

நூலாசிரியரின் சொல்வழி நெஞ்சம்காண அவாவ வேண்டும். நெஞ்சம் காண்பதன் பொருள் என்னவெனில் "சொல்லியான் கருத்தாழமும், உணர்ச்சி நுகர்ச்சிகளையும் சொல்லத்தூண்டிய சூழ்நிலையையும், அவன் எதிர்பார்க்கும் பயனையும் உயிராக் காண்பது, இக்காட்சிக்கு அவன் ஆண்ட சொற்களையும் சொன்னடையும் உடலாகக் கொள்வது என்பதோடு கல்வி, ஒழுக்கம், குடிமை, நாகரிகம் என்றினை வாழ்க்கை நிலைகளையும் காணவொல்லும் அறிவூற்று" என்பதற்கு,

"நட்டார்போல் நல்லவை சொல்லினும்
ஒட்டார்சொல் ஒல்லை உணரப்படும்" – (குறள்.826) என்ற குறளைச் சான்றாக்குகின்றார்.

மன நோக்கு

நோக்கு என்பது மேலோடான பார்வையன்று அழுந்திக் காண்பதாகும். "பிறன்மனை நோக்காத பேராண்மை" (148) இதில் 'நோக்காத' என்பதற்கு பிறருடைய மனைவியை மனத்தில் நினைத்தலே பிழை எனவும், கண்பார்வை பிழையன்று என்றும் குறிப்பிடுகின்றார்.

இக்குறிப்பறிவை “கூறாமை நோக்கி” (701), “கண்ணொடு கண்ணினை நோக்கு ஒக்கின்” (1100) என்னும் காதற்குறளையும் ஆராய்ந்தால் நோக்கு என்பது கண்பார்வையன்று அது மனப்பார்வை” எனப் பொருள்படும் என்கிறார். – (வள்ளுவம், ப.11)

திருக்குறள் முழுவதும் ஓடிப் பரந்து அவரின் நெஞ்சம் நிற்கும். இதனை, தனி நெஞ்சம் என்கிறார். “ஏனெனில் அந்நினைவு வள்ளுவர் ஒருவர் மாட்டே பிறந்ததால். தனி நெஞ்சம் என்பதாவது செயல் செயல் செயல் சொல்வது செயலுக்கு வரவேண்டும்” என்ற கருத்தை நெஞ்சிலே இருத்திக் கொண்டு குறளை எழுதியவர் வள்ளுவர். மனிதன் வாழ்வாங்கு வாழ்தல் என்பதற்கு திருக்குறகத்து மக்கட்பேறு, விருந்தோம்பல், சுற்றந்தழால், ஈகை, நல்குரவு, மருந்து என்று உலக அதிகாரங்களைக் காண்கிறோம். எனவேதான், திருக்குறளை வாழ்க்கை நூல், செயல் நூல், உலக நூல் என்று அழைப்பது பொருந்தும். (வள்ளுவம், ப.21)

கயமை

கயமை என்பது கீழ்மை, பொதுமை என்பதாகும். (கௌர தமிழ் அகராதி, ப. 225) ஒழுக்கம் கைவரப் பெறாதவனை இகழ்ந்துரைக்கக் கயமையெனும் அதிகாரமே வைத்துள்ளார். ஏனெனில் வள்ளுவர் நெஞ்சக்கொதிப்பின் வெளிப்பாடே கயமையதிகாரம் என்கிறார். “மக்களே போல்வர் கயவர்” (1071), “தேவர்அனையர் கயவர்” (1073), “அறைபறை அன்னர் கயவர்” (1076), “ஈர்ங்கை விதிரார் கயவர்” (1077) போன்ற குறட்பாக்களை எடுத்தியம்புகிறார். அறம் பொருட்பாக்களின் எல்லையதிகாரமாகிய கயமைத் தலைப்பு ஆசிரியரின் மனக்கொதிப்பிற்கு அறிகுறி கற்பதாகும் என்பதை எடுத்துக்காட்டுகிறார் நூலாசிரியர்.

புகழ்சான்ற திருக்குறளைப் போற்றுகின்றோம் என்பதோடு புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும் இகழ்ந்தார்க்கு எழுமையும் இல் (538) என்பது தனி வள்ளுவம். செய்யாது குறள் காட்டும் அச்சமுடிபாக இருக்கின்றது. எனவே, யார்க்கும் செயல் வேண்டும் என்பதுதான் வள்ளுவர் காட்டும் உயிர்நிலை என்பதை இச்சொற்பொழிவு விளக்குகின்றது.

பலநிலையறம்

பலநிலையறம் என்னும் தலைப்பானது ஆழ்ந்து விளக்குதற்கு உரியதாகும். வாய்வழி உணவு போலவும் மூக்கு வழி உயிர்போலவும் திருக்குறள் கல்விக்கு இன்றியமையா நேர்வழியாகும்.

உலக மக்கள் ஈட்டல், காத்தல், துய்த்தல், ஈதல், இவறல் (ஈயாமை) என்றின்னோரன்ன பொருள் நிலைகளாலும், கற்கும் நோக்கம் நூல் ஆர்வம் முறைகொள் வன்மை, சுவை நுண்மை, ஆழம், அகலம் என்றின்னோரன்ன கல்வி நிலையாலும், இயற்கையறிவு, நூலறிவு, நுண்ணறிவு, புரட்சியறிவு, தொழிலறிவு, ஆக்க அறிவு, படிப்பறிவு, தன்னறிவு என்றின்னோரன்ன அறிவு நிலையாலும் ஒருத்தர் போல் ஒருத்தரிலர். பொருள், கல்வி,

அறிவுண்மைகள் ஒரு பாற்கிடக்க, பொருளின்மை, அறிவின்மை என்ற இன்மை நிலைகளிலுந் தாம் நம்முன் வேறுபாடு கணிக்கத் தரமோ. இனைய நிலைப்பன்மை வேறுபாடுடெல்லாம் நுணிகித் தெளிந்த ஓராசிரியர் வள்ளுவர் ஆவார் என்கிறார்.

“அன்பும் அறமும் பசியும் துறந்து ஈட்டுவாரும், வஞ்சகத்தால் பொருள் செய்து மகிழ்வாரும் பழி மலைந்து ஆக்கம் பெறுவாரும், பிறர் செல்வம் வெஃகித் தம்முடைமை விடுவாரும், இரந்தே வாழப் பயில்வோரும் ஆக உலகம் பொருள் வகையால் பல நிலையாளரைக் கொண்டது. பொருளில்லார்க்கு இவ்வுலகம் இன்மையும் நிலையாச் செல்வம் நிலையிற்று என்னும் மக்கள் மயக்கமும் சிலர் அறவே ஈயாமையும், துய்யாமையும், சிலர் முற்றும் தாமே துய்த்துலும், சிலர் அனைத்தும் பிறர்க்கே வழங்கலும் எனவாங்கு வள்ளுவப் பேராசிரியர் பொருள் பற்றி மக்கள் பால்கண்ட நிலைகள் பலப்பல” என்று பதிவு செய்கிறார். (வள்ளுவம், ப.32)

ஞானப்பேதைகள்

“நுழைபுலம் இல்லான் எழில்நலம்” (407) என அழகுப்பேதையும் “மேற்பிறந்தாராயினும் கல்லாதார்” (409) எனச் செல்வப் பேதையும் “கல்லாதான் சொற்காமுறுதல்” (402) என வாய்ப் பேதையும் வள்ளுவர் கண்ட ஞானப்பேதைகள். “இணர் ஊழ்த்தும் நாறா மலரனையர்” (650) எனப் பயனில் புலவரையும், அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் (720) என அவையறியாப் புலவரையும் “கற்றறிந்தும் நல்லாரவை அஞ்சுவார்” (729) என அச்சப்புலவரையும், “பலநல்ல கற்றக் கடைத்தும்” (823) என மாணாப் புலவரையும் “கல்லாத மேற்கொண்டொழுகல்” (845) எனப் பிறதுறை விரிக்கும் சிறிய புலவரையும் கண்டவர்.

செல்வர்முன் வறியவர்போல ஏக்கற்றும் கற்பாரும் அங்ஙன் கற்க நாணிக் கல்லாதொழிவாரும், கல்வியே கண்ணெனப் பெற்றாரும், கண்ணெப் பெயரிய புண்ணுடையாரும், செவிக்குணவாகிய கேள்வி இல்லாத பொழுது பசியாற்றிக் கொள்ளும் செல்வ மக்களும், செவிச்சுவை சிறிதும் அறியா ச்சோற்று மக்களும் வள்ளுவக் காட்சிகள். அறிவுத் தொழுகை செய்வாரும், மக்கள் மனவேட்பக் கலந்து பழகுவாரும், அவையஞ்சா மாற்றம் விடுக்கும் நோக்கொடு நிரம்பிய நூல் பயில்வோரும், பிறரின்பங்கண்டு கல்வி மேன்மேலும் விழைவாரும், கசடறக் கற்று கற்றப்படி நிற்பாரும் எனவாங்கு குறள் முதல்வன் கல்வி பற்றி மக்கற்பால் கண்ட நிலைகள் பற்பல என்று தான் கண்டவற்றைக் குறிப்பிடுகிறார். (வள்ளுவம், ப.33)

சாதி மதங்கடந்தது

திருக்குறள் சாதி, மதம், நாடு முதலிய பொதுமைப் பிறப்பிற்கு நிலைக்களமில்லை என்பதை மூதறிஞர் புலப்படுத்துகின்றார். ஒரேகுடி, ஒரே சாதி, ஒரே நெறி, ஒரே மொழி, ஒரே நாடு என்று நினைப்பவருள்ளும், பிறசாதி, பிற சமயம், பிறமொழி என

வேற்றுமைப்பட்டாருள்ளும். நாம் பகுத்தறியத் தகும் வள்ளுவர் நுனித்துக் கண்ட வள்ளுவம் என்னை “மனத்துக்கண் மாசிலன் ஆதல்” (134) என்பது அப்பெருமகனார் காட்டிய நெறி நாம் அறையும் புறப்பொதுமையன்று. தனி நெஞ்சத்தூய்மை.

சாதி சமய எண்ணமின்றியே அவற்றை எண்ணுவதும் வேண்டாமலே, உடலறிஞன் ஆள்தோறும் கைந்நாடி பார்த்து மருந்தளித்து உடல் நலம் செய்யுமாப் போலே உள்ளத்தறிஞானாகிய வள்ளுவரும் ஆள்தோறும் மனநாடிப் பார்த்து நிலைக்கேற்ற அறங்கூறி அகத்தூய்மை செய்பவர்.

வள்ளுவர் பேரறிஞர் நிலைகொண்ட உண்மை என்ன? சாதி சமய நாட்டுப்பூசலனையவெல்லாம் எரிமலைபோலும் உள்ளப் பூசலின் வெளிப்பாடு மூட்டிய நீர்க் கொதிப்பும் போலும் நெஞ்சக் கொதிப்பின் புறப்பாடு. “காலம்பார்த்து உள்வேர்ப்பர்” (487) என்றபடி மனவெதுப்பின் வெளிப்பாடு. உள்ளப் பெரும் பூசல் தன் வெளிப்பாட்டிற்கு மடைவாய்ப் போல குடி, சாதி, சமயம், மொழி, கட்சி, நாடு என வரூஉம் பிரிவுகளை வாயிலாகக் கொள்கிறது என்பதன்றி இப்பிரிவுகள் அடைபடுமேல் வேறுபல புதிய வாயில்களை உண்டாக்கிக் கொண்டு முன்னையினும் வேகமாய்ப் பூசல் விளைவிக்கும் என்பதன்றிப் பொதுமை பறையான் உள்ளப்பூசல் அவிந்துவிடாது காண் (வள்ளுவம், ப.41) என்று குறிப்பிடுகிறார். அதாவது வேற்றுமையைக் காணும் எண்ணம் எழுகின்றபோது எப்படியாது வெவ்வேறு வடிவங்களைப் பிரிவினைவாதிகள் நவீனத் தீணடாமை வடிவங்கள் போலவும், நீட் என்னும் சமூக அநீதித் தேர்வுப் போலவும் உருவாக்கிக் கொண்டே இருப்பார்கள் என்று குறிப்பிடுகின்றார். ஆனால் உலக மக்கள் யாவரும் மனத்தூய்மையுடன் வாழ்வதற்கு எழுதப்பட்டது குறள் என்பதை அனைவரும் மறக்கின்றோம்.

“நோய்நாடி நோய் முதல்நாடி” (948) என்ற மருத்துவ முறையைப் பின்பற்றாமல், ஊர், நாடு, அரசு போன்றவைகளால் குழப்பம் ஏற்படுகின்றது. காப்புச் செலவு எல்லாம் மக்கள் பசி தீர்க்கவும், அறியாமை அகற்றவும், மாசொழிக்கவும் பயன்படுத்த வேண்டும். மக்கள் நலியப் போர்ச் செலவுப் பெருக்கம், பொதுமைக் குரலால் யாருக்குப் பயன் பிற நாட்டுடன் போர் புரிவதற்கு மக்களின் வரிபணத்தில் பல இலட்சம் கோடிக்கு அணுஆயுதங்களையும் போர்க்கருவிகளையும் வாங்கிக் குவிப்பதனால்? மக்களின் பசிப் பிணி தீராது என்பதை உணர்த்துகின்றார்.

கல்வி

“கற்க கசடற கற்பவை” (391)

“கற்றில னாயினும் கேட்க” (414)

“எனைத்தானும் நல்லவை கேட்க” (416)

“என்ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு” (397)

“கசடற வல்லதூஉம் ஐயந்தரும்” (845)

எனவரும் கல்வி பற்றிய பல குறள்களும் மக்களின் பல்வேறு நிலைகள் நோக்கிப் பிறந்தன என்பது வெளிப்படை. நீ இழந்து விட்டனை. இனி உனக்கு முன்னேற்றமில்லை, இனிமாள்வதுதான் உன் முடிவு எனத் தள்ளிவிடும் சிறுமை வள்ளுவர் உணர்ச்சியில் இல்லை. நீ பெரிதும் உயர்ந்து விட்டாய், இனிப் பெற வேண்டும் என்று புகழ்ந்துபேசும் அழிக்கும் போக்கு அவரிடம் இல்லை. இழிந்தார்க்கும் உயர்ந்தார்க்கும் எந்நிலையிலும் நல்வாழ்வு உண்டு என்னும் அழிவில் கொள்கையுடைவர் என்பதை வள்ளுவம் கொண்டுள்ளது என கூறுப்பிடுகிறார். – (வள்ளுவம், ப.50)

பொருள் நிலை

நம்மைப் பொருள் உடைமைக் காலத்திலும் இல்லாமைக் காலத்திலும் எவ்வாறு வள்ளுவர் வழி நடத்துகிறார் என்பதைக் கூறும்விதமாகப் பொருள் நிலைகுறித்த சொற்பொழிவு அமைகிறது.

திருக்குறள் சந்தை

திருவள்ளுவரை மூதறிஞர், வியாபாரி, வணிகர், மருத்துவர், உழவர் என்று குறிப்பிடுகிறார். பணமிருந்தாலும் சில சரக்குகள் விற்றுத் தீர்ந்துவிடும்; பொருள் கிடைக்காது. ஆனால், திருக்குறள் இக்குறைகள் அற்ற பெரும்சந்தை. வள்ளுவர் வணிகர் மட்டுமல்ல; மருந்தும்தானே செய்து மருத்துவமும் பார்க்கின்ற தமிழ் மருத்துவன் போல், குறளும் தானே விளைவித்துக் கொடுப்பதுவும் தானே கொடுக்கும் உழவர் எனக் குறிப்பிடுகின்றார். ஒருவன் எத்துக்கொடுக்க ஒருவன் வாங்கும் விற்பனைப் பண்டம் போல அல்லாமல் குடங்கொண்டு முகக்கும் குளத்து நீர் போலவும் தாமேகிடைப்பது குறட்பண்டம் என்றுரைக்கின்றார் (வள்ளுவம், ப.57).

பொருளின் ஆற்றல்

பொருள் செயல்வகை, நன்றியில் செல்வம், நல்குரவு, ஒப்புரவறிதல், ஈகை, ஊழ், ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை என்ற அதிகாரங்களில் பொருட் குறள்கள் பரந்து கிடக்கின்றன. பொருளின் ஆற்றலை முழுதும் உணர்ந்த வள்ளுவர் அது நன்மை தீமைக்கும் கருவியாதலை எக்காலத்தும் மறந்தவரல்லர். இன்றியமையாப் பொருளை ஈட்டுவதற்கும் செலவிடுதலுக்கும் மக்கள் உறும் பல மாசுக்களைக் கண்ட வள்ளுவர்.

“பொருளில்லது இல்லை பொருள்” (751) என்று சிறப்பித்தவர்

பொருட்செல்வம் பூரியார் கண்ணும்உள”(241) என இழிந்துரைத்தார்.

பொருள் என்பது ஓர் உலகக் கருவி அது குணம் பெருக்கவும் குறை நிரப்பவும் பயன்படவேண்டும். அது பண்டமாற்றும் பொதுக்கருவி என்ற தெளிவு வேண்டும். புறப்பொருளையெல்லாம் நல்லதற்கு தீயதற்கும் பயன்படுத்துதல் ஆளும் மனிதனின் நல்லதீய மனதைச் சார்ந்தது. குணமும் குற்றமும் பொருள் மேல் சார்ந்தது அல்ல. அதனை, ஆள்வோனைச் சார்ந்துள்ளது என்பதைப் புலப்படுத்துகின்றார். அதே நேரத்தில் பொருளாற்றலுக்கு ஓர் எல்லையுண்டு. பொருளிலும் சிறந்த பல பண்புகள் இன்றியமையாதன. அப்பண்புகள் இருப்பின் பொருள்நலஞ் செய்யும் இல்லையெனில் உடையானை கீழறுக்கும் என்பவற்றுக்கு,

“வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும்
என்னாம் தகைமாண்ட தக்கார் செறின்” (897) என்ற குறளை அளவீடாகக் காட்டுகின்றார். பொருளின் பண்பற்ற நிலையைக் குறிப்பிடுகையில்,

“நல்லவை எல்லாம் தீயவாம்
தீயவும் நல்லவாம் செல்வஞ் செயற்கு” (375) என்ற குறளை மேற்கோள் காட்டுகின்றார்.

“செல்வத்தின் இயல்பு நிலையாமை என்பதால் அதனை நிறுத்தப் பாடுபடுதல் பேதைமைக் கருத்து என்று பொருளீட்டுதல் குற்றம் என்றோ வேண்டாம் என்றோ கருத்தாகாது. உடல் நிலையாது என்றதனால் மக்களைப் பெறுதல் இழிவு இல்லறம் இழிவு என்றும் கொள்ளப்படாது. பழம் அழுகிபோகும், பலகாரம் ஊசிப்போகும் எனத் தெரிவிப்பது தவறல்ல. அழுகுவதன் முன்மை என்பதே இயல்பு என்பதற்கு “அதுபெற்றால் அற்குப ஆங்கே செயல்” (333) என்று அதன் பயனனைக் குறிப்பிடுகின்றார்.” (வள்ளுவம், பக்.67-68)

செல்வத்தை எந்த நோக்கத்துக்கு ஈட்டுகின்றனரோ, எதன்பற்றுக் காரணமாக சேர்க்கின்றனரோ அப்பற்று வழியாகவேத் தூய்மையூட்டல் செய்வதை,

“செப்பம் உடையவன் ஆக்கம்
சிதைவின்றி எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து” (112)

என்ற குறளை எடுத்துக்காட்டி நும்பொருள் நும்மக்களைச் சேரவேண்டுமானால் நடுவுநிலைமையோடு பொருளை ஈட்டுமின் என்ற நெறித்தூய்மை விதிப்பர் (வள்ளுவம், ப.74) என்று எடுத்துரைக்கின்றார்.

[தொடரும்]

******

கட்டுரையாளர் உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அ.வ.அ.கல்லூரி (தன்.) மன்னன் பந்தல், மயிலாடுதுறை.

வ.சுப.மாணிக்கனாரின் வள்ளுவம் கூறும் விழுமியங்கள் – 2

vallamai.com/

December 3, 2017

-முனைவர் சு.இரமேஷ்

பொருட்பயனிலை

அறிவு அறிவுக்கே, கல்வி கல்விக்கே, பொருள் பொருளுக்கே என்னும் கூற்று நடைமுறைக்கு ஒவ்வாது. கற்றதனால் ஆய பயனென் கொல் (2) என்னும் அறிவினான் ஆகுவது உண்டோ (315) என்னும் கல்வி அறிவுகளுக்கு காட்டுவதுபோல "செல்வந்தான் பெற்றத்தாற் பெற்ற பயன்" (524) ஒன்று உண்டு எனக்காட்டுகிறது. தமிழில் பொருள் பற்றிக் குறிப்பில் கோட்பானது ஈதலும் துய்த்தலும் ஆகும்.

உலகத்தில் இன்னும் சிலர் கடன்பட்டு இரவல் பட்டும் குடும்பக் கடன்போல் கொடைக்கடன் செய்வோர் உள்ளனர். தாய்க்குக் கொடுத்தால் அவள் தன் மகளுக்கு கொடுக்குமாப்போல பெற்றதையெல்லாம் பிறர்க்கே ஈயும் அன்பு நிறை நெஞ்சினர் அரிதாக நம்மிடை உள்ளனர் என்பதை,

''இன்னோர்க்கு என்னாது என்னொடுஞ்
சூழாது வல்லாங்கு வாழ்தும் என்னாது
நீயும் எல்லார்க்கும் கொடுமதி மனைகிழ
வோயே!பழந்தூங்கு முதிரத்துக்
கிழவன் திருந்துவேற் குமணன் நல்கிய வளனே'' – (புறம்.163)

என்ற இப்பாடல் கொடைபற்றிய திறனை அறிவிக்கின்றது.

"வினை செய்தவன் தானே முழுப்பயனையும் நுகரவேண்டும் என்பதற்கு ஒப்ப, செல்வம் ஈட்டியவன் முழுவதும் தூய்க்க வேண்டும் என்னும் கொள்கையினர் தானுண்டு, தன் வாய்உண்டு, தன் உடல் உண்டு, தன்னையே நினையும் தடிப்பினாராய்ப் பெற்றோர் உறவினர் சுற்றும் அற்றவர் போலத் தூய்க்கும் அவாவினர் இவரைக் கண்ட வள்ளுவர்.

''இரத்தலின் இன்னாது மன்ற
நிரப்பிய தாமே தமியர் உணல்'' (229)

என்று கூறும் ஆசானின் கொதி நெஞ்சம். இன்மை இடும்பைக் கிரந்து தீர்வாம் (1063) என்று இரப்பு பற்றிச் சினந்த புலவர், உணவுக் குவியல் இருந்தும் ஈயார் என்று காட்டுவார். கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ் (1078) என்று குறிப்பிடுகிறார். (வள்ளுவம், ப.82) கொடா நோன்பிகளுக்குக் கயவர் என்று பெயர் சூட்டினார்.

தனித்து உண்பது அவா உணர்ச்சிக்கும் அச்ச உணர்ச்சிக்கும் அடிப்படை. "அறத்தான் வருவதே இன்பம்" (39) மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் (65), ஈத்துவக்கும் இன்பம் (228) போன்றவை ஆசான் காட்டுகின்ற நல்இன்பங்களாகும்.

அதே நேரத்தில் துய்க்கும் இன்பத்தை கட்டுப்படுத்துவர் அல்லர் திருவள்ளுவர், "அருள் என்னும் அன்புஈன்குழவி" (757) என இயற்கையை ஆசிரியர் ஒப்புவர் தூய்ப்பின்பம் அறிபவனே பிறர்க்கு ஊட்டின்பம் அறிவான். "தான் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு" (399) என்றபடித் தன்னின்பம் கொண்டு பிறரை நுகர்விக்க வல்லவனாவான். அதே நேரத்தில் அறனொடு பட்ட இன்பத்தூய்ப்பை குறைத்துக் கொள்ளச் சொல்வார் வள்ளுவர் என்பதை குறிப்பிடுகின்றார். (வள்ளுவம், ப.84)

"ஆகாறு அளவிட்டிது ஆயினும்
கேடில்லை போகாறு அகலாக் கடை" – (478)

என்று வருவாயைக் கடந்து வறுமைக் கோட்டிற்குள் அடி எடுத்துவையாதே என்பது இதன் கருத்தாகும். வரவு முழுவதையும் தூய்த்து இன்ப வாழ்வு நடத்துதலை ஆசிரியர் உடன்படுகிறார் என்பதை மூதறிஞர் குறிப்பிடுகின்றார்.

மனை முழுதும் நிரம்பிய பொருள் இருந்தும் குறைந்துவிடும் என்று கருதி எடுத்து உண்ண மறுப்பவது கொடுத்து உண்க என்று எப்படிக் கூறுவது தன் வயிற்றை வஞ்சிக்கும் இவன் உலகிடக் கிடப்பதோர் கடமை இல்லை என்ற சினத்தால்,

"வைத்தான் வாய்சான்ற பெரும்பொருள்
அஃதுண்ணான் செத்தான் செயக்கிடந்தது இல்" – (1001) என்பர்.

திருக்குறள் கற்கும்போதே ஒழுகும் எண்ணத்தார்க்கு முழுதும் கற்றபின் ஒழுகும் எண்ணம் உண்டாகாது அதுபோல பொருள் வருங்காலை செலவிடான் வந்த பின்னும் செலவிட நினையான். பூதங்காக்கும் பொருள் என்பது மொழி என்கின்றார்.

"ஆற்றின் அளவறிந்து ஈக அது
பொருள் போற்றி வழங்கும் நெறி" (477)

அளவறிந்து ஈவதே வள்ளுவம் எனத்துணிக என்று வாழ்நூல் செய்தவர் வள்ளுவர். அனைத்தும் ஈக என்று பொறுப்பின்றிக் கூறாமல் அளவறிந்து ஈக என்று நினைந்து சொல்லறிந்து மொழிந்தனர் என்பதைக் குறிப்பிடுகின்றார். – (வள்ளுவம், ப.91)

கொடைக்கடன்

கொடைக்கடன் ஒப்புரவும் ஈகையும் இருவகைப்படும். பொதுக்கொடை என்பது ஒப்புரவு (தனிக்கொடை) ஈகையாம் ஒப்புரவு என்கின்ற விளக்கு ஒ –பல்லுயிருக்கும் ஒத்த, புரவு – கொடை – அல்லது காப்பு என்பது பொருள்.

“பேரறிவாளன் திருஊருணி நீர் நிறைந்தற்று” (215)

“மாரிமாட்டு என்னாற்றுங் கொல்லோ உலகு” (211)

எனப் பரந்த பொதுவுவமைகளை உயர்திணையுள்ளும் அஃறிணையுள்ளும் பல்லுயிர்க்குப் பொருந்திய பெருங்கொடை என்பதுவே ஒப்புரவு அதிகாரத்தின் கருத்து ஆகும். (வள்ளுவம், ப.84)

இன்மை நிலை

உலகில் இருப்போரும் உள்ளனர் இல்லாதோடும் உள்ளனர். நம் முன்னோர்கள் காட்டுமிராண்டியாக வாழ்ந்தபோது தாய்வழிச் சமூகமாக வாழ்ந்தனர். அனைத்தும் அனைவருக்கும் என்னும் பொதுவுடைமைக் காலமாக இருந்தது. காலப்போக்கில் உணவைப் பங்கீட்டுப் பிரச்சனையால் தனியுடமையும் ஆணாதிக்கம் உருவாயிற்று. வளர்ந்து தொழிலாளி முதலாளி ஆகிய இருவருக்குமான கொள்கைப் போர் நடந்துகொண்டிருக்கின்றது. ஆனால் தனியுடைமை என்று வரலாற்றுக் காலந்தொட்டு நீண்டும் கொண்டுதான் இருக்கின்றது. தனிவுடைமை என்பது இல்லாதார்க்கும் இருப்பவருக்குமிடையே சுய நல அரசுகளின் உதவியுடன் இடைவெளியானது நீண்டுகொண்டே இருக்கும் இருப்போர் இல்லாதோரின் பிரிவுகளும் பிரச்சினைகளும் நீடிக்கும் ஒற்றுமையில்லாது மன்னுயிர்க்கெல்லாம் தீமைதவிர எதுவும் மிஞ்சாது. இதுவே தனிவுடைமையின் கொடுஞ்செயலாகும். இத்தகைய கொள்கைகொண்ட நாடுகளில் அன்றும் ஒருவன் பொருள் ஈட்டுவதற்கு எந்த ஒரு வரையறை இல்லை. “கோடி தொகுத்தார்க்கும்” (377) என்றபடி ஈட்டியவையெல்லாம் தொகுத்துக் கோடற்கு வரையறை இல்லை. பண்டைக் காலத்தில் செல்வர்களுக்கென தனி வரி விதிப்புமில்லை. இறை எல்லார்க்கும் ஒப்பவே வகுக்கப்பட்டது. பெருஞ்செல்வந்தர்பால் நேரடிப் பொருள்கேட்பது கொடுங்கோன்மை என்று அறிஞராலும் எண்ணப்பட்டது.

‘‘வேலொடு நின்றான் இடுவென்றது
போலும் கோலொடு நின்றான் இரவு’’ (552)

‘‘இன்மையின் இன்னாது உடைமை
முறைசெய்யா மன்னவன் கோற் கீழ்ப்படின்’’ (558)

போன்ற குறள் தனியுடைமை மக்களின் பற்று மனப்பான்மைக்கு அன்றும் இன்றும் சான்று என்கிறார். – (வள்ளுவம், ப. 104)

சிலரிடம் மறைந்திருக்கும் பொருளைச் சமப்படுத்த வேண்டி பெருங்கொடையான ஒப்புரவு பண்பினை தனியதிகாரமாக வகுத்தனர்.

”ஒப்புரவின் நல்லபிற பெறல்” (213) என்றும் ஈதல் நன்று என்றும் குறிப்பிட்டுள்ளார் என்பதைக் குறிப்பிடுகின்றார்.

ஒப்புரவும் ஈகையும் தனியுடைமை நாட்டிற்குக் காப்புத்தூண்கள் ஆவன. தனியுடைமை நாடுகளில் பொதுவுடைமை வழிகளைச் சிறுகச்சிறுக கையாள்கின்றன. (வள்ளுவம், ப.106) என்று கூறுவதால் பொதுவுடைமை கொள்கைதான் அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வாகும் என்பதை குறிப்பிடுகிறார்.

வள்ளுவர் வறுமை நிலைமையைத் துய்த்தாரோ அறியேன் ஆயினும் வறியோர் துன்பத்தினை நன்கு அறிந்தவர் என்பதற்கு, “இன்மையின் இன்மையே இன்னாதது” (1041) இன்மை என ஒரு பாவி (1042), அறம் சாரா நல்குரவு (1047) எனக் துடிப்புள்ளம் கொண்டு வறுமையின் நிலையைப் புலப்படுத்துகின்றார். – (வள்ளுவம், ப. 108)

இன்றும் வருவது கொல்லோ
நெருநலும்கொன்றது போதும் நிரப்புவறியோர் வேறு தாம் வேறு எனப் பிரித்து நிற்றார் அல்லர் என்பதற்கு, (கு.1048) என்ற குறள்வழி மனத்துடிப்பை எடுத்துரைக்கினர்.

இன்மை நிலையைத் துடைப்பது உடையார் கடன் பிறர் மேற்றாக வைத்து ஆசான் கூறிய அறநிலையாகும். ஒருவன் பசித்திருந்தால்,

‘‘உறுபசியும் ஓவாப் பிணியும்
செறுபகையும் சேராது இயல்வது நாடு’’ (734) என்ற குறளின்வழிப் பசியின்மை, பிணியின்மை, பகையின்மை என்னும் முக்கூற்று உடையது. இம்மூன்று உடைய நாடே நம் முன்னோர்கள் காணவிழைந்த உலகம் என்கிறார். – (ப.117)

‘‘பசியும் பிணியும் பகையும்
நீங்கி வசியும் வளனும் சுரக்க” – (சிலம்பு) என்று இளங்கோ பசிபணியைப் பற்றி பாடியுள்ளார்.

அறிவுப் பிறப்பு

மக்களுள் அறிவுப் பிறப்பும் உண்டு அறிவிலாப் பிறப்பும் உண்டு என்று கூறுவது வள்ளுவ முரண்பாடாகும். ஒரு சாதிக்கே அறிவு, ஆண்மை, பண்பு, நாகரிகம் இருக்கும் என்பது குறுகிய மனம் அறிவில் எழுந்த ஆகாக் கொள்கையாகும்.

அறிவுப்பிறப்பால் வாய்த்த நாம் பெற்ற உடம்பால் குறையுடை யோமாயினும் அவ்வுடற்குறை நம் வாழ்வில் இடையூறும் இல்லை. ஆனால், வாழ்க்கை இழந்தவர் எனக் கருதுவது மானுடப்பிறப்பை அவமதிப்பதாகும்.

உள்ளது கொண்டு இல்லது நிரப்பிக் கொள்ளும் நினைப்பரிய வன்மை நம் அறிவின் இயல்பு என்பது வள்ளுவம்,

“வெள்ளத் தனைய இடும்பை
அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக் கெடும்” (421)

அறிவு அற்றம் காக்கும் கருவி (வள்ளுவம், ப.421)

என வரும் குறள்களே சான்றாகும் என்கிறார் மூதறிஞர். (வள்ளுவம், ப.132)

மக்கள் வாழ்விற்கு நிறையுடலை அரிய பெருந்துணை என்றோ குறையுடலைத் தடுப்பரிய இடையூறு என்றோ கூறுவது வள்ளுவம் அன்று. நல்வாழ்விற்கு அறிவாட்சியே அடிப்படை என்பதை,

“அறிவுடையார் எல்லாம் உடையார்
அறிவிலார் என்னுடையரேனும் இலர்” (430) என்னும் இக்குறளே தனிச் சான்றாகும்.

மக்கட்கு ஒழுக்கம் அறிவு, கல்வி, ஊக்கம், முயற்சி என்னும் பிரிவில்லா இயற்கை நலங்களே பிறழ் வாழ்வு நலங்கள் என்பது வள்ளுவத்தின் கருத்தாகும். எல்லாரும் அறிவுத்தன்மை உடையவர்களே அதனை ஆட்சிப்படுத்தினால் எல்லாரும் நலம் பெறுவர்.

அரியன கற்று மனக்குற்றம் அற்றவர் என்று நாம் எண்ணிய பெரியோர் மாட்டும் அறிவின்மை காணப்படும் சிறிதும் கற்றறியான் கண்ணும் பெருநலம் பயக்கும் இந்நிலையை அறிந்தவர் வள்ளுவர்,

“செயற்கரிய செய்வார் பெரியார்
சிறியர் செயற்கரிய செய்கலா தார்” (26)

என்னும் குறளின்வழி பெரியவர் சிறியர் என்பன ஒருவர் சுட்டாது இலக்கண வகையில் தோன்றிய காரணப் பெயர்கள். பெரியவர் என்றோ, சிறியவர் என்றோ பிறப்பில் ஒரு பகுப்பு இல்லை என்பது வள்ளுவம். பெரியாராயினர் இழிந்த செயலைச் செய்தால் சிறியராவார். சிறியவராயினும் அரிய செயலைச் செய்தால் பெரியராகவார் எனக் குறிப்பிடுவதை உணர்த்துகின்றார். (வள்ளுவம், ப.145)

முடிவுரை

வள்ளுவரின் நெஞ்சமானது அவரின் குறளோடு ஒன்றிணைந்தது செயல்வடிவமே. வள்ளுவரின் நெஞ்சமாக அமைந்திருக்கின்றது என்றுரைக்கிறார்.

திருக்குறட்குப் பொதுமை நிலைக்களம் அல்ல மக்கள் மனமே நிலைக்களமாக அமைகின்றது. நிலைப்பன்மைக்கேற்ப அறப்பன்மை வகுப்பது திருக்குறளின் முறையாகும். அவரவர் வாழ்நிலைக்கேற்ப பொருத்திக் கற்பதே குறட்கல்வி நெறியாக அமைகிறது.

பொருளை ஈட்டலும் வேண்டும் தூய்த்தலும் வேண்டும். அகத்தூய்மையும் பொருள் ஒழுக்கம் அகங்கை புறங்கை போன்றன என்கிறார்.

அறத்தான் வருவதே இன்பம் என்றும் பசியை மாற்றும் ஈகையாரும் செய்ய வேண்டுவன என்றுக் குறிப்பிடுகின்றார்.

முயற்சியே உயிர்நிலை, செயலுக்குவரும் அறங்களைக் கூறுவதே வள்ளுவம் எனவும் யாருக்கும் ஒல்லும் நெறிகாட்டுவதே வள்ளுவம் என்று கூறுகின்றார்.

பொதுமைப்படுத்துதலாம் வறுமை உள்ளிட்ட அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு. மக்களுள் சிறியவர் பெரியவர் என்பதை உணர்த்தினாரில்லை; மாறாக நடத்தையினால் ஒருவரின் தன்மை மாறுகிறது என்பதை வள்ளுவம் உணர்த்துகிறது.

வள்ளுவனிஸம் என்ற கொள்கை உருவாக்க எவ்வகையில் இவை வழிவகுக்கும் என்பதற்கான மேலாய்வுக்கு எடுத்துச் செல்ல இக்கட்டுரை பரிந்துரைக்கின்றது.

******

கட்டுரையாளர் உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அ.வ.அ.கல்லூரி (தன்.) மன்னன் பந்தல், மயிலாடுதுறை.

வாழ்வு நெறி – முனைவர் வ.சு.ப.மாணிக்கம்.

இலக்குவனார் திருவள்ளுவன் | 16 March 2014 | No Comment



1. பலருக்குக் ஆராய நூல் வேண்டும், சொற்பொழிவாற்றக் கருத்து வேண்டும் என்பதற்காகத் திருவள்ளுவர் திருக்குறளை இயற்றவில்லை. எல்லாரும் வாழ வேண்டும்; எப்படி வாழ்விப்பது என்ற தலையாய நோக்கமே திருக்குறட் பிறப்பிற்குக் காரணம். இந்நோக்கம் எல்லாக் குறள்களிலும் வெளிப்படக் காணலாம். மிகக் கீழானோர்க்கும் உயர்வுண்டு; இயல்பாகவுள்ளவர்க்கும் மேலுயர்வு உண்டு; மிகவுயர்ந்தார்க்கும் மேன்மேலுயுர்ச்சியுண்டு என்ற நம்பிக்கையைத் திருக்குறள் நமக்கு ஊட்டுகின்றது.


தாழ்ந்தாரைப் பார்த்துச் சோர்வடைய வேண்டா எனவும், உயர்ந்தாரைப் பார்த்து அமைதியடைய வேண்டா எனவும் ஊக்கமும் ஆக்கமும் தருவது திருக்குறள். எல்லார்க்கும் பொதுவான அறங்களைக் கூறுவது குறள் என்று சொல்லி வருகின்றோம். இது எவ்வளவு தவறான கருத்து? எவ்வளவு வீழ்வான கருத்து? பொதுவறம் கூறாது அவரவர்க்குப் பொருத்தமான அறங்கூறுவதே குறள். இதுவே குறளின் தனிச்சிறப்பு. பொதுவறம் செயற்படுமா? பொதுமடம் துப்புரவப்படுமா?

“நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர், நீதி குறைந்தவர் காசுகள் தாரீர், அதுவுமற்றவர் வாய்ச் சொல் அருளீர்” என்று பொருள் நிலைக்கு ஏற்ற அறம் பாரதியார் கூறியிருப்பதை அறிவோம். அதுபோல் உலகுபுகழ் வள்ளுவர் ஒவ்வொருவரையும் தனித் தனியாக முன்னேற்ற வேண்டி அவரவர் செய்வதற்கு ஏற்ற அறங் கூறியுள்ளார். அறத்திற்காக அறம் எழுதவில்லை அவர். இவ்வுண்மையை இப்போது நாம் தெளிந்து வருகின்றோம். யாரையும் முன்னேற்றிவிடவல்லது முப்பால் என்பதனை ஊரறிய உலகறியத் தெளிவிக்க வேண்டும். “என்நிலைக்கு ஏற்ற அறம் இந்நூலில் உண்டு; ஆதலால் எனக்கும் முன்னேற்றம் உண்டு” என்னும் மெய்ந்நம்பிக்கையோடு திருக்குறளைப் படியுங்கள்.

2. அறம் எல்லா மக்களும் செய்ய வேண்டிய கடமை. எனினும் இப்படிச் செய்வதுதான் அறம். இவ்வளவு செய்தாற்றான் அறம் என வரம்பு காட்டலாமா? வள்ளுவர் அறம் வலியுறுத்தினாரேயன்றி, அதற்கு ஓர் அரண் கட்டவில்லை.

(தொடரும்)

குறள்நெறி தை 2, 1995 / சனவரி 15, 1964



Topics: கட்டுரை, குறள்நெறி, திருக்குறள் | Tags: குறள்நெறி, திருக்குறள், வ.சு.ப.மாணிக்கம்

Related Posts

Leave a Reply

ISSN : 2455-0531


இனம்

(இனம் இனத்தைச் சேரும்)

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்


இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர் : 2 இதழ் : 8, பிப்ரவரி 2017 Vol. II Issue 8, February 2017



வ.சுப.மாணிக்கனாரின் நூற்றாண்டு சிறப்பிதழ்









சு.செல்வகுமாரன் I சேது.முனியசாமி I ப.திருஞானசம்பந்தம் I ஆ.மணி I மா.பரமசிவன் I சு.நாகரத்தினம் I கடலூர் மணிமாறன் I ப.சண்முகராணி I இல.இராஜதுரை I த.சத்தியராஜ் I மா.சிதம்பரேஸ்வரர் I கு.பாக்கியம்

Inam:International Research E_Journal of Tamil Studies

Inam *ISSN : 2455 - 0531*

இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies

இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

பிப்ரவரி 2017 மலர் : 2 இதழ் : 8
February 2017 Volume II Issue 8

உள்ளே ...

inam:International Research E_Journal of Tamil Studies ISSN : 2455-0531
February 2017, Issue:8 www.inamtamil.com

மதிப்பிடப்பெற்றது

பேராசிரியர் வ.சுப.மாணிக்கனாரின் திறனாய்வுச் சிந்தனைகள்

முனைவர் **சு.செல்வகுமாரன்**

உதவிப் பேராசிரியர், தமிழ்ப்பிரிவு, தொலைதூரக்கல்வி இயக்ககம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கைபேசி — 9442365680, mugadu.kumaran@gmail.com

முன்னுரை

“கடல் போல ஆழ்ந்தகன்ற கல்வியாளர்!
கதிர்மணிக்குப் புகழ்மிகுந்த தலைமாணாக்கர்!
கொடை அண்ணாமலை வள்ளல் அழகப்பர் பல்
கலைக்கழகம் மொழிவளர்த்த தமிழ்ப் பேராசான்
படிப்படியாய் முன்னேறித் துணைவேந்தரானார்!
பைந்தமிழ் உலகத்தின் தனிவேந்தரானார்!
மடிந்தாராம் மாணிக்கம்! ஐயோ! இல்லை!
மூதறிஞர் பயின்றமிழாய் வாழ்கின்றாரே” (வ.சுப.மாணிக்கனாரின் சிந்தனைகள், ப.104)

என்று அவரது மாணாக்கர் பேராசிரியர் பழ. முத்துவீரப்பனாரால் புகழப்படுகின்ற பெருந்தகையாளர் மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார். பேராசிரியரின் பார்வையில் திறனாய்வுச் சிந்தனைகள் குறித்து இனங்காண்பதாய் இக்கட்டுரை அமைகின்றது.

வாழ்வும் பணியும்

பேராசிரியர் வ.சுப.மாணிக்கனார் 1917ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14ஆம் நாள் புதுக்கோட்டை மாவட்டம் மேலைச்சிவபுரியில் பிறந்தவர். ஆறு வயது நிறைவடைவதற்குள்ளாகவே தாய் தந்தையரை இழந்திருந்தார். எனினும் பொய் சொல்லா மாணிக்கமாக வாழ்ந்த பெருமைக்குரியவர். வித்துவான், பி.ஓ.எல், எம்.ஏ, எம்.ஓ.எல், முனைவர் பட்டங்கள் பெற்றவர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் புலமுதன்மையராகவும், காரைக்குடி அழகப்பா கல்லூரியில் முதல்வராகவும் பதவி வகித்தவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராகவும் விளங்கியவர்.

மேலும் படைப்பிலக்கியம், கடித இலக்கியம், உரை எனத் தமிழிலும் ஆங்கிலத்திலுமாகச் சுமார் இருபத்தைந்து நூல்களை வெளிக்கொணர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கனவாகும்.

ஆய்வு நூல்கள்

வள்ளுவம் (1953), தமிழ்க்காதல் (1962), கம்பர் (1965), தொல்காப்பியப் புதுமை (1958), எந்தச்சிலம்பு? (1964), இலக்கிய விளக்கம் (1972), சிந்தனைக் களங்கள் (1975), ஒப்பியல் நோக்கு (1978), தொல்காப்பியத்திறன் (1984), இரட்டைக் காப்பியங்கள் (1958), நகரத்தார் அறப்பட்டயங்கள் (1961), The Tamil Concept of Love, A Study of Tamil Verbs, Collected Papers Tamilology.

கவிதை நூல்கள்

கொடைவிளக்கு (1957), மாமலர்கள் (1978), மாணிக்கக் குறள் (1991).

நாடக நூல்கள்

மனைவியின் உரிமை (1947), நெல்லிக்கனி (1962), உப்பங்கழி (1972), ஒரு நொடியில் (1972).

கடித இலக்கியம்

தலைவர்களுக்கு (1965)

உரை நூல்கள்

எழுத்ததிகாரம் நூன்மரபும் மொழிமரபும் மாணிக்கவுரை (1989), திருக்குறள் தெளிவுரை (1991), நீதி நூல்கள் உரை (1991).

ஆக இவை அனைத்தும் இவரின் கடின உழைப்பையும், வளர்ச்சியையும் அடையாளம் காணும் இவர் குறித்த வாழ்வியல் வரலாறாய் அமைகின்றன.

சமூகச் சிந்தனை

பேராசிரியர், ஆராய்ச்சியாளர், எழுத்தாளர், தமிழ்ப்பற்றாளர், சமூகச் சிந்தனையாளர் என்பதாய்ப் பன்முகப் பரிணாமங்களோடு ஒளிரும் வ.சுப.மாணிக்கனார் சமூகத்தின் மீது ஆழ்ந்த கரிசனம் மிக்கவராகத் திகழ்ந்தவர். சமூகத்தின் உயிர்நாடியான மக்கள், மொழி, ஆசிரியர், எழுத்தாளர் குறித்து நிரம்ப எழுதியும் பேசியும் உள்ளார். அண்ணாமலை நகரில் 23.3.1987 அன்று நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் முதன்மையுரை ஆற்றிய பேராசிரியர் வ.சுப.மா எழுத்தாளர்களை **எழுது குலத்தோராகிய நாம்...** (இலக்கியச் சாறு, ப.11) என்று ஒரு

குலமாக அங்கீகரிப்பதும், அவர்களை **மொழித் தொழிலாளர்கள்...** (இலக்கியச் சாறு, ப.13) என்று குறிப்பிடுவதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. மட்டுமல்லாது எழுத்தாளர்களின் வாழ்வு வளமானதாக அமைய வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தும் பாங்கு இன்றும் கூட யாராலும் சுட்டமுடியாத ஒன்றாகும்.

"தமிழ் எழுத்தாளர்கள் பொருளாதாரத்திலும் நல்ல தலையெழுத்து உடையோராக, வறுமைக் கோட்டிற்குக் கீழே தாழாமல் வாழ்வுக் கோட்டிற்கு மேலே இருப்பவர்களாக வாழ வேண்டும் என்பது என் முதற்சிந்தனை. எங்கள் முன்னோர்களை வேறு வகையில் எல்லாம் பின்பற்ற நாங்கள் ஆயத்தமாக இருக்கின்றோம். பெருஞ்சித்திரனார், பாரதியார், வ.உ.சி., அரசஞ்சண்முகனார் போன்ற பல பெருமக்கள் வறுமையில் உழன்று கன்னித்தமிழைக் காத்தனர். நாங்கள் அந்த ஒரு வழியைப் பின்பற்ற விரும்பவில்லை. அது முடியரசுக் காலம், இது குடியரசுக் காலம். எழுத்தாளர்கட்கும் வாக்குரிமையுண்டன்றோ?.

> **நமக்குத் தொழில் கவிதை... என்ற பாரதியார் வாக்கின்படி எழுத்தாளர்களும் மொழித் தொழிலாளர்களே. அவர்கள் தங்கள் சிந்தனைத் தொழில் எழுது தொழிலுக்குத் தக்க வருவாய் பெற்றுத் தம் பொருட்காலில் நிற்க வேண்டும். அப்போதுதான் சந்தை நோக்கமும் தொழுநோயுமின்றிச் சிந்தனையுரிமையோடு எழுத்துப் பிறக்கும்** (இலக்கியச்சாறு, ப.13)

என்று குறிப்பிடுகின்றார்.

மேலும் தொடர்சிந்தனையாக வீட்டு நூலகம் அமைப்பது குறித்தும், குடும்ப நலத்திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களுக்கு விளம்பரப்படுத்துகின்ற அரசு, மக்கள் புத்தகம் வாங்குவது தொடர்பாகவும் பல அறிவிப்புகளை, விளம்பரங்களை வெளியிட வற்புறுத்துகின்றார். சான்றாக **வீட்டுக்கு ஒரு நூலகம்..., புத்தகம் வாங்கிப் புத்தகம் பெறுக..., ஏடுகள் வாங்கின் கேடுகள் நீங்கும்...** (இலக்கியச்சாறு, ப.14) போன்ற வாசகங்களை அவர் முன்வைக்கின்றார். அத்துடன் நூல்கள் விற்பது வாங்குவது குறித்த அரசின் பங்களிப்புப் பற்றி பேசும் அவர், கைத்தறி முதலானவற்றிற்கு அரசு தள்ளுபடி வழங்குவது போல மத்திய, மாநில அரசுகள் புத்தகங்களுக்கு நிதிநிலையில் ஐந்து சதமாவது ஒதுக்கீடு செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால்தான் பாரதி கூற்று போல வெள்ளம் போல் கலைப்பெருக்கும், கல்விப் பெருக்கும் உயரும், அறியாமைப் பள்ளத்தில் விழுந்திருக்கும் உயர்திணைக் குருடரெல்லாம் அறிவு பெறுவர் என்று

குறிப்பிடுவதும் பேராசிரியரின் எழுத்து – எழுத்தாளர் - சமூக ஈடுபாட்டைப் புலப்படுத்துவதாய் உள்ளன.

ஒரு சமூகம் மேம்பட அந்தச் சமூகம் தன் மொழியில் செழுமையுற்றிருக்க வேண்டும். மொழி ஒரு ஊடகம். அது அறிவை, உணர்வினைப் பகிர்ந்து கொள்ளுகின்ற ஒரு கருவி என்பதை நாம் அறிவோம். அந்த வகையில் தாய்மொழியாம் தமிழ்மொழியின் மீது அளவற்ற பற்றுடையவராக வ.சுப.மா திகழ்ந்துள்ளார். அவரின் தமிழுணர்வைப் பறைசாற்றும் இரா.மோகன்,

> **தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழ் இனம் பற்றிய சிந்தனைகள் வ.சுப.மாவின் நூல்களில் அங்கிங்கு எனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கக் காணலாம்** (வ.சுப.மாணிக்கம், ப.98)

என்று பதிவுசெய்கின்றார். மேலும் தாய்மொழிக்கல்வியின் அவசியத்தை வலியுறுத்தும் வ.சுப.மா.,

“மொழியியல் கற்க முயலுமுன் உன்தாய்
மொழிதமிழ் கற்பாய் முதல்” (மாணிக்கக் குறள், 45)

என்று தாய்மொழி கற்க வலியுறுத்துகின்றார். அதுமட்டுமல்லாது மொழிக் கலப்பினால் தாய்மொழியாம் தமிழ்மொழிக்குக் கேடு விளையும் என்பதை நன்கு உணர்ந்திருந்தார். எழுத்துச் சீர்திருத்தத்தையும் பெரிதும் ஏற்றுக் கொண்டிராததை அவரது பாடல்வரிகள் மூலமாக நாம் உணர்ந்துகொள்ள முடிகிறது.

“ஒழிகெனக் கத்துதற்கோ இந்திமொழியும்
ஒழியும் தமிழை உயர்த்து” (மாணிக்கக் குறள். 66)

“மொழித்தூய்மை காட்டித் தலைக் காக்கை கற்பு” (மாணிக்கக் குறள்.371)

“களை அயலொலி, காண்க தமிழ்ச்சொல்” (மாணிக்கக் குறள்.167)

“எழுத்துத் திருத்தம் இயல்போ தமிழைக்
கழித்துச் சுழிக்கும் கதை” (மாணிக்கக் குறள்.156)

குழந்தை பெற்றுக்கொள்வது பற்றிப் பேசுகின்றபோது பொருளாதாரத்தோடும், தமிழோடும் தொடர்புபடுத்தும் விதமும் பேராசிரியரின் ஆழ்ந்தகன்ற அறிவுப்பூர்வச் சிந்தனையின் அடையாளமாகவே தொழிற்படுகின்றது.

“பெறுக குழந்தை பெறுவருவாய்க் கேற்ப

உறுக தமிழ்ப்பேர் ஒலி” (மாணிக்கக் குறள்.216)

திறனாய்வாளர்

பேராசிரியர் சிறந்த ஒரு திறனாய்வாளர் என்பதற்கு அவரது தமிழ்க் காதலும் கம்பன் உள்ளிட்ட பல நூலாக்கங்களும் சான்றாகத் திகழ்கின்றன. படைப்பியம், கம்பனியம், இலக்கியக் கலை, இலக்கியத்தளம், இலக்கிய உத்தி போன்ற அவரின் சொல்லாடல்களின் பயன்பாடு அவரின் உலக இலக்கிய மற்றும் திறனாய்வு நூல்களின் வாசிப்புத் தளத்தின் வெளிப்பாடாக நாம் எண்ணிப் பார்க்க முடியும்.

பேராசிரியர் தனது ‘கம்பர்’ நூலில் ஓர் இலக்கியத்தை அல்லது ஒரு காப்பியத்தை எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்குகின்றபோது ஒப்புமை முறை, முழுப்பார்வை, துண்டுப்பார்வை, தொடர்பழகு, சங்கிலிப்பார்வை, தனிப்பார்வை, உலகப்பார்வை என்பதாக விவரிப்பன அவரின் திறனாய்வுப் பார்வையினை இனங்காட்டுவதாய் உள்ளது. திறனாய்வு பற்றிக் குறிப்பிடுகின்ற போது,

> **திறனாய்வு என்பது ஒப்பாய்வன்று, உள்ளாய்வு. புறனாய்வன்று அகனாய்வு. இராமாயணப் பெருங்காப்பியம் வடிக்க முனைந்த கம்பர் தம் காப்பியத்தில் என்னென்ன கூறுகள் எவ்வாறு எவ்விடத்து அமைய வேண்டுமென்று கருதினார். அவர் காட்டுகின்ற காப்பிய இலக்கணங்கள் என்ன என்று அந்நூலுக்கு உரிய தனியளவுகோலைக் கண்டுபிடித்து உலகிற்குக் காட்டுவதே நம் நோக்கமாதல் வேண்டும்** (கம்பர், ப.21)

என்று திறனாய்வுப் பார்வையின் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

வ.சுப.மாணிக்கனார் திறனாய்வாளர் மட்டுமல்ல, படைப்பாளியும் ஆவார். எனவேதான் அவர் ஒரு படைப்பைச் சிதைக்காமலும் அதேநேரத்தில் நுட்பமாகப் புரிந்துகொள்ளவும் விளைகின்றார். படைப்புக்கும், படைக்கும் படைப்பாளிக்கும் பெருத்த வேறுபாடும் அதே நேரத்தில் தனித்த நோக்கும் இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டமையால்தான் அவர் அகனாய்வுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை நம்மால் எளிதாக உணர முடிகின்றது. அதுபோலவே துண்டுப்பார்வை காப்பியம் போன்ற ஒரு பெரும்படைப்பை மதிப்பீடு செய்வதற்கோ, விமர்சிப்பதற்கோ சரியான அளவுகோலாக இருக்காது என்பதைத் தீர்க்கமாக முன்வைக்கின்றார். மட்டுமல்லாது முழுப்பார்வை, தொடர்பழகு, சங்கிலிப் பார்வை போன்றவையே படைப்பைச் சரியாக

விமர்சிப்பதற்கு ஏற்புடைய அணுகுமுறையாக இருக்கும் என்பதை வலியுறுத்துவதும் அவரின் திறனாய்வு அணுகுமுறைக்கான சான்றாகவே கொள்ளத்தக்கது.

வ.சுப.மாவைப் பற்றி, அவரின் நூல்களைப் பற்றிப் பேசுகின்றபோது அவரின் தமிழ்க்காதலைப் பற்றி நாம் சொல்லாமலிருக்க முடியாது. சங்க அகப்பாடல்கள் குறித்த ஆய்வாக அமையும் இந்நூல் அகஉணர்வு, அகச்செயல்பாடு, அகஇலக்கியம் குறித்துத் திறந்த நிலையில் பேசக்கூடிய ஒரு நல்உரையாக அமைகின்றது. தொல்காப்பியம், தமிழர் வாழ்வியல் நெறிமுறைகளுக்கு உட்படுத்தியும், தமிழர் நிலத்திற்கு உட்படுத்தியும், சில இடங்களில் மானுடவியலோடு தொடர்புபடுத்தியும் பார்த்திருப்பதைக் காணலாம். ஆய்வுப் பொருளின் தன்மைக்கேற்ற பொருத்தப்பாடுடைய ஆய்வியல் அணுகுமுறையினை அவர் இங்குக் கைக் கொண்டிருப்பது சிறப்புக்குரியது.

தொல்காப்பியரை ஓரிடத்தில் சுட்டுமிடத்து “பாலியலறிஞன்” (ப.14) எனச் சுட்டுவதும், காமம் பற்றிப் பேசுமிடத்தில் “உலகம் நீடு வாழ உயிர்க்கொடை செய்யும் காமம்” என்றும் (ப.14) அகத்திணையின் தோற்றம் பற்றிப் பதிவு செய்யுமிடத்து “சமுதாயவியல் மானுடவியல் தொல்தமிழகத்தின் உளவியல் என்னும் முக்கூற்றுத் தன்மைகளை(ச்) சார்ந்து நிற்பது” (ப.93) எனக் குறிப்பிடுவதும், மேலும் அகத்திணை இலக்கியத்தைப் பெண்ணிலக்கியமாக, (ப.377) கற்பிலக்கியமாக, (ப.378) பாலியற்கல்வி தரும் இலக்கியமாக (ப.379) எல்லாம் பார்க்கும் விதம் அவரின் தனித்த, புதிய, நுட்பமான அதேநேரம் தமிழனின் பண்பாட்டோடு கூடிய ஆய்வாக நாம் எண்ணிப் பார்க்கத்தக்கன.

“அகத்திணை ஓர் பாலிலக்கியம், பெயரில்லாதார் வாழ்க்கையிலிருந்து காம நுணுக்கங்களைக் கற்றுக் கொள்கின்றோம். காமம் பற்றிய ஆணுடல் பெண்ணுடலின் கூறுகளையும், இயற்கை, செயற்கைத் திரிபு ஆகிய மனக்கூறுகளையும் தரவின்றிப் பட்டாங்காய்ச் சொல்வது” (ப.379)

எனப் பாலியல் நூலாக இனங்காணும் அவர், அக இலக்கியத்தைச் சொல்வதில் எத்தகைய பொறுப்புணர்வு, கட்டுப்பாடுகள் தேவை என்பதையும் அடையாளப்படுத்தத் தவறவில்லை. அவர் கூறுகின்றபோது,

“அகத்திணையில் பொருளுக்கு மட்டும் வரம்பன்று, பொருளைச் சொல்லும் முறைக்கும் வரம்பு உண்டு என்பது கற்கத்தகும். வரம்பிட்ட பாற் பொருளும், வடித்திட்ட இலக்கிய

முறையும் இரண்டறக் கலந்த ஒருமைப் பண்பே அகம்" (தமிழ்க் காதல், ப.28) எனச் சுட்டித் தெளிவுபடுத்துகின்றார்.

முடிவுரை

பேராசிரியர் வ.சுப.மா அவர்களின் படைப்பும், பேச்சும், சிந்தனைச் செயல்பாடும் தமிழ் மக்களின் மொழி, பண்பாட்டைப் பிரதிபலிக்கின்ற சமூகக் கரிசனம் மிக்கதாக அமைகின்றன. இவரது திறனாய்வுப் பார்வையைப் பொறுத்தமட்டில் புதிய, தனித்தன்மை வாய்ந்த, நுட்பமான, அதே நேரம் இலக்கியம் உருவான நிலம்சார்ந்த பண்பாட்டோடு கூடிய பார்வை முறையினை அடையாளப்படுத்துவதாய் விளங்குகின்றது.

துணைநூற்பட்டியல்

1. இரா சாரங்கபாணி .– மாணிக்கச்செம்மல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – 1997
2. வ மாணிக்கம்.சுப.– தமிழ்க்காதல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு - டிசம்பர்-2012
3. வ.சுப.மாணிக்கம் – கம்பர், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – 1990.
4. வஇலக்கிய விளக்கம் - மாணிக்கம்.சுப., மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – 1972,
5. வசிந்தனைக் களங்கள் - மாணிக்கம்.சுப., மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – 1975.
6. வமாணிக்கக் குறள் - மாணிக்கம்.சுப., மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு – 1991.
7. வமாணிக்கனாரின் சிந்தனைகள்.சுப., மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

மதிப்பிடப்பெற்றது

வ.சுப.மாவின் அச்சேறிய நூல்களும் நிறைவேறா ஆசைகளும்

சேது.முனியசாமி
முனைவர் பட்ட ஆய்வாளர், இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

1.0 முகப்பு

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் சங்க இலக்கிய அடியைப் பாடிய கணியன் பூங்குன்றனாரும், பாரியும் கபிலரும், பண்டிதமணி கதிரேசச் செட்டியாரும் பிறந்த மண்ணான பறம்பு மலையில் (தற்போது பிரான்மலை) உதித்த மற்றொரு சான்றோர் வ.சுப.மா. ஆவார். தொன்றுதொட்டுத் தமிழுக்குப் பெருமை சேர்த்த சான்றோர்களின் வரிசையில் புகழோடு தோன்றித் தமிழுக்கு அழகு சேர்க்கும் மாணிக்கமாகத் திகழ்ந்தார். இளம் வயதில் தன் பெற்றோரை இழந்தார். அவ்வப்போது தாய்வழிப் பாட்டி மீனாட்சி ஆட்சியும் தாத்தா அண்ணாமலை செட்டியாரும் கண்ணும் கருத்தாய் வளர்த்ததற்கு நன்றி மறவாது தன்னுடைய முதல் படைப்பில்

"என்னை உடனையார் ஏங்காதே வாழ்வளித்த
அன்னை முதல்வர் அடிப்பணிந்தோம்
உறவினர் வாழ உவந்தளிந்தார்; ஆயுள்
நிறையினர் நின்ற நெறி" **(மனைவியின் உரிமை)**

எனும் அடிகளின் மூலம் வள்ளுவர் கூறும் நன்றி மறவாமையைப் புலப்படுத்துகின்றார்.

தமிழாய்வு எனும் களத்தில் வ.சுப.மா. ஆற்றியுள்ள பங்களிப்பு அளப்பரியது. **'முனைவர்', 'மூதறிஞர்', 'செம்மல்', 'தமிழ்க் காந்தி', 'தமிழ் இமயம்'** எனும் பல்வேறு புகழ்ப் பெயர்களைப் பெற்று விளங்கியவர். **1917**ஆம் ஆண்டு இவ்வுலகக் காற்றினைச் சுவாசிக்கத் தொடங்கி, **1989**ஆம் ஆண்டு சுவாசித்த காற்றை நுகர மறந்தார். பன்முகப் பரிமாணங்களில் தடம் பதித்த வ.சுப.மா. எழுத்துப்பணியில் தன்னை மூழ்கடித்துக் கொண்டார் என்று சொன்னால் அது மிகையாகாது. அவ்வகையில் இக்கட்டுரையானது, எழுத்துத் துறையில் தன்னைப் பதித்ததன் விளைவாயெழுந்த (அச்சேறிய) நூல்களையும், எதிர்காலத்தில் இன்ன பணி செய்ய வேண்டுமெனத் திட்டமிட்டு நிறைவேறா ஆசைகளையும் எடுத்து இயம்புவதாக அமைகின்றது.

2.0 பன்முகக் கல்வியாளர்

வ.சுப.மா தனது தொடக்கக் கல்வியைத் தனது ஊரில் நடேச ஐயரிடம் கற்றார். பின்பு சன்மார்க்கச்சபை தொடர்பினால் பண்டிதமணியிடம் பழகும் வாய்ப்புக் கிட்டியது. தமிழ் படிக்க வேண்டுமெனும் தன் வேட்கையைப் பண்டிதமணியிடம் புகுத்தினார். அவரது ஆர்வத்தைக் கண்டு காரைக்குடி சொக்கலிங்க ஐயா தில்லையில் நிறுவிய வித்தியாசாலையில் புலவர் புகுமுக வகுப்பிற் சேர்ந்து உணவோடு தங்கிப் படிக்க ஏற்பாடு செய்தார். நான்காண்டுகள் பயின்று புலவரானார். பின்னர் **1940**ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை ஆய்வு மாணவராகச் சேர்ந்தார். தமிழிலக்கண வரலாறு தொடர்பான ஆய்வு செய்தமையால் அங்கேயே விரிவுரையாளர் ஆனார். தாமாகவே ஆங்கிலம் பயின்று **1945**ஆம் ஆண்டு பி.ஓ.எல் புகுமுக வகுப்புத் தேர்வெழுதி வெற்றி பெற்றார். வினைச்சொற்களை ஆராய்ந்து சென்னைப் பல்கலைக்கழத்தில் எம்.ஓ.எல் **1948**ஆம் ஆண்டு ஆராய்ச்சிப் பட்டம் பெற்றார். பிஓஎல் பட்டம் பெற்றோர்க்கு அதனையே எம்.ஏ பட்டமாக மாற்றித் தந்தது. பி.ஏ ஆனர்சு பட்டம் பெற்றார். ஓராண்டு கழித்து எம்.ஏ பட்டம் கிடைத்தது. **1957**ஆம் ஆண்டு **சங்க இலக்கியத்தில் அகத்திணைக் கொள்கை** எனும் தலைப்பில் ஆய்வு செய்து ஆங்கிலத்தில் முனைவர் பட்டம் பெற்றார். முதுமுனைவர் பட்டத்தை (டி.லிட்.) **1979**ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பொன்விழாவின் போது வழங்கியது. மேலும் இந்தி, சமசுகிருதம், பிரெஞ்சு ஆகிய மொழிகளையும் கற்றறிந்தார்.

3.0 பன்முகப் படைப்பாளர்

ஆராய்ச்சி, உரை, பதிப்பு, நாடகம், கவிதை, கடித இலக்கியம், ஆங்கில நூல்கள் எனப் பன்முகப் படைப்புகளைப் படைத்துள்ளார். அதுமட்டுமின்றி இன்னும் அதிகமான நூல்களைப் படைக்க வேண்டுமென எண்ணம் கொண்டவராய்த் திகழ்ந்துள்ளார். தமிழ்மீது கொண்டுள்ள அன்பின் விழைவால்தான் நூல்கள் உருப்பெற்றன எனக் கூறினாலும் அது மிகையாகா. இனி அவரால் படைக்கப் பெற்ற நூல்களைக் காணலாம்.

3.1 ஆராய்ச்சி நூல்கள்

வ.சுப.மா. ஆய்வுத் தேடலில் பரந்த எல்லைகளை வகுத்துக் கொண்டவர். ஆய்வுப் பொருள், ஆய்வு எல்லை தொல்காப்பியம் முதல் 20ஆம் நூற்றாண்டு விடுதலைக் கவிஞர் பாரதி பாடல்கள் வரை விரிவாக ஆராய்ந்துள்ளார். அவர்தம்

ஆராய்ச்சிப் பகுதியினை ஏழு வகைகளில் பகுக்கலாம். அவை: இலக்கணம், சங்க இலக்கியம், தமிழின் முதல் அற இலக்கியம், காப்பியம், சமய இலக்கியம், சிற்றிலக்கியம், இன்றைய இலக்கியம் என்பன.

இலக்கண ஆராய்ச்சிப் பகுதியில் **'தொல்காப்பியக் கடல்' (1987)** எனும் நூலினைப் படைத்துள்ளார். இந்நூலில் தொல்காப்பியம் தொடர்பான 31 கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

சங்க இலக்கிய ஆராய்ச்சிப் பகுதியில், **'தமிழ்க் காதல்' (1962)** மற்றும் **'சங்க நெறி' (1987)** ஆகியன உள்ளன. இதில் தமிழ்க் காதல் எனும் நூல் அறிஞர் (டாக்டர்) பட்டத்திற்காக (சென்னைப் பல்கலைக்கழகத்தில்) எழுதிய ஆங்கில நூலின் தமிழாக்கமாகும். சங்கநெறி எனும் நூலானது சங்க இலக்கியம் தொடர்பான 24 கட்டுரைகளின் தொடர்பாகும்.

காப்பிய ஆராய்ச்சிப் பகுதியில், **'கம்பர்' (1987), 'காப்பியப் பார்வை' (1987)** எனும் இரு நூல்கள் வெளிவந்துள்ளன. கம்பர் எனும் நூல் அறக்கட்டளைச் சொற்பொழிவின் சாரம் ஆகும். இதனைக் கீழ்க்காணும் கருத்துவழி அறியலாம்.

> "***தமிழ்ப் பேராசிரியர் மூதறிஞர் இரா.பி.சேதுப்பிள்ளை தம் அன்னையார் நினைவாகச் சொருணாம்பாள் நிதிச் சொற்பொழிவு எனும் அறக்கட்டளையை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நிறுவினார். இவ்வமைப்பின்கீழ் கம்பர் என்ற புலவர் பெருமான் தலைப்பில் 1964 பிப்ரவரி 21, 22, 23 ஆம் நாட்களில் காப்பியப் பார்வை, காப்பியக் களங்கள், காப்பிய நேர்மை என்ற முத்திறப் பொருள் பற்றிச் சொற்பொழிந்தேன் "*** (கம்பர்:முன்னுரை)

காப்பியப் பார்வை எனும் நூல் 20 கட்டுரைகளின் தொகுப்பாகும். இந்நூல் தமிழக அரசின் பரிசு பெற்ற நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதியில், **'வள்ளுவம்' (1993) 'திருக்குறட் சுடர்' (1987)** எனும் இரு நூல்கள் வெளியாகியுள்ளன. வள்ளுவம் எனும் நூல் 12 கற்பனைப் பொழிவுகளின் தொகுப்பு நூலாகவும், திருக்குறட் சுடர் எனும் நூல் திருக்குறள் பற்றிய 18 கட்டுரைகளின் தொகுப்பு நூலாகவும் காணப்படுகின்றது.

சமய இலக்கிய ஆராய்ச்சிப் பகுதியில், **திருவாசகம், திருக்கோவை, திருப்பாவை, திருவெம்பாவை, தாயுமானவர் கவிதை** போன்றவை

இடம்பெறுகின்றன. சிற்றிலக்கிய ஆராய்ச்சியில் கோவை, தைப்பாவை ஆகியவற்றையும், படைப்பிலக்கிய ஆராய்ச்சியில், பாரதி கவிதை, காந்தி கவிதை, பாடுவார் முத்தப்பர் படைப்புகள் ஆகியவற்றையும் ஆராய்ந்துள்ளார்.

3.2 உரை நூல்கள்

வ.சுப.மாவின் நடை தூய செந்தமிழ் நடையாகும். பழைய உரையாசிரியர்களின் நடைப் போக்கைப் பின்பற்றியும் பழந்தமிழ்ச் சொற்களுக்கு முன்னுரிமை அளித்தும், தூய செந்தமிழ் நடையில் நூல்களைப் படைத்துள்ளார். *''வ.சுப.மா எல்லோருக்கும் விளங்கும் வகையில் எல்லோரும் விரும்பும் வகையில் சிறுசிறு தொடர்களான வாக்கியங்களைக் கையாண்டு எழுதுவது உண்டு; சிந்தனை நீளத்திற்கு ஏற்றவாறு உம்மைகளும் எச்சங்களும் அமைய, நீண்ட தொடர்களால் ஆன வாக்கியங்களைக் கையாண்டு, ஆற்றொழுக்காக எழுதிச் செல்வதும் உண்டு'* (வ.சுப.மாணிக்கம், பக். 29-30). எளிமை (Simplicity) சுருக்கம் (Brevity) தெளிவு (Clarity) ஆகிய முப்பண்புகள் இவரின் நடையில் காணப்படுகின்றன. **"நடையழகு இல்லா இலக்கியமும் நிறவண்ணம் இல்லாச் சோலையையும் மெய்ப்பாடில்லா நடிகனையும் வெள்ளாடை உடுத்திய பெண்ணையும் ஒக்கும்" (**இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை, ப.19) என நடையின் கருத்தினைக் கூறுகின்றார். வ.சுப.மா.வின் நடையில் கருத்து, வெளிப்படுத்தும் அழகு போன்றவை ஒருங்குகூடி அமைந்திருக்குமெனத் தமிழ் ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர். வ.சுப.மாவின் உரையில் வெளிவந்த நூல்களாவன: **திருக்குறள் தெளிவுரை(1989), நீதி நூல்கள் உரை (1991), தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நூன்மரபும் மொழிமரபும், மாணிக்க உரை (1989).**

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் நூன்மரபு, மொழிமரபு நூற்பாக்களுக்கு உரை வரையும்பொழுது வ.சுப.மா. பின்பற்றியுள்ள உரைநெறிகளாக, 1.இயல் முன்னுரை, 2.இயல் கருத்து, 3.அகலவுரை, 4.வழக்கு, 5.திறனுரை, 6.இயல் முடிவுரை ஆகியன அமைந்துள்ளன.

3.3 பதிப்பு நூல்கள்

வ.சுப.மா. பதிப்பாசிரியராகவும் திகழ்ந்துள்ளார். தம்மால் இயன்ற பங்களிப்பைப் பதிப்புத் துறைக்குச் செய்துள்ளார். அவர் பதிப்பித்த நூல்களாவன: **இரட்டைக் காப்பியம் (1958), நகரத்தார் அறப்பட்டயங்கள் (1961).** இவர் பதிப்பித்த நூல்களை *"உ.வே.சாவின் குறுந்தொகைப் பதிப்பிற்கு இணையான சிறப்பினையும்*

சீர்மையினையும் கொண்டு வ.சுப.மா வின் "இரட்டைக் காப்பியங்கள்" பதிப்பு விளங்குகின்றது' (வ.சுப.மாணிக்கம், பக்.152-153) எனும் கருத்துச் சுட்டிக்காட்டுகின்றது.

3.4 கவிதை நாடக நூல்கள்

வ.சுப.மா. சிறந்த ஆய்வாளர் மட்டுமல்லர். ஒரு நல்ல படைப்பாளியுங்கூட. மிகுந்த ஆர்வத்தோடு கவிதை, நாடகம் ஆகிய இரு துறைகளில் கால்பதித்துள்ளார். கவிதைத் துறையில், **கொடை விளக்கு (1957), மாமலர்கள் (1978), மாணிக்கத் தமிழ் (1991)** ஆகிய மூன்று நூல்களைப் படைத்துள்ளார். நாடகத் துறையில் **மனைவியின் உரிமை (1947), நெல்லிக்கனி (1962), உப்பங்கழி (1972)** ஒரு நொடியில் **(1972)** ஆகிய நான்கு நாடகங்களைப் படைத்துள்ளார்.

தனது படைப்பில் உணர்ச்சி வெளிப்பாடு, கற்பனை வளம், உவமைநயம், தொடக்கமும் முடிவும் நயமுற அமைதல், நவில்தொறும் வெளிப்படும் நயம், நோக்குத் திறன், அளவுகோலில் பாட்டு அமைத்தல் திறன் போன்றவற்றினை நேர்த்தியாகக் கையாண்டுள்ளார். கொடை விளக்கு எனும் நூலில், வள்ளல் அழகப்பரின் வாழ்வைப் பற்றிப் பதிவு செய்துள்ளார். இந்நூல் 171 வெண்பாக்களால் அமையப் பெற்றுள்ளது. மாமலர்கள் எனும் நூலினைப் பல்வகைச் செய்யுளோடு பல்வகைப் பொருள் சார்ந்ததாகப் படைத்துள்ளார். அதேபோல் மாணிக்கத் தமிழ் எனும் நூலினை ஐந்நூறு குறட்பாக்களைக் கொண்டு அமைத்து, அந்தாதிப் போக்கில் காணச் செய்துள்ளார். இது இவரின் கொள்கை விளக்க நூலாகத் திகழ்கிறது.

3.5 கடித இலக்கியங்கள்

கடித வடிவில் கருத்துக்களைச் சுவைபட விளக்கிச் செல்வது ஒரு கலையாகும். அறிஞர் அண்ணா, மு.வ. போன்றவர்கள் எழுதிய கடிதங்களில் உயிரோட்டமும் எழுச்சியும் அமைந்தன. அதேபோல் வ.சுப.மா.வின் கடிதங்களும் விளங்கின. 'தலைவர்களுக்கு' (1965) எனும் நூல் 25 கடிதங்கள் பெற்றுத் திகழ்கின்றது. கடித இலக்கியத்தின் நோக்கானது, ***"நாட்டு நலமே நம் அறிவின் நோக்கம், எது நாட்டுக்கு நல்லதோ அதுதான் என் கடிதங்களில் இடம்பெறும்"*** (வ.சுப.மாணிக்கம், ப.138) என்பதாக அமைதல் வேண்டுமென்ற சிந்தையுள்ளவராகத் திகழ்ந்துள்ளார். மொழிக்கு முதன்மையும், மொழிக் கருத்துகளின் சாரமும், மொழிக் கொள்கையும் இவரது

கடிதங்களில் காணலாகின்றன. கடிதங்களைப் படிப்பவருக்கு மூன்று தகுதிகள் வேண்டுமெனக் கூறுகிறார். அவை வருமாறு:

- வன்முறைகளை எதற்கும், என்றும், எவரும் கையாளக் கூடாது.
- பாரதத்தின் ஒருமைப்பாடு பாழ்படக்கூடாது.
- அடிப்படையுரிமையில் ஏற்றத் தாழ்வு கூடாது.

3.6 ஒரு பொருட் கட்டுரைகள்

எழுத்துச் சீர்திருத்தம், எங்கே போய் முடியும்?, தமிழ்வழிக் கல்வியியக்கம்: மொழியறிக்கை (1989), தமிழ்வழிக் கல்வியியக்கம்: மதுரை ஊர்வலம் நிகழ்ச்சி விளக்கம் (1988) ஆகிய மூன்று ஒருபொருட் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

3.7 ஆங்கில நூல்கள்

வ.சுப.மா. ஆங்கில மொழியறிவுமிக்கவர் என்பதற்கு The Tamil Concept of Love, A Study of Tamil Verbs, Collected Papers, Tamilology ஆகிய ஆங்கில நூல்கள் சான்றாக உள்ளன.

4.0 வ.சுப.மா.வின் ஆளுமையை அடையாளம் காட்டும் நூல்கள்

ஆராய்ச்சி மாணவராய்த் தொடங்கி, பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பதவியேற்றுத் தமிழுக்குப் புதிய சொல்லாக்கங்களையும், புதிய ஆராய்ச்சி வழிகளையும் வித்திட்ட வ.சுப.மா.வைப் பற்றிப் பல ஆய்வு நூல்களும், ஆய்வேடுகளும், கட்டுரைகளும் எழுந்துள்ளன. அதில் **மாணிக்கக்குறள் தெளிவுரை** (இரா.இளங்குமரன்:1992), **வ.சுப.மாணிக்கனாரின் சொல்லாக்கம்** (பழ.முத்துவீரப்பன்:1988) **வ.சுப.மாணிக்கனாரின் வாழ்வும் பணியும்** (மெய்யப்பன்:1989), **மாணிக்கக் குறள் ஓர் அறிமுகம் (1993)** இந்திய இலக்கியச் சிற்பிகள் **வ.சுப.மாணிக்கம்** (இரா.மோகன்:1999), **மாணிக்கச் செம்மல்** (இரா.சாரங்கபாணி:1997), **மாணிக்கத் தமிழ்** (தமிழண்ணல்) ஆகிய நூல்கள் வெளியாகியுள்ளன.

5.0 வ.சுப.மா.வின் நிறைவேறா ஆசைகள்

வாழும்போது எண்ணற்ற படைப்புகளைப் படைத்துத் தமிழ்மொழி ஆய்வுக்கும், வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றியுள்ள வ.சுப.மா.வின் அயராத உழைப்பும் ஆழ்ந்த

தேடலும் அவரைத் தமிழுலகில் அடையாளப்படுத்தின. தமிழர்கள் நெஞ்சில் அழியாத் தடம் பதித்தன.

தன் வாழ்நாள் முழுவதும் மட்டுமின்றி எதிர்கால ஆய்வினைக் குறித்துப் பரந்த திட்டங்களைக் கொண்டவராகவும் திகழ்ந்துள்ளார். இதனை ***"செம்மல் எண்பத்தைந்தாம் அகவை வரை வாழலாம் என்று உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். ஆகவே தம் எழுபதாம் ஆண்டில் எதிர்காலத்தில் செய்ய வேண்டிய வேலைகளை மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களாக வகுத்துக் குறித்து வைத்துள்ளார்"*** (மாணிக்கச் செம்மல், ப.144) எனும் கருத்து மூலம் அறியமுடிகின்றது.

- உலகப் போக்குகள், ஒழுக்க நெறிகள், மக்களின் உளப்பாங்கு முதலியவற்றை ஆராய்ந்து, தமிழகம், பாரதம், உலகம் எல்லாவற்றிற்கும் பயன்படும் வகையில் நூல் ஒன்று செய்ய வேண்டுமென்பது அவர் எண்ணமாயிருந்தது.
- படைப்பிலக்கியம், படைப்பிலக்கணம் செய்தல், பண்டைய இலக்கண இலக்கியங்களைத் திறனாய்வு செய்து எழுதுதல், மனைவியின் உரிமை, நெல்லிக்கனி போல மேலும் சமுதாயத்திற்கு உதவும் வகையில் நாடக நூல்கள் இயற்றல் போல்வன எதிர்கால எண்ணங்கள்.
- பாரதீயம் எனும் தலைப்பில் கற்பனைப் பொழிவுநூல் படைத்தல்.
- கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி பற்றிப் **'பாரதச் செருக்கு'** எனும் நாடகநூல் எழுதுதல்.
- தொல்காப்பியம் என்னும் நூல் போல **மாணிக்கம்** எனும் பெயரில் ஓர் இலக்கண நூற்பா யாப்பில் படைத்தல்.
- **நாட்டுமறை** என்ற பாரத நூல், பெண்ணுரிமை, வறுமை நீக்கம், தமிழ்வளம், மூடப் பழக்கவழக்கங்களை ஒழித்தல் முதலிய நூல்கள் படைத்தல்.
- வான் வாழ் உயிரினங்கள் (பறவைகள்) கடல்வாழ் உயிரினங்கள் (மீன்,நண்டு, ஆமை), வானம் போன்றவைகள் வ.சுப.மாவின் எதிர்காலத் திட்டங்களாகும். இவையெல்லா நூல்களையும் உரைநடையில் எழுதாமல் பாவகையிலும், பாவுடன் உரைநடை விரவிய வகையிலும், வினாவிடை நடையிலும் எழுத வேண்டுமெனத் திட்டம் தீட்டியிருந்தார்.

5.1 நூல் ஒன்று படைக்க வேண்டுமெனத் தலைப்புகளை நிர்ணயித்தல்

- திருக்குறள் நேருரை – செயலுரை (வாழ்வுரை).
- திருவாசகம் என்னும் உயிர் வாசகம்.
- இராமலிங்கம் அல்லது உயிர் இரங்கல்.
- வாய்மை வாழ்வு (தனி வரலாறு)
- தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தேவைதானா?
- தமிழ்வழிக் கல்வி இயக்கம்
- திருக்குறள் இலக்கியம்
- சங்க இலக்கியங்களின் புதுமை
- சங்ககாலநிலைக் கொள்கைகள்
- சிலப்பதிகாரம் – காதை வளர்ச்சி
- கம்பனியம்
- தமிழ்க் காப்பிய உலகம்
- தமிழ் மொழி வரலாறு
- தமிழிலக்கிய வரலாறு
- மதுரைப் பணிகள்
- மக்கள் கீதை

ஆகிய தலைப்புகளைக் கொண்டு **"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்"** எனும் நோக்கில் நூல் ஒன்றைப் படைக்க வேண்டுமென விரும்பினார்.

6.0 முடிப்பு

வ.சுப.மா. தமிழிலே பிறந்து தமிழிலே வளர்ந்து தமிழிலே வாழ்ந்து கொண்டே இருக்கின்றார். காலம் அவரை நேசித்ததால், அவரின் எழுத்து எனும் உயிரோட்டமான சுவாசத்தை நம்மால் தொடர்ந்து சுவாசிக்க முடியாமல் போய்விட்டது. இவ்வாண்டு வ.சுப.மா.வின் நூற்றாண்டு விழாவாய் அரங்கேறினாலும் அவர் எழுதிச் சென்ற தமிழாய்வுகள் பல நூற்றாண்டுகள் **வாழும்; வளரும்.**

பார்வை நூல்கள்

1. **இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை,** சக்திவேல்.சு., 2005, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்
2. **கம்பர்,** மாணிக்கம் வ.சுப., 1990, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
3. **மாணிக்கச் செம்மல்,** சாரங்கபாணி இரா., 2016, நூற்றாண்டு வெளியீடு.
4. **வ.சுப.மாணிக்கம்,** மோகன் இரா., 1999, சாகித்ய அகாதெமி, டெல்லி.

மதிப்பிடப்பெற்றது

வ.சுப.மா.வின் சொல்லாக்க முறைகள்

முனைவர் ப.திருஞானசம்பந்தம்
முனைவர்பட்ட மேலாய்வாளர், தமிழியல்துறை, தமிழியற் புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21

தமிழ்ப் புத்திலக்கிய மரபில் பாரதியார், பாரதிதாசன், திரு.வி.க., மறைமலையடிகள், பாவாணர், கி.இராமலிங்கனார், அறிஞர் அண்ணா, ரசிகமணி டி.கே.சி. முதலியோர் புதிய சொல்லாக்கங்களைப் படைத்து அளித்துள்ளனர். இந்த வரிசையில் வ.சுப.மாணிக்கனாரும் தனது எழுத்துகளின்வழிப் பல புதிய சொல்லாக்கங்களைத் தமிழ் ஆய்வுலகிற்கு வழங்கியுள்ளார். இவற்றில் பல இன்றும் ஆய்வாளர்கள், ஆட்சியாளர்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன. சில சொல்லாக்கங்கள் தனித்துவத்துடன் நிலைபேற்றை அடைந்துள்ளன. தமிழகப் பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தில் வ.சுப.மா. உருவாக்கிய அலுவலகப் பயன்பாட்டிற்கான சொல்லாக்கங்கள் இன்றும் கையாளப்பட்டு வருகின்றன. குறிப்பாக ‘மொழிப்புலம்’, ‘புல முதன்மையர்’, ‘ஆளவை’, ‘ஆட்சிக் குழு’, ‘செம்பதிப்பு’ என்னும் சொல்லாக்கங்கள் பல்கலைக்கழகப் பயன்பாட்டில் உள்ளன. இச்சொற்கள் அனைத்தும் வ.சுப.மா. உருவாக்கியவை. இன்று புலமை உலகில் பலராலும் பரவலாகக் கையாளக்கூடிய சொல்லாகச் ‘செம்பதிப்பு’ நிலைபெற்றுவிட்டது. இச்சொல்லை உருவாக்கியவர் யார் என்று கேட்டால் அது பலருக்கும் தெரியாது. இதுபோல் இன்னும் பல சொற்களை வ.சுப.மாணிக்கம் உருவாக்கியுள்ளார். இவர் தனது நூல்களில் பயன்படுத்தியுள்ள தனித்தன்மை வாய்ந்த சொற்களையும் அவற்றின் ஆக்க முறைகளையும் இக்கட்டுரை கவனப்படுத்துகின்றது. இவரது நடைநலச் சிறப்பை, சொல்லாக்க முறையைச் ச.மெய்யப்பன் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார்.

> இவர் நடையில் நின்றுயர் நாயகனாக விளங்குகிறார். இவர் நடை சொற் செட்டும் சுருக்கமும் தெளிவும் செறிவும் திட்பமும் வாய்ந்தது. புலமை நலம் சான்ற பெருமித நடை இவர் நடை. பழந்தமிழ்ச் சொற்கள் மிகுந்து வரும் இலக்கிய நடை. புதுச்சொற்கள் பொலியும் புதுவகை நடை. எல்லா வகையாலும் இவரது நடை தனித்தன்மை சான்றது. பேராசிரியருடைய மூன்று வரிகளைக் கொண்டே அவர் தமிழ்நடையின் தனித்தன்மையினை இனம்

காணலாம். அவர் பயன்படுத்தும் சொற்கள், சொல்லாக்கம், சொல்லாட்சி ஆகியவை அவர் நடையின் இயல்பினை இனங்காட்டுவன (சங்க நெறி, ப.v).

குறிப்பாக வ.சுப.மாணிக்கம் தனது சொல்லாக்கத்தினைக் குறித்தும், புதிய சொல்லாக்கங்கள் எவ்வாறு தமிழ்மொழிக்குச் சிறப்பினைச் சேர்க்கின்றன என்பன குறித்தும் தனது நூல்களின் பல இடங்களில் குறிப்பிட்டுச் சென்றுள்ளார். அவற்றுள் ஒன்று: “வளம் படைத்த தமிழ்மொழிக்குச் சொல்லாக்கிகள் மிகத் தேவை. அவ்வப்போது சொல்லை வடித்துக் கொடுக்காதவன் - வடித்துக் கொள்ளாதவன், மொழிக்கடன் ஆற்றாதவன் ஆகின்றான்; வேற்றுச்சொல் வரவுக்கு இடங்கொடுப்பவன் ‘ஆற்றுபவன்’ ஆகின்றான்” (காப்பியப் பார்வை, ப.194) என்பது இவரது கருத்து. வ.சுப.மா.வின் சொல்லாக்கச் சிறப்பை விரிவாக ஆராய்ந்து மதிப்பீடு செய்த பழ.முத்துவீரப்பன் “இருபதாம் நூற்றாண்டு எழுத்தாளருள் வ.சுப.மாணிக்கத்தைப்போல் புதிய சொல்லாக்கங்களைப் படைத்துத் தந்தவர் எவரும் இலர். ‘இதை நாற்பதாயிரம் கோயிலில் சொல்லலாம்’ என்று குறிப்பிடுகின்றார். வ.சுப.மாணிக்கத்தின் சொல்லாக்கங்களைக் கீழ்க்காணும் நிலைகளில் வகைப்படுத்தி நோக்கலாம்.

- நடைமுறையில் உள்ள இக்கால வழக்குச் சொற்பயன்படுத்தம்
- சொற்சுருக்கங்களைத் தனது எழுத்துகளில் உருவாக்கித் தருதல்
- ஒப்புமையாக்க நிலையில் எதிர்ச்சொற்களைப் பயன்படுத்துதல்
- தமிழிற்குப் புதிய, செறிவுமிக்க சொல்லாக்கங்களை உருவாக்கித் தருதல்
- ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொல்லாக்கங்களைப் படைத்தல்
- தமிழின் தலைசிறந்த நூல்களை, அவற்றைப் படைத்த புலவர்களைச்சிறப்பிக்கும் வகையிலான சொல்லாக்கங்களை உருவாக்கிப் பயன்படுத்துதல்

மனிதர்கள் தங்களது வாழ்க்கையில் உறவுகளுக்கு அதிக முக்கியத்துவத்தை வழங்குகின்றனர். குறிப்பாக அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, மாமா, அத்தை உள்ளிட்ட உறவுகளுக்குத் தருகின்ற மதிப்பினைக் காட்டிலும் தனது உணர்வுகளைப் புரிந்துகொண்ட நண்பனுக்குத் தருகின்ற இடம் தனித்துவமானது. உறவினர்களிடையே பகிர்ந்துகொள்ள முடியாத செய்திகளையும் நண்பனிடம் பகிர்ந்து கொள்கின்றனர். இத்தகைய சிறப்புப் பொருந்திய உறவினை ‘நண்பன்’ என்று

அழைக்கின்றோம். இது ஆண்பாற் சொல். இச்சொல்லுக்கு இணையான பெண்பாற் சொல் 'நண்பி'. அதுபோல் வயதில் இளையவர்களைக் குறிக்கும் ஆண்பாற் சொல் 'இளைஞர்'. இச்சொல்லுக்கு இணையான பெண்பாற் சொல் 'இளைஞி'. நடைமுறை வாழ்க்கையில் நாம் கையாளக்கூடிய இச்சொற்களைத் தனது எழுத்தில் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே 'தமிழ்க் காதல்' (ப.118) என்னும் நூலில் வ.சுப.மா. பயன்படுத்தியிருப்பது தனித்துச் சுட்டத்தக்கது. இதுபோல் அன்பி (செயலி), நண்பி (ஏசு பெருமாட்டி), கயத்தி (சைவச்சி), வேந்தி (நடிகச்சி) போன்ற இகர விகுதி சேர்ந்த பெண்பாற் சொற்களையும் இவர் பயன்படுத்தியுள்ளார். இவற்றில் சில சொற்கள் இவருக்கும் முந்தைய புலவர்களால் கையாளப்பட்டுள்ளன.

உரைநடையில் நீண்ட தொடர்களைக் கையாளும்போது படிப்பவர்களுக்கு அது சலிப்பை ஏற்படுத்தும். சுருக்கமான சொற்களைப் பயன்படுத்துகையில் வாசிப்பவர்களுக்கு அது எளிதாகப் போய்ச் சேரும். அந்த வகையில் வ.சுப.மாணிக்கம் தன்னுடைய நடையில் நீண்ட சொற்களைக் கைக்கொள்ளாமல் சுருக்கமான சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார். ஒரு படைப்பின் சிறப்பை ஆராய்ந்து கூறும் அறிஞரை, எழுத்தாளரைக் குறிக்கத் திறனாய்வாளர் (அ) திறனாளி என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றோம். இச்சொல்லை இன்னும் சுருக்கமாக்கித் 'திறனி' (இலக்கியச் சாறு, ப.8) என்று குறிப்பிடுகிறார் வ.சுப.மா. இதுபோல், புதின ஆசிரியர் - புதினர் (மேலது, ப.14). கற்புடைய பெண் - கற்பி. உறுப்பினர், உறுப்பாளி - உறுப்பி. வளர்வு, ஆயுரை, இன்பி, வினைச்சி, வேந்தி (இந்திய இலக்கியச் சிற்பிகள், வ.சுப.மாணிக்கம், ப.42) உள்ளிட்ட சுருங்கிய சொல்லாக்கங்களை இவர் கையாண்டிருப்பதும் இத்தொடர்பில் எண்ணத்தக்கது. இதுபோல் இன்னும் பல சொற்களை அவரது எழுத்தின் வழிச் சான்றுகாட்ட முடியும். மன்னாயம் (சங்க நெறி. ப.8), தமிழ்ப் போலியன் (மேலது, ப.10), ஓர்மின் (மேலது, ப.10), வீட்டியல், பெண்ணியல் (மேலது, ப.16), வெற்றெழுத்தாளன் (மேலது, ப.19), தன்னளி மனப்பான்மை (மேலது, ப.20), கல்லாக் களிமகன் (மேலது, ப.24), சங்கப் புலமைச் சான்றோர்கள் (மேலது, ப.25), சங்கக் குழுவாயம் (மேலது, ப.33), காலவறிவு, சொல்லறிவு (மேலது, ப.38) முதலிய இச்சொல்லாக்கங்கள் அனைத்தும் இவர் புதியனவாக உருவாக்கியவை.

ஒப்புமையாக்கம் (Analogical Creations) என்ற நிலையில், வழக்கிலும் இலக்கிய ஆட்சியிலும் நிலைபெற்றுள்ள சொற்களைக் கொண்டு அவற்றைப் போன்ற புதிய

சொற்களையும் வ.சுப.மா உருவாக்கியுள்ளார். இது பற்றி இரா.மோகன் குறிப்பிடும் கருத்து, ''ஒப்புமையாக்கம் என்ற நெறியைப் பின்பற்றி வ.சுப.மா. படைத்துத் தந்துள்ள சொல்லாக்கங்கள் பலவாகும். அல்லெண்ணம் (நல்லெண்ணம்), இலக்கியல் (அறிவியல், உலகியல்), இல்லாட்சி (அரசாட்சி), குழமை (முதுமை), விதிகாட்டி (வழிகாட்டி), வீழ்வுகள் (வாழ்வுகள்), நிறைபாடு (குறைபாடு), சொல்லாளர் (எழுத்தாளர்), கேள்வியாளர் (கல்வியாளர்) முதலிய சொல்லாக்கங்கள் இவ்வகையினவாகும் (மேலது, ப.42).. மேற்குறிப்பிட்ட சொல்லாக்கங்கள் சில இன்று வழக்கிழந்து போனாலும் அவை தனித்தன்மை வாய்ந்தவைகளாக உள்ளன. இச்சொல்லாக்கங்கள் தனித்தமிழ் அறிஞர்களின் எழுத்துகளில் இன்றும் பயன்படுத்தப்படுகின்றன என்பது தனித்துச் சுட்டத்தக்கது.

ஒரு சொல்லுக்கு இணையான பல புதிய சொல்லாக்கங்களையும் வ.சுப.மா. எடுத்தாண்டுள்ளார். குறிப்பாக எழுத்தாளரைக் குறிக்க, எழுத்தாளி, எழுத்தாள்வார், எழுத்துழவர், எழுத்தாளுநர், எழுத்துச் சான்றோர், எழுத்தாண்மையர், எழுதுகுலத்தோர் என ஏழு சொற்களைப் பயன்படுத்தியுள்ளார் (இலக்கியச் சாறு, பக்.1-23). சங்க காலத்தில் சான்றோர் என்ற சொல் பெரியவர் என்ற சொல்லுக்கு இணையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாகக் கல்வியில், பதவியில், வயதில், செல்வத்தில், புகழில், உடலில், பெருமை வாய்ந்தோரையெல்லாம் பெரியவர் என்பர். சான்றோர் என்ற இச்சொல்லைப் பெண்சான்றோர், வீரச்சான்றோர் எனப் பெண்களுக்கும், வீரர்களுக்கும் உரியதாக வ.சுப.மா. கையாளுகின்றார். மேலும் புறநானூற்றில் (புறம்.256) இருந்தும், பதிற்றுப்பத்தில் (பதிற்றுப்.14,82) இருந்தும் இதற்குரிய சான்றினைக் காட்டுகின்றார் (சங்க நெறி, பக்.56,57). ஒரு கருத்தை ஒரு சொல்லால் குறிப்பதைக் காட்டிலும் ஒரு தொடர் கொண்டு குறிப்பது நமது மொழி வழக்கு என்று கூறும் வ.சுப.மா. அதற்குரிய சான்றினையும் தருகின்றார். சங்க காலத்தில் காதலும் வீரமும் சிறப்புற விளங்கியது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இவ்விரண்டினையும் இணைத்து 'காதற்போர்' என்ற சொல்லை உருவாக்கியதோடு அதற்கான விளக்கத்தையும் கூறுகிறார். ''நீரும் சுவையும் போலவும், பூவும் நிறமும் போலவும், உள்ளங்கை புறங்கை போலவும், தமிழினத்தின் வாழ்க்கையில் அகமும் புறமும் ஒரு பொருளாகக் கலந்திருந்தன. இத்தலைமைப் பண்பினைக் காதல் என்ற சொல்லாற் சொல்வதும் பொருத்தம் இல்லை; போர் என்ற ஒரு சொல்லாற் சொல்வதும்

பொருத்தமில்லை; ஆதலின் காதற்போர் என்ற தொடரால் குறிப்போம்" (மேலது, ப.65) என்கிறார். இவ்வாறு வ.சுப.மா. உருவாக்கிய சொற்களிலிருந்து இவரது சொல் வளமையை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

அறிவியல் தொடர்பான ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை வ.சுப.மா. உருவாக்கித் தந்துள்ளார். இது பற்றிக் குறிப்பிடும் இரா.மோகன் அச்சொற்களை ஆங்கில மூலத்தோடு எடுத்துக்காட்டுகின்றார். "குளிரகம் (Fridge), ஒலிப்பான் (Mike), அடக்கி (Break), நுரைப்பான் (Soap), முகமா (Powder), வெண் சுருள் (Cigarette), கட்டுத்தொகை (Deposit), செல்லுரிமை (Lbcense), பல்லுரசி (Tooth Brush), (தூசி, சாறு) வடிகட்டி (Filter), மேலாள் (Manager), வினைக்களம் (Office), செய்துணிக்கடை (Ready-made shop), முரண்பால் நோய் (Aids)" (இந்திய இலக்கியச் சிற்பிகள் - வ.சுப.மாணிக்கம், ப.43). இவற்றை 'வ.சுப.மாணிக்கனார் சொல்லாக்கங்கள்' என்னும் நூலுக்கு வழங்கிய பாராட்டுரையிலும் இவர் கூறியிருப்பது இணைத்து எண்ணத்தக்கது. வ.சுப.மா. தனது நூலின் பல இடங்களிலும் மற்றவர்கள் பெரிதும் கையாளாத சொற்களைக் கையாண்டு தனது தனித்துவத்தை நிலைநிறுத்துகின்றார். "சொற்பொழிந்தேன், வானொலிக்கின்றேன், பழமொழிகின்றோம், அட்டவணைப்பர், நன்றியன், விருப்பன், ஈடுபாடன், இலக்கியர், காப்பியர், இலக்கணர், தமிழ் வளர்ப்பிகள், இலக்கியப் படிப்பிகள், கல்வித் திட்டங்கள், பாடம் அமைப்பிகள், மாறுவேடி, நம்பிக்கைக் கேடி, அறிவு நாடிகள், நாட்டு நாடி, நாட்டுக் கேடிகள், தமிழ்மை, தமிழ் மன்னாயம், மக்கட் குழுவாயம், அணிய நாடுகள், சால்பியம், புரட்சியம், பொதுனியம், மக்களியம், ஒப்பியம், படைப்பியம், தமிழியம், உயிரியம், பண்டிதமணியம், கண்ணதாசம், இளங்கோவம் - சொல்லாக்கத் துறையில் வ.சுப.மா.வின் பங்களிப்புகள் இவை" (மேலது, ப.43). இவ்வாறு பலதரப்பட்ட சொல்லாக்கங்களை வ.சுப.மா. உருவாக்கியுள்ளார். தொல்காப்பியர், வள்ளுவர், கம்பர் ஆகியோரையும், அவர்களது நூல்களையும் தனக்கேயுரிய தனித்துவ மொழியில் வ.சுப.மா. சிறப்பித்துள்ளார். இச்செய்திகளையே இக்கட்டுரை கவனப்படுத்துகின்றது.

தொல்காப்பியத்தினைத் தமிழின் முதல் நூல் என்றும் தொல்காப்பியரைத் தமிழ் முதல்வன் (சங்கநெறி, ப.13) என்றும் சிறப்பிக்கின்றார். இவற்றோடு தொல்காப்பியத்தின் காலத்தைப் பற்றியும் இவர் குறிப்பிடத் தவறவில்லை. தமிழரின்

வாழ்வியலைச் சிறப்பிக்கின்ற சங்க நூல்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்தோன்றியவை. ஆனால் தொல்காப்பியமோ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று தொல்காப்பியத்தின் காலத்தை வரையறுக்கின்றார் (தொல்காப்பியப் புதுமை, ப.9). மேலும் தொல்காப்பியம் தமிழுக்கு உயிர் நூலாகும். தமிழ் மக்களின் உலக வழக்கையும் செய்யுள்; நெறியையும் திறம்பட ஆராய்ந்து எழுதிய நாட்டு நூலாகும் என்றும் குறிப்பிடுகின்றார் (மேலது, ப.10). தொல்காப்பியம் மொழிக்கான இலக்கணமாக மட்டுமல்லாமல் தமிழரின் வாழ்வியலை வரையறுத்துக் கூறும் இலக்கணமாகவும் திகழ்கிறது என்கிறார் வ.சுப.மா.

தொல்காப்பியத்தைப் போலவே சங்கப் பாடல்களையும் அவற்றைப் பாடிய புலவர்களையும் வ.சுப.மா. புகழ்ந்துரைக்கின்றார். சங்க இலக்கியங்களைத் தமிழ் தேசியவிலக்கியங்கள், நாகரிக மறைகள், மக்கட் பண்பிலக்கியங்கள் (சங்க நெறி, ப.viii), சங்கத் தொகை நூல்கள் (மேலது, ப.25), தொகையிலக்கியங்கள், பதிவிலக்கியங்கள் (மேலது, ப.64) என்று குறிப்பிடுகின்றார். அதுபோல் சங்கப் புலவர்களைச் சங்கப் புலமைச் சான்றோர்கள் என்று சிறப்பிக்கின்றார். எட்டுத்தொகை, பத்துப்பாட்டில் உள்ள அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, கலித்தொகை, திருமுருகாற்றுப்படை ஆகிய நூல்களினையும் இவர் சிறப்பாகப் போற்றிக் கொண்டாடுகின்றார். இயற்கைச் சூழ்நிலையில் வாழும் விலங்குகளுக்கும் மரஞ்செடி கொடிகளுக்கும் மனிதனைப் போலவே அன்பும் அறிவும் உண்டு என்பதைச் சுட்டி, அகநானூற்றின் காலத்தை இயற்கை யறிவுக் காலம் (மேலது, ப.26) என்று பதிவுசெய்கிறார். புறநானூற்றில் உள்ள ஒவ்வொரு பாடல்களும் பண்டைய வரலாற்றாய்வுக்கு உதவும் கல்வெட்டு (மேலது, ப.64) சான்று என்றும் கூறுகின்றார். இதுமட்டுமல்லாமல் பத்து சேர மன்னர்களின் மீது பத்துப் புலவர்கள் பாடிய பதிற்றுப்பத்தினை வரலாற்றிலக்கியம், செய்கையிலக்கியம் எனப் புகழ்கிறார். இவற்றோடு சங்க காலத்தில் சோழ, பாண்டியர்களுக்கு எனத் தனி இலக்கியங்கள் படைக்கப்படவில்லை. சேரர்களுக்குரிய தனி இலக்கியமாகப் பதிற்றுப்பத்து அமைந்துள்ளது. இக்காரணத்தால் பதிற்றுப்பத்தைக் குல வரலாற்று நூல் என்று போற்றுகின்றார் (மேலது, ப.102). ஐங்குறுநூறு, கலித்தொகை, பத்துப்பாட்டு ஆகியன தனிப்பாடல்கள் அல்ல. ஓர் ஆசிரியன் ஒருபொருள் மேல் திட்டமிட்டு பாடிய தொடர்பாடல்கள். எனவே இவற்றைத் தொகைப் போலிகள் என்றும் சொல்லலாம் (மேலது, ப.203). மேலும் பத்துப்பாட்டில் ஒன்றான திருமுருகாற்றுப்படையின்

சிறப்பைப் பற்றித் தனியே குறித்துள்ளார். ‘வேறு எக்கடவுளுக்கும் அமையாத நிலையில் திருமுருகாற்றுப்படை என்ற தனிநெடும்பாட்டு தொகை நூலில் இடம்பெற்றிருப்பதும் முருகவேளின் சிறப்பு நிலைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்’ (மேலது, ப.149).

தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகிய நூல்களின் வரிசையில் இவர் திருக்குறளையும் திருவள்ளுவரையும் கம்பரையும் வைக்கின்றார். மனிதனாகப் பிறந்த இப்பிறப்பில் தமிழ் மொழியின் ஒரு பனுவலைக் கூட கற்காமல் வாழ்நாளை கழிப்பவர்களைத் தமிழ்ப் போலியன் என்று சாடுகின்றார். இவ்வாறு வாழாமல் பெருந்தமிழ்ப் புலவர் (மேலது, ப.60), உலகப் புலவர் (தொல்காப்பியப் புதுமை, ப.46) என்று சிறப்பிக்கப்படும் திருவள்ளுவரின் திருக்குறளையாவது கற்று அதன்படி நடக்க வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்துகின்றார். ‘கல்வியிற் பெரியவர் கம்பர்’ என்பதைப்போல் காப்பியத்திற் பெரியவர் கம்பர் (கம்பர், ப.106) என்று புகழ்கின்றார். கம்பராமாயண உருவாக்கத்தையும் அதன் பெயர்க்காரணத்தையும் இவர் பதிவுசெய்யத் தவறவில்லை. இதோடு கம்பராமாயணத்திற்கு ஒரு புதிய பெயரினையும் வழங்குகின்றார். ‘வடமொழியில் வால்மீகி எழுதிய இராமாயணத்தைத் தழுவி தமிழில் கம்பர் படைத்ததால் கம்பராமாயணம் என்று வழங்கப்படுகின்றது. இது மொழிபெயர்ப்பு நிலையில் அமைந்தாலும் கூட தமிழ் மரபு மாறாமல் படைக்கப்பட்டிருக்கின்றது என்பது அனைவரும் அறிந்த ஒன்றோ. எனினும் கம்பரின் கம்பராமாயணத்தை மொழிபிறப்புக் காப்பியம்’ என்னும் புதிய பெயரால் வ.சுப.மா. அழைக்கின்றார் (கம்பர், ப.58).

இவ்வாறு தமிழின் தலைசிறந்த நூல்களையும் புலவர்களையும் வ.சுப.மா. தனது சொல்லாக்கங்களால் விதந்துரைக்கின்றார்.

தொகுப்புரை

- செவ்வியல் தன்மை கொண்ட தமிழ்மொழிக்குக் காலந்தோறும் பல புதிய சொல்லாக்கங்கள் தேவை. இத்துறையின் தேவையை முன்னிட்டே தமிழ்மொழியின் படைப்பாளர்களும், எழுத்தாளர்களும் அவ்வப்போது புதிய சொல்லாக்கங்களை உருவாக்கி வந்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்க தனிப்பெரும் ஆளுமையாக வ.சுப.மா.வைக் கருத முடியும். தமிழின் பல்வேறு துறை சார்ந்த சொற்களை இவர் உருவாக்கியுள்ளார்.

- வ.சுப.மா. பெற்றிருந்த இலக்கண இலக்கியப் புலமையின் தனித்துவத்தை அவரது புதிய சொல்லாக்கங்கள் உணர்த்துகின்றன. நவீனக் கால மாற்றத்திற்கேற்பவும் அறிவியல் வளர்ச்சிக்கேற்பவும் மக்களின் வாழ்விற்குப் பயன்படும் வகையில் வ.சுப.மா.வின் சொல்லாக்கங்கள் அமைந்துள்ளன. குறிப்பாக இங்கு எடுத்துக்காட்டி விளக்கப்பட்ட சொல்லாக்கங்களில் நிறுவனம் சார்ந்து பயன்படுத்தப்படும் சொற்கள் மக்களிடையே இன்றும் புழக்கத்தில் இருப்பது கவனத்திற் கொள்ளத்தக்கது. அதுபோல் அறிவியல் துறை சார்ந்து இவர் ஆக்கிய சொல்லாக்கங்கள் அத்துறையில் பயன்படுத்தப்பட்டு வருவதையும் பார்க்க முடிகின்றது. இச்சொல்லாக்கங்களைத் தேவை கருதி உருவாக்கப்பட்டவை எனலாம்.
- வ.சுப.மா.வின் சொல்லாக்கங்கள் மரபில் இருந்து மாறுபட்டு அமையாமல் மரபோடு பொருந்தி அமைவதும் கருதத்தக்கது. அந்த வகையில் தனக்கு முந்தைய சான்றோர்கள் உருவாக்கிய சொற்கலையாக்கத்தின் தொடர்ச்சியில் புதிய சொற்களை வ.சுப.மா. படைத்து அளித்துள்ளார்.
- தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், கம்பராமாயணம் முதலிய நூல்கள் மீது இவர் கொண்டிருந்த ஈடு இணையில்லாப் பற்றினை, அந்நூல்கள் குறித்தும், அவற்றின் புலவர்கள் குறித்தும் இவர் புகழ்ந்துரைத்துள்ள சொல்லாக்கங்களின்வழி உணர்ந்து கொள்ள முடிகின்றது.
- வ.சுப.மாவின் சொல்லாக்கங்களை ஒட்டுமொத்தமாகத் தொகுத்து நோக்குகையில் அவை சமூக வழக்கு, இலக்கிய வழக்கு, கலைச்சொல் உருவாக்கம் எனப் பலநிலைகளுக்கு முன்னோடித் தன்மை கொண்டனவாக உள்ளன.

துணைநூற் பட்டியல்

1. மாணிக்கம் வ.சுப., *இலக்கியச் சாறு*, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், தொகை முதற்பதிப்பு, 1987.
2. மாணிக்கம் வ.சுப., *கம்பர்*, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், திருந்திய பதிப்பு, 1987.
3. மாணிக்கம் வ.சுப., *காப்பியப் பார்வை*, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு, 1987.

4. மாணிக்கம் வ.சுப., *சங்க நெறி*, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு, 1987.
5. மாணிக்கம் வ.சுப., *தமிழ்க் காதல்*, பாரிநிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1962.
6. மாணிக்கம் வ.சுப., *தொல்காப்பியப் புதுமை*, பேகன் பதிப்பகம், காரைக்குடி, மூன்றாம் பதிப்பு, 1967.
7. முத்துவீரப்பன் பழ., *வ.சுப.மாணிக்கனாரின் சொல்லாக்கங்கள்*, மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு, 1988.
8. மோகன் இரா., *இந்திய இலக்கியச் சிற்பிகள் - வ.சுப.மாணிக்கம்*, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, இரண்டாம் பதிப்பு, 2007.

inam:International Research E_Journal of Tamil Studies ISSN : 2455-0531
February 2017, Issue:8 www.inamtamil.com

மதிப்பிடப்பெற்றது

வ.சுப.மாணிக்கனாரின் தொல்காப்பிய உரைநெறிகள்

முனைவர் **ஆ.மணி,**
துணைப்பேராசிரியர் - தமிழ், பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி,
புதுச்சேரி — 605 003, பேசு: 9443927141, மின்னஞ்சல்: manikurunthogai@gmail.com

உரைக்களம்

திருக்குறளுக்கு அடுத்தநிலையில் மிகுதியான உரைகளையும், பதிப்புக்களையும் கொண்ட நூல் தொல்காப்பியம். தமிழின் முதல்நூல் என வ.சுப.மாணிக்கனாரால் புகழ்ந்துரைக்கப்பட்ட தொல்காப்பியம், அவராலேயே உரை செய்யப்பட்ட பெருமைக்கும் உரியது. அவ்வுரைக்கண் இடம்பெற்றுள்ள உரைநெறிகளை மாதிரி அணுகுமுறையில் எடுத்துரைப்பது இம்முயற்சியின் நிலைக்களம் ஆகும். இவ்ஆய்வுரைக்குத் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் – நூன்மரபும் மொழிமரபும் – மாணிக்கவுரை அடிப்படையாகும். உரைநெறி பற்றிய நூல்களும், கட்டுரைகளும் இம்முயற்சிக்குத் துணைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

மாணிக்கவுரை அறிமுகம்

தமிழ்ப் பல்கலைக்கழக வல்லுநர் குழுவின் தலைவராகப் பணியாற்றிய வ.சுப.மாணிக்கனார் பல்கலைக்கழக அமைப்பினை உருவாக்கித் தந்தவர். மேலும், அப்பல்கலைக்கழகத்தின் தொல்காப்பியப் புலத்தகைமை ஆய்வுக்கட்டிலில் முதல் தகைஞராகவும் பணி செய்தவர். அப்பணிக்காலத்தில் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நூன்மரபும் மொழிமரபும் மாணிக்கவுரை என்னும் உரைநூலை எழுதினார் எனச் ச.அகத்தியலிங்கம் எழுதிய அணிந்துரை கூறுகின்றது (வ.சுப.மாணிக்கம் 1989: ப.எ.இ.). எனினும், அவ்வுரை மாணிக்கனாரின் மறைவுக்குப் பின்னர்த் தமிழ்ப் பல்கலைக்கழக 120ஆம் வெளியீடாக 1989 அக்டோபர்த் திங்களில் (திருவள்ளுவர் ஆண்டு 2020 புரட்டாசித் திங்கள்) முதற்பதிப்பாக 22 ரூபாய் விலையில் வந்துள்ளது. அண்மைக்காலமாக 'ஐ.எஸ்.பி.என்.' என்ற பன்னாட்டுப் புத்தகத் தர எண் (பன்னாட்டுத் தரப்புத்தக எண் என மொழியாக்கமும் உண்டு எனினும், முற்கண்டவாறு வழங்குவது இயைபுடையதாகத் தோன்றுகின்றது) பற்றிய கருத்துக்கள் பரவலாகப் பேசப்படுவதையும், நூலாசிரியர்களும் கட்டுரையாசிரியர்களும் தவிப்பதையும் காண்கின்றோம். ஆனால், 27 ஆண்டுகளுக்கு முன்னரே மாணிக்கனாரின்

தொல்காப்பிய உரை ஐ.எஸ்.பி.என். (81–7090–143–X) எண்ணுடன் வெளிவந்துள்ளமை குறிக்கத்தக்கது.

மாணிக்கவுரைக்கு எழுதிய உரைப்பாயிரத்தில், "தொல்காப்பிய நினைவும் தொல்காப்பியக் கருத்தறிவும் பெறுதல் தமிழன் என்பான் ஒவ்வொருவனின் பிறப்புக் கடமையாகும்" என வ.சுப.மாணிக்கனார் (1989:II) முழங்குகின்றார். இளம்பூரணம், பேராசிரியம் என்னுமாப்போலத் தம் உரை மாணிக்கம் எனப் பெயர் பெறும் என்கின்றார். தொல்காப்பிய முழுமைக்கும் உரைசெய் நோக்கமும் உரைக்குறிப்புக்களும் உளவெனினும் காலப்பதம் பார்த்து முதற்கண் எழுத்ததிகாரத்துக்கு மாணிக்கவுரை எழுதியிருக்கின்றேன்" (வ.சுப.மாணிக்கம் 1989:III) என்ற அவர்தம் கருத்து குறிக்கத்தக்கது. அவருரை தொல்காப்பிய முழுமைக்கும் எழுதப்படவில்லையே என்ற ஏக்கம் நமக்குள் இருந்தாலும், அவரால் எழுதப்பட்ட தொல்காப்பிய உரைக் குறிப்புக்களாவது அச்சுருக் கொள்ள வேண்டும். அதற்கு அவர்தம் கால்வழியினர் முழுமையான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்பது நமது வேண்டுகோள்.

தொல்காப்பிய உரைக்கண் தாம் மேற்கொண்ட உரைநயங்களைப் பற்றிய விரிவான குறிப்புக்களும் உரைப்பாயிரத்தின்கண் மாணிக்கனாரால் தரப்பட்டுள்ளமை குறிக்கத்தக்கது. ஒவ்வொரு உரைக்கூறும் இன்னின்ன நோக்கங்களோடு தரப்பட்டுள்ளது என்பதை இப்பகுதியில் மாணிக்கனார் விளக்கியுள்ளார். சான்று:

"இயல் முன்னுரை

இஃது இயலுக்கு ஒரு சிறிய முன்னுரையாகும். இயல்தோறும் வரும் இலக்கணக் கருத்துக்களின் சிறப்புக்களைப் புலப்படுத்தும். இன்றும் மக்கள் நடைமுறையில் இருக்கும் வழக்குகளோடு பொருத்திக் காட்டும். இதனால் கற்பவர்க்குத் தமிழிலக்கண நன்மரபுகள் தெரியவரும். இலக்கணக் காப்பில் அவர்கட்குப் பற்றும் பயிற்சியும் உண்டாகும்" (வ.சுப.மாணிக்கம் 1989:III).

மாணிக்கனாரின் வாழ்க்கைக் குறிப்புக்கள் சில இவ்வுரைப் பாயிரத்தின்கண் கூறப்பட்டுள்ளன. அவை கற்போருக்கும் உரையாசிரியருக்குமிடையிலான உறவுக்குப் பாலம் அமைப்பன எனலாம். "மக்களின் தமிழ்ப்பிடியும் தமிழ்த்தரமும் தொல்காப்பியவுணர்வுமே என் உரை நோக்கம்" (வ.சுப.மாணிக்கம் 1989:VI) எனத் தம் உரை நோக்கத்தைப் புலப்படுத்துகின்றார் மாணிக்கனார். பனம்பாரனார் எழுதிய

பதினைந்து அடிகளுடைய சிறப்புப் பாயிரத்தின் மாணிக்கவுரை 16 பக்க அளவில் அமைந்திருப்பதிலிருந்தே அவ்வுரையின் இயல்பினை நாம் அறியலாம். தம்முடைய உரைக்கூறுகள் இன்னவை என மாணிக்கனாரே எடுத்துக்காட்டியுள்ளமையால், இந்த ஆய்வுரை உரைக்கூறுகளின்கண் இடம்பெற்றுள்ள உரைநெறிகளில் சிலவற்றை விளக்க முற்படுகின்றது. இனி, அவற்றைக் காணலாம்.

மாணிக்கவுரை – உரைநெறிகள்

மாணிக்கவுரைக்கண் 1.இயல் முன்னுரை, 2.இயற்கருத்து, 3.அகலவுரை, 4.வழக்கு, 5.திறனுரை, 6.இயல் முடிவுரை ஆகிய ஆறு கூறுகளை மாணிக்கனார் மொழிந்துள்ளார். இக்கூறுகள், அனைத்து நூற்பாக்களின் உரைகளின்கண்ணும் இடம்பெறவில்லை. நூற்பா உரைப்பகுதிகளின்கண் 1.நூற்பாத் தலைப்பு, 2.நூற்பா, 3.நூற்பாக் கருத்து, 4.அகலவுரை, 5.திறனுரை ஆகிய ஐந்து உரைக்கூறுகள் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. அவற்றின்கண் காணலாகும் உரைநெறிகளில் குறிக்கத்தகுந்தவற்றுள் சில இவ்வுரைக்கண் விளக்கப்பெற்றுள்ளன.

நூற்பாக்களுக்குத் தலைப்பிடுதல்

தொல்காப்பிய நூற்பாக்கள் காலத் தொன்மையுடையன. இன்றைய தமிழ்நடை மட்டுமே அறிந்தாரும் எளிதில் கற்றுணரும் வகையில் அமைந்திருப்பது இந்நூற்பாக்களின் தனித்தன்மையாகும். இவ்வுண்மையை "தொல்காப்பிய நூற்பாக்கள் பழகு தமிழ்ச்சொற்கள் கொண்டவை; தடங்கலின்றிப் படிப்பதற்கு உரிய இன்னோசையுடையவை; இவறல் இல்லாச் சொல்வளம் நிறைந்தவை; இடுக்கு முடக்கற்ற தொடரோட்டம் வாய்ந்தவை. ஈறாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்குப் பின்னும் இத்தொன்னூல் ஓரளவு தமிழ் கற்றோர்க்கும் விளங்கி வருவதற்குக் காரணம் நூற்பா அமைப்பேயாகும். பார்த்தவுடன் உருவத்தைக் கண்ணாடி பளிச்சென்று காட்டிவிடுவதுபோல், படித்தவுடன் நூற்பாவின் பொருள் விளங்கிவிடவேண்டும் என்ற நல்லியல்பைக் கடைபிடித்து எழுதியவர் தொல்காப்பியர்" (வ.சுப.மாணிக்கம் 1989[1]:30*) என வரும் மாணிக்கத் தொடர்கள் உணர்த்துகின்றன. எளிய தொடர்களில் தொல்காப்பிய நூற்பாக்கள் அமைந்தபோதிலும், அந்நூற்பாக் கருத்துக்களுக்கு ஏற்பத் தலைப்புகள் தரப்படும்போது நூற்பாக் கருத்து மேலும் எளிதாகச் சென்று சேரும் என்ற கருத்து பதிப்பாசிரியர்களுக்கும் உரையாசிரியர்களுக்கும் இருப்பதனால், பதிப்புக்கள்தோறும் நூற்பாக்கள் தலைப்புக்களைப் பெற்றுள்ளன. இவ்வகையில்,

மாணிக்கவுரையும் தலைப்புக்களைப் பெற்றுள்ளநிலையைக் காணமுடிகின்றது. நூன்மரபின் முதல் நூற்பாவின் தலைப்பு" தமிழுக்கு எழுத்து முப்பது" (வ.சுப.மாணிக்கம் 1989:20) என்பதாகும். "முதலெழுத்துக்களின் பெயரும் எண்ணிக்கையும்" (தமிழண்ணல் 1993:20; 2008:7) எனத் தமிழண்ணலும், "எழுத்துக்களின் பெயர்" என்ற சொ.சிங்காரவேலனும் (2005:3) ஆளுவதைவிட மாணிக்கனார் தரும் தலைப்பு ஐயங்களுக்கு இடமில்லாமல், தமிழுக்கு எழுத்து இவ்வளவே எனத் தெரிவிக்கும் வகையில் பொருத்தமுடையதாக அமைவது நினையத்தக்கது.

அகலவுரை என்னும் பெயரிய புதுமரபு

தொல்காப்பியர் காண்டிகை (தொல்.மரபி.103, 104), உரை (தொல்.மரபி.105, 106) என இருவகை உரைகளைச் சுட்டுவர். உரை எனத் தொல்காப்பியர் கூறுவதைப் பிற்காலத்துப்போல விருத்தியுரை எனக் கருதலாம்.

இறையனார் களவியல் உரையாசிரியர் 1.கருத்துரைத்துக் கண்ணழித்தல், 2.பொழிப்புத் திரட்டல், 3.அகலம் கூறல் ஆகிய மூவகை உரைகளைச் சுட்டியுள்ளார் (ச.பவானந்தம் பிள்ளை 1916:ககூ). யாப்பருங்கல விருத்தியுரைகாரர் பொழிப்பு, அகலம், நுட்பம் என்ற மூவகைகளைக் கூறியுள்ளார் (மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை 1960:8). நன்னூலார் காண்டிகை, விருத்தி (நன்.4) என இருவகை உரைகளைக் குறிப்பிட்டு அவற்றின் இலக்கணத்தையும் கூறியுள்ளார் (நன்.21, 22, 23).

உரையாவது பதினான்னு வகையான் உரைக்கப்படும் என்று கூறியுள்ள நன்னூல் விருத்தியுரைகாரர், அப்பதினான்கனுள் கருத்துரை, பதப்பொருள், உதாரணம் ஆகிய மூன்றோடு வினா, விடை ஆகிய இரண்டையும் சேர்த்து உரைப்பது காண்டிகை உரை என்றும், நூற்பாப் பொருளுக்கு இன்றியமையாத அனைத்தும் விளங்குமாறு கூறும் உரையாலும், ஆசிரிய வசனங்களாலும் காண்டிகைக்குரிய ஐந்து உறுப்புக்களாலும் ஐயம் தீரச் சுருக்காது விரித்து உரைப்பது விருத்தியுரை என்றும், உரைக்குக் கூறிய பதினான்கு உறுப்புக்களும் கொண்டது விருத்தியுரை என்றும் கூறுவர் (அ.தாமோதரன் 1999:131-132). இவை தமிழ் உரைகள் அனைத்தையும் மனங்கொண்டு கூறப்படுபவை என்பது தெளிவு. ஒரு நூற்பா / பாடலுக்குக் கூறப்படும் உரையைப் பொருத்தவரையில், அந்நூற்பா / பாடலின் பொருளைத் தெளிவுறுத்தும் பொழிப்புரை, பதவுரை ஆகிய இரண்டனுள் ஒன்றைத் தருவதே உரையாசிரியர்தம் மரபாகும். இம்மரபுக்கு மாறாக மாணிக்கவுரை அகலவுரை என்னும் உரைநிலையைக் கையாண்டு புதுமை படைத்துள்ளார். எனினும், அகலவுரைக்கண் பொழிப்புரையும், விளக்கவுரையும் இணைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

அகலவுரைக்கண் "நூற்பாவிற்குப் பெரும்பாலும் சொல்லுக்குச் சொல் கிடந்தாங்கு சொல்லுரை எழுதவில்லை. கற்பவர் விளங்கிக் கொள்ளுமாறு வேண்டும்

விளக்கஞ் சேர்த்து விரிவுரையாக அமையும்” (வ.சுப.மாணிக்கம் 1989:III) என்ற மாணிக்கனாரின் கருத்து அகலவுரைக்கண் இடம்பெற்றுள்ள உரைக்கூறுகளை விளக்கியுள்ளது. இது மெய்யே என்பதை “தமிழ்மொழிக்கு அடிப்படை முதலெழுத்து என்று வழிவழிச் சொல்லப்படுபவை முப்பது. இவை அகரம் தொடங்கி னகரவிறுதியாகும். சார்பெழுத்து என்று அடுத்த நூற்பாவில் கூறப்படும் மூன்றும் இவற்றோடு சேரா. முதலெழுத்தாகா; முதலெழுத்து வரிசையில் எண்ணப்படா என்பது கருத்து. மூன்றலங்கடை – மூன்று அல்லாதவிடத்து. அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ; க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் – இவை இக்கால வடிவன்கள்” (வ.சுப.மாணிக்கம் 1989:20) என வரும் உரைப்பகுதி காட்டுகின்றது.

தம்கால வழக்கினை ஒப்பிட்டுரைத்தல்

தொல்காப்பியம் மூவாயிரமாண்டுத் தொன்மையுடைய தமிழ் முதல் நூல் என்பது மாணிக்கனார் துணிபுரை. அந்நூலின்கண் கூறப்பெற்றுள்ள கருத்துக்களை விளக்குமாற்றால் சமகாலச் செய்திகளைக் கூறும்போது, அக்கருத்துக்கள் உரை எழுதப்பெறும் காலத்தைய மக்களுக்கு மிகச் சரியாகச் சென்று சேர வாய்ப்புள்ளது. எனவே, உரையாசிரியன்மர் தாம் வாழும் காலத்தின் நிகழ்வுகள் / கருத்துக்களைத் தம் உரையிடையே எடுத்துரைக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டுள்ளனர். பழந்தமிழ் உரைகளில் அழுந்திய மாணிக்கனார் உரையிலும் இக்கூறு இடம்பெற்றுள்ளமை வியப்புக்குரியதன்று.

சான்று வருமாறு: “ஒரு நாட்டின் அரசியலமைப்பினை வகுக்குநர் அந்நாட்டிற்கு உட்பட்ட நான்கெல்லைகளையும் முதற்கண் சுட்டிக்காட்டுவர். அதனால் விதிகளின் ஆட்சிக்கோடுகள் தெளிவாகும். விடுதலைபெற்ற நம் பாரதவமைப்பினைக் காண்க. இந்நன்முறை தமிழ்ப்பாயிரத்தில் பண்டே உண்டு. பதிவு செய்த திருமணம் போல அரங்கேற்றம் இசைவுமுத்திரை என்ப. ஒரு நூலைப் புலவரவை ஒப்புக் கொள்வது என்பது அறிவுலக முறையாகும். இது குடியரசு போன்றது. மக்கள் கற்பதற்குத் தக்க நூல் என்ற மதிப்பு விளம்பரம் இதனாற் கிடைக்கும். இன்று திரைப்படங்கள்கூடத் தணிக்கை முத்திரை பெற்ற பின் காட்சிக்கு வரக் காண்கின்றோம். இவ்வரன்முறை தொல்காப்பியக் காலத்திலேயே உண்டு என்பது தமிழ் மரபின் சிறப்பைக் காட்டும்” (வ.சுப.மாணிக்கம் 1989:1). இதனைவிடத் தெளிவாகப் பாயிரத்தின்கண் கூறப்பெறும்

நாட்டெல்லை, அரங்கேற்றம் முதலியவற்றை இக்காலத் தமிழர்களுக்கு விளக்கிவிட முடியும் எனத் தோன்றவில்லை.

வினா – விடை முறை

உரையாசிரியர்தம் கருத்துக்களை விளக்கும்போது வினா - விடை முறையைக் கையாண்டு எழுதிச் செல்வதுண்டு. பழந்தமிழ் உரையாசிரியன்மர் ஒருக்கால், மாணாக்கர்களுக்குக் கற்பிக்கும் பணியையும் மேற்கொண்டிருந்த காரணத்தால், வினா - விடை முறை அவர்தம் உரைகளிலும் புகுந்து நிலைபெற்றது எனக் கருதுப. மாணிக்கனார் கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியராக விளங்கியவராதலால், அவர்தம் உரையில் இக்கூறு இடம்பெறுவது இயல்பானதாகும். வினா – விடை முறையைக் கையாளுமிடங்களில் பான்மையும் ஒரு வினா, வினா எனச் சுட்டுவது மாணிக்கவுரை வழக்கமாகும். சான்று ஒன்று தருகுவன்:

"ஒரு வினா: குற்றெழுத்து ஐந்தாக நெட்டெழுத்து ஏழு வரலாமா? உயிர் பன்னிரண்டாக மெய் பதினெட்டாக வரலாமா?.

நன்றாக வரலாம். குறிலிலிருந்து நெடில் பிறப்பதில்லை; உயிருக்கும் மெய்க்கும் ஒத்த தொடர்பில்லை. எல்லாம் பொருண்மையாற்றலால் தனித்தனிப் பிறப்பானவை." (வ.சுப.மாணிக்கம் 1989:27).

சிலவிடங்களில் இவ்வாறு வினா என்ற குறிப்பு இல்லாமலும் இவ்வுரைநெறி இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. சான்று வருமாறு: "மெய் என்பதன் பெயர்க்காரணம் யாது? உள்ளிருந்து வருங்காற்று நா அண்ணம் பல் இதழ் மூக்கு முதலான உறுப்புக்களின் தசைப்பகுதியோடு தசைப்பகுதி தொட ஒலி பிறத்தலின் மெய் எனப்படும். அதனாற்றான் ஒற்று என்ற குறியும் மெய்க்கு உண்டு" (வ.சுப.மாணிக்கம் 1989:34).

விடை முறைக் கருத்துக்களைத் தருதல்

வினாக் கேட்டு விடை தருவது என்ற நிலையிலிருந்து ஒரு படி மேற்சென்று வினாக் கேளாமலேயே விடையை எழுதிச் செல்கின்ற பாங்கினையும் மாணிக்கவுரையில் காணமுடிகின்றது. கற்போன் மனத்தில் எழக்கூடிய வினாக்களைச் சிந்தித்து விடையளிக்கின்ற மாணிக்கவுரை கற்போனின் உள்ளப்போக்கினை மிகத் தெளிவாக அறிந்துள்ள ஒரு உரை என்பதற்குப் பின்வரும் பகுதி சான்றாகும்.

"பாயிரம் நூலாசிரியனுக்காக எழுதப்படுவதில்லை; நூலைக் கற்போரை வழிநடத்துவதற்காக எழுதப்படுவது. இது கருதியே நூல் முற்றுப் பெற்ற பின் செய்யப்படுவது பாயிரமாயினும், நூலுக்கு முன் வைக்கப்படும் என்று அறிக" (வ.சுப.மாணிக்கம் 1989:1).

பாயிரம் யாருக்காக எழுதப்படுகின்றது?, கற்போர் பாயிரத்தைப் படிப்பதால் கிட்டும் பயன் என்ன?, பாயிரம் நூல் எழுதப்படும் முன்னர் எழுதப்படுவதா? அல்லது பின்னர் எழுதப்படுவதா?, நூல் எழுதிய பின்னர்ச் செய்யப்பட்ட பாயிரம் நூல் தொடங்கும் முன்னர் வைக்கப்படுவது ஏன்? ஆகிய வினாக்கள் மேற்கண்ட உரைப்பகுதியைக் காணும்போது நமக்குள் எழுவதை உணரமுடிகின்றது.

உவமை விளக்கம்

"ஒலியன் சிறுபான்மை தனியாகவும் பெரும்பான்மை எழுத்துக்கள் தொடர்ந்தும் பொருளை நேரடியாகக் குறிக்கும்போது சொல் அல்லது மொழி எனப்படும். எழுத்துக்கும் சொல்லுக்கும் உரிய தொடர்பு குருதியோட்டமும் நீட்டமும் ஒக்கும்" (வ.சுப.மாணிக்கம் 1989:89) என்னுமாப்போல ஒரு கருத்தினை விளக்கம் உவமைகளை ஆளும் மரபினை மாணிக்கவுரைக்கண் காண்கின்றோம். இவ்வகை விளக்கங்கள் அவருரைக்கண் பரக்கக் காணப்பெறும் ஒரு கூறாகும்.

சான்று காட்டல்

உரையாசிரியர்தம் அடிப்படைப் பண்பெனவே சொல்லத்தகும் ஒரு உரைநெறியாக இலங்குவது சான்று காட்டும் மரபாகும். இதனை மேற்கோள், வரலாறு, உதாரணம், காட்டு என்றெல்லாம் கூறுவது வழக்கம். இம்மரபுநெறி மாணிக்கனார் உரைக்கண்ணும் பெருவழக்குடைய ஒன்றாகவே திகழ்கின்றது என்பதனைக் காணமுடிகின்றது. சான்று காட்டுமிடங்களில் 1.இலக்கணச் சான்றுகள் தருதல், 2.இலக்கியச் சான்றுகள் தருதல், 3.பிற மொழிநூல், பிற துறைச் சான்றுகள் சுட்டுதல், 4.வழக்குநடைச் சான்றுகள் தருதல், 5.பல்வகைச் சான்றுகளை இணைத்துத் தருதல் ஆகிய நெறிகளைக் காணமுடிகின்றது. அவற்றைக் காட்டுக்களுடன் காண்போம்.

1. இலக்கணச் சான்றுகள் தருதல்

தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களுக்கு உரையெழுதிய பெருமக்களுள் பலர் இலக்கண மேற்கோள்கள் தரும் வழக்கத்தைப் பரவலாகப்

போற்றியுள்ளனர். வைரத்தை வைரத்தால் அறுப்பது போல, ஓர் இலக்கணக் கருத்துக்கு மற்றொரு இலக்கணக் கருத்தைத் தருவதே பொருத்தமுடையதாகலாம் என்ற கருத்து அவ்வுரையாசிரியர்மாருக்கு இருந்திருக்கலாம் என எண்ணத்தோன்றுகின்றது. மாணிக்கவுரையிலும் இவ்வகை மேற்கோள்கள் பலவுள. இலக்கணச் சான்றுகளை 1.தொல்காப்பியத்திலிருந்தே சான்று தருதல், 2.பிற இலக்கண நூல்களிலிருந்து தருதல் என மேலும் வகைப்படுத்த இயலும்.

எந்தவொரு நூலாய்வுக்கும் உரிய சான்றுகளை அந்நூலுக்குள்ளிருந்தே தருவது சாலச் சிறந்தது. சான்றாகத் தொல்காப்பியம் குறித்த ஆய்வில் தொல்காப்பிய நூற்பாக்களில் இருந்தே சான்று நல்க வேண்டும். அகச் சான்றுகளே மெய்ம்மையை அறிவதற்குப் பெரிதும் பயன் நல்குவன என்ற கருத்துடைய மாணிக்கனார் (1989: 24) "ஆய்தம் என்பதனை 'ஆய்தல் உள்ளதன் நுணுக்கம்' என்ற உரியியலானும், 'நலிபுவண்ணம் ஆய்தம் பயிலும்' என்ற செய்யுளியலானும் அறியலாம்" எனத் தொல்காப்பியச் சான்றுகள் தருவதால் அறியலாம்.

"ஒற்று முன்னாய் வரும் உயிர்மெய்யே என்று பவணந்தியார் இதனையே பின்பற்றுவார்" (வ.சுப.மாணிக்கம் 1989:46) என்னுமாப்போல பிற இலக்கண நூற்சான்றுகளைத் தருவதும் மாணிக்கவுரை இயல்பாம்.

2. இலக்கியச் சான்றுகள் தருதல்

தமிழ் மரபில் இலக்கியங்களே இலக்கண நூல்களின் அடிப்படைத் தரவுகளுள் குறிக்கத்தகுந்தவை. இவ்வுண்மையை,

"இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே;
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே;
எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல
இலக்கியத்தி னின்று எடுபடும் இலக்கணம்"

- அகத்தியர் (மேற்கோள் மு.வை.அரவிந்தன்:128)

என வரும் மேற்கோளால் அறியலாம். எனவே, ஓரிலக்கண நூலுக்குச் சிறந்த சான்றாக நாம் இலக்கியங்களைக் கருதலாம். அதுவும், அந்த இலக்கண நூலுக்கு முற்காலத்தில் செய்யப்பட்ட இலக்கியங்களே தகுந்த சான்றுகளாகும் என்பதை மேற்கண்ட நூற்பா விளக்குகின்றது. இம்மரபுக்கு மாறாக, சங்க நூல்களுக்குப் பின்னர்ச் செய்யப்பட்ட

நம்பியகப்பொருள் முதலான சில இலக்கண நூல்கள் சங்கப் பாடல்களின் மரபுகள் அந்நூல்களில் போற்றப்பட்டுள்ளன என்று கூறுதற்கியலவில்லை. சான்றாக, "பூத்தமை சேடியிற் புரவலர்க் குணர்த்தலும்" (நம்பி.94) என்ற மரபுக்குச் சங்கப் பாக்களில் சான்றுமுண்டுகொல். இஃது போலும் நிலைகளுக்குக் காரணம் இன்னதென்பது தனித்த ஆய்வுக்குரித்து. நிற்க.

மாணிக்கனார் உரை இலக்கியச் சான்றுகள் பலவும் பொதுளிய புத்துரையாகும் என்பதற்கு அவ்வுரைக்கண் காணப்பெறும் இலக்கியச் சான்றுகளே அடிப்படைகளாகும். தாம் கூற விரும்பும் கருத்துக்களுக்கு இலக்கண, இலக்கியச் சான்றுகள் உண்டென்பதை எண்பிக்கவே உரையாசிரியன்மர் இவ்வகைச் சான்றுகளைத் தருகின்றனர். மாணிக்கவுரையும் இந்நிலையைப் பின்பற்றுகின்றது என்னும் கருத்துக்கு,

"உண்டுண்டுண் டென்னும் உணர்வினாற் சாற்றுமே

டொண்டொண்டொண் டென்னும் பறை

என்பது நாலடியார்" (வ.சுப.மாணிக்கம் 1989:106) என வரும் உரைப்பகுதி சான்றாகும். பழந்தமிழ் உரையாசிரியன்மர் சிலர் குறிப்பாக, நச்சினார்க்கினியர் இன்ன நூலிலிருந்து தாம் மேற்கோள் அல்லது சான்று தருகின்றோம் என்பதற்கான இடம் சுட்டுவதில்லை என்பர் அறிஞர். ஆனால், அண்மைக்கால உரையாசிரியர் பலர் தாம் தரும் மேற்கோள் அல்லது சான்று மூலக்குறிப்பினைத் தவறாமல் தந்து செல்லும் பண்புடையவர்களாகத் திகழ்வதைக் காணமுடிகின்றது. விதிவிலக்குகளும் இருக்கலாம். மாணிக்கவுரை சான்று மூலக்குறிப்புத் தருவதில் பெருங்கவனம் செலுத்தியுள்ளது எனினும், பாடலெண் சுட்டாமல் செல்லுவது குறிக்கத்தக்கது.

இலக்கியச் சான்றுகளைத் தருங்கால்,

"பண்டைக்காலத்துத் தமிழிசை வல்லுநர் தாமே பாட்டும் பாடி உடன் யாழும் மீட்டினர்.

'கோவலன் கையாழ் நீட்ட வவனும்

காவிரியை நோக்கினவும் கடற்கானல் வரிப்பாணியும்

மாதவிதன் மனமகிழ வாசித்தல் தொடங்குமன்'

என்ற சிலப்பதிகாரவடிகளும்,

'இருங்கடற் பவளச் செவ்வாய் திறந்திவள் பாடினாலோ

நரம்பொடு வீணை நாவின் நவின்றதோ'

என்ற சீவகசிந்தாமணியடிகளும்,

'மன்பெரும் பாண நாரும் மாமறை பாட வல்லார்

முன்பிருந் தியாழிற் கூடல் முதல்வரைப் பாடுகின்றார்'

என்ற திருத்தொண்டர் புராணவடிகளும் மிடறும் யாழும் இணைந்த தமிழிசை மரபை எண்பிக்கும்" (வ.சுப.மாணிக்கம் 1989:66–67) என்றவாறு அடுக்குச் சான்றுகள் காட்டலும்,

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்

நற்றாள் தொழாஅர் எனின்.

கொடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே

எடுப்பதூஉம் எல்லாம் மழை

ழா, தூ இவற்றை மேலும் ஒரு மாத்திரையளவு அப்படியே நீட்டிச் சொல்லுக; அர், உம் எனப் பிரித்துச் சொல்லற்க; பிரித்து எழுதற்க; அடுத்த வரிக்குக் கொண்டு செல்லற்க. இது கற்பிக்க வேண்டிய ஒலிநெறி" (வ.சுப.மாணிக்கம் 1989:30) என வருமாறுச் சான்றும், அச்சான்றினைக் கற்பிக்க வேண்டிய நெறிமுறைகளை எடுத்துரைத்தலும்,

'ஐயன்வெந் விடாத கொற்றத் தாவம் வந் தடைந்த தன்றே' என்ற வாலிவதைப்படலச் செய்யுளில் நகர வகர மயக்கம் புதிய வரவாகும்" (வ.சுப.மாணிக்கம் 1989:54) என்னுமாறு பிற்கால மாற்றங்களைச் சுட்டிக்காட்டலும் மாணிக்கவுரை பண்புகளாகும். இங்குக் காட்டியவற்றுள் சான்றினைக் கற்பிக்கும் நெறிமுறைகளை எடுத்துக்காட்டும் நிலை மாணிக்கவுரையின் தனித்தன்மை சான்ற நெறியாகும். பழையவுரைகளின்கண்ணோ, பிற புத்துரைகளின் கண்ணோ காணப்பெறாத ஒரு நெறியாக இதனைக் குறிக்கலாம்.

3. பிற மொழிநூல், பிற துறைச் சான்றுகள் சுட்டுதல்

உரையாசிரியர்கள் பன்மொழிப் புலமையாளர்கள் என்ற உண்மைக்கு அவர்தம் உரைகளே சான்றுகளாக இலங்கக் காண்கின்றோம். முற்கால உரையாசிரியர்களின் வடமொழிப் புலமை தமிழ் ஆய்வுலகம் அறிந்த ஒன்றே. அண்மைகால உரையாசிரியர்கள் வடமொழி மட்டுமல்லாது பிற மொழிச் சான்றுகளும் தரக்

காண்கின்றோம். அவ்வகையில் மாணிக்கவுரையிலும் பிறமொழிச் சான்றுகளைக் காணமுடிகின்றது.

"... புதிய கருத்துக்களை மரபுமுறையிற் படைத்துக் கொள்வதற்கும் இலக்கிய வுடமைகளைப் பேணிக் கொள்வதற்கும் பிற தாக்குதலால் மொழிக்குக் கேடு வராது காத்துக்கொள்வதற்கும் விதிமீறல்களைக் களைந்துகொள்வதற்கும் இலக்கண வரன் வேண்டும் எனவும், இலக்கணமில்லா மொழி அரசில்லா நாடு ஒக்கும் எனவும், கேரள பாணினீய ஆசிரியர் அரச வருமன் சாற்றிய பொன்மொழி தொல்காப்பியத்துக்குச் செவ்வன் பொருந்தும்" (வ.சுப.மாணிக்கம் 1989:58–59).

"செய்யுளிடத்து எழுத்துக்கள் பெறும் மாத்திரை யளவுரைக்கும் இலக்கணம் இயற்றமிழுக்கும் இசைத்தமிழுக்கும் பொதுவாம் என்பர் யாழ் நூல் எனப்படும் தமிழ் வாழ் நூல் கண் அடிகள் விபுலானந்தர்" (வ.சுப.மாணிக்கம் 1989:65) என்றவாறு பிற துறைநூற் சான்றுகள் தருதலும் மாணிக்கவுரை இயல்பாம்.

4. வழக்குநடைச் சான்றுகள் தருதல்

தொல்காப்பியர்,

"வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்து நூல் கண்டு முறைப்பட வெண்ணி" (வ.சுப.மாணிக்கம் 1989:3-4)

நூல் செய்தவராதலின், அம்மரபுக்கு ஏற்பவே உரையாசிரியர்களும் தத்தம் உரைகளில் இலக்கிய மேற்கோள்கள் மட்டுமல்லாது வழக்கு மேற்கோள்களும் தந்துபோயினர். தொல்காப்பிய இளம்பூரணர் உரையில் இடம்பெற்றுள்ள மேற்கோள்களைத் தொகுத்துள்ள இக்கட்டுரையாளர் தம் கருத்து இவண் குறிக்கத்தக்கது. "தொல்காப்பிய உரைமேற்கோள்களாக 3754 மேற்கோள்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள், இலக்கண மேற்கோள்களின் எண்ணிக்கை 345 ஆகும். இலக்கிய மேற்கோள்களின் எண்ணிக்கை 1183 ஆகும். வழக்கு மேற்கோள்களின் எண்ணிக்கை 1767 ஆகும்" (ஆ.மணி 2016:791). இதன்மூலம், தொல்காப்பிய இளம்பூரண உரைமேற்கோள்களில் வழக்கு மேற்கோள்களே ஆதிக்கம் பெற்றுள்ள உண்மையை அறியலாம். மாணிக்கவுரையும் முன்னைய உரைநெறிகளுக்கு ஏற்பவே வழக்கு மேற்கோள்கள் பவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சான்று வருமாறு: "காண்க: அறம், அடவி,

அறுவடை" (வ.சுப.மாணிக்கம் 1989:35). வழக்குச் சான்று காட்டுமிடங்களில் "காண்க" எனச் சுட்டி எழுதுவது மாணிக்கவுரையின் மரபாகும்.

"வழக்கு: மியா – இது பேச்சு வழக்கிடை முன்னிலையில் வரும் ஏவற்சொல். கோண்மியா, சொன்மியா, கேளப்பா, சொல்லப்பா என்பது பொருள்" (வ.சுப.மாணிக்கம் 1989:94) எனச் சான்றினை விளக்கிக் காட்டுதலும், "ஆ – பக்கத்துக் கால் வாங்குதல்: ர – கா ஙா சா இன்ன பிற (15)" என்றவாறு சான்றினை விரிவாக விளக்கிக் காட்டுதலும், உயிர்மெய் என்பதனை விளக்குமிடத்தில் "தயிர்வடை, பூரிகிழங்கு போலக் கொள்க" (வ.சுப.மாணிக்கம் 1989:136) என்னுமாப்போலச் சான்றுகளைச் சுவைபட வழங்குதலும், "புறா, பலாக்காய், பிராண்டுதல், தராசு, வியாழன், வறட்டி, விளாம்பழம் என்ற சில தமிழ்ச்சொற்களைச் சிலர் இன்று மெய்ம் முதலாக ஒலிப்பதைக் கேட்கின்றோம். இது பிழை வழக்கு, கடியத்தகும்" (வ.சுப.மாணிக்கம் 1989:136) எனப் பிழைபட்ட வழக்காறுகளை எடுத்துக்காட்டும் இயல்பும் ஆகிய உரைநெறிகளை மாணிக்கவுரையில் காண்கின்றோம்.

5. பல்வகைச் சான்றுகளை இணைத்துத் தருதல்

ஒரு கருத்தினை விளக்க முனையும் மாணிக்கனார் தம் உரைக்கண் இலக்கணம், இலக்கியம், வழக்கு ஆகிய பல்வகை சார்ந்த மேற்கோள்களை ஓரிடத்தே இணைத்துத் தரும் வழக்கத்தைக் கைக்கொண்டுள்ளார். இதனைப் பின்வரும் பகுதிகளால் அறியலாம்.

"அன்னாஅ, தோழீஇ, ஆடூஉ, வேஎல், கோஒன், எனவும், புகாஅஅர், நம்பீஇஇ எனவும் வரும். நற்றாழ் தொழாஅர் (2), செறாஅ அய் வாழிய (1200) என்பன திருக்குறள்" (வ.சுப.மாணிக்கம் 1989: 28) என்னுமாறு ஒரே கருத்துக்கு வழக்குச் சான்றுகளோடு, இலக்கியச் சான்றுகளை இணைத்துக் காட்டலும்,

"அவன் மகரம் எழுதினான்
அவள் லுகரம் எழுதினாள் } பேச்சு வழக்கு
அவர் றிகரம் எழுதினார்
'ணனவென் புள்ளிமுன் டணவெனத் தோன்றும்'

'ஒற்றவும் வருடவும் லகார ளகாரம்'

'வருட ரகாரம் ழகாரம்'

'தாம் வரூஉம் ரழவலங் கடையே'

என்பன தொல்காப்பிய நூற்பாக்கள்" (வ.சுப.மாணிக்கம் 1989:115) என்றவாறு ஒரே கருத்துக்கு வழக்கு மேற்கோள்களையும் இலக்கண மேற்கோள்களையும் இணைத்துத் தருதலும் மாணிக்கவுரை நெறிகளாகும். இஃதுபோன்ற இன்னும் பல மரபுகள் இருப்பினும், கட்டுரையின் அளவு கருதி, இத்தோடு நிறைவு செய்கின்றேன்.

முடிபுகள்

1. மாணிக்கவுரை தொல்காப்பியம் முழுமைக்கும் எழுதப்படவில்லையே என்ற ஏக்கம் நமக்குள் இருந்தாலும், அவரால் எழுதப்பட்ட தொல்காப்பிய உரைக் குறிப்புக்களாவது அச்சுருக் கொள்ள வேண்டும். அதற்கு அவர்தம் கால்வழியினர் முழுமையான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்பது நமது வேண்டுகோள்.
2. ஒரு நூற்பா / பாடலுக்குக் கூறப்படும் உரையைப் பொருத்தவரையில், அந்நூற்பா / பாடலின் பொருளைத் தெளிவுறுத்தும் பொழிப்புரை, பதவுரை ஆகிய இரண்டனுள் ஒன்றைத் தருவதே உரையாசிரியர்தம் மரபாகும். இம்மரபுக்கு மாறாக மாணிக்கவுரையில் அகலவுரை என்னும் உரைநிலையைக் கையாண்டு புதுமை படைத்துள்ளார். எனினும், அகலவுரைக்கண் பொழிப்புரையும், விளக்கவுரையும் இணைந்துள்ளதைக் காணமுடிகின்றது.
3. வினாக் கேட்டு விடை தருவது என்ற நிலையிலிருந்து ஒரு படி மேற்சென்று வினாக் கேளாமலேயே விடையை எழுதிச் செல்கின்ற பாங்கினையும் மாணிக்கவுரையில் காணமுடிகின்றது. கற்போன் மனத்தில் எழக்கூடிய வினாக்களைச் சிந்தித்து விடையளிக்கின்ற மாணிக்கவுரை கற்போனின் உள்ளப்போக்கினை மிகத் தெளிவாக அறிந்துள்ள ஓர் உரையாகும்.
4. மாணிக்கனார் உரைக்கண்ணும் பெருவழக்குடைய ஒன்றாகவே சான்று காட்டல் திகழ்கின்றது என்பதனைக் காணமுடிகின்றது. சான்று காட்டுமிடங்களில் 1.இலக்கணச் சான்றுகள் தருதல், 2.இலக்கியச் சான்றுகள் தருதல், 3.பிற மொழிநூல், பிற துறைச் சான்றுகள் சுட்டுதல், 4.வழக்குநடைச் சான்றுகள் தருதல், 5.பல்வகைச் சான்றுகளை இணைத்துத் தருதல் ஆகிய நெறிகளைக் காணமுடிகின்றது.
5. சான்றினைக் கற்பிக்கும் நெறிமுறைகளை எடுத்துக்காட்டும் நிலை மாணிக்கவுரையின் தனித்தன்மை சான்ற நெறியாகும்.

பழையவுரைகளின்கண்ணோ, பிற புத்துரைகளின் கண்ணோ காணப்பெறாத ஒரு நெறியாக இதனைக் குறிக்கலாம்.

துணைநூல்கள்

1. அரவிந்தன். மு.வை., 2008 (இரண்டாம் பதிப்பு). உரையாசிரியர்கள். சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
2. இராஜரெத்தினம். தி. (பதி.ஆ.),. 2014. அகப்பொருள் விளக்கம் – செம்பதிப்பு. சென்னை: காவ்யா.
3. மணி. ஆ., 2010. செம்மொழித் தமிழ் ஆய்வுரைகள். புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம்.
4. மணி. ஆ., 2014. தொல்காப்பியத் திறனுரைகள். சென்னை: லாவண்யா பதிப்பகம்.
5. மணி. ஆ.. 2016. தொல்காப்பிய உரைமேற்கோள்கள் – தொகுப்பும் பகுப்பும். சென்னை: செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம். (வெளியிடப்பெறாத ஆய்வுத்திட்ட ஆய்வேடு).
6. மாணிக்கம். வ.சுப., 1980 (பெருக்கிய பதிப்பு). தொல்காப்பியப் புதுமை. சிதம்பரம்: மணிவாசகர் நூலகம்.
7. மாணிக்கம். வ.சுப., 1989. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் – நூன்மரபும் மொழிமரபும் – மாணிக்கவுரை. தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக் கழகம்.
8. மாணிக்கம். வ.சுப., 1989[1] (தொகை முதற்பதிப்பு). தொல்காப்பியக் கடல். சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
9. மோகன். இரா., 1999 (முதற்பதிப்பு). இந்திய இலக்கியச் சிற்பிகள் வ.சுப. மாணிக்கம். புதுதில்லி: சாகித்திய அகாதெமி.

குறிப்பு

* என்ற குறியீடு அவ்வெண் தமிழெண் வடிவில் தரப்பட்டது என்பதைக் குறிக்கும். தட்டச்சுநிலை கருதி, அவ்வெண் இவ்ஆய்வுரையில் கணித எண் வடிவாகத் தரப்படுள்ளது.

+ என்ற குறியீடு வ.சுப. மாணிக்கனாரால் தரப்பட்ட எண் என்பதைக் குறிக்கும். அவ்வெண் தொல்காப்பிய நூற்பாவின் எண் என்றாலும், இன்ன இயல் / அதிகாரத்திற்குரியது என்ற குறிப்பு அவரால் தரப்படவில்லை என்பதையும் குறிக்கும்.

(தமிழண்ணல் 1993:20; 2008:7) என வரும் குறிப்பில் அரைப்புள்ளிக்கு முன் வரும் முதலெண் 1993 ஆண்டுப் பதிப்பின் 20ஆம் பக்கத்தைக் குறிக்கும். அரைப்புள்ளிக்குப் பின்னர் வரும் இரண்டாம் எண் தமிழண்ணல் எழுதிய 2008ஆம் ஆண்டுப் பதிப்பின் 7ஆம் பக்கத்தைக் குறிக்கும். ஒரு ஆசிரியரே எழுதிய ஒன்றுக்கு மேற்பட்ட நூல்களில் ஒரு கருத்தே இடம்பெறுமிடங்களைக் குறிக்க இவ்வாறு ஆளுவது பொருத்தமுடையதாகலாம் என்ற எண்ணத்தில் முதன்முறையாக இவ்வாறு தரப்பட்டுள்ளது. இடச்சுருக்கம் கருதி இம்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வாளனின் கல்விப்பரவலை இவ்வகைக் குறிப்புக்கள் அறிய உதவுவது என்பது இதன் பயன் என்க.

மதிப்பிடப்பெற்றது

பிற்கால நீதி நூல்கள் : வ.சுப.மாணிக்கனாரின் உரை இயல்புகளும் நடைத் தன்மைகளும்

முனைவர் **மா.பரமசிவன்**
தமிழ் உதவிப்பேராசிரியர், ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி)
சிவகாசி - 626 130.

வ.சுப.மாணிக்கனார் பிற்கால நீதி நூல்களான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நறுந்தொகை, மூதுரை, நல்வழி, நன்னெறி, உலகநீதி ஆகியனவற்றிற்கு 1957இல் உரை எழுதியுள்ளார். இவ் உரை பல்வேறு பதிப்புகளைக் கண்டுள்ளது. இவ் உரையின் இயல்புகள் குறித்தும் நடைத் தன்மைகள் குறித்தும் விளக்குவதாக இவ் எழுத்துரை அமைகின்றது.

உரை வரலாறு

செம்மல், முதுபெரும்புலவர், பெருந்தமிழ்க் காவலர், முதுபேராய்வாளர் என்றெல்லாம் அழைக்கப்பெறும் வ.சுப.மாணிக்கனார் 17.04.1917 முதல் 25.04.1989 வரை வாழ்ந்தவர். புதுக்கோட்டை மாவட்டம் மேலைச்சிவபுரியில் பிறந்த இவரின் இயற்பெயர் அண்ணாமலை என்பதாகும். குருகுல முறையிலான தொடக்கக் கல்வியை தம் ஏழாம் வயது வரை மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையுடன் தொடர்புடைய நடேச ஐயரிடம் பயின்றார். அவரிடமிருந்துதான் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நறுந்தொகை, மூதுரை, நல்வழி, நன்னெறி, உலகநீதி ஆகியவற்றைப் கற்றறிந்திருக்கிறார். தொழில் கற்பதற்காகப் பர்மா சென்று திரும்பிய இவரது உயர்கல்விக்கு வழிகாட்டியவர் பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் ஆவார். அவரின் வழிகாட்டுதல்படி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டத்தையும் (1936-1940) சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.ஓ.எல். (1945), முதுகலைப் (1951) பட்டங்களையும் பெற்றார். தொடர்ந்து ‘தமிழில் வினைச்சொற்கள்’ எனும் ஆய்வுக்காக எம்.ஓ.எல். (1948) பட்டத்தையும் ‘தமிழில் அகத்திணைக் கொள்கைகள்’ எனும் பொருளில் ஆய்வு செய்து முனைவர் (1957) பட்டத்தையும் பெற்றார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் (1941-1948), காரைக்குடி அழகப்பா கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் (1948-1964), முதல்வர் (1964-1970), அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் & இந்திய மொழிப்புல முதன்மையர் (1970-1977), மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

(17.08.1979 - 30.06.1982) என்று பல்வேறு பரிமாணங்களைக் கொண்டவர் வ.சுப.மாணிக்கனார்.

தமிழகப் புலவர் குழுத் தலைவர், பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவர், தமிழ் வழிக் கல்வி இயக்கத் தலைவர், தமிழ்ப் பல்கலைக்கழக வடிவமைப்புக் குழுத்தலைவர், தமிழ்ப் பல்கலைக்கழகத் தொல்காப்பியத் தலைவர் எனப் பல்வேறு பொறுப்புகளை வகித்த வ.சுப.மாணிக்கனார் 21 தமிழ் நூல்களையும் 4 ஆங்கில நூல்களையும் 9 நூல்களுக்கு உரையையும் எழுதியுள்ளார்.

“ஆத்திசேர் கொன்றை அழகுதமிழ் மூதுரை
பாத்திசேர் நல்வழி பண்புலகம் - பூத்த
நறுந்தொகை நன்னெறி ஏழும் குழந்தைக்
குறுந்தமிழ் என்றறிந்து கொள்” (2006:7)

என்று பிற்கால நீதிநூல்களின் பெருமையை வெண்பாவாகப் பாடிய வ.சுப.மாணிக்கனார்,

“...தொல் மரபுப்படி “ஏழிளந்தமிழ்” மீண்டும் தொடக்கப் பள்ளிகளில் முழு நூல்களாக இடம்பெற வேண்டும்” (2006:7)

என்ற கருத்துடையவராக விளங்கினார்.

ஆத்திசூடி அமைப்பில் ‘தமிழ்சூடி’ எழுதியவர் (2006:10) வ.சுப.மாணிக்கனார். காரைக்குடியில் தமிழ்ச்சங்கம் அமைத்து அதன் தலைவராய் விளங்கிய அவர், இப்பிற்கால நீதிநூல்களைச் சிறுவர்கள் மனதில் பதியச் செய்ய முயற்சித்து,

“எளிய தெளிவுரை வகுத்துத் தமிழ்ச் சங்க வெளியீடாகப் பல பதிப்புகள் வரச் செய்தார்” (2006:10).

இந்நிலையில் ஆத்திசூடி முதலான இப்பிற்கால நீதிநூல்களின் முதல்பதிப்பு 1957இல் வெளிவந்துள்ளது. இதற்கு, ‘ஏழிளந்தமிழ்’ என்று பெயர்சூட்டி மகிழ்ந்துள்ளார் வ.சுப.மாணிக்கனார். இதன் மறு அச்சு, இவரின் நூல்கள் நாட்டுடைமை (2006) ஆக்கப்பட்டதன் பின்னர் 2006இல் மணிவாசகர் பதிப்பகத்தின் வழியும் 2007இல் தமிழ் நிலையத்தின் வழியும் 2014இல் சந்தியா பதிப்பகத்தின் வழியும் வெளியிடப்பெற்றுள்ளது.

இவரின் உரையைத் தழுவி எழுதப்பெற்ற ஓர் உரை பதிப்புச்செம்மல் ச.மெய்யப்பன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 2009இல் முதற்பதிப்பாகவும் 2012இல் இரண்டாம் பதிப்பாகவும் வெளிவந்துள்ளது. நாட்டுடைமை ஆக்கப்பட்டதன் பின்னர் முதன்முதலில் இவரின் ஏழிளந்தமிழ் உரைகளைப் பதிப்பித்த மணிவாசகர் பதிப்பகம் தற்போது வெளியிடாமல் இவரின் உரைத்தழுவல் உரையை வெளியிட்டிருப்பது வேதனைக்குரியதாக அமைகிறது.

உரை இயல்புகள்

வ.சுப.மாணிக்கனாரின் பிற்கால நீதிநூல் உரைகள் பின்வரும் இயல்புகளைக் கொண்டமைகின்றன. அவை:

1. கருத்துரைத் தன்மையில் அமைதல்
2. விளக்கவுரை அளித்தல்
3. தொகுத்துக் கூறல்
4. தலைப்பிட்டு உரை எழுதுதல்
5. கொண்டு கூட்டு நெறி பயன்படுத்துதல்
6. வழக்குச் சொல் பயன்பாடு
7. வடசொல் பயன்பாடு
8. சமய நம்பிக்கை வெளிப்பாடு.

கருத்துரைத் தன்மையில் அமைதல்

ஒரு நூல் உணர்த்துகின்ற கருத்தைத் தெளிவாக்கி அமைவது கருத்துரையாகும். இது சுருக்கமாக அமைவதால் இதனைக் குறிப்புரை என்றும் குறிப்பிடலாம். இத்தகைய கருத்துரைத் தன்மையிலேயே வ.சுப.மாணிக்கனாரின் பிற்கால நீதிநூல் உரைகள் அமைகின்றன. குறிப்பாக, ஒவ்வொரு அடிகளில் அமையும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரைகள் அவ்வாறே அமைகின்றன. பிற நூல்களில் அரிதாகச் சில இடங்களில் கருத்தை உணர்த்தும் தன்மையில் இவரின் உரை அமைகின்றது.

“ஈவது விளக்கேல்” (ஆத்.4)

“ஒருவர் மற்றொருவர்க்குக் கொடுப்பதைத் தடுக்காதே” (2007:5)

“ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு” (கொன்.86)

"மனம் தளராமை எல்லா முன்னேற்றமும் தரும்" (2007:24)

என்பனவற்றை இதற்குச் சான்றுகளாக அளிக்கலாம். மேலும்,

"அஞ்சுபேர் கூலியைக் கைக்கொள்ள வேண்டாம்
அதுஏதிங் கென்னில்நீ சொல்லக் கேளாய்
தஞ்சமுடன் வண்ணான் நாவிதன் கூலி
சகலகலை யோதுவித்த வாத்தியார் கூலி
வஞ்சமற நஞ்சறுத்த மருத்துவச்சி கூலி
மகநோவு தனைத்தீர்த்த மருத்துவன் கூலி
இன்சொலுடன் இவர்கூலி கொடாத பேரை
ஏதேது செய்வானோ ஏமன் தானே" (உலக.11)

என்ற உலகநீதிப் பாடலுக்கு,

"வண்ணான், நாவிதன், கற்பித்த ஆசிரியர், பேறுபார்த்த மருத்துவச்சி, கொடிய நோய் தீர்த்த மருத்துவன் ஆகிய ஐவருக்கும் உரிய கூலியைக் கொடுத்துவிட வேண்டும். அவ்வாறு கொடாதவர்க்கு இயமன் என்னென்ன தண்டனைகள் அளிப்பானோ?" (2007:95)

என்று உரை எழுதுகிறார். இவ்வாறு தேவையற்ற சொற்களைப் பயன்படுத்தாமல் சுருக்கமாகப் பாட்டின் கருத்தைத் தெளிவாக்கும் கருத்துரைத் தன்மை, இவர் உரையில் பரவலாகக் காணப்பெறுகிறது. மேலும், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி ஆகியவற்றின் முதல் பாடல்களான கடவுள் வாழ்த்துப் பாடல்களின் உரை தொடங்கும் போது 'கருத்து' என்று தலைப்பிட்டு உரை எழுதுவதும் இவர் உரை கருத்துரை என்பதையே தெளிவுபடுத்துகிறது.

நான்கு அடிப் பாடல்கள் சிலவற்றிலும் கருத்துரைத் தன்மை காணப்பெறுகிறது. இதற்குப் பின்வரும் நல்வழிப் பாடலைச் சான்றாகக் குறிக்கலாம்.

"வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே - மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை" (நல்.23)

என்ற நல்வழிப் பாடலுக்குப் பின்வருமாறு உரை எழுதுகிறார் வ.சுப.மாணிக்கனார்.

> “நீதி மன்றத்தில் ஒரு சார்பாகப் பொய் சொன்னவன் வீட்டில் பேய் சேரும்; எருக்கஞ்செடி வளரும்; பாதாள மூலி என்னும் கொடி படரும்; மூதேவி தங்குவாள்; பாம்பு குடியிருக்கும். அதாவது அவன் குடியோடு அழிவான்” (2007:62).

இவ் உரையில், ‘அதாவது அவன் குடியோடு அழிவான்’ என்பது கருத்துரைத் தன்மையில் அமைவதாகும்.

விளக்கவுரை அளித்தல்

முதலில் பாடலின் கருத்தைத் தெளிவாக்கிவிட்டு அதுதொடர்பாகக் கூடுதல் விளக்கத்தைத் தருவது உரையாசிரியர்களின் பொது மரபாகும். இத்தன்மையில்தான் உரையாசிரியர்களின் புலமைத்துவம் வெளிப்படும். இத்தன்மையும் இப்பிற்கால நீதிநூல் உரைகளில் காணப்பெறுகிறது. இதனை, நறுந்.26,27,29,60,62, நல்.க.வா. ஆகிய 6 இடங்களில் காண இயலுகிறது.

“கலக்கினும் தண்கடல் சேறா காது” (நறுந்.27)

எனும் நறுந்தொகை அடிக்கு,

“கடலை எப்படிக் கலக்கினாலும் சேறாகாது; தெளிவாகவே இருக்கும்” (2007:29)

என்று உரை எழுதும் வ.சுப.மாணிக்கனார்,

> “பால், பொன், சந்தனம், அகில், கடல் ஆகிய ஐந்தும் தம்மைப் பிறர் வருத்திய போதும் தமக்குரிய இயல்பில் மாறுபடுவதில்லை. அவை போலவே பெரியோர் தமக்கு மிகுந்த துன்பம் வந்தாலும் தம் உயர் குணங்களிலிருந்து மாறுபடார்” (2007:30)

என்று விளக்கம் அளிக்கிறார். கடலைப் பற்றிக் கூறும் மேற்கண்ட அடிக்கு அதனை ஒத்த, பெருமையுடைய பால், பொன், சந்தனம், அகில் ஆகியவற்றையும் கூறி அவற்றைப்போலப் பெரியோர் திகழ்வர் என்று கூறும் இவரின் உரை இயல்பு போற்றத்தக்கதாகும்.

“பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா” (நல்.க.வா.)

என்ற நல்வழியின் கடவுள் வாழ்த்துப் பாடலுக்கு,

> "விநாயகப் பெருமானே! பாலும் தேனும் வெல்லப் பாகும் பருப்பும் ஆகிய நான்கு பொருட்களை நான் உனக்குப் படைப்பேன்; எனக்கு இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் தர வேண்டுகிறேன்" (2007:53)

என்று உரை எழுதுகிறார். இதில், 'இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும்' என்பது விளக்க நிலையில் அமைவதாகும். 'சங்கத் தமிழ் மூன்றும்' என்பதற்கான விளக்கமாக இது அமைகிறது. இவ்வாறாக, பாடல் முழுமைக்குமான விளக்கம், குறிப்பிட்ட அடிக்கான விளக்கம் என்ற இருநிலைகளில் இவரின் விளக்கவுரைத் தன்மை அமைகிறது.

தொகுத்துக் கூறல்

ஒரு நூலுக்கு உரை எழுதும் உரை ஆசிரியர் நீண்ட பாடலாக இருப்பின் அப்பாடலுக்கு இடையிலோ, தனித்த அதிக எண்ணிக்கையிலான பாடல்களாக இருப்பின் குறிப்பிட்ட பாடல்கள் நிறைவடைந்த பின்னரோ அவற்றின் பொருளைத் தொகுத்துக் கூறி உரை எழுதுவர். பத்துப்பாட்டு உரைகளில் இத்தன்மையைப் பரவலாகக் காண முடியும். இது பாடல் புரிதலுக்கு வழி வகுக்கக் கூடியதாகும்.

இத்தகைய தொகுத்துக் கூறும் தன்மையை வ.சுப.மாணிக்கனார் தம் நறுந்தொகை உரையில் பயன்படுத்தியுள்ளார். நறுந்தொகையின்,

> "தன்னா யுதமும் தன்கையிற் பொருளும்
> பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே" (நறுந்.71)

என்ற 71ஆம் பாடல் நிறைவுற்றபின் அதற்கான பொருளைக் குறித்துவிட்டு,

> "65 முதல் 71 வரையுள்ள செய்யுட்களில் அந்தணப் பதர், அரசப்பதர், வணிகப்பதர், வேளாளப்பதர், இல்லறப்பதர், தொழிலாளிப்பதர் என ஆறுவகைப் பதர்களை ஆசிரியர் கூறியுள்ளார்" (2007:37)

என்று எழுதுகிறார். இவ்வாறு தொகுத்துக் கூறும் இவ் இயல்பு இவ்வோரிடத்தில் மட்டுமே இவ்வுரையில் காணப்பெறுகிறது.

தலைப்பிட்டு உரை எழுதுதல்

ஓர் உரை தனிப்பாடல்களுக்கானதாக இருந்தாலும் நெடும்பாடல்களுக்கானதாக இருந்தாலும், பிற்கால உரையாசிரியர்கள்

அப்பாடல்களுக்கு அப்பாடல்களின் பொருண்மைகளைத் தலைப்பிட்டு உரை எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். இது மூதுரை, நல்வழி எனும் இருநூல்களுக்கான வ.சுப.மாணிக்கனாரின் உரைகளில் காணப்பெறுகிறது.

ஏழு நூல்களில் உலகநீதிக்கு மட்டும் 'காப்பு' என்றும், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை ஆகிய நூல்களுக்குக் 'கடவுள் வணக்கம்' என்றும், நறுந்தொகை, நல்வழி, நன்னெறி ஆகியவற்றிற்குக் 'கடவுள் வாழ்த்து' என்றும் தலைப்பிட்டு இறைவணக்கப் பாடல்களை அமைத்துள்ளார் வ.சுப.மா.. பிற பாடல்களுக்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நறுந்தொகை, உலகநீதி தவிர்ந்த பிறவற்றிற்குத் தலைப்பின்றி உரை எழுதுகிறார். நறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடலுக்கு அடுத்துள்ள பாடலில் 'நறுந்தொகை படிப்பதால் வரும் பயன்' என்று தலைப்பிட்டு எழுதுகிறார்; பிற பாடலடிகளுக்கு எவ்விதத் தலைப்பையும் அளிக்கவில்லை.

மூதுரையில், நன்மை செய்தால் நன்மை வரும், நல்லோர்க்குச் செய்த உதவி நிலையாக நிற்கும், இளமையில் வறுமை, மேன்மக்கள் இயல்பு, காலமறிந்து செய்தல், உயிரினும் மானம் பெரிது, அறிவு செல்வம் குணம் அமைதல், நல்லார் தொடர்பால் வரும் நன்மை, தீயவர் தொடர்பால் வரும் தீமை, நல்லோரால் எல்லார்க்கும் நன்மை, துணை வலிமை வேண்டும், உருவமும் குணமும், கல்லாதவன் காட்டுமரமாவான், போலி அறிவின் இழிவு, தீயோர்க்கு உதவின் தீங்கே வரும், அடக்கத்தை இழக்காதே, உண்மையான உறவினர், கெட்டாலும் மேன்மக்கள் குணம் மாறார், ஆசையாற் பயனில்லை, உடன்பிறப்பும் அயலாரும், மனையாளும் மனையும், ஊழின்படியே நடக்கும், சினத்தில் மூவகை நிலை, குணமும் தொடர்பும், வஞ்சனையுடையார் ஒளிந்து இருப்பர், கற்றோர் சிறப்பு, நால்வகை எமன்கள், கேட்டிலும் பண்பு கெடாமை, நிலையில்லாத வாழ்வு, துன்பம் செய்வார்க்கும் இன்பம் செய்தல் ஆகிய தலைப்புகள் காணப்பெறுகின்றன.

நல்வழியில் கடவுள் வாழ்த்துத் தவிர்ந்த பிற பாடல்களுக்கு, நன்மையே செய்க, உயர்குலம் இழிகுலம், ஈகையின் பயன் வீடுபேறு, காலம் அறிந்து செய்க, கவலையடைதல் கூடாது, பேராசை கூடாது, ஞானிகள் பற்றற்று இருப்பர், ஒழுக்கம் பொருளின் சிறந்தது, குடிப்பிறந்தார் வறுமையிலும் உதவுவர், கொடுத்து உண்டு

வாழ்க, வயிற்றின் கொடுமை, உழவின் உயர்வு, நம்மால் விலக்க இயலாதன, மானமே உயிரினும் சிறந்தது, சிவாயநம, வியத்தகு மேன்மை, தீவினையே வறுமைக்கு வித்து, அடிப்பவர்க்கே கொடுப்பர், உயர்நோக்கம் இன்மை, விலைமகள் தொடர்பு, வஞ்சனையில்லார்க்கு வாழ்வு சிறக்கும், புதைத்த பணத்தால் யாருக்குப் பலன்?, வழக்கல் ஓரம் சொன்னவர் மனைபாழ், வாழ்க்கை மாண்புகள் ஐந்து, வரவுக்கேற்ற செலவு, பசிவந்திடப் பத்தும் போகும், எல்லாம் இறைவன் செயல், மனவமைதி வேண்டும், கொடையாளருக்கு எல்லாரும் உறவினர், விதியின் தன்மை, இதனினும் இது நன்று, வன்சொல்லும் இன்சொல்லும், பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை, அறிவுடையோரும் பேதையும், பிறன்மனை விரும்பாமை, வீடு அடைதல், உண்மை நிலை, முப்பதில் முதல்வனை அறி, சிறந்த நூல்கள் ஆகிய தலைப்புகளை அளித்துள்ளார்.

நன்னெறியின் கடவுள் வாழ்த்துத் தவிர்ந்த பிற பாடல்களுக்குப் பின்வரும் தலைப்புகளை அளிக்கிறார். புகழ் கருதாமல் உதவுக, பெரியோர் வன்சொல், முறையறிந்து கொள்க, செல்வப் பயன், பிரியாத நட்பின் சிறப்பு, கணவன் மனைவி கருத்தொற்றுமை, கல்விச் செருக்குக் கூடாது, சினங்காத்தல் சிறப்பு, வல்லோர் துணை வலிமை, விழுமியோர் இயல்பு, மெய்யறிவாளரும் புலன்களும், உடம்பில் உயிர்தங்கல் வியப்பு, உள்ளதற்குத் தக உதவுக, செல்வச் செருக்குக் கூடாது, வாழ்வுக்கு அன்பு அடிப்படை, உயர்ந்தோர் உதவும் முறை, வன்மையிலும் உதவி, இன்சொல் இனிமை தரும், நல்லோர் வரவு நல்கும் இன்பம், கருணை உள்ளத்தியல்பு, கல்லார் செருக்கு கற்றார்முன் அடங்கும், பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை, மனவுறுதி வேண்டும், கீழோர் பிறர் குற்றமே பேசுவர், கீழோர் சேர்க்கையால் சிறப்புக் கெடும், உருவத்தைக் கொண்டு மதிப்பிடாதே, கைம்மாறு கருதாது உதவுக, வெறுப்பிலும் மேலார் உதவுவர், பத்தியுடையார்க்கு அச்சமில்லை, காலத்தில் அறஞ் செய்க, பிறர் துயரம் தாங்குக, முறையறிந்து அறம் செய்க, பெரியோர்க்குக் காப்பு வேண்டாம், பெரியோர் பழிக்கு அஞ்சுவர், மேன்மக்கள் கற்றோரை விரும்புவர், தக்கார்க்கு உதவுக, தற்புகழ்ச்சியால் தாழ்வு, நல்லோர் தொடர்பு நலம் தரும், தீயோர் தொடர்பு தீமை தரும், அரசரினும் அறிஞரே சிறந்தவர் என்பன அவை.

இவ்வாறு தலைப்பிட்டு உரை எழுதும் தன்மை பாடலைத் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. கற்றல், கற்பித்தல் முறைக்கு இது இன்றியமையாததாகவும் அமைகிறது.

கொண்டு கூட்டு நெறி

தொல்காப்பியத்தில் 'மாட்டு' என்று குறிக்கப் பெற்ற இது நச்சினார்க்கினியாருக்குப்பின் கொண்டு கூட்டாக வளர்ந்தது. பின்னர் இது ஒரு தனிநெறியாக வளர்க்கப்பெற்று உரையாசிரியர்களால் பயன்படுத்தப் பெற்றுள்ளது. நூலின் பொருட்புரிதலுக்கு இந்நெறி பெருந்துணை புரிகின்றது என்றாலும் சில இடங்களில் வலிந்து அமைந்து விடுவதும் உண்டு. சரியான முறையில் இதனைப் பயன்படுத்தும்போது பாடலின் பொருளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். இவ்இயல்பைப் பயன்படுத்தாத உரையாசிரியர்களே இல்லை என்று கூறலாம்.

இத்தகு தன்மையுடைய இவ்இயல்பு வ.சுப.மாணிக்கனாராலும் பயன்படுத்தப் பெற்றுள்ளது. அவரின் மூதுரை, நன்னெறிப் பாடல்களுக்கான உரைப்பகுதிகளில் இது பயன்படுத்தப்பெற்றுள்ளது. சான்று வருமாறு:

"நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தரு லால்" (மூது.1)

எனும் இப்பாடலுக்கான பொருள் கொண்டு கூட்டுத் தன்மையில் வ.சுப.மாணிக்கனாரால் அளிக்கப்பெற்றுள்ளது. அப்பொருள் வருமாறு:

> "தென்னைமரம் வேரால் உண்ட நீரை இனிய சுவையுடைய இளநீராக்கி முடியாலே தருகின்றது. அதுபோல, நாம் பிறர்க்குச் செய்யும் உதவி நமக்குத் தவறாமல் வந்து சேரும். ஆதலால் என்றும் நன்மையே செய்க" (2007:40-41).

இப்பாடலின் 3,4ஆம் அடிகளுக்கான பொருள் முதலிலும் முதலிரண்டு அடிகளுக்கான பொருள் இரண்டாவதுமாகச் சொல்லப்பெற்று, இப்பாடலுக்கான பொருள் விளக்கம் அமைந்துள்ளது. இவ்வாறு தேவையான இடங்களில் மட்டுமே தெளிவாக, சிறப்பாக

இக் கொண்டுகூட்டு பயன்படுத்தப்பெற்றுள்ளது. மாறாக வலிந்து அளிக்கப்பெற்றனவாக இது திகழவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

வழக்குச் சொல் பயன்பாடு

உரையாசிரியர்கள் அனைவரும் நூல் தோன்றிய கால வழக்கைப் பதிவு செய்ததை விட, உரை எழுதப்பெற்ற கால வழக்கத்தையே மிகுதியாகப் பதிவு செய்துள்ளனர். உரையாசிரியர்கள் கால வழக்கத்தைப் பயன்படுத்திப் பனுவல் தரும் பொருளை உணர்த்துதல் உரை மரபில் பரவலாக இருந்து வருகிறது. இத்தன்மை வ.சுப.மாணிக்கனாராலும் பின்பற்றப்பெற்றுள்ளது. இவர், தம் உரையில் வழக்குச் சொற்றொடர்களை அரிதாகக் கையாள்கிறார். 'நீராம்பல்' (மூது.7:1), என்பதற்கு, 'அல்லிக்கொடி' (2007:43), என்றும் 'நாகம்' (மூது.25:1), என்பதற்கு, 'நாகப்பாம்பு' (2007:50), என்றும் குறிப்பிடுவதை இதற்குச் சான்றுகளாகக் குறிப்பிடலாம்.

உரையைப் படிப்பவர் எளிதாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதைக் கவனத்தில் கொண்டே உரையாசிரியர்கள் பேச்சு வழக்கில் பயன்படுத்துவதை உரையில் காட்டுகின்றனர். இது காலத்தின் தேவையும் ஆகும்.

வடசொல் பயன்பாடு

வடசொல் என்பது தொன்றுதொட்டே தமிழ் மொழியில் பயின்று வந்துள்ளது. இதற்கு,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" (தொல்.சொல்.எச்சம்.5)

என்ற தொல்காப்பிய நூற்பா சான்றாகும். வடசொற்களும் வட எழுத்துகளும் தொல்காப்பியம் தோன்றிய காலத்திலேயே தமிழோடு கலந்துவிட்டது என்பதனை இதன்வழி அறியலாம். இன்றும் சில சொற்களைத் தமிழ் என்று கூறுவதா? வடமொழி என்று கூறுவதா? என்பதான குழப்பங்கள் நீடித்துக்கொண்டே இருக்கின்றன. இந்நிலையில்தான் உரையாசிரியர்கள் பயன்படுத்துகின்ற வடமொழிச் சொற்களை நாம் பார்க்க வேண்டி உள்ளது. மேலும், 'வைணவ வியாக்கியானர்கள்' பயன்படுத்திய மணிப்பிரவாள நடையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியதாகவே உள்ளது. தனித்தமிழ் மரபைப் போற்றியவர்களின் தொடக்ககால எழுத்துகளிலும் இவ்வடமொழிக் கலப்பைக் காண இயலுகிறது. இவ்வகையில், தமிழரின் அகவாழ்க்கை மரபு குறித்துத் 'தமிழ்க்காதல்' எழுதிய வ.சுப.மாணிக்கனாரின்

ஏழிளந்தமிழ் உரையிலும் வடசொற்கள் காணப்பெறுவது குறிப்பிடத்தக்கதாக அமைகிறது. இச்சொற்கள் அரிதாகவே காணப்பெறுகின்றன. சான்று வருமாறு:

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்" (நல்.40:1)

என்ற அடிக்கு உரை எழுதும் வ.சுப.மா., 'திருநான் மறைமுடிவு' என்பதற்கு உபநிடதம் என்று பொருள் குறிக்கிறார்.

"பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தான் மற்றொவ்வார் - மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே அதுபுனையாக்
காணுங்கண் ஒக்குமோ காண்" (நன்.40)

என்ற பாடலில் வரும் 'அணி' என்ற சொல்லுக்கு உரை முழுவதிலும் 'ஆபரணம்' என்றே பொருளுரைக்கிறார். இவ்வாறு இவ்விரு இடங்களில் மட்டும் வடசொற்களைப் பயன்படுத்தியுள்ளார் வ.சுப.மாணிக்கனார்.

சமய நம்பிக்கை வெளிப்பாடு

உரை எழுதும் ஒவ்வொருவரும் தாம் சார்ந்திருக்கும் சமயம் தொடர்பான பதிவை ஏதேனும் ஓரிடத்தில் பதிய வைத்து விடுகின்றனர். இதை வைத்துத்தான் முற்கால உரையாசரியர்களின் சமயத்தைப் பற்றி நம்மால் அறியமுடிகிறது. இதற்கு வ.சுப.மாணிக்னாரும் விதிவிலக்கல்ல. இவர்தம் உரையில் 8 இடங்களில் அவரது சமய நம்பிக்கைப் பதிவுகள் காணப்பெறுகின்றன. அவை வருமாறு:

"சிவபெருமான் விரும்பும் விநாயகக் கடவுளைப் பலமுறை வாழ்த்தி வணங்குவோம்" (ஆத்.க.வ.)

"சிவபெருமானின் திருக்குமரனாம் விநாயகக் கடவுளின் திருவடிகளை நாள்தோறும் வணங்குவோம்" (கொ.வே.க.வ.)

"ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் பொருளாகிய விநாயகரின் திருவடிகளை வணங்குவோம்" (நறுந்.க.வா.)

"வலிமை பொருந்திய அழகிய உடலினையும் தும்பிக்கையையும் உடைய விநாயகக் கடவுளின் திருவடிகளை…" (மூது.க.வ.)

"விநாயகப் பெருமானே! பாலும் தேனும் வெல்லப் பாகும் பருப்பும் ஆகிய..." (நல்.க.வ.)

" 'சிவாயநம' என்னும் திருவைந்தெழுத்தை இடையறாமல் நினைந்திருப் போர்க்கு..." (நல்.15)

"ஒளிவீசும் சடைமுடியையுடைய விநாயகக் கடவுளின் திருவடிகளை வணங்கினால்,..." (நன்.க.வா.)

"சிவபெருமானைச் சார்ந்துள்ளமையால் பாம்பு தன்னினும் வல்லமையுடைய கருடனைக்கண்டு அஞ்சாது" (நன்.9)

" 'உலகநீதி'யைச் சொல்வதற்கு நூலறிவால் அறியமுடியாத பெருமையினை யுடைய யானைமுகக் கடவுள் துணையாவார்" (உலக.கா.)

இச்சான்றுகளில் வரும் 'சிவபெருமான், விநாயகக் கடவுள், ஓம் எனும் பிரணவ மந்திரம், விநாயகர், விநாயகப் பெருமான், 'சிவாயநம' என்னும் திருவைந்தெழுத்து, யானைமுகக் கடவுள்' ஆகிய சொற்றொடர்கள் வ.சுப.மாணிக்கனாரின் சமய நம்பிக்கையை வெளிப்படுத்துவனவாகும். பாடலடிகளில் இத்தன்மையைக் குறிக்கும் சொற்றொடர்கள் வந்திருந்தாலும் 'பெருமான், கடவுள்' என்பன இவரது இறைநம்பிக்கையின் வெளிப்பாடாகவே அமைகின்றன.

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் சிவவழிபாட்டிலும் (9 நகரக் கோயில்கள்) விநாயகர் வழிபாட்டிலும் (பிள்ளையார்பட்டி) மிகுந்த ஈடுபாடு உடையவர்கள் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இம்மரபில் தோன்றிய இவரின் உரையிலும் இவ்வகையிலான இறை நம்பிக்கை காணப்பெறுவதென்பது வியப்பிற்குரியதொன்றில்லை.

நடைத்தன்மைகள்

பொதுவாக உரையாசிரியர்கள் அனைவரும் பண்டித நடையைப் பின்பற்றியே உரை எழுதுவர். ஆனால், வ.சுப.மாணிக்கனார் இதிலிருந்து சற்று மாறுபட்டுப் பொருட்புரிதலை அடிப்படையாகக் கொண்டு தம் உரைக்கான நடைத்தன்மையை அமைத்துக் கொள்கிறார். அவரின் 'ஏழிளந்தமிழ்' உரைக்கான நடைத்தன்மைகள் பின்வருமாறு அமைகின்றன. அவை:

1. எளிய நடை
2. விளித்தொடர் நடை.

எளிய நடை

சிறு சிறு தொடர்களைக் கையாண்டு அனைவருக்கும் புரியும் வண்ணம் எழுதுவதே எளிய நடை ஆகும். கல்கியின் புதினங்கள் தொடக்ககாலத்தில் பெருவெற்றி பெற்றதற்குக் காரணம் அவரின் எளிய நடையே என்பார் இரா. அறவேந்தன் (2005:29-34).

உரைநடை, புதினம், சிறுகதை ஆகியவற்றில் பயன்படுத்தப்பெறுகின்ற இவ் எளிய நடையை, வ.சுப.மாணிக்கனார் தம் உரையிலும் பயன்படுத்தி அனைவருக்கும் பொருள் தெளிவை ஏற்படுத்துகிறார்.

> "சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
> நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
> இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
> பட்டாங்கில் உள்ள படி" (நல்.2)

என்ற பாடலுக்கு,

> "துன்பப்படுவோர்க்குக் கொடுத்து உதவுபவர் உயர்குலத்தார் ஆவர். அங்ஙனம் கொடாதவர் தாழ்ந்த குலத்தவர் ஆவர். உண்மை நூலில் சொல்லப்பட்ட கருத்தும் இதுவேயாகும். ஆதலால் பிறவியினால் உயர்வு தாழ்வு இல்லை" (2007:54)

என்று சிறுசிறு தொடர்களைக் கையாண்டு எளிமையாக, அனைவருக்கும் புரியும் வகையில் உரை எழுதியுள்ள திறம் போற்றத்தக்கதாகும்.

விளித்தொடர் நடை

விளித்தொடர் எந்தெந்தப் பாடல்களில் பயின்று வருகின்றனவோ அந்தந்தப் பாடல்களுக்கான உரையில் வ.சுப.மாணிக்கனாரும் விளித்தொடர்களைப் பயன்படுத்தி உரை எழுதுகிறார். இத்தன்மை நன்னெறி, உலகநீதி ஆகிய இரண்டு நூல்களின் உரைகளில் காணப்பெறுகின்றது.

நன்னெறியில், பெண்ணே (நன்.1,2,3,5,12,13,14,17,20,23,34,37,39), மதிபோன்ற முகத்தை யுடையவளே (நன்.6), நற்குணமுடைய பெண்ணே (நன்.15,38), ஒலிக்கின்ற வளையல் அணிந்த பெண்ணே (நன்.18), அழகிய கண்களையுடையவளே (நன்.25), இன்சொல்லாய் (நன்.29), சிறந்த அணிகலன்களையுடைய பெண்ணே

(நன்.31), அழகிய நெற்றியை உடையவளே (நன்.32), வேல்போன்ற கண்களையுடையவளே (நன்.35) ஆகிய விளிச்சொற்களும் உலகநீதியில், நெஞ்சமே (உலக.1), மனமே (2,3,4,5,6,7,8,9,10) ஆகிய விளிச்சொற்களும் பயன்படுத்தப்பெற்றுள்ளன.

இவ்விளிச்சொற்கள் பொருட்புரிதலைத் தெளிவுபடுத்தவும் உரையை எளிமைப்படுத்தவும் உதவி புரிகின்றன.

இவ்வகையில், வ.சுப.மாணிக்கனாரின் ‘ஏழிளந்தமிழ்’ என்று அழைக்கப்பெறும் பிற்கால நீதிநூல்களுக்கான உரை அனைவருக்கும் புரிய வேண்டும் என்ற எண்ணப் பின்னணியில் உருவாக்கப்பெற்றதாக அமைகிறது. உரை இயல்புகள் பொதுவானதாக இருந்தாலும் நடைத்தன்மைகள் இவருக்கே உரிய தனித்தன்மைகளாக அமைகின்றன என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

துணைநின்றவை

1. அறவேந்தன் இரா., ***இலக்கியக் கருத்தாக்கத்தில் நெறியும் பிறழ்வும்,*** தாயறம், குமரன் நகர், திருச்சிராப்பள்ளி, 2005
2. கோபாலையர் தி.வே. & அரணமுறுவல் ந. (பதி.), ***தொல்காப்பியம் - சொல்லதிகாரம் (சேனாவரையம்),*** தமிழ்மண் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை, 2003
3. மாணிக்கனார் வ.சுப. (உரை.), ***ஏழிளந்தமிழ்,*** மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை, 2006
4. ..., ***நீதி நூல்கள் (ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நறுந்தொகை, மூதுரை, நல்வழி, நன்னெறி, உலகநீதி),*** தமிழ் நிலையம், தியாகராய நகர், சென்னை, 2007
5. ..., ***ஏழிளந்தமிழ் (நீதி நூல்கள்),*** சந்தியா பதிப்பகம், சென்னை, 2014
6. மெய்யப்பன் ச.(பதி.), ***நீதிநூல் தெளிவுரை,*** மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை, 2012 (இ.ப.)
7. http://muelangovan.blogspot.com
8. https://ta.wikipedia.org/s/vlm

மதிப்பிடப்பெற்றது

தமிழ்க் காதலில் வ.சுப.மாணிக்கனாரின் ஆளுமைத் திறன்

*முனைவர் **சு.நாகரத்தினம்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி (தன்னாட்சி), புதுச்சேரி - 03

முன்னுரை

வ.சுப. மாணிக்கனார் ஆற்றிய தமிழ்த்தொண்டு அளவிடற்கரியது. தன்னைத் தோற்றுவித்த மொழிக்கு மூதறிஞர் என்று அழைக்கப்படும் வ.சுப. மாணிக்கனார் அன்போடு தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர். தமிழ்ப் புலமையின் மீதும்இ புலவர்களின் மீதும் கொண்ட விருப்பமே "தமிழ்க் காதல்" என்னும் நூலாக வடிவம் பெற்றுள்ளது. அகத்திணை ஆராய்ச்சியை மேற்கொண்ட அவர்இ தமிழ் இலக்கியத்தில் தோய்ந்துஇ மூழ்கி வெளிக் கொண்டுவந்துள்ள கருத்துக்கள்இ அனுபவங்கள் ஏராளமாய்க் கொட்டிக் கிடக்கும் கருத்துக் குவியல்களே "தமிழ்க்காதல்" என்னும் நூல். தமிழ் அறிஞர்களுக்கும்இ ஆர்வலர்களுக்கும்இ மாணிக்கனாரை நாம் அடையாளம் காட்டத் தேவையில்லை. அவ்வாறு இவரைச் செய்யப் புகுவோமானால் அது குன்றின் மேலிட்ட விளக்கைக் கைவிளக்கால் சுட்டிக் காட்டுவது போல் முடியும். வ.சுப. மாணிக்கனாரின் "தமிழ்க் காதல்" என்னும் நூலில் அவரின் ஆளுமைத்திறனை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

நூல் பெயர்

தாகம் கொண்ட மனிதனே தண்ணீர் தேட முனைவான். வேட்கை கொண்டவனே தேடித் திரிவான். அதுபோல் வ.சுப. மாணிக்கனாரின் ஆர்வமும் அமைந்துள்ளது. சங்கப் பாடல்கள் என்கின்ற பொற்குவியல் எங்கே பரவிக் கிடக்கிறது என்று ஆராய்ந்துள்ளார். அதன்படி அவரின்,

> "சங்க இலக்கியமாவது எட்டுத்தொகையும்இ பத்துப்பாட்டுமேயாம். இது பலர் ஒப்பிய முடிவு. இப்பதினெட்டுந்தாம் காலக் கூற்றுவனின் தமிழ்ப் பசிக்கு இரையாகாது தப்பிவந்த பழந்தமிழ் இலக்கியப் படைப்புகள் சங்கத் தனிப்பாடல்களின் தொகை 2381 என்ப" (ப-5).

இக்கூற்றை நோக்குங்கால் அவர் தமிழ்மொழியின் மீதும் தமிழ் கூறும் நல்லறிவு வெளிப்பாட்டின் மீதும் அவருக்கு இருந்த விருப்பத்தைக் "காதல்" என்று கூறுதல்தான் பொருந்தும்.

பிறருடைய கருத்தை மதித்தல்

புலவர்கள் சிறந்த ஆற்றலும்இ அறிவு ஊற்றும் கொண்டவர்கள். தனக்கே உரிய ஞானச்செருக்கு அவர்களிடம் மிளிர்ந்து கிடக்கும். பிறரை மதிக்கின்ற நல்ல குணமும் பிறரின் கருத்தை ஏற்றுக்கொள்கின்ற நல்ல அறிவும் வ.சுப. மாணிக்கத்தின் ஆளுமைப் பண்பைக் காட்டுகின்றது.

“புலவனுக்கு மதம் எனப்படுவது ஆண்இ பெண் காதலே. அக்காதல் இலக்கியத்தின் வற்றா ஊற்றிடங்களுள் ஒன்று. கவிதையெண்ணத்தை உருவாக்கும் சார்புகளுள் ஒன்று எனக் கவிஞனுக்கும் காதலுக்கும் அமைந்த நட்பினை எடுத்து மொழிவர் ஆங்கிலப் பேராசிரியர் ஆர்போர்டு” (ப-5) என்று ஆர்போர்டின் கருத்தை ஏற்றுக் கொள்கிறார்.

“காதற்பாட்டு மரபுக்கும் உரிமைக்கும் இடைப்பட்ட மெல்லிய ஒரு சமநிலையை வேண்டிநிற்கும். இச்சமநிலை ஒருபாற் கோடினாலும் அப்பாட்டிற்கு நல்லுருத் தோன்றாது என மணமும் அறங்களும் என்ற நூலாசிரியர் பெத்தரண் ரசல் மொழிகுவர். இம்மொழிவு தமிழ் அகச் செய்யுட்களுக்கு நல்விளக்கமாம்” (ப-20) என்பார். பெத்தரண் ரசல் அவர்களின் அறிவினைஇ தன் அறிவால் ஏற்றுக் கொள்கின்ற பண்பை இக்குறிப்பு உணர்த்துகிறது.

மேற்கோள் காட்டுதல்

ஆசிரியரின் புலமை ஆழத்தை அவரது மேற்கோள்களே நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

தொல்காப்பியம்:

“எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது

தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்” (தொல்.1168)

திருக்குறள்:

திருக்குறள் என்னும் இரண்டடியை எடுத்துக்காட்டாத அறிஞர்களே இல்லை எனலாம்.

“கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்

என்னும் பயனும் இல.”

இக்குறளை (காமத்துப்பால்) அகத்திணைக்கு உரிப்பொருள் அடிப்படையில் இந்நூலாசிரியர் பயன்படுத்திய நோக்கு புலப்படுகிறது.

திருக்கோவை:

"ஒண் தீந்தமிழின்துறை வாய் நுழைந்தனையோ" என்று அகத்திணைக்கு மறு பெயர் தமிழ் என்னும் கருத்தை விளக்கத் திருக்கோவையை மேற்கோள் காட்டுகிறார்.

சிலப்பதிகாரம்:

பாலைக்கு விளக்கம் தருகின்றபொழுது சிலப்பதிகாரத்தை மேற்கோள் காட்டுகிறார்.

"வேலைங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்

தானலந் திருகத் தன்மையிற் குன்றி

முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து

பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்" (சிலப் - 1595-9)

இயல்பு மாறித்தோன்றும் நிலச் செயற்கையே பாலைத் திணைக்கு இடமாம்.

கிரேக்க இலக்கியம்

ஆன்லிச்சு என்னும் அறிஞனின்இ "பண்டைக் கிரேக்க நாட்டின் பால் வாழ்க்கை" என்னும் நூலிலிருந்து அகத்திணை இலக்கியத்திற்கு மேற்கோள் காட்டும் விதம் வியப்பிற்குரியது.

வழிகாட்டுதல்

கற்றுத் துறைபோகியவர்கள் தங்களின் அறிவால் சமுதாயத்தைப் பற்றி அளந்து கூறுகின்றனர். அவ்வளவே நின்றுவிடாமல் ஒவ்வொரு மனிதனுக்கும் நோக்கமும்இ சிந்தனை ஆற்றலும் வேறுபடும் என்பதாலும்இ அதனையும் தமிழுலகம் பெற்றுத் திகழ வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தால் எதிர்கால சந்ததிகளுக்கு வழிகாட்டுகின்றனர். வ.சுப. மாணிக்கனாரும்இ

"சங்க இலக்கியத்தில் அகத்திணைப்பொருள் பெற்றிருக்கும் மேம்பாட்டினை மட்டுமோ அறிகின்றோம்? சங்க காலப் பண்பை ஆராய்குநர் முதற்கண் ஆராய வேண்டுவது அகத்திணை என்பதும்இ அகத்திணையைக் கற்று ஓர்ந்து நுணுகி ஒரு தெளிவு பெற்றாலல்லதுஇ பண்டைப் பெருந்தமிழினத்தின் நாகரிகச் சால்பினை நாம் கண்டவர்கள் ஆகோம் என்பதும் புலனாகவில்லையா?" (ப-8) என்று கேட்பதன் மூலம் வருங்கால ஆய்வாளர்களுக்கு வழிகாட்டுகிறார் என்பது புலனாகிறது.

தொகை வகைப் பாகுபாடு

"அகநானூறுஇ நற்றிணைஇ குறுந்தொகை என்ற முதன் மூன்று தொகைகளும்இ தொகை முறையில் ஒன்று போல்வனவே. இவற்றுள் அடங்கிய பாட்டுக்களைப் பாடினோரும் பலர். அவர் பாடிய அகத்துறைகளும் பல. இங்ஙனம்

ஒத்த அமைப்புடையவை ஒரு தொகையாகாது. மூன்று தொகைகள் ஆயதற்குக் காரணம் அடிக்கணக்கே என்பது அறிந்த செய்தி. பாடினோர் அடிக்கணக்கை மனத்தில் வைத்துப் பாடவில்லை என்பதும் அடியெல்லை வகுத்துக் கொண்ட திறம் தொகுத்தோர்க்கு உரியது என்பதும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும். கடலால்இ கறையானால்இ அயல் நாகரிகத்தால் தமிழ் மக்களின் பேணா பெரும் பேதைமையால்இ ஐயகோ! அழிந்து போய நூல்கள் அளவிலவே! எஞ்சிய சில நூற்றுப் பாடல்களையேனும் தேடித் தொகுக்க வேண்டும். தொகுத்துக் காக்க வேண்டும் என்னும் துடிப்பு அன்றொரு நாள் எழுந்தபோது இத்தொகை நூல்கள் உருவாகின. சிதறிக்கிடந்த தனிப்பாக்களுக்கு நூல் வடிவருளிய நன்மக்கள் அனைத்துப் பாடல்களையும் ஒரு தொகையாக்கின் பெரிதாய் விரிந்து பரவலற்று மீண்டும் அழியினும் அழியும் அன்று அஞ்சிய நல்லச்சமேஇ தொகை பலவாயதற்குக் காரணம் என்று கருதலாம்“ (ப.8-9)

என்று தொகை நூல்களின் வகைக்கும் காரணம் கூறும் பாங்கு அவரது நுண்ணறிவுத்திறனை வெளிப்படுத்துகிறது.

உத்திமுறைகள்

படைப்பாளர்கள் பெரும்பாலும் கடிதமுறைஇ உவமைஇ எடுத்துக்காட்டுஇ உரையாடல் தன்மைஇ வருணனைஇ ஆசிரியர் கூற்று போன்ற பலவகையான முறைகளைக் கையாண்டு தாம் கூறவரும் கருத்தை நகர்த்திச் செல்வர். இதனுடன் வ.சுப.மாணிக்கனார் தம் அகத்திணை ஆய்வுக்கு வினா-விடை முறையையும் கையாள்கிறார்.

பலவகை ஐய வினாக்களை அடுக்கி அவற்றிற்கு விடை காணும் விதமாய் ஆய்வினைக் கொண்டு செல்கிறார்.

"அகத்திணை குறித்து ஐய வினாக்களை அடுக்கிச் சொல்லுதலோ எளிது. அறிவொக்கும் விடைத் தெளிவு காண்பது அத்துணை எளிதன்றேனும்இ காண முயல்வதும்இ முயல்விப்பதும் இவ்வாராய்ச்சியின் பாடாகும்" (ப-23)

அகத்திணை இலக்கணம் யாது? அகத்திணை எழுவகைப்படும் என்ற பாகுபாடு இசையுமா? தமிழ் மொழிக்கண் அகத்திணை நூல் பிறத்தற்கு உதவிய சூழ்நிலைகள் யாவை? அகத்திணைக்கு விதிகள் வகுத்தவர் யாவர்? போன்ற பல வினாக்களை எழுப்பி விடை தருகின்றார்.

தனித்தன்மை

இவர் கையாள்கின்ற சொற்கள் தனித்தன்மை உடையவை "உறழ்கூற்று" என மாறுபட்ட கருத்து என்பதைப் புதிய சொல் கொண்டு வெளிப்படுத்தும் பாங்கும் சிறப்பு.

தொல்காப்பியருக்குஇ "அகத்திணைத் தொல்லாசிரியர்" என்று பெயர் கூறுகிறார்.

"ஒப்புப" - "காதற் பறையை" "சொற்பெய்தல்" "மொழிப்புண்" போன்ற சொற்கள் அவரது தனித்தன்மையைக் காட்டுகின்றன. கண்ணகியைக் கூறும் பொழுது - "உணர்ந்து அடங்கிய அறிஞள்" என்று குறிப்பிடுகின்றார்.

உவமை

புலமையாளர்களைப் பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது அவர்கள் கையாளும் உவமை முறை என்பது தெளிவு.

"நிலையா நீரீல்லா நிலத்திலிருந்து நீடித்து நிலைக்கும் பன்னூறு பாலைப் பாடல்களை விளைவித்துக் கொண்ட சங்க காலச் சொல்லேருழவர்களின் இலக்கிய உழவு அறிவின் கொழுமுனைக்கு ஓர் எடுத்துக்காட்டு" (பக்-24-25)

நிலத்தை உழவன் ஏர் (கலப்பை) கொண்டு உழுது பண்படுத்துதல் தொழில். அதனைக் கவிஞன் சொல் கொண்டு பிறர் மனதைப் பண்படுத்துகிறான்இ என்பதை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

உரைத்திறம்

சங்ககாலம் பற்றிய சிந்தனை உயர்வைஇ சங்க காலப் புலவர்களின் நற்பண்புகளைக் கூறுமிடத்து ஆசிரியரது உரை மிளிர்கின்றது.

"இடைக்காலத்தவரும்இ இன்றுள்ளவரும் களவுக்காமம் பாடுவதற்கு ஒப்புவரோ! வீண் என்று கருதார்கொல்!

சங்க காலம் இயற்கைக் காலம். இவ்வுலக வாழ்வை மதித்துப் போற்றிய இன்பக்காலம். ஆதலின் காதல் பாடுவதை வாழ்வு பாடுவதாகவும்இ காதற் பெண்களைப் பாடுவதை நல்ல இல்லறத் தாயார்களைப் பாடுவதாகவும் சங்கச் சான்றோர் கருதினார்" என்று சங்க இலக்கிய அகத்திணைப் பாடல்களுக்கும்இ பாடிய புலவர்களுக்கும் சிறப்பினைக் கூட்டுகின்றது அவரது உரைவிளக்கம்.

"தமிழ்க் காதல்" என்னும் நூலில் வ.சுப. மாணக்கனாரின் சிறந்த உரைத்திறத்தை அறியமுடிகிறது.

உரையாசிரியரின் கூற்றையும் விட தெளிவுடையதாக அமைகிறது. படிப்பவருக்கு எளிதில் புரியும் விதமாக உரையாற்றுகின்ற நிலையைக் காணமுடிகிறது.

"பரத்தமை தாங்கலோ இலனென வறிது நீ

புலத்தல் ஒல்லுமா மனைகெழு மடந்தை" (அகம்-36)

இப்பாடலுக்கு விளக்க உரை தரும் விதம் இவரது ஆளுமையைப் புலப்படுத்துகிறது.

"தலைமகனது புறப்போக்குத் தாங்க இயலவில்லையே என்று ஒரு தலைவி மிக வருந்துகின்றாள். எவ்வாற்றானும் அவள் மனம் இசையவில்லை. இதன் விளைவு என்னாம்? குடும்பம் வறுமைப்படும்? குழந்தைகள் மெலிவெய்தும்இ இல்லறம் வற்றிப்போம். ஆதலின் அறிவுடைத் தோழி பிடிவாதத் தலைவியை இடித்துரைக்கின்றாள். பொறுக்க அறியாமையினால் கெட்ட குடிகளைக் காணாயோ என்று எடுத்துக் காட்டுகின்றனள். பொறுப்பதே மனைவியின் பொறுப்பு என்பது தோழியின் நல்லுரை. இல்லறப் பிணிப்பிற்குப் பொருட்பிணிப்பு ஒரு காரணம்" என்பதை எடுத்துரைக்கிறார்.

வ.சுப. மாணிக்கனார் தமிழ் இலக்கியங்களின் மீது கொண்ட விருப்பமே தமிழ்க்காதல் என்னும் நூலாய் உருவானது. இவர் எழுத்தாளுமைப் பண்புகள்இ கருத்தாளுமைப் பண்புகள் எனப் பலவிதமான பரிமாணங்களைக் கொண்ட சிறந்த ஆளுமைத்திறன் உடையவர் என்பதைத் தமிழ் கூறும் நல்லுலகம் மறுக்காது.

புதவிக்குப் பெருமை சேர்த்த மாணிக்கச் செம்மல்

முனைவர் **கடவூர் மணிமாறன்**

இலக்கியமும் இலக்கணமும் முழுதும் கற்றாய்;
எல்லையிலாப் பெரும்புலமை இனிதே பெற்றாய்;
கலங்காமல் மயங்காமல் ஆய்வின் மூலம்
கவின்தமிழ்க்கே மணிமுடிகள் சூட்ட லானாய்;
நலம்சேர்த்தாய்; தமிழ்க்காதல் வள்ளு வத்தை
நற்றமிழ்த்தாய் கண்ணிரண்டாய் நல்க லானாய்!
பலருக்கும் வாழ்வளித்தாய்; பண்பால் அன்பால்
பயின்றோரின் உள்ளமெலாம் மகிழச் செய்தாய்!

சங்கநெறிச் சால்புகளைச் சாற்றி வந்தாய்;
சலியாத உழைப்பாலே பனுவல் தந்தாய்;
மங்காத மாத்தமிழின் மேன்மைக் காக
மாணிக்கக் குறள்தந்த மாணிக் கம்நீ!
வெங்கொடுமை தமிழுக்கே இழைத்தோர்வீழ
வீறார்ந்த புதுவிளக்கம் அளிக்க லானாய்;
எங்கும்வாழ் தமிழினத்தார்எழுச்சி கொள்ள
இனியபல கருத்துவிதை ஊன்றி வந்தாய்!

தமிழாய்வில் தனிக்கவனம் செலுத்தி வந்தாய்
தக்கோரை உருவாக்கிப் பெருமை கொண்டாய்!
'தமிழ்த்தாத்தா' என்றழைக்கும் சாமி நாதர்
தனிச்சிறப்பை உளமகிழப் பாடி நின்றாய்;
தமிழ்க்காதல் எனும்தலைப்பில் முனைவர்ஆய்வைத்
தகவுறவே ஆங்கிலத்தில் அளித்துப் பெற்றாய்!
தமிழ்நலமும் தமிழ்வளமும் சிறக்க வாழ்ந்தாய்;
தாம்பிறந்த சிவபுரிக்கே புகழைச் சேர்த்தாய்!

சொல்லாய்வுச் சுடரானாய்; ‘ஈனில்’ என்றாய்
சுவையாக உரையாற்றும் கலையில் தேர்ந்தாய்!
தில்லையிலும் மதுரையிலும் பணியை ஆற்றித்
தேமதுரத் தமிழ்காத்தாய்; தமிழி னத்தார்
தொல்மரபை, பெருமையினைத் துலங்கச் செய்தாய்!
துணைவேந்தர்பதவிக்கே பெருமை சேர்த்தாய் ;
நல்லியல்பால் இளையோரை வழிந டத்தி
நற்றமிழின் ஆர்வத்தைத் தூண்டி வந்தாய்!

அழகப்பர்கல்லூரி மேன்மை எய்த
ஆளுமையால் தமிழ்த்துறையைச் சிறக்கச் செய்தாய்!
அழகப்பர்அளவற்ற கொடையின் மாண்பை
அழகொளிரும் பாக்களிலே நிலைக்கச் செய்தாய்!
குழல்யாழும் தோற்கின்ற வண்ணம் காரைக்
குடியினிலே கம்பர்சீர்பரவச் செய்தாய்;
முழக்கமிட்டாய் அரிமாவாய்! அறிஞர்போற்றும்
மூதறிஞர்வ.சுப.மா என்றும் வாழ்வாய்!.

வெள்ளி, 27 அக்டோபர், 2017

வ.சுப. மாணிக்கனார்

வ.சுப.மாணிக்கம் அவர்களின் நூற்றாண்டு விழா - கருத்தரங்கம் மன்னன்பந்தல் அன்பநாதபுரம் வகையார் கல்லூரி (ஏவிசி) தமிழ்த்துறையில் (26-28.10.2017) நடைபெற்றது. இக்கருத்தரங்கின் இரண்டாம் நாள்

அமர்வில் (27.10.2017) நான் அமர்வுத்தலைவராகப் பங்கேற்றேன். கருத்தரங்க நினைவாக வ.சுப. மாணிக்கனார் பற்றி சில குறிப்புகள்:

- தோற்றம் : 17.04.1917
- பெற்றோர் : அ.சுப்பையா செட்டியார் - தெய்வானை ஆச்சி
- இயற்பெயர் : அண்ணாமலை
- மனைவி : ஏகம்மை ஆச்சி
- மகன்கள் : மூவர் - 1. தொல்காப்பியன் 2. பூங்குன்றன் 3. பாரி
- மகள்கள் : இருவர் - 1. தென்றல் 2. பொற்கொடி
- இறப்பு : 25.04.1989 (72 ஆம் அகவையில்)
- துயரம் : 6 வயதில் தாய் இறப்பு, 7 வயதில் தந்தை இறப்பு
- தாத்தா-பாட்டி (தாய்வழி) : அண்ணாமலை செட்டியார், மீனாட்சி ஆச்சி இவர்கள் வளர்ப்பில் வாழ்தல்
- பொய்சொல்லா மாணிக்கம்: 11வயதில் பர்மாவில் உள்ள ரங்கூனில் வட்டிக்கடையில் வேலைக்குச் சேர்தல் - அக்கடையின் முதலாளி, தன்னைத்தேடி ஒருவர் வருவார். அவரிடம் தான் இல்லை என்று பொய் சொல்லக்கூறுதல் - இவர் உடன்படா மை - அதனால் வேலையிழப்பு - ஊருக்குத் திரும்புதல்
- வித்துவான்: பர்மாவிலிருந்து திரும்பிய பிறகு பண்டிதமணி மு.கதிரேசஞ் செட்டியார் வழிகாட்டுதலின்படி அண்ணாமலைப் பல்கலையில் வித்துவான் பட்டம் (1936-40)
- பி.ஓ.எல்: சென்னைப் பல்கலைக்கழகம் (1945)
- எம்.ஓ.எல். - செ.ப.க. (1946)
- எம்.ஏ. - செ.ப.க. (1951) - தமிழில் வினைச்சொற்கள்
- முனைவர் பட்டம்: செ.ப.க. (1957) - தமிழில் அகத்திணைக் கொள்கைகள்
- பணிகள்: விரிவுரையாளர் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - 1941 - 48
    - பேராசிரியர் - காரைக்குடி அழகப்பா கல்லூரி - 1948 - 64
    - முதல்வர் - காரைக்குடி அழகப்பா கல்லூரி - 1964 - 70
    - தமிழ்த்துறைத் தலைவர் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1970 - 77
    - துணைவேந்தர் - மதுரை காமராசர் பல்கலைக்கழகம் - 1979 -82 (ஊருக்குச் செல்ல மதுரைப் பேருந்து

நிலையம் வரை பல்கலைக்கழக மகிழ்வுந்தில் வந்து பிறகு பேருந்தில் செல்வார்)

- பட்டங்கள்:
    - செம்மல் - சன்மார்க்க சபை,
    - மேலைச்சிவபுரி 1969 முதுபெரும்புலவர் - குன்றக்குடி ஆதீனம்
    - D.Lit. அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பொன்விழா ஆண்டில் வழங்கப்பட்டது - 1963
    - திருவள்ளுவர் விருது - தமிழக அரசு - 1994 (இறப்புக்குப் பிறகு)
    - பெருந்தமிழ்க் காவலர் - ஈப்போ பாவாணர் சங்கம்
    - முதுபேராய்வாளர் - திராவிட மொழியியற் கழகம்
    - முது ஆராய்ச்சியாளர் - கேரளத் திராவிடமொழிக் கழகம்
    - மூதறிஞர்
    - தமிழ் இமயம்
- பதவிகள்:
    - தமிழகப் புலவர் குழுத் தலைவர்
    - பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவர்
    - தமிழ்வழிக் கல்வி இயக்கம்
    - தமிழ்ப் பல்கலைக்கழக வடிவமைப்புக் குழுத்தலைவர்
    - தமிழ்ப் பல்கலைக்கழகத் தொல்காப்பியத் தகைஞர்
- நூல்கள்:32
- குறிப்பிடத்தக்கவை: மனைவியின் உரிமை (1947), கொடை விளக்கு (1957), தமிழ்க்காதல் (1962), தமிழ்வழிக் கல்வியாக்கம் (1988)
- சிறப்பு: ஆய்வு வன்மைக்கு: தமிழ்க்காதல், சிந்தனைத் தெளிவுக்கு: வள்ளுவம், புலமை நலத்திற்கு: கம்பர்.
- தொல்காப்பியம் பயிலாதார் அறிவு குறைபாடு உடையது.
- சங்கப் பனுவலைக்கற்றால் கிழம் போம்; கீழ்மையும் போம். (மாணிக்கக் குறள் - 461)
- குறிக்கோள் இலாத வாழ்வு கோடுகள் இலாத ஆட்டம் -நெறிக்கோள் இலாத நெஞ்சு நீறைநீர் அலாத ஆறு-மறிக்கோள் இலாத கல்வி வரப்புகள் இலாத நன்செய் - செறிக்கோள் இலாத மேனி திறவுகோல் இலாத பூட்டாம் (மாமலர்கள் - ப. 60)
- பார்வை: www.tamilheritage.org/thfcms/ www.vspmanickam.com

இடுகையிட்டது duriarasanblogpsot.com நேரம் முற்பகல் 10:28

Saturday, February 8, 2014

வ.சுப. மாணிக்கம் - ஒரு பார்வை

வ.சுப. மாணிக்கம் - ஒரு பார்வை

(நமது பல்கலைக்கழக முன்னால் தமிழ்த் துறைத் தலைவர், புல முதன்மையர்)



வ.சுப. மாணிக்கனார் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மேலைசிவபுரியில் 17-4-1917 -இல் சுப்பையா செட்டியாருக்கும் ,தெய்வானை ஆச்சிக்கும் மகவாய்த் தோன்றினார்.இளம் பருவத்திலே பெற்றோரை இழந்த இவர் தம் பாட்டனாரால் வளர்க்கப்பட்டார். பின் பர்மாவுக்குச் சென்று கடையிற் பணிபுரிந்த பொழுது பொய் கூறவேண்டிய கட்டாய நிலை ஏற்படவே அப்பணி துறந்து தமிழ் பயிலத் தொடங்கினார்.

பண்டிதமணி கதிரேசனார் முதல்யோர்தம் உதவியால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புலவர் வகுப்பிற் பயின்று முதன்மையாகத் தேர்ச்சியுற்றார்.சில திங்கள் அப்பல்கலைக் கழகத்திலேயே ஆய்வு மாணவராகவிருந்து பின் ஏழாண்டுகள் அங்கேயே விரிவுரையாளராகப்பணியாற்றினார்.அப்பொழுதே

தனிமையாகப் படித்துப் பி.ஒ.எல்., எம்.ஏ., பட்டமும் 'தமிழில் அகத்திணைக் கொள்கைகள்' பற்றி ஆய்ந்து பிஎச்.டி., பட்டமும் பெற்றார்.

பின்னர் 1948 தொடங்கி இருபதாண்டுகள் காரைக்குடி அழகப்பர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் ஆகவும்,முதல்வராகவும் பணி புரிந்தார்.பின்னர் மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், தமிழ்த்துறைத் தலைவராகவும் இந்திய மொழிப்புல முதன்மையராகவும் ,தொண்டாற்றினார்.பின் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவியேற்றுத் தமிழியல் வளர்ச்சிக்கும் பிற அறிவியல் துறைகளின் வளர்ச்சிக்கும் வழிவகுத்துத் துணை நின்றார். திருவனந்தபுரத்தின் மொழிஇயற் கழக ஆய்வு முதியராக வேலை பார்த்தபோது தமிழ் யாப்பு வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதினார்.தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 'தொல்காப்பியத் தகைஞராகப் பணி செய்ததன் பயனாகத் தொல்காப்பியத்துக்கு இவர்தம் புத்துரை விளக்கம் கிடைத்தது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பொன் விழாவில் இவர்க்கு டி.லிட்., பட்டம் நல்கிச் சிறப்புச் செய்தது. குன்றக்குடி ஆதீனம் 'முதுபெரும் புலவர்' என்னும் சிறப்புப் பட்டத்தையும், மேலைசிவபுரி சன்மார்க்க சபை 'செம்மல்' என்னும் சிறப்புப் பட்டத்தையும் நல்கின.அரசு இவர் மறைவுக்குப் பின் 'திருவள்ளுவர் விருது' வழங்கிச் சிறப்பித்தது.

தமிழ்ப் பல்கலைக் கழகத் தொடக்க நிலையில் செயன்முறைகளை வகுக்க அமைக்கப்பெற்ற வல்லுநர் குழுவின் தலைவராகவிருந்து அதன் வளர்ச்சிக்கு வழி வகுத்தார்.தமிழகப் புலவர் குழுவிற்கும்,இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்திற்கும்,மேலைசிவபுரி சன்மார்க்க சபை கணேசர் செந்தமிழ்க் கல்லூரிக் குழுவுக்கும் தலைவராகத் திகழ்ந்து இவர் ஆற்றிய பணிகள் மிகப்பல.'காரைக்குடி தமிழ்ச் சங்கம்' நிறுவிச் சங்கவிலக்கிய வகுப்பு நடத்தியும் ,இளஞ்சிறார்க்கு "அறநூல்கள் ஒப்பித்தல் போட்டி" வைத்துப் பரிசுகள் வழங்கியும் தமிழ்த் தொண்டு செய்தார்.

தில்லையில் அம்பலத்தின்கண் நின்று திருமுறைகள் ஓதி வழிபடப் பேராசிரியர் வெள்ளைவாரணனார் போன்றோரின் துணையோடு போராடி வாகை சூடினார்.

வள்ளல் அழகப்பரின் கொடைவளம் ஏத்திக் 'கொடைவிளக்கு' என்னும் கவிதை நூல் படைத்தார்.இவர் தம் தனிப்பாடல்களின் தொகுப்பு 'மாமலர்கள்' என்னும் பெயரில் வெளிவந்துள்ளது.இவர்தம் படைப்புக்களுள் வள்ளுவமும் ,தமிழ்க்காதலும் இரு கண்களெனப் போற்றத்தக்கவை.தொல்காப்பியக்கடல் ,திருக்குறட்சுடர்,சங்கநெறி,காப்பியப்பார்வை,இலக்கியச்சாறு,தமிழ்க் கதிர்,தலைவர்களுக்கு முதலியவை இவர்தம் பிற படைப்புக்கள்.

திருக்குறளை யாவரும் எளிதில் புரிந்து கொள்ள 'உரை நடையில் திருக்குறள்' என்னும் நூலை இயற்றி

உள்ளார்.மணிவாசகர் பதிப்பக வெளியீடான 'கம்பர்' என்னும் இவரது நூல் தமிழக அரசின் பரிசு பெற்றது.தமிழ் யாப்பு வரலாறு ,தமிழில் வினைச் சொற்கள் ,தமிழில் அகத்திணைக் கொள்கைகள் என்னும் நூல்கள் இவரால் ஆங்கிலத்தில் எழுதப் பெற்றவையாகும்.மன்பதையின் முன்னேற்றம் கருதி இவர் படைத்த நாடகங்கள் மனைவியின் உரிமை,நெல்லிக்கனி,உப்பங்கழி,ஒரு நொடியில் என்பனவாம்.

இத்தலைமுறையில், பல நிலையினும் சிறந்தோங்கித் தமிழ்ப் பணிக்காகவே வாழ்ந்து பண்பின் திருவுருவாகத் திகழ்ந்த மூதறிஞர் செம்மல் மாணிக்கனார் 24.4.1989-இல் எதிர்பாரா வகையில் மறைவெய்தியது தமிழன்னையின் தவக்குறைவேயாம்.

இவர் பெற்ற பெரும் புகழை என்றும் மனதில் கொள்வோம்.

நன்றி.

வ.சுப. ஒரு கலங்கரை விளக்கம்!

By -செம்மூதாய் சதாசிவம் | Published on : 16th April 2017 02:14 AM



'தோன்றிற் புகழோடு தோன்றுக'' எனும் திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க வாழ்ந்து காட்டியவர் மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார். தமிழிலக்கிய உலகில் அவரின் பங்களிப்பு அளப்பரியது. தமிழ்மொழியை உணர்வு மொழியாகவும், சிந்தனை மொழியாகவும், பகுத்தறிவு மொழியாகவும் போற்றியவர். புதுக்கோட்டை மாவட்டம் மேலைச் சிவபுரியில் வாழ்ந்த வ.சுப்பையா செட்டியாருக்கும் தெய்வானை ஆச்சிக்கும் 17.4.1917 அன்று இரண்டாவது மகனாகப் பிறந்தவர்.

"அண்ணாமலை' என்ற தம் இயற்பெயரை, மாணிக்கவாசகரின் திருவாசகத்தின் மீது கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டால், "மாணிக்கம்' என மாற்றிக் கொண்டார் எனச் சொல்லப்படுகிறது.

இளம் வயது முதலே பிள்ளைகளுக்குத் திருக்குறள், திருவாசகம், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி முதலிய இலக்கியங்களைப் பிழையின்றி தகுந்த ஒலிப்புமுறையுடன் சொல்லிக் கொடுப்பாராம். அத்துடன் திருக்குறளில் ஓர் அதிகாரத்தை முழுதும் மனப்பாடமாகப் படித்து ஒப்புவித்தாலோ அல்லது பிழையின்றி எழுதிக் காட்டினாலோ பத்து முதல் இருபது பைசா வரைக் கொடுத்து ஊக்கப்படுத்துவாராம்.

ஒருமுறை காரைக்குடியில் இல்லத்தின் ஓர் அறையில் வ.சுப.மா., ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தபோது, கொசு ஒன்று அவரது தோள்மீது அமர்ந்து குருதியைக் குடித்துக் கொண்டிருந்தது. இதைக் கண்டுவிட்ட அவருடைய மகள் தென்றல், அந்தக் கொசுவை அடித்து அப்பாவிற்கு நன்மை செய்து விட்டதாக நினைத்து அவரின் பாராட்டை எதிர்பார்த்து நின்றிருந்தாராம். அப்போது

வ.சுப.மா., ""படிப்பதில் கவனம் இருக்கும்போது கொசு கடிப்பது எப்படித் தெரியும்? நீ எனது தோளில் அடித்ததால் என் சிந்தனையோட்டம் தடைப்பட்டுவிட்டது'' என்று கடிந்து கொண்டாராம்.

படிப்பதையும் எழுதுவதையும் வ.சுப.மாணிக்கனார் ஒரு தவமாகவே செய்து வந்திருக்கிறார். எல்லோரும் உறங்கிய பின் உறங்கி, அவர்கள் விழிக்கும் முன் விழித்து தமது கடமைகளைச் செம்மையுடன் செய்ததன் விளைவாகத்தான் கம்பர், வள்ளுவர், அகத்திணை ஆராய்ச்சி (தமிழ்க்காதல்), இலக்கியச்சாறு, கொடை விளக்கு, நெல்லிக்கனி, மாமலர்கள், மாணிக்கக்குறள், மனைவியின் உரிமை, உப்பங்கழி, தலைவர்களுக்கு உலக முரசு, இரட்டைக் காப்பியங்கள், நகரத்தார் அறப்பட்டயங்கள், தற்சிந்தனைகள் முதலிய முப்பதுக்கும் மேலான நூல்களை அவரால் எழுத முடிந்திருக்கிறது. இந்நூல்கள் அனைத்தும் தமிழக அரசால் 2007ஆம் ஆண்டு நாட்டுடைமை ஆக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

காரைக்குடி அழகப்பச் செட்டியார் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றிய போது இவரின் தமிழ்ப் புலமையைக் கண்ட அரசர் முத்தையவேள் செட்டியார் 1970இல் தமது அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு அழைத்து தலைவர் பொறுப்பை அளித்துப் பெருமைப்படுத்தினார். ஏழு ஆண்டுகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அவர் செய்த தமிழ்ப்பணிகள் இன்று விருட்சங்களாய் வளர்ந்து நிற்கின்றன.

சங்கப் பாக்களின் நுட்பங்களையெல்லாம் கட்டுரைகளாக வடித்தவர். பிசிராந்தையார், "யாண்டு பலவாக' என்று தொடங்கும் புறப்பாடலில், "மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்' என்று குறிப்பிட்டிருப்பார். இதில் வரும் "ஒடு' என்ற சிறு சொல் மனைவி ஒருத்தி, மக்கள் பலர் எனப் பிரித்துப் பொருள் தருவதாக அமைகிறது. இச்சொல் இடம் பெறாதிருக்குமானால் மனைவியும் பலர், மக்களும் பலர் எனப் பொருள் மாறுபட்டிருக்கும் என்பதனை வ.சுப.மாணிக்கனார் சுவையுடன் தெளிவுபடுத்துவார்.

இவர் உரைநடையில் கையாளும் சொல்லாக்கங்கள் பல அரியவை.""காற்று எனும் சொல் மக்கள் வழக்கிற்குரியது என்றும், வளி என்னும் சொல் இலக்கிய வழக்கிற்குரியது என்றும் பலர் கூறுவார்கள். ஆனால், பொதுமக்கள் சூறாவளி என்னும் வழக்கில் வளி என்னும் சொல்லினை மிக எளிதாகப் பயன்படுத்துகிறார்கள்'' என்று "இலக்கிய விளக்கம்' எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

வ.சுப.மாணிக்கனார் எதையும் புதிய நோக்கில் சிந்திக்கும் ஆற்றல் படைத்தவர். "எந்தச் சிலம்பு?' எனும் நூலில் கண்ணகியின் சிலம்புதான் சிலப்பதிகாரம் என்று பெயர் இடுவதற்குக் காரணம் எனப் பலரும் கூறிவரும் நிலையில், இவரோ பாண்டியன் நெடுஞ்செழியனின் மனைவி பாண்டிமா தேவியின் சிலம்புதான் நூல் பெயர்க்குக் காரணம் எனக் கூறுவது புதுமை.

முந்நீர் என்பது ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் எனும் மூன்றும் நிறைந்த கடலைக் குறிக்கும் சொல் என்பது புறநானூற்று உரையாசிரியர்களின் கருத்து. முந்நீர் எனும் சொல் படைத்தல், காத்தல், அழித்தல் எனும் மூவகைச் செயல்பாடுகளையும் குறிப்பது என்பது அடியார்க்குநல்லாரும், நச்சினார்க்கினியரும் கூறும் கருத்து. இவ்விரு கருத்துகளையும் மறுத்து வ.சுப.மாணிக்கனார், ""முந்நீர் எனும் சொல் முப்புறம் தமிழகத்தை வளைத்துக் கிடக்கும் ஒரு பெருநீர்ப்பரப்பைக் குறிப்பது என்பதனையும், தீபகற்பமாகிய நிலவடிவைச் சுட்டுவது என்பதையும் இடைக்கால உரையாசிரியரெல்லாம் எண்ணிப் பார்க்கவில்லை'' (தமிழ்க்காதல், ப.152) என்று குறிப்பிடுகிறார்.

பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியாரின் மாணவர் என்கிற தனித்த அடையாளம் வ.சுப.மாணிக்கனாரிடம் எப்போதுமுண்டு. தமது இல்லத்திற்குக் "கதிரகம்' என்றே பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

அவரது எழுத்தும் பேச்சும் தமிழ்நலம் சார்ந்தவையாகவே இருந்தன. தமிழ் வழிக் கல்விகாகப் பல்வேறு ஊர்களுக்குச் சென்று கூட்டங்கள் நடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தியவர். எத்தனை இடர்வரினும் நடுவுநிலையோடு நின்று உண்மையின் அடையாளமாய்த் திகழ்ந்தவர். எழுத்திலோ, பேச்சிலோ எவர் பிழை செய்யினும் நெஞ்சுரத்துடன் உடனே வெகுண்டெழுந்து நேருக்கு நேர் சுட்டிக்காட்டும் இயல்பினர்.

ஒவ்வொரு மனிதரும் ஒரு குறிக்கோளுடன் வாழவேண்டும் என்பதே வ.சுப.மா. வின் வேண்டுகோள். கவர்ச்சி தரக்கூடிய கேளிக்கைப் பேச்சுகளில் பொழுதைக் கழிப்பதை விடுத்து சங்க இலக்கியம், திருக்குறள், திருவாசகம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், மூதுரை, நல்வழி, கொன்றைவேந்தன், ஆத்திசூடி உள்ளிட்ட உயர்வான நோக்குடைய இலக்கியங்களைக் கற்று வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்பதே வ.சுப.மா. வின் கருத்து. ஒரு நூற்றாண்டைக் கடந்தும் (24.4.1989) தமிழ் நெஞ்சங்களில் நிலைத்து நின்று வாழும் வ.சுப.மாணிக்கனார், தமிழ்ச் சமூகத்திற்கு அவர் ஏற்றிய ஒளி கலங்கரை விளக்கமாய் என்றும் அணையாமல் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

தமிழின் மறுவுருவாய் வாழ்ந்து மறைந்த மூதறிஞர் வ.சுப.மாணிக்கனாரின் நூற்றாண்டு விழாவைப் பலரும் சிறப்பாகக் கொண்டாடி வரும் நிலையில், தமிழக அரசு அவருக்கென தனியொரு நினைவிடம் அமைத்து, விழாவெடுத்து, சிறப்பு செய்தால் தமிழ்கூறும் நல்லுலகம் பெருமை கொள்ளும். அந்நாள் எந்நாளோ?

நாளை : வ.சுப.மாணிக்கனாரின் (17.4.1917) பிறந்த நாள்

தமிழ்மொழியின் சிறப்பே அகத்திணைதான் என்று சொல்லாமல் சொன்ன கபிலர்! – வ.சுப.மாணிக்கம்

இலக்குவனார் திருவள்ளுவன் 17 April 2016 No Comment



தமிழ்மொழியின் சிறப்பே அகத்திணைதான் என்று சொல்லாமல் சொன்ன கபிலர்!


தமிழ்த் தொல்லிலக்கணன் தொல்காப்பியன் அகத்திணையின் இயல்பு தெரிவிக்க, அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என இயல் நான்கு வகுத்துள்ளனன். புறத்திணையின் இயல்பு தெரிவிக்கவோ, அவனால் எழுதப்பட்ட இயல் ஒன்றே. சங்கப் பெருஞ்சான்றோர் **கபிலர்**, **ஆரியவரசன் பிரகதத்தனுக்குத்** தமிழின் மேன்மையை அறிவுறுத்த விரும்பினார்; விரும்பியவர் அவனுக்கெனத் தாமே குறிஞ்சிப்பாட்டு ஒன்று இயற்றினார். இஃது ஓர் அகத்திணைப்பா. கபிலர் புறம் பாடாது அகம் பாடிய நோக்கம் என்ன? **தமிழினத்தின் அறிவுச் சின்னம் அகத்திணைப் படைப்பு**; தமிழ்மொழியின் தனி வீற்றினை அயல் மொழியான் உணர வேண்டுமேல், அவனுக்கு முதலில் கற்பிக்க வேண்டும் பொருள் அகப்பாட்டே என்று அவர் உள்ளியிருப்பர். புலவர் பாராட்டிய புலவர் கபிலராதலின், வேற்று மொழியிற் பெறலரும் தமிழ்க் கூறுகளை, அறியவும் அறிவுறுத்தவும் வல்லார் அவரன்றி யார்?

"ஆரியவரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவித்தற்குப் பாடியது" எனக் **குறிஞ்சிப் பாட்டு**க்குத் துறைக்குறிப்பு எழுதப்பட்டுள்ளது. "இந்நூல் என் நுதலிற்றோ எனின், தமிழ் நுதலியது" என்று **இறையனார் அகப்பொருள் உரையாளர்** குறிக்கின்றார். "ஒண் தீந்தமிழின் துறை வாய் நுழைந்தனையோ" என்று **திருக்கோவை** பாடும்.1 ஈண்டெல்லாம் தமிழ் என்னும் சொல் அகத்திணைக்கு மறுபெயராய் நிற்றல்

காண்க. ஒரு மொழியின் பெயர் அம்மொழி பெற்றிருக்கும் இலக்கியப் பல்வகையுள் ஒருவகை இலக்கியத்திற்கு மட்டும் பெயராய்ச் சிறப்பித்து ஆட்சி செய்யப்படுமானால், அவ்விலக்கிய வகை அம்மொழியிலல்லது பிற எம்மொழியிலும் காண்பதற்கில்லை என்பதுதானே கருத்துரை. இதனால் **உலக மொழிகளுள் தமிழ்மொழியின் ஒரு தனிச்சிறப்பும், தமிழிலக்கிய வளத்துள் அகத்திணையின் முதற்சிறப்பும் விளங்கித் தோன்றும்.**

1. ஒண்தீந் தமிழின் துறை – அகத்திணையின் துறை என்பது பொருள்.
2. அகமும் புறமும் தமிழின் துறைகளாவன என்று கோவையுரையாசிரியர் சொல்வது பொருத்தமில்லை. அகத்தையும் புறத்தையும் திணையெனச் சுட்டுவதே மரபும் முறையுமாம்.

மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார்:
தமிழ்க்காதல்



Topics: கட்டுரை, சங்க இலக்கியம் **Tags:** அகத்திணை, ஆரியவரசன் பிரகதத்தன், இறையனார் அகப்பொருள் உரையாளர், கபிலர், குறிஞ்சிப் பாட்டு, தமிழ்க்காதல், திருக்கோவை, தொல்காப்பியன், தொல்காப்பியர், வ.சுப.மாணிக்கனார், வ.சுப.மாணிக்கம்

தமிழ்ப் பணி மன்றம்

தமிழ் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு தொடங்கப் பெற்றுள்ள வலைப் பூ

- முகப்பு
- தமிழ்ப்பெயர்கள்
- புதிய தமிழ்ச் சொல்

சனி, பிப்ரவரி 15, 2020

வ.சுப.மாணிக்கம் - வரலாறு பேசுகிறது ! (28)

வ.சுப.மாணிக்கம்.

(மறைந்த தமிழறிஞர்கள் பற்றிய தொடர்) (28)

தோற்றம்:

புதுக்கோட்டை மாவட்டம் மேலைச் சிவபுரி என்னும் ஊரில் 1917 –ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 –ஆம் நாள் பிறந்தவர் மாணிக்கம். தந்தையார் பெயர் வ.சுப்பிரமணியன் செட்டியார். தாயார் பெயர் தெய்வானை ஆச்சி. பெற்றோர் இவருக்குச் சூட்டிய பெயர் அண்ணாமலை; ஆனால் மாணிக்கம் என்றே அனைவரும் அழைத்ததால், இப்பெயரே இவருக்கு நிலைத்துவிட்டது !

வளர்ப்பு:

மாணிக்கம் தனது ஆறாம் அகவையில் தாயை இழந்தார். தொடர்ந்து 10 மாதங்கள் கழித்து தனது தந்தையையும் இழந்தார். எனவே இவரது தாய்வழிப் பாட்டனார் அண்ணாமலைச் செட்டியார்- பாட்டி மீனாட்சி ஆச்சி ஆகியோரின் அரவணைப்பில் மாணிக்கம் வளர்ந்து வரலானார் !

பின்னர் வ.சுப.மாணிக்கம் தான் சார்ந்த நகரத்தார் (செட்டியார்கள்) வழக்கப்படி அளகைத் தொழில் (BANKING) கற்றுக் கொள்வதற்காக

பர்மா நாட்டிற்குச் சென்றார். அங்கு இரங்கூன் நகரில் உள்ள அளகைக் கடை (BANKING SHOP) ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தார். கடை உரிமையாளர் சொல்லிக் கொடுத்தபடிப் பொய் சொல்ல மறுத்ததால், அவர் வேலையை இழந்தார். எனினும் "பொய் சொல்லா மாணிக்கம்" என்னும் பட்டப் பெயர் அவருடன் ஒட்டிக் கொண்டது !

கல்வி:

தனது தொடக்கக் கல்வியைப் புதுக்கோட்டையில் உள்ள பள்ளியொன்றில் பெற்றிருந்த மாணிக்கம், பர்மாவிலிருந்து நாடு திரும்பிய பிறகு தனிப்பட்ட முறையில் பயின்று பள்ளி இறுதி வகுப்புத் தேர்வெழுதி அதில் வெற்றி பெற்றார். பண்டிதமணி மு.கதிரேசஞ் செட்டியார் அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு தமிழ் நூல்களை ஊன்றிக் கற்றார். தமிழின் மீது அளப்பரிய நாட்டமும் ஏற்பட்டது. பண்டிதமணியின் வழிகாட்டுதலின் படி மாணிக்கம் சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் "வித்துவான்" (இளம்புலவர்) வகுப்பில் சேர்ந்து பயின்று முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார் !

திருமணம்:

சிவகங்கை மாவட்டம் பொன்னமராவதி அருகில் உள்ள "நெற்குப்பை" என்னும் ஊரைச் சேர்ந்த ஏகம்மை என்பவரை 1945 ஆம் ஆண்டு வ.சுப.மாணிக்கம் மணந்து கொண்டார். இவ்விணையருக்கு தொல்காப்பியன், பூங்குன்றன், பாரி என்னும் ஆண் மகவினரும், பொற்கொடி, தென்றல் என்னும் இரு பெண் மகவினரும் பிறந்தனர்.

பட்டப்படிப்பு:

தொடர்ந்து விடாமுயற்சியுடன் பயின்று 1945 –ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் கீழைமொழிகள் வாலைப் (B.O.L)

பட்டம் பெற்றார். கலையியல் மேதை (M.A) பட்டத்தினை 1951 –ஆம் ஆண்டுப் பெற்றார். "தமிழில் வினைச் சொற்கள்' என்ற பொருளில் இவர் மேற்கொண்ட ஆய்வுக்காக கீழை மொழிகள் மேதை (M.O.L) பட்டத்தையும், "தமிழில் அகத்திணைக் கொள்கை" என்னும் பொருளில் மேற்கொண்ட ஆய்வுக்காக முனைவர் பட்டமும் (Ph.D) பெற்றார் !

கல்விப் பணி:

வ.சுப.மாணிக்கம் தன் கல்விப் பணியை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தொடங்கினார். 1941 –ஆம் ஆண்டு அங்கு தமிழ்த் துறையில் விரிவுரையாளராகப் பணியில் சேர்நது 7 ஆண்டுகள் பணி புரிந்தார். பின்னர் 1948 –ஆம் ஆண்டு காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியேற்று 1964 வரை பதினாறு ஆண்டுகள் அங்குப் பணி புரிந்தார். அடுத்து காரைக்குடியில் உள்ள அழகப்பா கல்லூரியில் முதல்வர் பொறுப்பை ஏற்று 1970 வரை ஆறாண்டுகள் பணி புரிந்தார். இதனை அடுத்து 1970 முதல் 1977 வரை ஏழாண்டுகள் மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியில் சேர்ந்து தமிழ்த் துறைத் தலைவராகவும், இந்திய மொழிப்புல முதன்மையராகவும் பணி புரிந்தார் !

துணைவேந்தர்:

இவரது தமிழ்ப் புலமையையும், ஆளுமையையும் கண்ட தமிழக அரசு இவரை மதுரை, காமராசர் பலகலைக்கழகத் துணை வேந்தராக 1979 –ஆம் ஆண்டு அமர்வு செய்தது. மூன்றாண்டுகள் மிகச் சிறப்பாகத் துணைவேந்தர் பதவியில் பணியாற்றிய வ.சு.மாணிக்கனார் 1982 –ஆம் ஆண்டு அப்பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

படைப்புகள்:

"மனைவியின் உரிமை", "கொடை விளக்கு", "இரட்டைக் காப்பியங்கள்", "நகரத்தார் அறப் பட்டயங்கள்", "தமிழ்க் காதல்", "நெல்லிக் கனி", "தலைவர்களுக்கு", "உப்பங்கழி", "ஒரு நொடியில்", "மாமலர்கள்", "வள்ளுவம்", "ஒப்பியல் நோக்கு", "தொல்காப்பியக் கடல்", "சங்க நெறி", "திருக்குறட்சுடர்", "காப்பியப் பார்வை", "இலக்கியச் சான்று", "கம்பர்", உள்பட இவர் 28 நூல்களை எழுதி இருக்கிறார் ! தமிழக அரசு இவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் 2006 –ஆம் ஆண்டு நாட்டுடைமை ஆக்கியது !

தமிழ்த்தொண்டு:

வ.சுப.மாணிக்கம் அவர்கள் ஒரு சிந்தனையாளர். பழைமையையும், புதுமையையும் ஒருமித்த மனதோடு ஏற்றுப் போற்றினார். தமிழ்ச் சொல்லாக்கங்களை நடைமுறைப்படுத்துவதில் மிகவும் முனைப்புக் காட்டியவர். "தமிழ் வழிக் கல்வி இயக்கம்" என்ற அமைப்பை நிறுவி தமிழ் வழிக் கல்வியின் மேன்மை பற்றித் தமிழகம் முழுவதும் பரப்புரை மேற்கொண்டார் !

ஏற்றிருந்த பிற பொறுப்புகள்:

தமிழகப் புலவர் குழுத் தலைவர், பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவர், தமிழ் வழில் கல்வி இயக்கத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழக வடிவமைப்புக் குழுத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகத் தொல்காப்பியத் தகைஞர் ஆகிய பொறுப்புகளையும் பல்வேறு நேரங்களில் ஏற்றுச் சிறப்புடன் பணிபுரிந்தார் !

விருப்பமுறி *(WILL):*

(01) தன் மறைவுக்குப்பின் தன் சொ த்தில் ஆறில் ஒரு பங்கினை அறநிலையத்திற்கு வழங்க வேண்டும்.

(02) தன் பிறந்த ஊரான மேலைச் சிவபுரியில் தன் சே மிப்பி லிருந்து செலவு செய்து மருத்துவம், குழந்தைகள் நலம், நலவாழ்வு. கல்வி போன்ற பணிகளுக்குச் செலவிட வேண்டும்.
(03) தான் தொகுத்து வைத்திருந்த 4500 நூல்களையும் காரைக்குடி அழகப்பா, பல்கலைக் கழக நூலகத்திற்குத் தந்துவிட வேண்டும்.

தன் விருப்ப முறியில் மேற்கண்ட மூன்று விருப்பங்களையும் தெரிவித்திருந்த வ.சுப.மாணிக்கனார், உண்மையிலேயே மனிதருள் மாணிக்கம் தான் என்பதில் ஐயமில்லை !

மறைவு:

எங்கும் தமிழ், எதிலும் தமிழ், எப்போதும் தமிழ் என்ற கொள்கைகளைப் பின்பற்றி வந்த தமிழ்க் கடல் 1989 –ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 25 ஆம் நாள், தமது 72 –ஆம் அகவையில் மறைந்தது. அவர் மறைவைக் கேட்டுத் தமிழ் கூறும் நல்லுலகமே துன்பத்தால் துவண்டு போயிற்று !


முடிவுரை :

வ.சுப.மாணிக்கம் போன்ற தமிழறிஞர்களின் மறைவு தமிழகத்தில் நிறைவு செய்ய இயலாத வெற்றிடத்தை உருவாக்கிவிட்டது ! தொல்காப்பியன், பூங்குன்றன், பாரி, பொற்கொடி, தென்றல் என்னும் அவரது மக்கட் செல்வங்களின் பெயர்களைப் பாருங்கள். இத்தகைய தமிழுணர்வு, இக்காலத் தமிழ் மக்களிடம் ஏற்பட்டால், தமிழ் வளர்ச்சி ஏறுமுகமாகும் என்பதில் ஐயமில்லை ! வாழ்க வ.சுப.மாணிக்கனார் புகழ் ! வளர்க அவர் ஏற்றி வைத்த தமிழ் உணர்வு !

ஆக்கம் + இடுகை:

வை.வேதரெத்தினம்,
(vedarethinam76@gmail.com)
ஆட்சியர்,
தமிழ்ப் பணி மன்றம்.
[தி.ஆ: 2051, கும்பம் (மாசி),03]
{15-02-2020}

தமிழ்ப் பணி மன்றம் முகநூற் குழுவில் வெளியிடப் பெற்ற கட்டுரை !



Posted by http//thamizppanimanram blogspot.com at சனி, பிப்ரவரி 15, 2020
இதை மின்னஞ்சல் செய்க
BlogThis!


Twitter இல் பகிர்
Facebook இல் பகிர்
Pinterest இல் பகிர்
Labels: வரலாறு

தமிழன் இலக்கிய பதிவுகள்

Tuesday, 25 April 2017

தமிழ் இமயம் வ.சுப.மாணிக்கம் (V.S.Manickam)

தமிழறிஞர், கவிஞர், பேச்சாளர், நாடகாசிரியர், ஆய்வாளர், உரையாசிரியர் என பன்முகப் பரிமாணம் கொண்ட **வ.சுப.மாணிக்கம் (V.S.Manickam)** நினைவு தினம் (ஏப்ரல் 24, 1934) சிறப்பு பகிர்வு.!!



* புதுக்கோட்டை மாவட்டம் மேலைச் சிவபுரியில் (1917) பிறந்தார். இயற்பெயர் அண்ணாமலை. இளம் பருவத்திலேயே பெற் றோரை இழந்தார். தாய்வழிப் பாட்டி, தாத்தாவிடம் வளர்ந்தார். 7 வயது வரை நடேச ஐயரிடம் குருகுலக் கல்வி கற்றார்.

* வணிகம் பழக 11 வயதில் பர்மா சென்றார். பொய் சொல்லுமாறு முதலாளி கூறியதை ஏற்க மறுத்தவர், வேலையை இழந்து 18 வயதில் தமிழகம் திரும்பினார். பண்டிதமணி கதிரேசன் செட்டியார் உதவியுடன் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 'வித்வான்' பட்டம் பெற்றார்.

* சென்னை பல்கலைக்கழகத்தில் பிஓஎல், முதுகலை பட்டம் பெற் றார். 'தமிழில் வினைச்சொற்கள்' என்ற பொருளில் ஆய்வு செய்து எம்ஓஎல் பட்டமும், 'தமிழில் அகத்திணைக் கொள்கைகள்' என்ற பொருளில் ஆய்வு செய்து முனைவர் பட்டமும் பெற்றார்.

* அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பயின்றபோது, ராகவ ஐயங்கார், ந.மு.வேங்கடசாமி நாட்டார், அ.சிதம்பரநாதன் செட்டியார் உள்ளிட்ட அறிஞர்களிடம் பயிலும் வாய்ப்பு கிடைத்தது. அங்கு விரிவுரையாளராக 7 ஆண்டுகள் பணியாற்றினார். தலைசிறந்த உரைநடை எழுத்தாளராக புகழ்பெற்றார். தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் வல்லமை பெற்றவர், இரண்டிலுமே நூல்களைப் படைத்தார்.

* காரைக்குடி அழகப்பா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பணியில் சேர்ந்தார். 1964 முதல் 1970 வரை அதன் முதல்வராகப் பணியாற்றினார். மீண்டும் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இருந்து அழைப்பு வந்ததால், அங்கு 7 ஆண்டுகளுக்கு மேல் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றினார்.

* மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் துணைவேந்தராக 1979 முதல் 1982 வரை பணியாற்றினார். அப்போது, பண்டிதமணி அரங்கை நிறுவினார். பல்கலைக்கழக நடைமுறைகள் தமிழில் இருக்க வேண்டும் என ஆணை பிறப்பித்ததுடன், அங்கு தமிழ் ஆய்வு நடைபெறவும் வழிவகுத்தார்.

* தமிழில் பல புதிய சொல்லாக்கங்களை தந்தவர். வீட்டிலும் கலப்படமற்ற தூய தமிழில் பேசினார். தாய்மொழி வழிக் கல்வியை வலியுறுத்தினார். தமிழ்வழி கல்வி இயக்கம் என்ற அமைப்பின் தலைமைப் பொறுப்பேற்று, தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொண்டார்.

* துணைவேந்தர் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு, திருவனந்தபுரம் திராவிட மொழியியல் கழகத்தில் முதுபேராய்வாளர் என்ற பதவியில் 'தமிழ் யாப்பியல் வரலாறும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஆய்வு மேற்கொண்டார். தொல்காப்பிய ஆய்வு மேற்கொண்டு, நூலாக எழுதி வெளியிட்டார். தொடர்ந்து பல நூல்களை எழுதினார்.

* திருக்குறள் நெறிகளின்படி வாழ்க்கை நடத்தினார். தன் சொத்தில் ஆறில் ஒரு பங்கை அறநிலையத்துக்கும், தன் சொந்த ஊரில் இலவச கல்வி, மருத்துவம் போன்ற சேவைகளை வழங்குவதற்காகவும் உயில் எழுதிவைத்தார். தன் நூலக நூல்களை அழகப்பா பல்கலைக்கழகத்துக்கு வழங்குமாறும் உயிலில் குறிப்பிட்டிருந்தார்.

* தினமும் அதிகாலையில் எழுந்து 4 மணி நேரத்துக்கு மேல் புத்தகம் படிக்கும் பழக்கம் கொண்டவர். கடுமையான உழைப்பாளி. சங்க இலக்கியங்களைத் தன் நுனிநாக்கில் வைத்திருந்தவர். மூதறிஞர், செம்மல், முதுபெரும் புலவர், பெருந்தமிழ்க் காவலர் என்றெல்லாம் போற்றப்படும் வ.சுப.மாணிக்கம் 1989 ஏப்ரல் 25-ம் தேதி 72-வது வயதில் மறைந்தார்.

at April 25, 2017

Labels: இலக்கிய ஆளுமைகள், காலச்சுவடுகள்

No comments:

Post a comment

Enter your comment...

Comment as: Google Accoun

Publish Preview

Newer Post Home Older Post

Subscribe to: Post Comments (Atom)

இயற்கை வேளாண் விஞ்ஞானி "நம்மாழ்வார்" (G.Nammalvar)

இயற்கை விவசாயத்தின் தீவிரப் பிரச்சாரகரும் தமிழகத்தின் முதன்மை இயற்கை அறிவியலாளர்களில் ஒருவருமான டாக்டர் ஜி. நம்மாழ்வார் (G.Nammalvar) பி...




இயற்கை வேளாண் விஞ்ஞானி "நம்மாழ்வார்" (G.Nammalvar)
இயற்கை விவசாயத்தின் தீவிரப் பிரச்சாரகரும் தமிழகத்தின் முதன்மை இயற்கை அறிவியலாளர்களில் ஒருவருமான டாக்டர் ஜி. நம்மாழ்வார் (G.Nammalvar) பி...


தமிழ் இமயம் வ.சுப.மாணிக்கம் (V.S.Manickam)
தமிழறிஞர், கவிஞர், பேச்சாளர், நாடகாசிரியர், ஆய்வாளர், உரையாசிரியர் என பன்முகப் பரிமாணம் கொண்ட வ.சுப.மாணிக்கம் (V.S.Manickam) நினைவு தினம் ...


பாடும் வானம்பாடி எஸ்.பி. பாலசுப்ரமணியம் (S.P.Balasubramaniam)
உலக அளவில் அதிக எண்ணிக்கையிலான பாடல்களைப் பாடியதற்காக கின்னஸ் உலக சாதனைகள் புத்தகத்தில் இடம் பெற்றவரும் பன்முகத் திறன் கொண்டவருமான எஸ்.பி....

Search This Blog

Search

Home

About Me

Ganesan VJ

View my complete profile

Viewers Count

00000087

Report Abuse

Labels

இசை ஆளுமைகள்
இயற்கை விவசாயம்
இலக்கிய ஆளுமைகள்
கல்வி ஆளுமைகள்
காலச்சுவடுகள்
நாடக ஆளுமைகள்
பொருளாதார ஆளுமைகள்
மருத்துவம்
விளையாட்டு ஆளுமைகள்

Blog Archive

April 2018 (1)
June 2017 (2)
May 2017 (7)
April 2017 (10)

அஜயன் பாலா பாஸ்கரன்

.

APRIL 20, 2016

வ.சுப. மாணிக்கனார்

செம்மொழி செம்மல்கள்

வ.சுப. மாணிக்கனார்

.

இது வாசுப மாணிக்கனார் நூற்றாண்டு

அவரது தமிழ் பணிக்கு என் சிறுவணக்கம்

திருக்குறள் மற்றும் தொல்காப்பியம் ஆகிய இரு நூல்களையும் நுணுகி ஆய்ந்து அவற்றின் சாரத்திலிருந்து தமிழர்களுக்கான அறத்தையும் அவர்களது வாழ்வையும் கண்டெடுத்து நூல்களாக மாற்றிதந்த சீரிய ஆய்வாளர் வ.சுப மாணிக்கனார்**.**



புதுக்கோட்டை மாவட்டம் மேலைச்சிவபுரியில் பிறந்த அண்ணாமலை எனும் இயற்பெயர் கொண்ட மாணிக்கனாரின் தந்தை சுப்பையாசெட்டியார்,தாயார் தெய்வயானை. **பிறப்பு 09-04-1917..**மாணிக்கனாரின் சிறுவயதிலேயே தாயும் தந்தையும் இயற்கை எய்திவிட துயுருற தனித்து நின்ற தளிராம் மாணிக்கனாரை அவரது பாட்டியார் மீனாட்சி அவர்களின் அன்புள்ளம் அரவணைத்துக்கொண்டது.



மேலைச்சிவபுரியில் திரு. நடேச அய்யரிடம் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன்,நல்வழி, நன்னெறி,மற்றும் மூதுரை போன்ற நீதி நூல்களை கற்றார்.பள்ளி படிப்பு முடிந்ததும் வயிற்று படிப்புக்காக பிழைப்பு தேடி பர்மாவுக்கு கப்பல் ஏறினார். .அங்கு வட்டிகடையில் சிறு கணக்கராக சிலவருடங்கள் பணீயாற்றிவந்தார். பணிநிமித்மாக சிறு பொய் சொல்ல நேரிட்டபோது மனம் இசைவு கொள்ள மறுத்து கப்பலேறி தாய்மண் திரும்பினார்.ஊரில் இச்செய்தி அறிந்தவர்கள் அவரை பொய் சொல்லா மாணிக்கம் என அழைக்க அதுவேதழைக்கவும் துவங்கியது.

தமிழார்வம்   மீண்டும் மாணிக்கனாரை அழைக்க அண்ணாமலை பல்கலைகழகத்தில் சேர்ந்து பயிலதுவங்கினார்.பயிலும் காலத்தில் இவரது தமிழ் ஆர்வத்தையும் ஆய்வு திறனையும் கண்டு வியந்த பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அண்ணமலைபல்கலைக்கழகத்திலேயே அவருக்கு விரிவுரையாளர் பணியும் வாங்கிதந்தார். தமிழாசிரியப்பணி என்பது மாணாக்கருக்கு கற்றுதருவதோடு நிற்பதல்ல அது ஒரு தொண்டுபணி என எண்ணம் கொண்ட மாணிக்கனார் இரவுபகலாக தன் எழுத்துபணிக்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டார்

தொல்காப்பியம் ,திருக்குறள் ஆகிய இரண்டையும் கண்களாக கொண்டுவாழ்ந்தவர். தொல்காப்பியக்கடல், திருக்குறட் நெறி, சங்க நெறி, வள்ளுவம் ,கம்ப நெறி, காப்பிய பார்வை,தமிழ் காதல் மற்றும் இலக்கியச்ச்சாறு போன்ற ஆய்வு நூல்களை தமிழர் பண்பாட்டு கண்ணோட்டத்தோடு எழுதி வெளியிட்டார். மட்டுமல்லாமல் நாடகங்கள் கவிதை தொகுப்புகள் மொழிபெயர்ப்புகள் ஆங்கில நூல்கள் என இவர் எழுதிய நூல்கள் மட்டும் மொத்தம் இருபத்திரண்டு.

இவரது தமிழ்ப்பணிகாரணமாக மதுரை காமராசர் பல்கலைக்கழக துணைவேந்தர் இருக்கை இவரைத் தேடி பெருமைபடுத்தியது. . இன்றும் சிறந்த துணைவேந்தருக்கான் முன்மாதிரியாக அவரைகுறிப்பிடுவது ஒன்றே அவர் இலக்கணமாய் வாழ்ந்த வாழ்வுக்கு சான்று.

"தமிழ் வழி கல்வி இயக்கம்" என்ற அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்று, தமிழகம் முழுவதும் தமிழ் பரப்ப, தமிழ் யாத்திரை மேற்கொண்டார்

செம்மல், முதுபெரும் புலவர்,மற்றும் பெருந்தமிழ்க்காவாலர் ஆகியவை இவரது தமிழ் சேவைக்கு சூட்டடப்ட்ட நற் பட்டங்கள் .

தமிழக அரசு இவருக்கு வள்ளுவர் விருது அறிவித்து அவரது உழைப்பை தன்னலமற்ற தியாகத்தை அங்கீகரிதது.

மறைவு: 24-4 -1989

தமிழ் உலகத்துக்கு புதிய சொல்லாக்கங்களை தந்தவர் மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார்: குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் புகழாரம்



தமிழ் உலகத்துக்கு புதிய சொல்லாக்கங்களைத் தந்தவர் மூதறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கனார் என குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் புகழாரம் சூட்டினார்.

சிவகங்கை மாவட்டம் காரைக் குடி அழகப்பா பல்கலைக்கழகத் தில் வ.சுப.மாணிக்கனார் நூற்றாண்டு தொடக்கவிழா நேற்று நடைபெற்றது. பல்கலைக்கழக துணைவேந்தர் சொ.சுப்பையா தலைமை வகித்து பேசியதாவது:

மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் மிகச் சிறந்த ஆசிரியர். மிகச் சிறிய கிராமத்தில் பிறந்து, மிகப் பெரிய பல்கலைக்கழகமான மதுரை

அழகப்பர் பல்கலைக் கழகம்,காரைக்குடி(இந்து தமிழ் திசை,19.4.2016)

காமராசர் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக உயர்ந்திருப்பது இவருடைய உழைப்புக்கு சான் றாகும். இவர் மிகச் சிறந்த தமிழறி ஞர், கவிஞர், பேச்சாளர், எழுத் தாளராகத் திகழ்ந்திருக்கிறார். மேடைகளில் பேசுவது போல வீட்டிலும் கலப்படமில்லாத தூய தமிழில் பேசும் இயல்பினர். தன்னுடைய பணிகளை தானே செய்துகொள்ளும் எளிமைப் பண் பினர். தன்னுடைய சொத்தில் ஆறில் ஒரு பகுதியை பொதுநலத்துக்குச் செலவிட விருப்பம் தெரிவித்தவர். இவர் ஒவ்வொரு நாளும் அதி காலையில் எழுந்து, தினமும் 4 மணி நேரத்துக்கு மேல் நூல்களைப் படிக்கும் இயல்பினர். இவருடைய இத்தகைய பண்புகளை இன்றைய மாணவர்கள் பின்பற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

குன்றக்குடி பொன்னம்பல அடி களார் பேசும்போது, ‘‘தமிழுக்குக் கிடைத்த மாணிக்கம், வற்றாத தமிழ்க் கடல், பொய் சொல்லா மாணிக்கம், நீண்ட நெடிய வரலாற் றுப் பெட்டகம், பன்முகப் பரிமாணம் கொண்டவர் வ.சுப.மாணிக்கனார்.

அவர் வாழும் காலத்தில் செய்த பணிகள் அவர் காலத்துக்குப் பிறகும் நினைத்துப் பார்க்கப்படுவது சிறப்புக்குரியது.

வாழ்க்கையில் வாய்மையாய் வாழ்வதற்கு தமிழ் ஒன்றே வழியென அதைத் தேர்ந் தெடுத்தவர்.

தன் வாழ்நாள் முழுவ தும் உழைப்பு, வாய்மை, நேர்மை, ஆகிய மூன்றையும் முதன்மை யாகக் கொண்டவர். பரந்துபட்ட மரபுக் கண்ணோட்டத்தையும் தாண்டி, புதிய கண்ணோட்டத்தில் ஆராயும் சிறப்பினர்.

புதிய சொல்லாக்கங்களைத் தமிழ் உலகத்துக்குத் தந்தவர்.

இளைய தலைமுறையினர் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும், சிந்திக்க வேண்டும் என்ற எண் ணத்தை தன் எழுத்துகளிலும், பேச் சுக்களிலும் தொடர்ந்து வெளிப்படுத் தியவர். இளம் தலைமுறையினர் எந்தப் பாதையில் பயணிக்க வேண்டும் என்பதை

எடுத்துரைத் தவர். தில்லை அம்பலத்தில் திரு முறைகள் ஏற மறுக்கப்பட்டபோது, அதனை எதிர்த்துப் போராடிய தமிழ்ப் போராளி வ.சுப.மாணிக் கனார். தமிழ் அறிவையும், தமிழ் உணர்வையும் இளம் தலைமுறை யினர் வ.சுப. மாணிக்கனாரிட மிருந்து கற்றுக் கொள்ள வேண் டும்" என்றார்.

நிகழ்ச்சியில், வ.சுப.மாணிக்கனாரின் மாணவர்களான பேராசிரியர்கள் தே.சொக்கலிங்கம், கு.வெ.பாலசுப்பிரமணியம், பழ.முத்து வீரப்பன், பேராசிரியர் இரா.மோகன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

முன்னதாக, வ.சுப. மாணிக்க னாரின் இணையதளம் தொடங்கப் பட்டது. வ.சுப.மாணிக்கனாரின் தற்சிந்தனைகள் என்னும் நூலை குன்றக்குடி அடிகளார் வெளியிட துணைவேந்தர் சொ.சுப்பையா பெற்றுக்கொண்டார்.

வ.சுப.மாணிக்கனாரின் மூத்த மகன் வ.சுப.மா.தொல்காப்பியன் அறிமுக உரையாற்றினார். வ.சுப.மாணிக்கனாரின் புதல்வர்கள் பாரி, பூங்குன்றன், புதல்வியர் தென்றல், மாதரி, பொற்கொடி மற்றும் வ.சுப.மாணிக்கனாரின் மாணவர்கள் திரளானோர் கலந்துகொண் டனர்.

முன்னதாக தமிழ்த் துறைத் தலைவர் மு.பாண்டி வரவேற்றார். பேராசிரியர் சு.ராசாராம் நன்றி கூறினார்.

மூதறிஞர் வ.சுப.மாணிக்கத்தின் கருத்துக்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது கடமை: இரா.இளங்குமரனார் பேச்சு

By மதுரை | Published on : 25th June 2016 07:03 AM | அ+ அ அ- | |

மூதறிஞர் வ.சுப.மாணிக்கத்தின் கருத்துக்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது கற்றறிந்தவர்களின் கடமை என்று தமிழ் அறிஞர் இரா.இளங்குமரனார் கூறினார்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் சார்பில் தமிழ் அறிஞர் வ.சுப.மாணிக்கம் நூற்றாண்டு விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. செந்தமிழ்க் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரியில் நடைபெற்ற விழாவுக்கு நான்காம் தமிழ்ச்சங்கச் செயலர் ச.மாரியப்பமுரளி தலைமை வகித்தார்.

இதில் தமிழ் அறிஞர் இரா.இளங்குமரனார் பேசியதாவது: நேர்மை, எளிமை இவற்றுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் வ.சுப.மாணிக்கம். எந்த நிலையிலும் அறத்திற்குப் புறம்பாகச் செயல்படாத நெறியாளர். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பொறுப்பேற்றபோது, பல்வேறு புதிய துறைகள் உருவாக காரணமாக இருந்தவர் வ.சுப.மாணிக்கம். தாம் பிறந்த ஊரான மேலைச்சிவபுரியில் கல்வி, மருத்துவம், நலவாழ்வு, குழந்தைநலம் உள்ளிட்டவற்றுக்கு சாதி, சமய வேறுபாடின்றி இலவசமாகச் செலவு செய்ய வேண்டும் என்று தன் உயிலில் தெரிவித்திருந்தார். தாய்மொழிவழிக் கல்வியை வலியுறுத்தி இயக்கம் கண்டவர். மும்மொழி கொள்கை மோசடி கொள்கை, இருமொழி கொள்கை ஏமாற்று கொள்கை, ஒரு மொழி கொள்கையே உண்மை கொள்கை என்ற கோஷத்தை எழுப்பியவர்.

மூதறிஞரின் கருத்துக்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது கற்றறிந்தவர்களின் கடமை. அவர் படைப்புகளை மதிப்பிட்டுத் திறனாய்வு நூல்களை எழுதி, வெளியிடுவது எழுத்தாளர்களின் கடமை. மாணிக்கனாரின் வெளிவராத படைப்புகளைத் திரட்டித் தொகுத்து வெளிக்கொண்டு வருவது உடன்பழகியோரின் பணியாகும். தமிழுக்காக வாழ்ந்து மறைந்த அவரது வழியை இளைஞர்கள் பின்பற்றி நடத்தல் அவசியம் என்றார்.

நான்காம் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் க.சி.அகமுடைநம்பி, செந்தமிழ் இதழ் ஆசிரியர் இரா.சதாசிவம், திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் துணை முதல்வர் பீ.மு.மன்சூர், செந்தமிழ்க் கலை கல்லூரி முதல்வர்(பொறுப்பு) சு.விஜயன், துணை முதல்வர் கி.வேணுகா, மணியம்மை மழலையர் பள்ளித் தாளாளர் பி.வரதராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

வ. சுப. மாணிக்கம்

https://ta.wikiquote.org/s/2rg

வ. சுப. மாணிக்கம் (ஏப்ரல் 17.1917 – ஏப்ரல் 25.1989) (வ.சுப. மா) ஒரு தமிழறிஞர் மற்றும் எழுத்தாளர்.

மேற்கோள்கள்[தொகு]

1.புகழ் விருப்பம் தவறன்று: எனினும் அதற்குரிய செயல் விருப்பம் வேண்டும்.

2. தளர்வு வருதல் இயல்பே; அதனை நிமிர்த்துக் கொள்ளுதல் அறிவுடைமை.

3. தக்கோரால் மதிப்புப் பெறுவதே சால்பு.

4. வீம்பு சிறுபொழுது இருக்கலாம். அது தானே விலக வேண்டும். இது குடும்பத்துக்குப் பண்பு.

5. நாள்தோறும் நெஞ்சினையும் தூய்மைக் குளியல் செய்க.

6. தன்னைச் சூழ்ச்சியாகப் பிறர் பயன்படுத்திக் கொள்ள இடங்கொடுத்தல் ஆகாது.

7. நன்றி மனிதப் பண்புகளுள் தலையாயது. மனத்தைப் பண்படுத்துவது.

8. சிலவற்றைப் பொருட்படுத்தாமல் அலட்டிக் கொள்ளாமல் இயல்பாக விட்டுவிடுவது வாழ்வு முறையுள் ஒன்று.

9. கவலை என்பது எண்ணங்களுள் ஓர் அலை.

10. பெருமை பொறுமையால் வலுப்பெறும், பொறுமை தெளிந்து துணியும் செயலால் வலுப்பெறும்.[1]